# உன்னைப் போல் ஒருவன்





ஜெயகாந்தன்

www.pustaka.co.in


உன்னைப்
போல் ஒருவன்
ஜெயகாந்தன்
www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# உன்னைப்போல் ஒருவன்

Unnaipol Oruvan

Author:

த. ஜெயகாந்தன்
T. Jayakanthan

For more books

http://www.pustaka.co.in/home/author/jayakanthan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

[அத்தியாயம் 8]
[அத்தியாயம் 9]
[அத்தியாயம் 10]
[அத்தியாயம் 11]
[அத்தியாயம் 12]
[அத்தியாயம் 13]
[அத்தியாயம் 14]
[அத்தியாயம் 15]

## வாசகர்களுக்கு

ஓ! நீங்கள் என்னென்ன கேள்விகள்தான் கேட்கிறீர்கள்?...

உங்கள் கேள்விகள் எல்லாம் எந்த அளவு இலக்கிய சம்பந்தமுடையது என்று ஒரு பெரிய இலக்கிய மேதை மாதிரி சுண்டிப்பார்த்துத் தட்டி ஒதுக்கி விடுவது ரொம்ப சுலபம்தான்...

ஆனால் என் கதைகளைப் படித்துவிட்டு, ஓர் ஆர்வத்தில் ‘அறிய விரும்பும் துடிப்போடு’ நீங்கள் அவ்விதக் கேள்விகளைக் கேட்கிறீர்கள் என்பதை நான் மறக்கலாகாது அல்லவா?

உங்கள் கேள்விகள் சமூகத்தோடோ, இலக்கியத்தோடோ, தத்துவத்தோடோ சம்பந்த மற்றிருப்பினும் கூட கேட்கப்பட்ட எனக்கு அவ்வித சம்பந்தங்கள் உண்டு என்ற நம்பிக்கையுடன் அல்லவா நீங்கள் கேட்கிறீர்கள்!

ஒரு பிரிய வாசகர் என்ற முறையில், ஒருவகை ஆவேசமிக்க ஆர்வத்தோடு- பல சமயங்களில் ஒரு குழந்தையின் அழகிய அசட்டுத் தனத்தோடு கூட-நீங்கள் கேட்கும் கேள்விகள் எவ்வளவு ரசமானவை தெரியுமா?

அதேபோதில் இத்தகைய உங்களது வெள்ளைக் கேள்விகளுக்காக உங்களை ஒரு கடின வார்த்தையின் மூலம் மனசு சுருங்க வைத்துவிட்டு; சில ‘பெரிய எழுத்தாளர்’ களைப் பற்றி நீங்கள் என்னிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டபோது என் மனம் புண்பட்ட விஷயத்தை நீங்கள் அறிவீர்களா?

போகட்டும். தகாத தகுதிகள் சிலருக்கு நேர்வதுண்டு; அவை அதிக நாட்கள் அவர்களிடம் தங்குவதில்லை.

ஆனால், நான் உங்களையும் நன்கறிவேன். ஆமாம்; உங்கள் பலம், உங்கள் பலவீனம் இரண்டையும் நானறிவேன்.

உங்களுக்கு உள்ள எத்தனையோ விதமான உயர் தகுதிகளையெல்லாம் ஒரு நிமிஷம் மறந்துவிட்டு எனக்கிருக்கும் ஒரே தகுதியை மேலாய் மதித்து நீங்கள் என்னை அணுகும் போது அந்தத் தகுதிக்கேற்றவனாக நான் இல்லையென்றால் அந்தத் தகுதிக்கு நான் தகுந்தவனில்லை என்றாகும்.

எனவேதான், நீங்கள் என்னிடம் வந்து பேசும்போதும் சரி; எனக்கு எழுதும்போதும் சரி, உங்கள் கேள்விகள் இலக்கிய, சமூக-அறிவியல் சம்பந்தமற்றதாக இருந்தாலும், என்னாலியன்ற வரை உங்கள் கேள்வியையும் அதற்குரிய பதிலையும் அறிவியல்-சிந்தனையாக மாற்றவே நான் முயன்றிருக்கிறேன்.

அதன் மூலம் அந்தச் சம்பாஷணை-அல்லது கடிதம் மூலம் எனது இலக்கிய நோக்கம் நிறைவேறுகிறது என்றே நான் நம்பிக்கை கொள்கிறேன்.

இருந்தாலும் நீங்கள் என்னென்ன கேள்விகள்தான் கேட்கிறீர்கள்? அதற்கென்ன கேளுங்கள்!

இன்னும் சிலர் தங்கள் கடிதங்களில்,

“நீங்கள் எப்படி சார் பிரம்மோபதேசத்தையும் எழுதி விட்டு, ‘உன்னைப் போல் ஒருவ’னும் எழுத முடிகிறது?” என்று

கேட்டிருந்தனர்.

ஆகவே, இந்தக் கேள்வியை முன் வைத்தே இந்த முன்னுரையை எழுத ஆரம்பிக்கின்றேன்.

புனிதமும் எழிலும் நிரம்பிய பிரும்மாண்டமான கோயில்களையும் தாஜ்மகாலையும் தாங்கியுள்ள இந்தப் பாரதம்தான் தரித்திரதேவதையின் நிரந்தரக் குடியிருப்பான அழுக்குப் பிலம்போன்ற சேரிகளையும் குப்பங்களையும் தாங்கியுள்ளது.

எல்லாவற்றுள்ளும் ஒருமை கண்டு எல்லாமே ஒன்று என்ற அத்வைத ஞானம் செழித்த நம் அறிவில்தான் உலகில் எங்குமே இல்லாத கணக்கற்ற பேதங்கள் வந்து சூழ்ந்திருக்கின்றன.

ஆக, இந்தியா என்பது என்ன?

தாஜ்மகாலா? தாராவியா?

மதுரைக் கோயிலா? சென்னை புளியந்தோப்பு பிரதேசமா?

எது இந்தியா? எங்கே இந்தியா வாழ்கிறது?

“தாஜ்மகாலிலும் நமது கோயில்களிலும் இந்தியா வாழந்தது; சேரிகளிலும் குப்பங்களிலும் இந்தியா அழிகிறது” என்று சிலர் பதில் சொல்கிறார்கள். இந்தப் பதிலை ஏற்றுக் கொள்பவர்களின்-அல்லது கூறுகின்றவர்களின்- எழுத்துக்கள் நம்பிக்கை வறட்சியைத்தான் விதைக்கும்? அறுக்கும்.

இவர்களுக்கு வாழ்க்கை என்ற விஷயமே இறந்த காலமாகி விட்டது! அழிவு என்கிற அம்சம்தான் நிகழ்காலமாய் நிற்கிறது! இவர்களே ( Pessimists ) நிரானுகூலவாதிகள்.

இன்னும் சிலர் ‘கோயிலாவது! – புராணமாவது இதிகாசமாவது? இவற்றைப் பற்றிப் பேச்சா? எழுத்தா? மூடத்தனம்! இதோ பாருங்கள் மக்கள் ‘என்று சேரியை மட்டும் காட்டுகிறார்கள். அவர்கள் காட்டுகின்ற அந்த மக்களின் மத்தியிலும் கோயில், ஏதோ ஒருவகை சாஸ்திர

நம்பிக்கைகள் இருப்பதைக் கண்ணைமூடி மறுத்து விடுகிறார்கள் இவர்கள். அவர்களை மனிதர்களாகவே மதிக்காமல், மனித உணர்ச்சிகளுக்கே இடம் தராமல், வெறும் வயிற்றுணர்ச்சியை மட்டுமே காட்டி – தங்களின் அசட்டுத்தனங்களை யெல்லாம் நிறைவேற்றி வைக்க வந்த ஓர் அற்ப மந்தைக் கூட்டமாகவே அவர்களை கருதும் ஒரு போக்கே இவர்களின் நடைமுறை-இவர்கள் ‘இந்தியா வாழ்ந்ததே இல்லை. அதெல்லாம் பொய்’ என்று மறுக்கிறார்கள். தாங்கள்தான் வாழ வைக்கப் போவதாகக் கூறுகிறார்கள்-நாங்கள் பிறப்பதற்கு முன் இது எப்படி வாழ்ந்திருக்க முடியும் என்று கூடக் கேட்கிறார்கள்?- இவர்கள் குருடர்கள்! அசடர்கள்! கையாலாகாதவர்கள்! ஆகவே இவர்களிடம் இலக்கியம் உருப்பெறுவதில்லை.

இவர்கள் வக்கரித்துப் போனவர்கள்! ( Perverts ) இவர்கள் எந்தத் துறையிலிருந்தாலும் அந்தத் துறையின் அழிவுக்கே வழி தேடுபவர்கள்-ஆனால் மகத்தான கூப்பாடுகளோடு...

இவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருப்பது வீண். பேசாதிருந்தால் ஆபத்து. ஆகவே இந்த ஆர்ப்பாட்டமான அசட்டு வாதங்கள் நம்மை வந்து ஆக்ரமிக்காமலிருக்க நாம் உஷார்த் தன்மையோடு இருக்க வேண்டும்.

சரி. இந்தியா எங்கே வாழ்கிறது?

வேசியின் கிழிந்த கோரைப்பாயின் மீதா? ஆம்; அங்கேயும் இந்தியாதான் வாழ்கிறது... வாழ்வதற்காக அதன் ஆத்மா அங்கே துடிதுடித்துப் போராடுகிறது..

ஆலவாய்ச் சன்னதியில் அம்மையின் மூக்குப் பொட்டிலே இந்தியா சுடர் விடுகிறதா? ஆம்... இல்லை என்று எவர் மறுக்க முடியும்?

புதிய புதிய அணைக்கட்டுகளிலும் நவீனத் தொழிற்சாலைகளிலும் இந்தியா புதிய சன்னதம் கொள்வதும் ஒரு பேருண்மையே அல்லவா? மேலும், இதுவே அல்லவா வளர்கின்ற உண்மை? சேரியும் தரித்திரமும் சீரழிவும் வீழ்ச்சியும் உண்மையே எனினும்

அவை ஒரு மயக்கம் போல் தெளிந்து போகிற மாயத் தோற்றங்கள்தான்!

இவை அனைத்தும் ஒரே காலத்தில் இங்கே நிகழ்வது சாத்தியமெனில்-இவற்றில் ஏதேனும் ஒன்றைமட்டும் பிரதிபலிப்பது எவ்விதம் சாத்தியமாகும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது!

இடங்கள் வேறுபடும். அதன் உள்ளே துயிலும் 'தர'ங்கள் ஒரே மாதிரியானவை. சேரியிலும் கோயிலின் புனிதம் வாழ்கிறது.

கோயிலிலும் சேரியின் சீரழிவு புகுந்துள்ளது... உன்னதத்தைக் கொண்டு வருவதும், அதுமேலே மிதந்து எழும்போது தரிசித்து விடுகின்றதுமான காரியத்தை ஆற்றவல்லவனே இந்தத் தேசத்தின்-மனித குலத்தின்-ஆத்மாவைக் கண்டு கொள்கிறான்.

எல்லா மட்டத்திலும் ( Standards ) – உயர்ந்த தரம் ( Levels ) தாழ்ந்த தரம், வளர்ச்சி வீழ்ச்சி, ஆக்கம் அழிவு என்ற இரண்டு பகுதிகள் உண்டு. எந்த மட்டத்திலிருந்தாலும், (இந்த மட்டங்களின் இடையே எவ்வளவு பேதங்களிருப்பினும்) வளர்ச்சி ஆக்கம் ஆகிய குணப்பண்புகள் உடைய உயர்ந்த தரம் அனைத்தும் ஓரினமாகும். அதேபோல் வீழ்ச்சி அழிவு ஆகிய பண்புகள் படைத்த தாழ்ந்த 'தர'ங்களும் எவ்வளவு பேதங்கள் மிகுந்த மட்டங்களில் தோன்றினாலும் ஒரே இனமாகும்.

ஆகவே எதையும் கணிக்கும்போது ( Standards ) மட்டத்தை வைத்து, கணிப்பது சரியான விடையைத் தருவதில்லை. அதிலுள்ள ( Levels ) தரத்தை வைத்துக் கணிப்பதே சரியென்றாகும்.

அப்படிப் பார்த்தால்தான் 'பிரம்மோபதேரமும்'- 'உன்னைப் போல் ஒருவ'னும் மட்டத்தில் பேதப் பட்டிருப்னினும் தரத்தில் ஓரினத்தவை என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

வாசகரான உங்களுக்கு இதைத் தெரிவித்தால் போதும்- நீங்கள் புரிந்துகொண்டு விடுவீர்கள். இப்படிப் பார்க்க பழகி விடுவீர்கள்.

ஆனால் நமது ‘விமர்சகர் எனப்படும் பெரியார்கள்’ இருக்கிறார்களே-அவர்கள் விஷயமே வேறு. அவர்கள் என்ன எழுதியவனோ படித்தவனோ ஏதாவது சொன்னால் கேட்டுக் கொள்வதற்கா விமர்சகராயிருக்கிறார்கள்? இல்லை ஐயா இல்லை! எவன் கேட்டாலும் கேட்காவிட்டாலும் எதையாவது சொல்லிக்கொண்டே இருப்பதற்காகத்தான் ‘விமர்சகாவதாரம்’ எடுத்துள்ளார்கள்.

‘நயம்பட உரை’ என்ற பால பாடமே படிக்காத, அல்லது அதை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளாத மேதாவிகள்! நான் விமர்சகர் என்று குறிப்பிடும்போது-பழைய இலக்கணம் என்று ஒன்று இருப்பதை முற்றாக அழித்துக் கலைத்துவிட்டு (அதற்குக் காரணம் அதில் பயிற்சியின்மையே) ஒரு புதிய இலக்கணத்தை மூங்கில் சட்டத்தால் கட்டி அதன் சட்டாம்பிள்ளைகளாகத் தங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கஜகர்ணம் கோகர்ணம்போட்டு வரக்கூடியவர்களைத்தான் நினைக்கிறேன். (இதற்குக் காரணம் இந்தப் புதிய இலக்கணத்திலாவது பயிற்சி பெறமுடியுமா என்று தாங்களே பார்த்துக் கொள்வதற்குத்தான்) மற்றபடி வேறு சில பயந்த சுபாவ விமர்சகர்கள் இருக்கிறார்கள்; எப்போதாவது ஒரு ஆங்கிலத் தினசரிக்குத் தமிழ்ச் சிறுகதை என்று ஒரு கட்டுரை வரையும்போது எவரும் கோபித்துக்கொள்ளக் கூடாதே என்று சகட்டு மேனிக்கு எல்லாப் பெயரையும் நாமாவளி செய்வார்கள்-அவர்களை நான் சொல்லவில்லை.

இப்படியெல்லாம் சொன்னால் உடனே இவர்கள் என்ன கேட்பார்கள் தெரியுமா?

‘விமர்சனமில்லாமல் இலக்கியம் வளர்ந்துவிடுமா?’ என்ற ஒரு பிரம்படிக் கேள்விதான்.

இதே பிரம்படிக் கேள்வியைத் தமிழ்ப் பண்டிதர்கள் இலக்கணம் குறித்துக் கேட்டால் மட்டும் இவர்கள் ‘ஆஊ’ என்று சிரித்து ஆர்ப்பரிப்பார்கள்.

நமக்குத் தெரியும் இலக்கணத்தால் இலக்கியம் உருவாகவில்லை. இலக்கணத்தால் இலக்கியம் செழுமையுற்றது; செழுமையும் என்று.

அதேபோல நவீன இலக்கியமும் நவீன விமர்சனத்தால் உருவானதல்ல; நவீன விமர்சனத்தால் நவீன இலக்கியம் செழுமையுறும்; செழுமையுற வேண்டுமென்பதே.

ஆனால் விமர்சனம் என்ற லேபிளை ஒட்டி எதைச் செய்தாலும் அதுவிமர்சனம் என்றாகிவிட்டது. எப்படி இலக்கியம் என்ற லேபிலால் ஒன்று இலக்கியமாவதில்லையோ அதே போல, நமது நவீன விமரிசனக்காரர்கள் பல புதிய சிந்தனைகளுக்கு வழி வைத்திருக்கிறார்கள் என்பதை நான் மறுக்க மாட்டேன்-இருப்பினும் (ஒதுக்கப்பட்ட காரணத்தாலோ என்னவோ) ஒதுங்கி இருப்பதே கவுரவம் என்று எண்ணி வெளிச்சத்தில் நடப்பது எல்லாமே வேஷம் என்று இவர்கள் கூறி வருகின்றனரே, இது எவ்வளவு பேதமை!

முப்பது வருடங்களுக்கு முன் ஒரு சில ஆண்டுகள் ஒரு புது அலையாய்த் தமிழ் நாட்டில் வீசிய-எவ்வளவு அழுக்கும் குப்பையும் கலந்து வந்தாலும்-புதுவெள்ளம் புனித வெள்ளம்தான் என்ற ஏற்றத்திற்கும் போற்றுதலுக்குமுரிய மணிக்கொடிப் பிரலாபத்தோடு இன்னும் எத்தனை ஆண்டுகள் காலம் கழிப்பது? இப்படி நான் கேட்டவுடன் ‘ஆ மணிக்கொடியைப் பழித்துவிட்டானே’ என்று Sentimental கூச்சல் போடவேண்டாம்!

அது மகத்தான வருகை என்பதை நானும் அறிவேன். அது மகத்தானது என்றால் அதன் விளைவு எங்கே? விளைவு இப்படியென்றால் விதைப்பும் அப்படித்தானே? பதரைக் காட்டிப் பேசவேண்டாம்; பதரும் இயல்பே! பதர் மட்டும் விளைவதில்லை.

தமிழ் இலக்கியக் குடும்பத்தில் பண்டிதத் தாத்தாக்கள் முணகிக் கொண்டே யிருக்கிறார்கள். அவர்கள் முணகிக் கொண்டு மட்டுமில்லை? ஒரு காலத்தில் அவர்கள் தமிழுக்கு நிறைய செல்வம் சேர்த்ததுண்டு. முப்பது வருஷத்துக்கு முன் வாழப் போய் வீட்டோடு வந்துவிட்ட இந்த 'விமர்சக அத்தை'கள் இருப்பதும் குடும்பத்துக்கு ரொம்ப ஒத்தாசைதான். ஆனால் 'முப்பது வருஷத்துக்கு முன் நான் வாழ்ந்தேனே... அதுதான் வாழ்க்கை! இதெல்லாம் என்ன...ம்..'' என்று அடிக்கடி பீத்திக்கொள்ளும் தொண தொணப்பும் மொறு மொறுப்பும்தான் தாங்க முடியவில்லை.

விஷயம் இதுதான்! நவீன தமிழ் இலக்கிய 'ஸ்டாண்டர்டு' பொதுவாகவே ரொம்ப உயரமில்லைதான். முப்பது வருஷத்துக்கு முன்னே கூடத்தான்! ஆனால் 'தரம்' என்று ஒன்றிருக்கிறதே அது உண்டு அல்லவா,இரண்டு விதத்திலும்? அதில் உயர்வை எப்படி வளர்ப்பது, அதன் மூலம் 'ஸ்டாண்டர்டை'யே எவ்விதம் உயர்த்துவது என்பதே பிரச்னை.

'உருப்படவே மாட்டோம்' என்று சொல்ல ஒரு விமர்சகன் வேண்டுமா, என்ன?

எல்லாம் 'பத்திரிக்கைக் கதைகள்' என்று ஒதுக்கிவிடுவதும் சரியில்லை. எல்லோரும் பத்திரிகையில்தான் எழுதினார்கள். எழுத முயன்றார்கள்! 'மணிக்கொடி'யும் பத்திரிகைதான்.

ஒவ்வொரு சிறிய எழுத்தையும் கூர்ந்து பார்த்து அதன் தன்மையை அறிபவனே விமர்சகன். புருவத்துக்கு மேலே அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு அலட்சியப்படுத்தும் இயல்பு கொண்டோர் அந்தப்பீடத்துக்குத் தகுதியற்றவர்கள். திரும்பிக்கூடப் பார்க்காமல் காலம் அவர்களை ஒதுக்கிவிட்டுப் போய்விடும்.

இவ்வளவும் நான் சொல்வது இதற்குதான். இந்தக் கதை ஏதோ பெரிய காதனையென்றெல்லாம் எனக்கு எவ்வித

நினைப்பும் கிடையாது.

நான் பெரிதினும் பெரிதையே நாடுபவன். எனக்குத் திருப்தி ஏற்படவே முடியாது.

ஆனந்தவிகடன் போன்ற ஒரு பத்திரிகையில் இது வெளியான இலக்கிய சம்பந்தப்பட்ட ஒரு மாற்றமிருக்கிறதே-இது வெறும் மாற்றமல்ல, வளர்ச்சி – அதை வாசகர்களான நீங்கள் கவனிக்கவேண்டும். அது ஒரு வெற்றி என்றால்-வளர்ச்சியென்றால்-அந்த வெற்றி, அல்லது வளர்ச்சி உங்களுடையதுதான்.

இது ஆனந்தவிகடனுக்காக எழுதப்பட்டது அல்ல; உண்மையான எழுத்துக்களில் அப்படி எதையுமே சொல்ல முடியாது. இது அந்தப் பத்திரிகையில் வந்ததால் 'ம்! பத்திரிகைக் கதை' என்று சொல்லிவிட்டுப் போகிறவர்களைப் பற்றி எனக்குக் கவலையில்லை என்று சொல்வதற்குத்தான் இவ்வளவும். மற்றபடி எனக்கும் விமரிசகர்களுக்கும் பகைமை ஏதுமில்லை. அவர்களுக்கு உரிய கௌரவத்தை நான் குறைத்துவிடவும் முடியாது.

'உன்னைப்போல் ஒருவன்' புத்தகமாக வந்திருப்பதற்கும் பத்திரிகையில் வந்ததற்கும் பெரிய வித்தியாசமில்லையெனினும் பல பகுதிகள் ஆனந்தவிகடனில் வர முடியவில்லை. அதற்கு ஒரே காரணம் இடமின்மைதானே தவிர, மனமின்மையன்று.

நானே என் விருப்பப்படியே மூன்றில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொடுத்தேன். இப்போது உங்களிடம் முழுமையாய்த் தருகிறேன்.

1949-இல் நான் பதினைந்து வயது சிறுவனாய் ஒரு 'சோப்பு-இங்க்' பாக்டரியில் வேலை செய்து கொண்டிருந்த போது என்னோடு வேலை செய்துகொண்டிருந்த என்னை விடச் சற்றே இளையவனான நான் 'மொட்டை' என்று அன்புடன் அழைக்கும் எனது சகா ஒருவனின் கதை இது.

எனது முதல் நன்றி அவனுக்கு உரியது. அவன் இப்போது எங்கிருக்கிறானோ?…

அடுத்து இதைப் பிரசுரித்து வாசகர்களின் ஓரளவு வளர்ச்சியை முழு அங்கீகாரம் செய்த தூதுவன் என்ற முறையில் ஆனந்தவிகடனுக்கும், புத்தகமாய் முழு வடிவில் உங்களுக்குத் தருகின்ற பதிப்பத்தாருக்கும் என் ஆத்மார்த்தமான நன்றி உரியது.

மூன்றாவதாக உங்களுக்கு-வாசகரான, நீங்கள் எனக்கு ரொம்ப சொந்தமானவர் என்பதால்-உங்கள் கேள்விகள் கடிதங்கள், பாராட்டுரைகள், கண்டனங்கள்- ஆகிய ‘எல்லாவற்றுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் என்னை அதிகம் புகழ்ந்திருக்கிறீர்கள் என்பதை நான் பல சமயங்களில் உணர்ந்தேன். அந்தப் புகழ்ச்சிக்குரிய முறையில் எனது பணிகளை நான் நிறைவேற்றுவதே அந்தப் புகழுரைக்குச் செலுத்தும் நன்றியென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

த. ஜெயகாந்தன்

உன்னைப்போல் ஒருவன்

## 1

தங்கம் வெகுநாட்களுக்குப் பிறகு இன்றுதான் தலைவாரிப் பின்னிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

பகலெல்லாம் சுண்ணாம்பிலும் சிமெண்ட் கலவையிலும் நின்று உடம்பெல்லாம் அவற்றைப் பூசிக்கொண்டபின் வேலையிலிருந்து வீடு திரும்பக் கொஞ்சம் தாமதமாகி விட்டால் உடம்பு கழுவிக்கொள்வதே கஷ்டம் அந்த வீட்டில்.... நல்ல வேளையாய் இன்று பொழுதோடு வீடு திரும்பி இருந்தாள் தங்கம்! இல்லாவிட்டால் பத்துக் குடித்தனங்களுக்கு மேல் உள்ள அந்தவாசலில் ‘உடம்பு கழுவிக்’ கொள்ளவே தண்ணீர் தருவதற்கு அழுகின்ற அந்த ஓட்டைக் குழாயில் தலைமுழுகி இருக்க முடியுமா அவளால்? அதற்குக் காரணம். முன் யோசனையாக

ஆப்பக்கார ஆயாவிடம் சொல்லித் தன் வீட்டு இரண்டு பானைகளையும் தண்ணீருக்காக அணி வகுக்கும் வரிசையில் பொழுதோடு முன்னிடம் பிடித்து வைக்கச் சொல்லிவிட்டுதான் காலையில் வேலைக்குப் போனாள் தங்கம்

பத்துக் குடித்தனங்களுக்கும் பொதுவாக உள்ள, கதவில்லாத குளிக்கும் அறை வாசலில் இடுப்புச் சீலையையே அவிழ்த்துத் திரையாகப் போட்டுக் குளித்து முடித்தாள் தங்கம். வாசலில் பெண்களையும் குழந்தைகளையும் தவிர ஆண்கள் யாரும் இல்லை. ஆபீசுக்குப் போய் மேசையடியில் வேலை செய்பவர்களா என்ன, ஐந்தடித்ததும் வீட்டுக்கு ஓடிவர?... எல்லோருமே ஏக தேசக் கூலிக்காரர்கள்! குளித்து முடித்து வாசற் கொடியில் ஆப்பக்கார ஆயா, காய்ந்துவிட்டது என்று அவிழ்த்துக் கொசுவிப் போட்டிருந்த, முதல் நாள் துவைத்த தனது சீலையை எடுத்து வெற்றுடம்பில் சுற்றிக் கொண்டு வாசலின் குறுக்கே பாய்ந்தோடி வீட்டிற்குச் சென்றபின், உடுத்திக் கொண்டாள்.

ஈரத் தலையைக் கோதியவாறு இன்றுமுதல் தன் வாழ்க்கையில் நிகழப் போகும் அந்தப் புதிய திருப்பத்தின் இனிய பகுதிகளை மட்டும் கற்பனை செய்து, அதற்காக எதிர்பார்த்துக் காத்திருந்தபோதுதான் அவளுக்கு அந்த ஆசை உதயமாயிற்று.

‘தலைவாரிப் பின்னிக்கலாமா?’...’ என்ற அந்த எண்ணத்துடன், எண்ணையே காணாது வரண்டு, சடைகளாய்த் திரிந்து சிக்குப் பிடித்துச் செம்பட்டை ஏறிப்போன, அடர்ந்து செறிந்தும் நீளமில்லாத தனது பரட்டைச் சிகை முழுவதையும் இரண்டு கைகளாலும் திரட்டிப் பிடித்துத் தோள் வழியே முன்புறம் தள்ளி, மார்பின்மீது கிடந்த கூந்தலின் லட்சணத்தை ஒரு புன்னகையுடன் பார்த்துக் கொண்டாள் தங்கம். பிறகு அந்தக் கூந்தல் கற்றையை முகத்தோடு வைத்து மோந்து பார்த்தாள்! எண்ணெய் இருந்தாலல்லவா சீண்டல் அடிக்கும்? சுண்ணாம்பு நெடீதான் அடித்தது!

‘வாராமல் விட்டுத்தானே இப்பிடி ஆச்சு?’ என்று நினைத்தவளாய், சீப்பைத் தேடி வீட்டிற்குள்ளே போனாள்.

கரிபடிந்து, கூரையிலிருந்து ஒழுகிய மழையின் கறைக்கோடுகள் சுவரெல்லாம் ஓடி, இருண்டு கிடக்கும் ஒரே அறையான அந்த வாடகைப் பொந்தில் இரண்டு மாடக் குழிகள் உண்டு. ஒன்று, பகலானாலும் இரவானாலும் வீட்டுக்குள் இருக்க யார் விரும்பினாலும் எனக்குத்தான் முதல் இடம் என்று வரம் பெற்று வந்துவிட்ட வெளிச்சத்தைவிட அதிகமாய்ப் புகையை நிரப்பும் அந்தக் காடாவிளக்கின் ஏகபோக சிம்மாசனமாய்த் திகழ்கிறது. மற்றொன்று, வேலைக்குப் போயிருக்கிறானே அவள் ஆசை மகன் சிட்டி, அவன் தன் ஆஸ்திகளையெல்லாம் நிறைத்து வைக்கும் இன்னொரு மாடமாகும். தனக்கு வேண்டிய வேண்டாத பொருள்களையெல்லாம் பயன் கருதியும் விளையாட்டாகவும் அவன் அந்த மாடத்தில் சேர்த்து வைத்திருப்பது அவளுக்கும் தெரியும். அதனுள் சீப்பும் கண்ணாடியும் இருக்கும். முதலில் அவளுக்குக் கிடைத்தது இதுவரை அவள் அங்கே பார்த்தறியாத சின்னஞ்சிறிய கையளவு முகம் பார்க்கும் கண்ணாடிதான். அதைப் பார்த்ததும் ஒரு வினாடி அவள் வியந்தாள். ஏனெனில் அவள் எதிர்பார்த்தது முக்கோண வடிவமாய் உடைந்துபோன ஒரு சில்லுக் கண்ணாடியைத்தான். அதற்குப் பதிலாக இந்த அழகிய, புதிய, பின்புறம் ஒரு சினிமா நடிகையின் படம் பதித்த கண்ணாடியைப் பார்த்தபோது ‘வர வர இவுரு பெரிய மைனராத்தான் ஆயிக்கிட்டிருக்காரு’ என்று மகனைப் பற்றியபெருமித உணர்வுடன் புன்னகையோடு முணகிக்கொண்டான். அந்தக் கோலத்தை, தன் புன்னகையைக் கண்ணாடியில் பார்த்தபோது-வெகு நாட்களுக்குப் பிறகு தன் முகத்தைத் தானே இப்போது பார்க்க நேர்கையில்-தான் இளமையோடும் மிகவும் அழகோடும்-பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்தது போலவே இன்றும் இருப்பதாக உணர்ந்தாள். பிறகு வெளிச்சம் நன்றாக விழக்கூடிய வாசற்படிக் கதவருகே வந்து நின்று தன் முகத்தைத் தீர்க்கமாய் ஒருமுறை கண்ணாடியிலல்

பார்த்துக் கொண்டாள். தலை முடி செம்பட்டையாய், சிக்குற்று இருந்தபோதிலும் ஒரு நரை கூட இல்லையே என்ற திருப்தியும் பிறந்தது. ‘நரைக்கக் கூடிய வயசா என்ன’ என்ற சந்தேகமும் ‘நரைப்பதற்கு வயசு வேண்டுமா’ என்ற கேள்வியும் ‘எனக்கு வயசு முப்பதுதானே ஆகிறது’ என்ற பதிலும் படிப்படியாகப் பிறந்தன அவள் மனத்தில்.

கண்ணாடியை வாசற் கதவருக்கே சாய்த்து வைத்து விட்டு மாடக் குழியில் சீப்பைத் தேடினாள்.

அந்த மாடத்தில் தான் சிட்டி என்னென்ன சாமான்களைச் சேகரித்து வைத்திருக்கிறான்!..

வகை வகையான் பொத்தான்கள்; கோலிகள்; பம்பரம்; காற்றாடிக்கேற்ற ‘மாஞ்சா’ நூல் கண்டு ஒன்று; பழைய பிளேடுகள்; புதிதாக வாங்கிய சிலேட்டு ஒன்று; பலப்பங்கள்; பழைய பாடப் புத்தகம் ஒன்று; கசங்கிய நோட்டு; காகிதங்கள்-இவற்றின் நடுவே கிடந்த ஒரு பச்சை நிறப் பிளாஸ்டிக் சீப்பும் கடைசியாக அவள் கண்களில் பட்டது.

சீப்பை எடுத்த தங்கம் அந்தச் சிலேட்டுப் பலகையையும் கையிலெடுத்து உற்றுப் பார்த்தாள். கோணல் மாணலாக நேற்று அவன் எழுதிய பாடம் அதில் அழியாமல் இருந்தது. என்ன எழுதி இருக்கிறான் என்று அறிந்து கொள்ள அவள் படித்தவளல்ல; என் மகன் நாலு எழுத்துக் கற்றுக் கொள்கிறான் என்ற மகிழ்ச்சியுடன் பலகையை வெறித்தன வல்லாது வேறொன்றும் அறிந்துகொள்ளவில்லை அவளது விழிகள்.

பகல் முழுதும் ஊரெல்லாம் திரிந்து ‘ஐஸ் கிரீம்’ விற்று விட்டு வீட்டுக்கு வந்தபிறகு இரவில், அந்தத் தெருகோடியில் உள்ள சங்கம் ஒன்றில் நடக்கும் இரவுப் பள்ளிக்குப் போய் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு பாடம் படித்து வருகிறான் அவன்! என்பதை அவள் எண்ணிப் பார்த்தாள்.

ஐந்தாறு வருஷங்களுக்கு முன் ஆறு ஏழு வயதிருந்த சிட்டியை, தான் வேலைக்குப் போகும் நேரத்தில் ஆப்பக்கார

ஆயாவிடம் விட்டுச் செல்வாள் தங்கம். ஆப்பக்கார ஆயா என்கிற அந்த அன்னம்மாக் கிழவி பக்கத்துத் தெருவில் இருக்கும் கார்ப்பொரேஷன் பள்ளிக்கூடத்தில் கொண்டு விடும்போதெல்லாம் என்னமாய் அழுது அட்டகாசம் புரிவான் சிட்டி என்பதை, தங்கம் வேலையிலிருந்து வந்ததும் அந்த வாசலில் உள்ள குடித்தனக்காரப் பெண்கள் எல்லாம் அப்போது கதையாய்ச் சொல்வார்கள்.

‘அவனுக்குக் கால் முளைத்து விட்டது. என்னாலே கட்டி மேய்க்க முடியலே அம்மா’ என்று ஆப்பக்கார ஆயா அலுத்துக்கொண்டு பள்ளியில் கொண்டுபோய் விட்டாள் சிட்டியை.

‘பையனுக்கு வால் முளைத்து விட்டது.... படிக்க லாயக்கில்லை’ என்ற சர்டிபிகேட்டைக் கொடுத்து வாத்தியாரும் விரட்டி விட்டார்.

அந்தச் சிட்டிதான் எவ்வளவு பொறுப்புடன் இப்போது சம்பாதிக்கிறான்! எவ்வளவு அக்கறையுடன் இப்போது படிக்கிறான்! இப்பொழுது மட்டும் அவன் என்ன பெரியவனாகி விட்டான்? பன்னிரண்டு வயது முடிந்த குழந்தைதானே!... அந்தக் குழந்தைக்கு இப்போது முளைத்திருப்பது என்ன? அது தன்னை உணர்ந்த அறிவென்பதா? தாய் மீது கொண்ட அன்பென்பதா?...

தங்கத்துக்குச் சித்தாள் வேலை எப்போதுமா கிடைக்கிறது? சில நாட்களில் வேலை கிடைக்காமல் மத்தியான நேரத்திலேயே அவள் வீடு திரும்பிவிடுவாள். அவளுக்கு ஒருநாள் என்றால் ஒன்றரை ரூபாய் என்று அர்த்தம். ஒரு நாள் கூலி போய்விட்டதே என்ற அவளது வருத்தம் அன்று முழுதும் யாரோடும் அவளைப் பேச விடாது. அவள் மௌனத்தைக் கண்டே அதைப் புரிந்து கொள்வான் சிட்டி. அன்று அவ்வித மௌனத்தைக் கண்டுதான் அவன் அவளிடம் நெருங்கி வந்து உட்கார்ந்து கொண்டு சொன்னான்:

“போனாப் போவுதும்மா... தோ, நாந்தான் துட்டு கொண்ணாந்து இருக்கேனே.. இந்தா முக்கா ரூபா இருக்கு

இன்னிக்கி... நீ ஒண்ணும் வருத்தப்படாதேம்மா... ம் இன்னம் கொஞ்ச நாளுதான்... ம்...இரும்மா, இரு. அப்பாலே நீ வேலைக்கே போகவேணாம் எங்க எசமான் இருக்காரே, ரொம்ப நல்லவரும்மா... கொயந்தைங்கன்னா அவுருக்கு ரொம்ப ஆசை... ஆவுருதாம்மா எனக்கு நோட்புக், புத்தகம். சிலேட்டு எல்லாம் வாங்கிக் குடுத்தாரு. தெனம் நேத்து என்னா படிச்சே சொல்லுன்னு கேப்பாரு. நானும் கரெக்டா சொல்றேனா அவருக்குப் படா குஷி!;... அவுரு சொல்லி இருக்காரு... நல்லா படிடா, நெறைய சரக்கு எடுத்துக்கிட்டுப் போயி விக்கிற மாதிரி ஒனக்கும் ஒரு வண்டி வாங்கிக் குடுக்கறேன்னு நேத்துகூட சொன்னாரும்மா. வண்டின்னா இன்னா? இப்பல்லாம் ‘பிஸ்னஸ் இருந்தாத்தானே கம்ஸனு? வண்டி வந்துட்டா அப்படி இல்லே.. மாசசம்பளம் போட்டுத்தரேன்னு சொல்லி இருக்காரும்மா எங்க எஜமான்.... மாசம் எம்மா சம்பளம் தெரியுமா?... அதெல்லாம் நெறையா... அம்பது அறுபது ரூபா குடுப்பாரும்மா. அப்பாலே. இன்னாத்துக்கு நீ வேற வேலைக்கிப் போயிக் கஸ்டப்படணும்?....” என்று அந்த ஆசை மகள் தனக்கு நம்பிக்கை யளித்தபோது உலகத்தில், இப்படி ஒரு மகன் சொல்லிக் கேட்கும் பாக்கியத்தைவிட வேறு ஒரு இன்பம் இருக்க முடியும் என்று அவளுக்கு அந்த வினாடி தோன்றவில்லை. மகனை அப்படியே தழுவி அணைத்துக்கொண்டு, “நீ எம்மாதான் சம்பாரிச்சாலும், என்னாலே முடிஞ்சதை நான் சம்பாதிச்சா நம்ம ரெண்டு பேருக்கும் இன்னும் நல்லதுதானே ராசா” என்று மெய்ம்மறந்து கொஞ்சினாள்.

“ம்ம்... அதெல்லாம் முடியாது. நீ வேலைக்கிப் போறது எனக்குப் புடிக்கலே... கொஞ்சம் கூடப் படிக்கலே...” என்று அவளது அன்புத் தழுவலில் திமிறியவாறே சொன்னாள் சிட்டி.

“ஏண்டா அப்டி சொல்றே?” என்று அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் தங்கம்.

“ஆமாம்... அங்கே இருக்கிற ஆளுங்க எல்லாம் உன்னெ, ‘இன்னாம்மே இன்னாம்மே’ ன்னு கூப்டறானுவ. அன்னக்கி

அந்த மேஸ்திரி, கூப்ட ஒடனே நீ வரலேன்னு 'ஏ'கய்தே... செவுடா சாது ஒனக்கு'ன்னு மொறைக்கிறான்.. எனக்குக் கோவமா வந்திச்சி.. கோவம் வந்து நான் இன்னா பண்றது? என்று பொறுமினான் சிட்டி.

அவுங்க எல்லாம் அண்ணன் தங்கச்சிபோல பயகனவங்க... இல்லாட்டி அப்பிடி சொந்தத்தோட கோவிச்சுக்கு வாங்களா?" என்று சமாதானம் கூறினாள் தங்கம்.

"அந்த சொந்தமெல்லாம் ஒண்ணும் வேணாம்; நான் தான் ஒனக்கு சொந்தம்... நான் நெறையா சம்பாதிச்சா நீ வேலைக்குப் போகவே கூடாது... இன்னா சொல்றே? போவக்கூடாதுன்னா, போவக்கூடாதுதான்" என்று அவள் தோளை பிடித்துக்கொண்டு குலுக்கினான் சிட்டி.

தன் எதிரே தோளைப்பற்றிக் கொண்டு நிற்கும் மகனின் முகத்தை உட்கார்ந்த நிலையில் அண்ணாந்து பார்த்தாள்... இதயம் விம்மி உடலில் விளைந்த புல்லரிப்போடு கிளு கிளுத்துச் சிரித்தாவாறே மீண்டும் அவனை இழுத்து அணைத்துக்கொண்டு, உணர்ச்சி மயமானாள்; வாழ்வில் தான் அனுபவித்த சோகமெல்லாம் கரைகின்ற வேதனையுணர்வோடு கண்களில் கண்ணீர் மல்க "இப்படிச் சொல்ல எனக்குன்னு யாருமே இருந்ததில்லேடா ராஜா... உன் வார்த்தையை நான் தட்டவே மாட்டேன்டா.. அந்த சடையம்மா. கருணையிலே நீ நல்லா இருக்கணும்..." என்று ஆசீர்வதித்து அவன்மீது அன்பைச் சொரிந்தாள்...

-குளித்து முழுகித் தலைவாரிக் கொள்ள எண்ணிக் கண்ணாடியை எடுத்துக் கதவருகே சாய்த்துவிட்டு சீப்பைத் தேடிச் சென்ற தங்கம் மாடத்திலிருந்த பொருள்களைக் கண்டு மகனை நினைத்து, கையிலெடுத்த சீப்பையே வெறித்தவாறு நின்றிருந்தாள்.

சிந்தனை வயப்பட்டவளாய்த் தலைகுனிந்திருந்த அவள் விழிகளிலிருந்து அவளையறியாமல் இரண்டு சொட்டு;க் கண்ணீர் தரையில் விழுந்து பாதத்தின் மேல் தெறித்தது. தன் கண்கள் கலங்கிக் கண்ணீர் பெருகுவதற்குக் காரணமே இல்லை என்று தன்னைத்தானே சமாளித்துக்

கொள்பவள் போலச் சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். எதையோ நினைத்து திடீரென முகத்தில் மலர்ந்த மகிழ்ச்சியுடன் தலைவாரிக் கொள்ள அமர்ந்தாள்...

அந்தச் சின்னஞ்சிறு அலுமினியம் கிண்ணத்திலிருந்து எண்ணெய் முழுவதையும் கொட்டித் தேய்த்து விட்டுக் கொண்டாள் வாரி முடிப்பதற்குள் கையும் கழுத்தும் வலி கண்டுவிட்டது. புதர் போன்ற கூந்தலுக்குள் போய்ச்சீப்பு அடிக்கடி சிக்கிக்கொண்டது; அதைச் சிம்பிச் சிம்பி எடுப்பதற்குள்... அம்மாடி! ரோமக் கால்களெல்லாம் வலிக்க ஆரம்பித்தன... பல்லைக் கடித்துக் கொண்டு இழுத்தபோது அவளது மகன் தனக்காக மட்டும் வைத்துள்ள அந்த அழகிய பிளாஸ்டிக் சீப்பு ‘படக்’கொன்று தெறித்துப் போயிற்று... ஒரு பாதி தலையில்; மறுபாதி கையில்...

‘படக்’கென்று அந்த சப்தம் கேட்டபோது அதுவரை தன்னுள் முழுமையாக இருந்த ஒன்று தெறித்து, இரண்டு துண்டாகி- ஒரு முழுமை இரண்டு மூளிகளாகி விட்டதைப் போன்று, சூன்யமான சோகம் திடீரென்று அவள் முகத்தில் நிழல்போல் கவிந்தது.

கேவலம், அந்தச் சீப்புக்காகவா அவள் மனம் குலைந்து போனாள்?... இல்லை; வேறெதை நினைத்துத் திடீரென இப்படி நிலைகுலைந்திருக்கிறாள்?...

இந்த நினைப்பு ஒன்றும் அவளுக்குப் புதிதல்ல... நேற்றும் அதற்கு முதல் நாளும் - என் ஒரு வார காலமாகவே எந்த நினைவால் இரவெல்லாம் உறக்கம் இழந்து, பகலெல்லாம் உணவை இழந்து, நாளெல்லாம் அமைதியிழந்து, திடீர் திடீரென ஒருவித சோகத்துக்கும் ஆழமானதொரு சிந்தனைக்கும் அடிக்கடி இரையாகி வந்தாளோ அதே நினைவுக்குத்தான் இப்போதும் ஆளானாள் தங்கம்... மனத்தை அலைக்கழிக்கும் அந்த விவகாரத்துக்குத்தான் இன்று காலையே, தீர்க்கமாய், சுதந்திரமாய், தான் யாருக்கும் அஞ்சத் தேவையில்லை என்று உறுதியாய்த் தீர்மானம் செய்து ஒரு முடிவுக்கும் வந்து விட்டாளே... அந்தத்

தீர்மானமும் முடிவும் நடைமுறை வாழ்வாய் மாற இன்னும் சில மணி நேரங்களோ, சில நிமிஷங்களோதானே இருக்கின்றன... அதுகூட இல்லையோ?... இப்போதே, இந்த நிமிஷமே அது நிகழ்ந்து விட்டதா? அதோ அவள் வீட்டை நோக்கி யாரோ வரும் காலடியோசை கேட்கிறதே!...

சற்று நேரத்துக்கு முன் அவள் முகத்தில் படிந்த கலவர நிழல் மாறி களிப்பின் ஒளி படர உட்கார்ந்த நிலையிலேயே வாசற் கதவைப் பிடித்துக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தாள் தங்கம்.

“இன்னாடி பொண்ணே ஒரு நாளுமில்லாத திருநாளா சிங்காரம் நடக்குது இன்னா விசேசம்?...” என்று மிகவும் அர்த்தமுள்ள தோரணையில் கேட்டவாறு, வாசற்படியருகே தனது கனத்த சரீரத்தைச் சரியத் தள்ளுவதுபோல் இரண்டு கைகளையும் சுவரில் ஊன்றி உட்கார்ந்தான் ஆப்பக்காரா ஆயா என்று எல்லோராலும் அழைக்கப்படும் அன்னம்மாக் கிழவி.

தங்கம் எதிர்பார்த்தது இவளையல்ல என்பது அவளுடைய முகமாற்றத்தில் தெரிந்தது.

“இன்னா விசேசமா..?” என்று கேட்டுவிட்டுக் கிழவியின் முகத்தைப் பார்த்தாள் தங்கம். அந்த விசேஷத்தை நினைத்தபோது தன் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியை மறைக்க முடியாமல் ஒரு பலமான புன்னகையுடன் “விசேசந்தான்” என்று ஓர் அழுத்தத்துடன் கூறிவிட்டு, நாணமுற்றவள்போல் தலை குனிந்து அந்த ஒடிந்த சீப்பால் மௌனமாய்த் தலைவார முனைந்தாள் தங்கம்.

அப்போது குழாயடியிலிருந்து இடுப்பில் தண்ணீர்ப் பானையுடன் வாசலைக் கடந்து வந்த எதிர் வீட்டுக்காரி அலமேலு, சந்தேகமும் ஒருவகை அருவெறுப்பும் கனல்கின்ற கண்களால் தங்கத்தைப் பார்ப்பதைக் கிழவியும் கவனித்தாள். அலமேலுவும் கிழவியைப் பார்த்து உதட்டைப் பிதுக்கித் தோள்களைச் சுருக்கித் தனக்கும் கிழவிக்கும் தெரிந்த ஒரு விஷயத்தைப் பற்றி மௌனமாகத் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள்.

கிழவி அதற்குப் பதிற் சலனமேதும் காட்டாமல் வெறுப்புடன் தங்கத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

தங்கமோ இவர்கள் இருவரையும் பற்றிய நினைவே அற்றவளாய்த் தனக்குள் இருக்கும் ஒரு ‘விசேஷ’த்தில் தன்னையே மறந்து மூழ்கியவளாய்த் தலைவாரிக் கொண்டிருந்தாள்.

செம்பட்டைப் பிடித்து, கட்டுப்பாடற்றுத தன்னிச்சையாய் அலைபாய்ந்து கொண்டிருந்த கூந்தலை ஒரு கட்டுக்கும் ஒழுங்குக்கும் கொண்டுவர எடுத்துக்கொண்ட தனது முயற்சியில் ஓரளவு வெற்றி கண்டிருக்கும் இந்தத் தங்கம் தான், கட்டறுத்துக்கொண்டு அலைபாயும் தன் மனத்திற்கு அடிமையாகிப் போனாள் என்ற விசேஷத்தைப் புரிந்து கொண்டிருந்தாள் அன்னம்மாள்.

கூந்தலை வகிடெடுத்து வாரிப்பின்னி, பின்னலில் வைத்துக் கட்ட ஏதுமில்லாததால், ‘இவ்வளவு போதும்’ என்ற நினைப்போடு, ‘இதுவும் ஒரு அழகுதான்’ என்ற திருப்தியோடு முக்கால்வாசிப் பின்னிய சடையை அப்படியே மார்பின் மீது இழுத்துப் போட்டுத் தழுவியவாறு கண்ணாடியைக் கையிலெடுத்து அழகு பார்த்துக் கொண்டாள் தங்கம்.

அதைப் பார்த்த அன்னம்மாள் ‘ஐயோ, என் அழகே! என்று ஆத்திரத்தோடு மனத்துள் முனகிக் கொண்டாள். தங்கத்துக்கு மட்டும் பூரண திருப்தியா, என்ன?

இத்தனைக் காலம் எண்ணெய் காணாது படியும் பழக்கமே இல்லாது பரட்டையாய்க் கிடந்த கூந்தல் திடீரென்று இவள் மனத்தைப் போல் ஒரு நாளில், ஒரு போதில், ஒரு நொடியில், ஒரு பார்வையில் படிந்து விடுமா, என்ன?

மயிரைவிடவும் மானங்கெட்டதல்லவா இந்த மனம்? பத்துவருஷமாய் யதேச்சமாய் இருந்த காரணத்தால்தானே படியமறுத்து எதிர்த்து நிற்கிறது தலைமயிர். எண்ணெயின் உறவே அற்றிருந்ததால்தானே ஏற்க மறுக்கிறது? ஆனால், இந்த மனம்? இல்லாதது கிடைத்தால் பணிந்து விடுகிறது!

கிட்டாதது கிட்டினால் அடிமையாகி வருகிறது. செம்பட்டைமாறாது, எண்ணெய்ப்பசை ஒட்டாமல் திட்டு திட்டாய்த் தேங்கி எண்ணெய் பளபளக்கும் அந்தச் சிங்காரத்திலேயே திருப்தி கண்டு விட்டது தங்கத்தின் மனம்! மட்டை உரித்தும் நார்நீக்கப்படாத தேங்காயைப் போல் ‘பம்’மென்று உப்பி நிற்கும் இந்தத் தலையைப் பார்த்து ‘எல்லாம் இவ்வளவு போதும்; இதுகூட இல்லா தப்பவே என்னெப்பாத்து நீ ரொம்ப அழகுன்னு அவரு...’ என்று எதையோ நினைத்தவள் ‘டக்’கென்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் அன்னம்மாவுக்கு இவள் சேட்டைகளைக் கண்டு தாங்க முடியவில்லை. முகத்தைச் சுளித்துக் கொண்டு ‘பட’ரென்று கேட்டு விட்டாள்...

“ஏண்டி பொண்ணே, நானும் கேக்கணும் கேக்கணும்தான் இருந்தேன். வரவர ஒம்போக்கே ஒரு மாதிரியா இருக்கே... ஒண்ணும் நல்லாயில்லியே... ஏண்டி ஒனக்குப் புத்தி இப்பிடிப் போச்சு... ஒயுங்கா இருந்தியேடி... செப்புச் செலைமாதிரி புள்ளையெ வெச்சுக்கினு, ஆவுமாடி இந்தப் புத்தி? அடுக்குமாடி இந்த அக்குரும்பு..? என்று இரண்டு கைகளையும் தங்கத்தின் முகத்தில் இடிப்பதுபோல் நீட்டிக் கொண்டு புலம்பினாள் கிழவி.

வேறு யாராவதாக இருந்தால் இந்நேரம் பதிலுக்குச் சீறிவிழுந்து ரகளை பண்ணி இருப்பாள் தங்கம். அன்னம்மா ஒருத்திதான் தங்கத்துக்கு நெருங்கிய மனுஷி. வெகுநாளைய நட்பு, அல்லது உறவு, உரிமை எல்லாம்- வயதில் எவ்வளவோ மூத்த ஒரு ஆதரவு என்பதனால் மௌனமாய்த் தலை குனிந்திருந்தாள் தங்கம்.

“நீ இன்னாதாண்டி நெனச்சிக்கினு இருக்கே ஒன் மணஸிலே? எவனோ குருவி சோஸ்யம் சொல்றவனாம்.;.. அடிக்கடி இங்கே வரானாம்... நீ சரியா வேலைக்கிக் கூடப் போவாம போக்குக்காட்டிக்கினு மத்தியான நேரத்திலேயே அவனெ இஸ்துக்கினு வர்ரியாமே? வாசலு பூரா சிரிக்குதுடி” என்று கிழவி சொன்னபோது தங்கம் தலை

நிமிர்த்தி எதிர் வீட்டைப் பார்த்தாள். வாசலில் நின்று இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த அலமேலு ஒன்றும் தெரியாதவள் மாதிரி அண்ணாந்து கூரை முகட்டைப் பார்த்து ‘எரவாண’த்தில் செருகியிருந்த ஆப்பைக் காம்பை எடுத்துக் கொண்டு உள்ளே மறைந்தாள்.

அவள் முதுகுப்புறத்தை வெறித்தவாறு தங்கம் கத்தினாள்;

“எவ அவ சிரிச்சவ?... என்னெதிரே வந்து சிரிச்சி இருந்தா சிரிச்சதைக் கீய்ச்சி அனுப்பி இருப்பேன்! சிரிச்சாளுவளாமே. வாசல்லே இருக்கறவளுங்க? ஹ்ஹோ! இந்த வாசல்ல இருக்கவளுங்கல்லாம் பெரிய யோக்கியச்சிங்க... எனக்குத் தெரியாதாங் காட்டியும்... எத்தினிபேரு தொங்கத் தொங்க தாலி கட்டிக்கினு வந்தவளுங்க, எத்தினிபேரு இருட்லே மோளம் தட்டிக்கினு வந்தவளுங்கன்னு தெரியாதா? சிரிச்சாளாமே எவளோ?” என்று எழுந்து நின்று கொண்டு கிழவியின் முன்னே கையை வீசி வீசித் தட்டி, நீட்டி நீட்டிக் காட்டி ஆவேசம் வந்தது போல் குதித்தாள் தங்கம்.

எதிர்வீட்டு அலமேலுவை மனசில் நினைத்துக் கொண்டு தான் இவள் இவ்வளவு தூரம் கத்துகிறாள் என்று புரிந்து கொண்ட அன்னம்மாள்,

“ஏண்டி உன்னெப் பத்திக்கேட்டா, ஊரைப் பத்திக் கதையெல்லாம் எடுக்கறே?” என்று தங்கத்தை அடக்கினாள்.

“நீதானே சொன்னே, என்னெப்பாத்து சிரிக்கிறாளுங்கன்னு... நா இன்னா மத்தவளுங்க மாதிரி அங்கு நின்னவ இங்கே நின்னவன்னு பேரெடுத்தவளா..” என்று கேட்கும் போதே தங்கத்தின் குரல் பெருகிவரும் துயரத்தால் அடைத்துக்கொண்டது. கண்கள் கலங்க அழுகின்ற குரலில் அவள் சொன்னாள்: “அறியாத வயசிலே அந்தப் பாவிமவன் அவன் எங்கேருந்தாலும் புயுத்து அயிஞ்சி பூடுவான்-எம்மனசைக் கெடுத்துப் புள்ளையெக்குடுத்துட்டுப் பூட்டான். நானும் புத்தியில்லாமே அவனெ நம்பிப் பாயாபூட்டேன்...ம்... எந்தலை எயுத்து!

அப்பன் யாருன்னு கூடச் சொல்லிக்க முடியுமா? அதுக்கு அப்பறம் சிட்டி பொறந்த இத்தினி வருசமா ஆம்பளைவாடையே வேணாம்னுதானே வெறுத்துட்டு இருந்தேன்...” என்று அரைகுறை வார்த்தைகளைப் புலம்பியவாறு சேலைத் தலைப்பைக் கண்களில் கசக்கிக் கொண்டு விம்மி அழ ஆரம்பித்தாள் தங்கம்.

அதைப் பார்க்க அன்னம்மாளுக்குப் பரிதாபமாக இருந்தது.

பதினைந்து வருஷங்களுக்கு முன், சிற்றாடை தரித்த, வயது வந்த சிறுமியாக இருந்த காலத்தில் தன்வயோதிகத் தந்தை நோயில் விழுந்ததின் விளைவாகச் சிற்றாள் வேலைக்குச் சென்றாள் தங்கம். வேலைக்குச் சென்ற சில தினங்களில் தகப்பனை இழந்து தனியளானாள்; தனக்கொரு ஆதரவோ தட்டிக் கேட்கவோர் ஆளோ இல்லாதபோது ஒரு தவறான மனிதனைச் சரியான துணையென்று நம்பித் தன்னையே அர்ப்பணித்தாள்; அவமானச் சின்னமாய் உடலிற் பிள்ளைச் சுமையும் மனத்தில் துரோகக் கனலையும் தாங்கிக் கொண்டு அதன் பின்னர் வாழ விரும்பாது அவள் சாகத் துணிந்தபோது அவளுக்கு நம்பிக்கையும் ஆதரவாயும் கைகொடுத்தவள் அன்னம்மாள். அதன் பிறகு இந்தப் பதினைந்து வருஷமாயத் தங்கம் நெருப்பாய் வாழ்ந்து வருகிறாள் என்பதுதான் அன்னம்மாள் இதுநாள் வரை கண்ட உண்மை.

அந்தத் தங்கம் இப்போது இப்படிப் பேரெடுக்கிறாள் என்று அறிந்து ஆத்திரமுற்ற அன்னம்மாள். தங்கம் அழுவதைக் கண்டதும் அவளை விடவும் வருத்தமுற்றாள். அடிவயிற்றில் மூண்டதுயரத்தை அடக்கிக்கொண்டு விம்மி விம்மி அழும் தங்கத்தை இழுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் அன்னம்மாள்!-“உன்னைப்பத்தி எனக்குத் தெரியாதாடி? உன்னெப்பத்தி அபாண்டமா யாராவது நா வுடுவனாடி?.. ஆனா. பன்னெண்டு மணிக்கு வந்த அந்தக் குருவி சோஸியக் காரனுக்கு நாலு மணி வரைக்கும் இங்கே இன்னா வேலைன்னு எல்லாரும் கேக்கறாங்களேடி நான் இன்னா சொல்றது?...” என்ற அன்னம்மாளின் தவிப்பைக்

கண்டதும் கண்களைத் துடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து கிழவியைப் பார்த்து உறுதியாகச் சொன்னாள் தங்கம்; “ஆமா... அந்த ஆளு அடிக்கடிதான் வராரு... எனக்கும் அந்த ஆளுக்கும் அஞ்சாறு மாசமாவேதான் தொடுப்பு! அதுக்கு இன்னா?... ஒருத்தன்கூட வாய்ந்துக்கினே கண்டவனோட நான் திரியலியே... இத்தினி வருசமா ஆம்பளை மூஞ்சியைக்கூடப் பாக்காமத்தான் இருந்தேன். எப்படியோ எல்லாம் ஆயிடுச்சி... அந்த ஆளும் மத்தவனுவ மாதிரி ஒண்ணும் மோசமானவனில்லே... இது என்வூடு மாசம் மூணு ரூபா வாடகை நான்தான் குடுக்கறேன்...என் இஸ்டம்! எவனும் வருவான்... என்னெ எவ கேக்கறது?... பன்னெண்டு மணிக்கு வந்து நாலு மணிக்கு போனானாம்?... தோ, பாரு! இன்னயிலேருந்து அந்த ஆளு இங்கேயேதான் வந்து இருக்கப் போறாரு” என்ற அவளது மிடுக்கான தீர்மானத்தைக் கண்டு அன்னம்மாள் முதலில் ஒரு வினாடி திகைத்தாள்.

தங்கம் ஆரம்பத்திலேயே இது விஷயத்தைத் தன்மீது மிகவும் பாசம் உள்ள அன்னம்மாளிடம் கலந்துகொள்ளாத தவறுக்கு வருந்தி மன்னிப்புக் கோருபவள்போல் ஒரு வினாடி மௌனமாய்த் தலை குனிந்திருந்தாள். பிறகு சொன்னாள்: “ஆமா ஆயா சிட்டிதான் அப்பன் இன்னாருன்னு சொல்ல முடியாத புள்ளையா பொறந்துட்டான்... இப்ப வவுத்திலே இருக்கறதுக்காவது அப்பன் வேணாமா? அதுக்கோசரம் தான் இந்த ஆளோட வாயறதுன்னு, ரொம்ப ரொம்ப யோசிச்சி இன்னக்கி வரச் சொல்லிட்டேன்... வர்ற நேரந்தான்...” என்று கூறி மீண்டுமொருமுறை வெளியே தலை நீட்டிப் பார்த்தாள் தங்கம். அவள் வாசற்படியில் கை வைத்து எட்டிப் பார்த்தபோதுதான் தங்கத்தின் உடலில் ஏற்பட்டுள்ள அந்தச் சிறு மாற்றத்தைக் கண்டாள் அன்னம்மாள்...

“இன்னாடி பொண்ணே. எங்கிட்டே நீ ஒண்ணுமே சொல்லலியே!... நா அம்மாந்தூரம் அந்நியமாவா பூட்டேன்!” என்று கிழவி வருந்தியபோது தங்கம் அவளது கையை

இறுகப் பற்றிக்கொண்டு குரல் தழுதழுக்கச் சொன்னாள்: “நான் இன்னான்னு சொல்லுவேன் ஆயா... எனக்கே ஒண்ணும் புரியாமக் கொயம்பிக்கிட்டு கெடந்தேன்.. நீ இன்னா சொல்லுவியோன்னு வேற பயந்துக்கிட்டிருந்தேன்... அதுக்கோசரம் நீ ஒண்ணும் மனசிலே வெச்சிக்காதே ஆயா...”

“அது சரி... இப்ப எத்தினி மாசம்?...”

“ஆறு”

இன்னாடி ஆறுன்றே... ஒண்ணுமே தெரியலியே...”

“அது அப்பிடித்தான்... போன தடவைகூட ஆறு மாசத்துக்கு மேல் பட்டுத்தானே வயிறு தெரிஞ்சிது... மத்தவங்களுக்குத் தெரியாட்டியும் எனக்குத் தெரியுதே..”

“ஆமா... அவனெ இங்கியே வரச் சொல்லிட்டியே.. அவனுக்கு வூடுவாச, பெண்டாட்டி...புள்ளே ஒண்ணுமில்லியா?”

“ஒண்ணுமில்லியாம்.. மோர்மார்கட்டு மரத்தடியிலே சோசியம் பாத்தக்கினு-ஒன்னோ ரெண்டோ கெடச்சிதுனா டீக்கடையிலே சோறு வாங்கித் துண்ணுக்கினு மரத்தடியிலே படுத்துக் கெடக்கறாரு.. அதான், வரச் சொன்னேன். வந்துடரேன்னு சொல்லியிருக்காரு இன்னக்கி சாயங்காலத்துக்கு...”

“ஏண்டி, நல்லா யோசிச்சியா?” என்று எதையோ கேட்கத் தயங்குபவள் மாதிரி கேட்டாள் அன்னம்மா.

“நல்லாதான் யோசிச்சேன்.. எந்த சக்காளத்தியாவது எதனாச்சும் பேசினான்னா கரீட்’டா சொல்லிடு... தங்கம்மா அவனெதான் வெச்சிக்கினுகீறான்னு சொல்லு. அவளோடயே வாயப் போறான்னு சொல்லு இன்னொருத்தியெப் பத்தி வாயிலே வந்ததெ எல்லாம் பேசறத்துக்கு மின்னே, நெஞ்சிலே கையெ வெச்சி அவ அவளெப் பத்தி ஒரு நிமிசம் நெனச்சுப் பாத்துப் பேசுங்கடின்னு சொல்லு. அதுக்கு மேலேயும் என்னெப்

பத்திக் கன்னாபின்னான்னு பேசினா அந்த வாயி புயுத்துத்தான் போவும்...” என்று நிறுத்தாமல் அவள் பேசிக் கொண்டிருந்ததை மோவாயின் மீது கை வைத்து ஆழ்ந்த சிந்தனையோடு கேட்டவாறிருந்த அன்னம்மா திடீரெனக் குறுக்கிட்டாள்: ‘ஊரெப் பத்தி யோசிச்சியான்னு நாங் கேக்கலேடி... ஊரு கெடக்குது ஊரு... ஊரு மகா யோக்கியம் பாரு... நாங் கேட்டது உம் புள்ளையெப் பத்தி. சிட்டிப் பையனுக்குத் தெரியுமா இந்த விஷயம்?” என்று குரலைத் தாழ்த்திக் கேட்ட பின் தங்கத்தின முகத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தைக் கவனித்தாள் கிழவி.

தன்னுள் முழுமையாக இருந்த ஒன்று பட்டென்று தெறித்து இரண்டு துண்டாகி ஒரு முழுமை இரண்டு மூளிகளாகி விட்டதனால் விளைந்த அந்த சூன்யமான சோகம் மீண்டும் அவள் முகத்தில் நிழல்போல் கவிந்தது...

“அதை நெனச்சாத்தான் ஆயா பயமா இருக்கு.. சிட்டி வந்து அந்த ஆளெப் பாத்துட்டு இன்னா நெனைப்பானோ? இன்னா சொல்லுவானோ? யாரு இந்த ஆளுன்னு கேட்டாநா இன்னான்னு சொல்லுவேன் ஆயா” என்று தங்கம் பதைத்தபோது அவள் முகமே பரிதாபமாய் மாறியது; கண்கள் கலங்கி அவள் முன்னே இரண்டு துண்டுகளாய்க் கிடந்த அந்தச் சீப்பையே வெறித்தன.

ஊரையும் உலகத்தையும் மதியாது சகலவற்றையும் எதிர்த்துத் துச்சமாகக்கருதி, தைரியமாய் ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்த தங்கம், தன் வயிற்றில் பிறந்த அந்தச் சின்னஞ்சிறு பையனுக்கு அஞ்சுவதென்றால்? அது பாசத்தின் மகிமைதான்... அதை நினைத்த போது கிழவிக்கு உடம்பு சிலிர்த்தது.

“அவன் கொயந்தெடி... அவனுக்குப் போயிப் பயப்படறியே... நீ பெத்த புள்ளெ அவன்; நீ என்னா சொன்னாலும் கேட்டுக்க வேண்டியவன்தானே?” என்று அரை மனத்தோடு ஏதோ சமாதானம் சொன்னாள் அன்னம்மா.

அப்போதுதான் அவன் வந்தான்.

ஒரு கையில் சிறிய டிரங்குப் பெட்டியும் மற்றொரு கையில் மூன்று அறைகளில் அடைப்பட்ட குருவிகள் குதூகலமாய் கீறிச்சிடும் கூண்டும், கட்கத்தில் சுருட்டி இடுக்கிய பாயுமாய் அவன் வருவதை, வாசலில் உள்ள அனைவரும்-தங்கள் வதந்தியின் கதாநாயகனை – உள்ளேயிருந்து ஓடிவந்து பார்த்தனர்.

அந்தக் குருவி சோசியக்கார மாணிக்கத்துக்குத் தங்கத்தின் வயசுகூட இருக்காது என்று தோன்றியது ஒருத்திக்கு அவள் அலமேலுவிடம் ஓடிவந்து “சின்னப் பையனா இருக்கானே… இந்தச் சிறுக்கிதான் அவனை மயக்கி இஸ்த்துட்டா…” என்று சொன்னாள். அப்போதுதான் அலமேலு தலை நிமிர்ந்து எதிர்வீட்டு வாசலைப் பார்த்தாள்.

மகிழ்ச்சியால் பூரித்த புன்னகையுடன் மாணிக்கத்தை வரவேற்ற தங்கம், அவன் கையிலிருந்த பெட்டியையும் குருவிக்கூண்டையும் வாங்கினாள். கூண்டுக்குள்ளிருந்த பறவைகள் அவள் இதயத்தைப் போலவே சிறகடித்துப் பறந்து படபடத்துக் கீறீச்சிட்டன. அந்தக் கூண்டை முகத்துக்கு நேரே உயர்த்திப் பிடித்து “புது இடம் புடிச்சிருக்கா?” என்று மலர்ச்சியுடன் கேட்டுவிட்டு மாணிக்கத்தைப் பார்த்துச் சிரித்தாள் தங்கம்.

அவன் வந்தவுடன், வாசற்படியில் உட்கார்ந்திருந்த அன்னம்மா எழுந்து நழுவ முயன்றாள்.

“எங்கே ஆயா போயே?… உக்காரு” என்று கையைப் பிடித்து நிறுத்தினாள் தங்கம்- “இது எங்க ஆயா… எங்க நைனா செத்தப்புறம் என்னெ வளர்த்தது இதான்”-

மாணிக்கம் கிழவியைப் பார்த்து மரியாதையுடன் புன்னகை காட்டினான். கிழவிக்கு ஒரு பார்வையிலேயே அவனைப் பிடித்திருந்தது. “என்னமோப்பா நடந்தவரைக்கும் நல்லதுதான்… பாக்கறவங்களுக்கு எளக்காரமாப் புடாம, இன்னிக்கி சிரிக்கிறவங்க கூட நாளக்கி உங்களைப் பாத்துச் சந்தோஷப்படற மாதிரி ஒத்துமையா இருக்கணும்… பத்து வருஷமா அல்லிராணி மாதிரி இருந்து இப்ப ஒரு அர்ச்சுனனைப் பாத்துப்

புடிச்சிருக்கா... ஆமா, அல்லிராணியெக் காட்டியும் கொஞ்சம் சாஸ்தியாவே மூக்கு மேலே கோவம் வரும் இவளுக்கு...ஆனா மனசு கொயந்தெ மாதிரிதான்..” என்று மனத்துள் அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ ஆசீர்வதித்தாள் அன்னம்மா.

மாணிக்கம், தங்கத்தைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டியவாறு கிழவியிடம் சொன்னான்: “இருக்கட்டும் ஆயா... எனக்குக் கோவமே வராது... அதுக்காவது கோவம் வரும்னா, நல்லதுதானே?... கோவத்தெப் பத்தி ஒண்ணுமில்லே; ஆனா நம்மாலே இன்னொருத்தருக்குக் கஷ்டம் வரக்கூடாது... நமக்கு எவ்வளவு கஸ்டம் வந்தாலும் பரவாயில்லே... என்னா ஆயா சொல்றே?” என்றான் மாணிக்கம்.

அவன் சொல்வதைப் புரிந்து கொள்ளாவிட்டாலும், ஏதோ நல்ல வார்த்தைகள் என்ற உணர்வில் “அது சரி அது சரி” என்று தலையாட்டினாள் கிழவி.

“எதுசரி? கஸ்டம் வராமத்தான் பாத்துக்கணும். அப்பிடியும் வந்தா சமாளிக்கத்தான் வேணும்” என்று அவன் சொன்னதைப் புரிந்துகொண்டு பதில் சொன்னாள் தங்கம்.

“அதான் சரி” என்று தங்கத்தின் வார்த்தைகளைப் பலமாக ஆமோதித்த அன்னம்மாள், “பேசிக்கினு இருங்க. நானுபோயி டீ வாங்கிக்கினு ஓடியாரேன்”என்று எழுந்தாள்.

“அதெல்லாம் ஒண்ணும் வாணாம் ஆயா” என்று தடுத்தான் மாணிக்கம்.

“நீ உக்காருப்பா, தோ வர்ரேன்” என்று எழுந்து போனாள் கிழவி. அவள் போனதும் தங்கம் விரித்த பாயில் உட்கார்ந்த மாணிக்கம் அந்தச் சிறிய வீட்டை ஒரு முறை பார்த்தான். பிறகு தங்கத்தைப் பார்த்துப் புன்முறுவல் காட்டினான். தங்கமும் மகிழ்ச்சியுடன் சிரித்தாள்.

“நீ இன்னக்கி ரொம்ப அழகா இருக்கே... இந்தா இந்தப் பூவையும் வெச்சிக்க” என்று சட்டைப் பையிலிருந்து இலை சுற்றிய மல்லிகைச் சரத்தை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் அதை இரு கைகளிலும் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கூந்தலில் சூட்டிக்கொண்டாள்.

“ம்... நிக்கிறியே உக்காரு” என்று உட்கார்ந்தபடியே நின்றுகொண்டிருக்கும் தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்தான் மாணிக்கம்.

“ஸ்.. யாராவது பாக்கப் போறாங்க” என்று வாசற்கதவைச் சற்று ஒருக்களித்து விட்டு உட்கார்ந்தாள் தங்கம்.

நேரம் இருட்டிவிட்டதால் கதவை ஒருக்களித்தும் வீட்டினுள் ஒரே இருளாய் இருந்தது. மாடத்தில் இருந்த விளக்கை ஏற்ற, மாணிக்கத்தின் நெருப்புப் பெட்டியை வாங்கியபோது... ஒரு சிறு விளையாட்டு.... பிறகு விளக்கை ஏற்றினாள்.

அவள் உள்ளே விளக்கேற்றும் போது, வேலையிலிருந்து திரும்பிய சிட்டி வாசலில் வந்து கொண்டிருந்தான். நீல அரைக்கால் சட்டையின் இரண்டு பாக்கெட்டுக்குள்ளும் கையை நுழைத்துகொண்டு தோளில் ஒரு கர்ச்சிப் தொங்க மிகவும் குதூகலமாய்ச் சீட்டியடித்துக்கொண்டு அவன் வருவதைப் பார்த்து வாசலில் இருந்த பெண்கள் கண்களைச் சிமிட்டிச் சிரித்துக்கொண்டனர். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சீட்டியை நிறுத்திவிட்டு மௌனமாய் வந்தான் சிட்டி. வீட்டு வாசற்படியருகே வரும்போது உள்ளிருந்து புதுக் குரல் கேட்டு ஒரு வினாடி நின்றான்.

“ஆமா.. உன் பையன் எப்ப வருவான்? அவன் கிட்டே எதனாச்சும் சொல்லி வெச்சிருக்கியா?” என்ற மாணிக்கத்தின் குரல் கேட்டு நின்ற சிட்டியின் செவிகளில் அவன் தாய் சொன்ன பதிலும் விழுந்தது.

“உன் பையனா?... நம்ம பையனு சொல்லு... அவனெப்பத்திதான் நெனச்சிக் கொழம்பிக்கிட்டிருக்கேன் நான்”

-பேச்சு தன்னைப் பற்றியும் பேசுகின்ற விஷயம் விபரீதமாயும் இருப்பது கேட்டு அப்படியே திகைத்து

நின்றான் சிட்டி. திரும்பிப் பார்த்தான்; வாசலில் உள்ள மனிதர்கள் தன்னைக் கண்டு, கண் சிமிட்டிக் சிரித்துக் கொண்ட காரணம் அவனுக்கு விளங்கலாயிற்று?

“ஒண்ணு செய்றியா? இதான்டா உங்க நைனான்னு சொல்லிடேன்...” என்று யோசனை கூறினான் மாணிக்கம்.

“ம்ஹு_ம்... அது சரியில்லே!..ம், அவனெப்பத்தி இன்னா? அவன் கொயந்தெதானே?... இது யாருன்னு அவனே கேட்டா அப்ப ஏதாவது சொல்லிக்கலாம்” என்று தனக்கே திருப்தி இல்லாத பதிலைச் சொன்னாள் தங்கம்.

அதற்குமேல் நின்றிருக்க நிலை கொள்ளாமல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சிட்டி.

முதலில் அவன் பார்த்தது மாணிக்கத்தைதான். மாணிக்கம் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தபோது சிட்டியின் முகத்தில் தோன்றிய உணர்ச்சியை மாணிக்கத்தால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அவன் தன் தாயைப் பார்த்தபோது மாடத்தருகே விளக்கேற்றி நிமிர்ந்த தங்கம்-தன் மகனை நேருக்கு நேர் பார்க்க முடியாமல், குற்றம் புரிந்துவிட்ட உணர்வில் உடல் விதிர்க்க நின்றிருந்தாள்.

அவன் வாயிலிருந்து என்ன வார்த்தை பிறக்குமோ என்று மனசு அடித்துக் கொள்ள, முகமெல்லாம் வியர்க்க நின்றிருந்தாள் தங்கம்.

ஆனால் சிட்டியோ வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை.

தன் காலடியில் கிடந்த அந்தப் பச்சை பிளாஸ்டிக் சீப்பின் இருதுண்டங்களையும் குனிந்து எடுத்தான்; இரண்டையும் பொருத்திப் பார்த்தான்... பிறகு தலை நிமிர்ந்து தாயின் தலை அலங்காரத்தைப் பார்த்தான்...

தங்கத்துக்கு உடம்பெல்லாம் கூசிற்று!

“இந்தா!” என்று சட்டைப் பையிலிருந்து சில்லறைகளை எடுத்து எண்ணி “முக்கால் ரூபா!” என்று சொல்லி ஏதோ கடமையைச் செய்பவன் போல அவள் கையில் கொடுத்தான். அவளும் யந்திரம் போல் அதைக் கைநீட்டி வாங்கிக் கொண்டாள்.

கையிலிருந்த இரண்டு துண்டுகளாய்ப் போன சீப்பை மாடத்தில் போட்டுவிட்டு சிலேட்டுப் பலகையையும் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு ‘நா’ சங்கத்துக்குப் போறேன்’ என்று தலைகுனிந்து முனகிக்கொண்டே வெளியேறினான் சிட்டி.

போகும்போது மாணிக்கத்தை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அங்கே ஒரு மனிதன் உட்கார்ந்திருக்கிறான் என்றே லட்சியப்படுத்தாமல் விறைப்புடன் வெளியேறிய சிட்டி வாசலில் இருந்தவர்களையும் பார்க்க முடியாமல் தலைகுனிந்து நடந்து மறைந்தான். அவன் போகிற விதத்தைக் கண்டு துணுக்குற்ற மாணிக்கம் தங்கத்தைக் கலவரத்துடன் பார்த்தான்; அவன் அவளிடம் சொன்னான்:

“தங்கம்!... நீ நெனைக்கிற மாதிரி அவன் ஓண்ணும் கொயந்தெ இல்லே..” என்று அவன் கூறியதை ஏற்றுக் கொள்ளும் தோரணையில் ‘அதுக்காக நீ வருத்தப்படாதே’ என்று மாணிக்கத்தின் அருகே வந்து அவன் கையைப் பற்றி அழுத்தினாள் தங்கம். மாணிக்கம் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவள் தன், நெஞ்சைப் பீறிக்கொண்டு வந்து அழுகையை, மகனின் முன்னே தான் மான பங்கப்பட்டுப் போன அவமான உணர்ச்சியை உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டு, பரிதாபமாய்த் திக்கற்ற குழந்தை கண் கலங்குவதுபோல் அவனைப் பார்த்துப் புன்னகை காட்டினாள்; மாணிக்கம் மௌனமாக அவளைச் சமாதானப் படுத்தினான்.

காலத்திற்கேற்பவும் இடத்திற்கேற்பவும் ஒரு பொருளின் தன்மை மாறுபடும் என்பது விஞ்ஞானவிதி. விஞ்ஞானமே வாழ்க்கையோடு வேறெதையும் விடத் தொடர்பு கொண்டது. பூமியின் மீது கனம் மிகுந்திருக்கும் ஒரு பொருள் வான மண்டலத்திற்குப் போனால் மிதக்கின்ற பொருளாகிவிடும். இதுவே இடமாற்றத்தால் விளைந்த தன்மை மாற்றம். இதேபோன்று சமூக வாழ்விலும் தரத்திற்கேற்ற குண, பண்பு மாற்றங்களும் உண்டு பன்னிரண்டு வயதே முடிவுற்ற சிட்டி மாளிகைக் குடும்பத்தில் பிறந்திருந்தால் ஒன்றுமறியாத மழலை பேசும் குழந்தையாகத்தான் இருந்திருப்பான். ஆனால் அவன் மாளிகையில் பிறந்தவனோ, மாளிகையாக உயர முயலும் மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தவனோ அல்ல, அது அவனது பெரிய குற்றம்தான்! அந்தக் குற்றத்தின் விளைவாகவே அவனும் அவனைப் போன்ற அந்தத் தரத்துக் குழந்தைகளும் உடல் வளர்ச்சியில் குழந்தைகளாய் இருந்தாலும் உளவளர்ச்சியில் சராசரி மனிதனின் வளர்ச்சியே பெற்றிருக்கிறார்கள். வாழ்க்கை அவர்களுக்கு எதையும் மறைக்கவில்லை. அவர்களுக்கு ‘எல்லாமே’ தெரிந்துதான் இருக்கிறது குழந்தை என்று தங்கம் நினைத்த சிட்டி பெரியவனைப் போல் நடந்து கொண்டது அவன் குற்றமல்ல; அது சமூகக்குற்றம். இடம் மாறிப் பிறந்த மனித ராசியின் தன்மை மாற்றம் என்று அவள் அறிவாளா என்ன? அவன் இப்படி ஊமைக்காயம் பட்டதுபோல் நடந்து கொள்வான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அவன் மட்டும் தன் தாயைப் பற்றி இவ்விதம் எதிர்பார்த்தானா?... அந்த அதிர்ச்சி அவனை வாய் மூடி மௌனியாக்கியது.

வீட்டைவிட்டு வெளிக்கிளம்பிய சிட்டி, குழப்பத்துக்கோ சந்தேகத்துக்கோ இடமில்லாமல் தெளிவாகி விட்ட தன் தாயின் துரோகத்தால் அதிர்ச்சியுற்று, அவமானமும் ஆத்திரமும் நெஞ்சில் கனத்துப் போனதால் குனிந்த தலையுடன் வெகுதூரம் நடந்தான்...

அந்தத் தெருக்கோடியில் இருக்கும் சங்கத்தைத் தாண்டி தெருவுக்கு அப்பால் கழுதைகள் மேய்ந்து கொண்டிருக்கும் விளையாட்டு மைதானத்தையும் கடந்து, பொழுது மங்கியபின் கவிந்த இருளில் குனிந்த தலை நிமிராமல் அவன் நடந்து கொண்டே இருந்தான்.

புத்தகமும் சிலேட்டும் தாங்கிய கைகள் இரண்டையும் பின்புறம் சேர்த்துக்கொண்டு, முன் சிகை முகத்தில் விழுந்து புருவங்களில் இறங்கி-துயரத்தாலும் கோபத்தாலும் சிவந்த கண்களை மறைக்க-துள்ளலும் துடிப்புமாய்க் குதித்து நடக்கும் சிட்டி-'நாணத்தால் சாம்பி' உடலெல்லாம் குன்றி, தலையிறங்கிய மானஸ்தனாய் எங்கு போய்க் கொண்டிருக்கிறான்?..

'எங்கே போகிறேன்?' என்ற நினைவு அவனுக்கே வந்ததோ?... நின்றான்!

தன்னைப் பார்க்க கண்களைச் சிமிட்டிக்கொண்டு தங்கள் வாய்க்குள்ளேயே சிரித்துக் கொள்கிற தெரிந்த மனிதர்கள் யாருமில்லாத-மனிதர்களே இல்லாத அந்த வெட்ட வெளியில் வந்து நின்ற பிறகுதான் அவன் தலை நிமிர்ந்தான். சூழ்ந்திருந்த இருளைத் தாண்டி எதிரே தூரத்தில், பிரகாசமான விளக்குகள் எரியும் 'பேசின் பிரிட்ஜ்' ஸ்டேஷனும், பின்னால் தன் வீடும் மனிதர்களும் உள்ள, மங்கிய விளக்குகள் எரியும் சாலைக்கு அப்பால் உள்ள சூளை வட்டாரமும் தெரிவதைப் பார்த்தான் சிட்டி.

வருகின்ற வழியெல்லாம் 'அவளையும் அவனையும்-ஆம், இப்போது தங்கத்தைப் பற்றி 'அவள் இவள்' என்று தான் நினைக்க முடிந்தது- அந்த இருவரையும் தனக்குத் தெரிந்த ஆபாச வார்த்தைகளால் எவ்வளவு திட்டமுடியுமோ அவ்வளவும் மனத்துள்ளேயே திட்டித் தீர்த்துக் கொண்டான்... திட்டுவதற்கு உபயோகிக்கும் வார்த்தைகள் தான் தீர்ந்தனவே யொழிய, தீட்டுகின்ற கோபமும் ரோசமும் தீர்ந்துவிடுமா என்ன?

அவன் தாய் தங்கம் ரொம்ப முன் கோபக்காரி என்று பெயரெடுத்தவள்தான். அவளைவிடக் கோபமும்

முரட்டுத்தனமும் மிகுந்தவன் சிட்டி என்பது அவனை யொத்த அவனது தோழர்களுக்குத் தெரியும்... அவன் படிக்கப்போன பள்ளிக்குத் தெரியும். பள்ளியிலிருந்து அவனை விரட்டிய வாத்தியாருக்குத் தெரியும்.

பள்ளியிலிருந்து விரட்டிய பிறகு, தாய்க்குப் பிடிக்காத, சாபத்திற்குரிய தத்தாரிப் பிள்ளையாய்த் திரிந்து கொண்டிருந்த காலத்தில் பொழுதெல்லாம் இந்த இடத்தில்தான் விளையாடிக் கொண்டிருப்பான் சிட்டி.

இப்போது தாயின் விருப்பத்திற்கும் பாசத்திற்கும் பாத்திரமாகி உருப்பட்டுவரும் பொறுப்புமிக்க சிறுவனாக மாறியபிறகு, மீண்டும்-இரண்டு வருஷத்திற்குப் பின் இங்கே இந்த மைதானத்துக்கு வந்து விட்டானே!...

சிட்டி மீண்டும் தாய்க்குப் பிடிக்காத மகனாய், சாபத்திற்குரிய துஷ்டனாய் மாறி விட்டானா?...

அது மட்டும் அவன் வாழ்வில் இந்த ஜென்மத்தில் மீண்டும் நடக்கப் போவதில்லை. அவனை வெறுக்கவோ சபிக்கவோ தங்கத்தால் இனிமேல் முடியாது. அவன் தாய் தங்கம், மகன் சிட்டியை நன்கு உணர்ந்துகொண்டு விட்டவள். அவனுக்குத் தன்மீது எவ்வளவு அன்பு என்பதை இந்த இரண்டு வருஷ காலமாய் வியக்கத்தக்க முறையில் அநுபவித்துப் பூரித்திருந்தவள்... அப்போதெல்லாம் மகனின் அன்பைப் புரிந்துகொள்ளாமல் அவனது சிறுபிள்ளைத் தனமான குறும்புகளுக்காக எவ்வளவு பயங்கரமாகவும் துக்கிரித்தனமாயும் அவனைச் சபித்திருக்கிறோம் என்றெண்ணி வருந்துவாள். எங்கே அந்த வார்த்தைகள் பலித்துவிடுமோ என்று அஞ்சுவாள். எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளைப் பின்னிக் கொண்டிருக்கும் இரவு வேளைகளில், அந்தக் கனவுகளையெல்லாம் நனவாக்கப் போகும்-தன் பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும்-அந்தக் காதல் மைந்தனைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டு கண்கலங்க அவனுக்காகப் பிரார்த்திக்கொண்டிருப்பாள் அந்த ஏழைத் தாய். அவளால்

இனிமேல் அவனை வெறுக்கவோ சபிக்கவோ முடியுமா என்ன?...

ஆனால்?..

அவனை வெறுக்க முடியாத, ஒரு வார்த்தை கடிந்து கொள்ள முடியாத, அந்த அன்புத் தாயை வெறுத்து அவளைச் சபிக்கவல்லவா அவன் இங்கு வந்திருக்கிறான்!

“தூ” வென்று வெற்றுத் திசையை நோக்கிக் காறி உமிழ்ந்தான்... அதைத் தொடர்ந்து “தேவடியா...” என்று திட்ட ஆரம்பித்து மிகவும் கொச்சை வார்த்தைகளில் எல்லாம் வாய்விட்டு இரைந்து கத்த ஆரம்பித்தான்...

அவள் வயிற்றில் பிறந்து, அவள்மீது தன் உயிரையே வைத்திருக்கும் தன் வாயாலா இவ்வித வார்த்தைகள் அவளைப் பற்றி வரவேண்டும் என்று, அவன் உணரமுடியாத உள் மனம் நினைத்ததன் விளைவினாலோ என்னவோ, தங்கத்தை ஆக்ரோஷத்தோடு கைகளை வீசி வீசி வசை பாடிக் கொண்டிருந்த சிட்டியின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது. சற்று நேரத்திற்குப் பிறகு வசை நின்று அழுகை மட்டும் எஞ்சி, குமுறிக் குமுறி நெஞ்சை அடைத்தது.

தான் அழுவது அவமானம் என்று திடீரெனத் தோன்றியது அவனுக்கு. கால் சட்டைப் பையிலிருந்து கர்ச்சிப்பை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டான்.

அப்போது தூரத்து மில்லியிலிருந்து ‘பூம்’ மென்று சங்கொலி விம்மி எழுந்தது.

‘இந்நேரம் சங்கத்திலே பாடம் நடந்துக்கிட்டிருக்கும்... சிட்டிப் பையனை, எங்கே காணோம்?... என்று வாத்தியார் கேட்டுக்கிட்டே இருப்பார். ஒரு வேளை யாரையாவது வீட்டுக்கு அனுப்பிப் பார்த்துகிட்டு வரச் சொல்லுவாரோ? ‘அவன்’ விஷயம் சங்கத்திலே படிக்க வர்ற பையனுங்க, வாத்தியார் எல்லாருக்கும் தெரிஞ்சிட்டா?... இல்லாட்டித் தெரியாமயே இருக்கப் போவுதா? இன்னக்கி இல்லாட்டி,

நாளைக்கி.. நான் இன்னக்கிப் பாடம் படிக்கப் போவலியே... நாளைக்கி எஜமான் கேப்பாரே ‘நேத்து இன்னாடா படிச்சேன்னு... இன்னா சொல்றது?’..

எஜமான் என்ற எண்ணம் வந்ததும் சொர்ணம் ஐஸ்கிரீம் கம்பெனியின் உரிமையாளர் தொண்டர் துரைக்கண்ணுவின் உருவமும், அவர் காலையிலும் மாலையிலும் எதிரில் நின்று தொழுது வணங்கும் அவரது தாயின் படமும் அவன் நினைவில் வந்தன.

தொண்டர் துரைக்கண்ணு எந்த விஷயம் பேசினாலும் தன் தாயைப் பற்றிக் குறிப்பிடாமல் பேசமாட்டார்.

“படிடா படிடா ன்னு எங்கம்மா எப்பப் பார்த்தாலும் சொல்லும்...ம், நா அந்தக் காலத்திலே கேக்காமப் போயிட்டேன்... நேத்து என்ன படிச்சே, சங்கத்திலே?’ இப்படித்தான் நாளைக்கு அவர் அவனிடம் கேட்பார்.

கெட்டுச் சீரழிந்து கொண்டிருந்த சிட்டியையத் திருத்திய மனிதர் அவர். இவனைப் போன்ற எண்ணற்றச் சிறுவர்களையும் நல்ல வழியில் உருவாக்கி விடுதலே தம்மைப் போன்றவர்கள் தேசத்திற்குச் செய்யக்கூடிய சிறந்த தொண்டு என்று எண்ணிப் பணியாற்றுகிறவர் அவர்.

அவரது தாய்ப் பாசமே அவரைச் சிறந்த தனி மனிதனாக்கியது என்று கூறி அதை அனைவர்க்கும் ஊட்ட முயல்கிறார் அவர். தாய்ப்பாசம் இல்லாத மனிதனே, சிறுவர்களே இருக்க முடியாதல்லவா? கெட்டுப் போகும் சிட்டியைத் திருத்த அது நல்ல மருந்து என்று மனோதத்துவம் பயிலாமலே கண்டுபிடித்து விட்டவர் அவர்.

அவரைப் பற்றியும் அவரது தாயைப் பற்றியும் அறிந்த சிட்டி அவரைப்போல் ஆகமுயன்ற திருத்தியவரும்-வளர்ந்து வரும்-சிறுவன்.

தனது தாயின் துர்நடத்தையை இப்போது அவன் எண்ணிப் பார்த்தபோது, இது தெரிந்தால், தன் எஜமான் அவளை எவ்வளவு கேவலமாக நினைப்பார். அவ்வளவு கேவலமான

ஒருத்தியின் மகனாய் அவர் எதிரே போய் எப்படி நிற்பது... என்ற அவமானம் பொறுக்காமல் உதட்டைக் கடித்துக்கொண்டான் சிட்டி.

யாருடைய நல்வாழ்வுக்காக அவன் படித்து வளர்ந்து உயரவேண்டுமென்று அவர் சொல்லுவாரோ அவள் இப்படியான பிறகு...

‘எனக்கு யாரிருக்கிறார்கள்? பேர் தெரியாத அந்த அயோக்கியன், என்னெப் பெத்த எவனோ... அந்த அப்பனை விடக் கேவலமாக பூட்டா எனக்குத் தெரிஞ்ச இந்த அம்மா!...

‘அவ சந்தோஷமா இருக்கறதுக்கு நான் படிக்கணுமாம்; சம்பாதிக்கணுமாம்... எம் மகன் எவ்வளவு உசந்தவனா மாறிட்டான்னு அவ பூரிக்கணுமாம் ம், இனி மேலேயா?... அந்த ஆசையெல்லாம் இருந்தா இந்தக் காரியம் செய்ய முடியுமா அவளாலே...

அவன் தன் கையிலிருந்த சிலேட்டையும் புத்தகத்தையும் இருளில் முகத்தருகே கொணர்ந்து பார்த்தான். அவனது உதடுகள் ஆத்திரத்துடன் துடித்தன.

‘ம் படிச்சி, சம்பாதிச்சி, பெரிய மனுசனாயி... போடா... தெவிடியா மவனே, குடிசக்காரி மவனே’ என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டு கையிலிருந்த அந்த சிலேட்டால் ‘மடார் மடாரெ’ன நெற்றியில் மோதிக் கொண்டான். அடுத்த நிமிஷம் தான் எதற்கு அடித்துக் கொள்ள வேண்டும் என்று வெட்கி, தன்னை இவ்விதமெல்லாம் குழப்படையச் செய்யும் அந்த நிலைமைக்கு ஆத்திரப்பட்டு, ஆத்திரம் அடங்கி விரக்தியும் வேதனையுமிக்க குரலில், “ஓ! எல்லாம் போச்சு!” என்று ஒருவிதத் துயரத்துடன் சிரித்தான். பிறகு பல்லைக் கடித்துக்கொண்டு சிலேட்டையும் புத்தகத்தையும் இருண்ட வானத்தை நோக்கி வேகமாய் விட்டெறிந்தான். சில வினாடிகளுக்குப் பின் இருளில் எங்கோ விழுந்து நொறுங்கிய சிலேட்டின் சப்தம் ஒலித்ததை நிதானமாய் நின்று கேட்டான்.

பிறகு, கட்டறுந்து விடுதலை பெற்ற உணர்வோடு அந்த மைதானத்தைத் தாண்டி ஒரே ஓட்டமாய் ஓடினான் சிட்டி.

தன் மனத்தில் தானே விதித்துக் கொண்ட சகல கட்டுக்களையும் உடைத்துக்கொண்டு சுதந்தரமாய், தன்னிச்சையாய், யதேச்சையாய், தான் தோன்றித்தனமாய் ஊரைச் சுற்றியவாறு கடைசியாக பேசின் பிரிட்ஜ் ரயில்வே ஸ்டேஷன் வராவதியின் மேல்வந்து நின்றான். அதுதான் அவனது பழைய கூட்டாளிகள் கூடும் இடம்.

அவன் அங்கு வந்துநின்று, காலடியில் புகை கக்கி ஓடிக் கொண்டிருக்கும் ரயில்களை அர்த்தமற்று வெறித்து அரை மணி நேரமாய் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பிறகு அவனது பழைய கூட்டாளிகளில் சிலர் அங்கு வந்து சேர்ந்தனர்.

சிட்டி அவர்களைக் கவனிப்பதற்கு முன்பாகவே, அந்தக் கூட்டாளிகளில் ஒருவனான கன்னியப்பன் சிட்டியைப் பார்த்து விட்டு அவனருகே ஓடிவந்தான்; “டே சிட்டி... இன்னா இங்கே வந்து நின்னுக்கினு இருக்கே?” என்று சிட்டியின் தோள்மீது கைவைத்து அவனைத் தன் பக்கம் திருப்பினான்.

சிட்டி திரும்பிப்பார்த்தான். கன்னியப்பனைக் கண்டதும் பழைய நட்புரிமையோடு புன்னகை பூத்தான் சிட்டி.

கன்னியப்பன் சிட்டியைவிட இரண்டு மூன்று வயது மூத்தவனாக இருக்கலாம். முழுக்கால் சட்டையும், மேலே வெற்றுடம்பில் ஒரு பழைய ஸ்வெட்டரும் அணிந்திருந்தான். காதோரத்தில் பீடி செருகி இருந்தான்.

“எங்கடா ஒன்னெ இந்தப் பக்கமே காண்றதில்லே?’ என்று விசாரித்தான் கன்னியப்பன். அவனுக்குப் பின்னால் இரண்டு பேர் பரஸ்பரம் தோள்மீது கைபோட்டுக் கொண்டு பீடி புகைத்தவாறிருந்த சிறுவர்களில் ஒருவன் கன்னியப்பனிடம் குத்தலாகச் சொன்னான்: “யாரு சிட்டிப் பையனா? அவன் ரொம்ப யோக்யமா பூட்டாம்பா...”

“நம்ப செட்லே யாருதாண்டா அயோக்கியன்?” என்று கேட்டவாறு அன்புடன் சிட்டியின் தோள்மீது கைபோட்டர்ன கன்னியப்பன். சிட்டி கன்னியப்பனைப் பாசத்துடன் பார்த்தவாறிருந்தான். கன்னியப்பனின் குரல் முன்னைவிடவும் கரகரப்பாய் மாறி இருந்தது; மேல்தட்டில் லேசாகப் பூமயிர் அரும்பி இருந்தது. மார்பும் புஜங்களும் வலுவுற்று, சற்று உயரமாய் வளர்ந்திருந்த அவனது கைகள் இரும்பு போல் உறுதி பெற்றிருப்பதைத் தன் தோளின்மீது விழுந்த அவனது ஸ்பரிசத்தின் மூலமே உணர்ந்தான் சிட்டி.

“அதுக்கில்லப்பா அன்னக்கி ஒரு நாளு வழியிலே பாத்துப்பேசனா காதுலே வுயாதமாறிப் போறாம்பா இவன்... அப்பாலே நானே போயிக் கிட்டே பேசினாக்கூடப் பேசலப்பா... பீடி குடுத்தா வேணான்னிட்டான்... சாத்தான், பையன் யோக்கியனாயிட்டான்னு நெனச்சிக்கினு வந்துட்டேன்” என்று தொடர்ந்து விளக்கினான் அந்த இருவரில் ஒருவனான கபாலி.

அதைக் கேட்டு, கன்னியப்பன் சிட்டியின் முகத்தை ஒரு வினாடி உற்றுப் பார்த்து, “ம் மெய்யாவா?” என்று ஒரு புன்னகையுடன் கேட்டான்.

சிட்டி மௌனமாய்த் தலை குனிந்தான்.

“சரி வா.. போயி டீ குடிப்பமா?” என்று அழைத்தான் கன்னியப்பன்.

“டீயா, கன்னியப்பன் சப்ளையா? இன்னாப்பா சீட்லே நல்ல கெலிப்பா?’ என்றான் கபாலி.

“ஆமா... அரையணாவோடு குந்தனேன். முக்காரூபா கெலிப்பு... பழைய ஆளு வந்திருக்கானே.. வாங்க போகலாம்” என்று-மற்ற இருவரும் பின் தொடர-சிட்டியின் தோள்மீது கையைப் போட்டுக் கொண்டு நடந்தான் கன்னியப்பன்.

நாயர் கடையில் போய் டீக்கு ஆர்டர் பண்ணிவிட்டு சிட்டிக்கு மட்டும் இரண்டு ‘பொறை’ பிஸ்கட்டுகளை வாங்கித் தந்தான் கன்னியப்பன்.

அதில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்ட சிட்டி பாதி உடைத்து இருவரில் மற்றொருவனான ஏழுமலைக்குத் தந்தான். மற்றுமொன்றைக் கன்னியப்பனும் இன்னொருவனும் பங்கு போட்டுக் கொண்டனர்.

இந்த மாதிரி ஒரு நிலையில் இவர்களின் நட்பும், அன்பும் சிட்டியின் மனத்திற்கு வெகு சுகமாய் இருந்தது. எனினும் இவ்வளவு நேரம் தன்னைக் காணோமே என்று தன் தாயும் அன்னம்மாளும் தேடிக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணமும் இடையிடையே எழுந்தது அவனுள்.

டீ குடித்த பிறகு ஓரணாவுக்கு பீடி வாங்கி எல்லோருக்கும் ஒவ்வொன்று வழங்கினான் கன்னியப்பன். சிட்டியும் ஒரு வினாடி தயங்கிய பின் பீடியை வாங்கிக் கொண்டான். கன்னியப்பன் தீக்குச்சியை உரசித் தானும் பற்றவைத்துக் கொண்டு சிட்டியும் பீடி கொளுத்திக் கொள்ள உதவினான்.

“சரிடா சிட்டி... நான் போவட்டா?... நேரமாவுது... சினிமா கொட்டாவுக்குப் போறேன் டிக்கட்டு வாங்கி விக்கறதுதான் இப்ப தொயிலு... நாளைக்கிப் பாப்பமா?” என்று சிட்டியிடம் சொல்லிவிட்டு மற்ற இருவரிடமும் கையை மட்டும் ஆட்டியவாறு விடை பெற்றான். பல்லில் கடித்த பீடியுடன் ஓடி மேம்பாலத்தின் படிகளில் தடபடவென ஏறிய கன்னியப்பன் மேல் படியில் திரும்பி நின்று “டேய் சிட்டி... நாளைக்கி வரியா? ஆமா, நிச்சியமா வரணும்” என்று கத்திவிட்டு ஓடி மறைந்தான். அவன் மறையும் வரை அவனைப் பார்த்துக் கொண்டிருந்த சிட்டியின் செவிகள். கன்னியப்பனைப் பற்றி கபாலியும் ஏழுமலையும் பேசிக்கொண்டே விஷயத்தைக் கேட்டன....

“இம்மா அவசரமா எங்கே ஓடறான் தெரிஞ்சிக்கினியா? அந்த நீலாப் பொண்ணு ஊட்டுக்குதான்...” என்று கபாலி சொல்ல இருவரும் கண்ணைச் சிமிட்டி நமட்டுச் சிரிப்புடன் தலையாட்டிக் கொண்டனர்.

“எந்த நீலாப் பொண்ணு?”-கேட்கலாமா கூடாதா என்று தயங்கியவாறே, தயக்கம் தீருமுன் கேட்டு விட்டான் சிட்டி.

“அதாண்டா.. நம்ம மைதானத்திலே மிந்தியெல்லாம் சாணிபொருக்கவருமே நீலாக்குட்டி... ஆ! இப்ப பாக்கணுமே அதெ!... படா ஸ்டைலு.. ஆளும் சும்மா ‘ஸம்’னு கிறா.. அதான் இவுரு அடிக்கடி அங்கேயே சுத்தறாரு” என்று பலவித அங்க சேஷ்டைகளுடனட கன்னியப்பனைப் பற்றி விளக்கினான் கபாலி.

“அவ ஆத்தாக்காரிக்கி தெரியுமாடா?” என்றான் ஏழுமலை.

“ஐயெ.. தெரிஞ்சி இன்னாடா பண்றது? அவளே ஒரு லோலாயி... மவளாலேதான் ஆத்தாக்காரியே இப்ப சோறுதுண்றா.... இதானே தொயிலு? ஆத்தாக்காரி வேணான்றாளா? துட்டு இருந்தா சர்தான் உன்கையிலே துட்டு இருந்தா நீகூடப் போவலாம்” என்று அவனைத் தோளால் இடித்துச் சொன்னான் கபாலி.

“சீ! நமக்கு ஏண்டா வயசுக்கு மீறின காரியமெல்லாம்?” என்று மறித்துச் சொன்னான் ஏழுமலை.

“வயசு இன்னாடா வயசு... இன்னக்கி இல்லேன்னா நாளைக்கி வந்துட்டுப் போவுது கய்தே!” என்று அலட்சியமாகச் சொன்ன கபாலி, தன்னிடம் பணமிருந்தால்தான் என்னென்ன அனுபவிக்கலாம் என்பதைக் கொச்சையாக, சுவைத்துச் சுவைத்து விளக்கினான். பிஞ்சிலே வெம்பிப் போன கபாலியைக் கண்டு அநுதாபம் கொள்ளும் பக்குவமற்ற சிட்டி அருவருப்பால் உடல் சிலிர்த்தான். ஆத்திரத்தால் கண் சிவந்தான். கன்னியப்பனைப் பற்றி இவன் சொன்னதெல்லாம் பொய் என்று சந்தேகித்து, “கன்னியப்பன் அங்கே தான் போறான்னு ஒனக்கு எப்பிடித் தெரியும்?” என்று படபடப்புடன் கேட்டான் சிட்டி.

“ஹே! பாரேன், இவுரு வந்துட்டாரு பெரிசா...” என்று கேலியாக சிட்டியின் முகத்தில் பீடிப்புகையை ஊதிவிட்டுக் கபாலி சொன்னான்.

“நாளைக்கி நீயே கன்னியப்பனைப் பாத்துக் கேளு, சொல்லுவான், அவன் ஒண்ணும் யாருக்கும்

பயப்படறவனில்லே. முந்தா நாறு எங்கியோ போயி ‘சல்பட்டா’ அடிச்சிட்டு வந்து தெருவெயே ‘தூள்’ கௌப்பனான்…. எவன் வந்து இன்னா பண்ணிட்டான்? அவனேதான் எங்கிட்ட சொன்னான்… இன்னங் கொஞ்சம் நாளாவட்டும், அந்த நீலாப் பொண்ணை தள்ளிக்கினு வரலேன்னா எம்பேரு கன்னியப்பனில்லேன்னு…”

கையில் புகையும் பீடியின் சாம்பலைக்கூடத் தட்டாமல் திகைப்புற்று அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான் சிட்டி. அவன் கண்கள் தன்கையிலிருந்த பீடியை வெறித்தன…

‘இந்த அசிங்கம் பிடித்த கூட்டத்துடன் மீண்டும் சேர்ந்து விடுவதா, என்ன?… கன்னியப்பன் நிஜமாகவே அப்படிப்பட்ட கெட்ட காரியங்கள் செய்வானா?” என்று நினைத்த சிட்டியின் மனத்தில், இரண்டு வருஷத்திற்கு முன் இவர்களில் ஒருவனாய்த் தானும் இருந்த காலத்தில் துண்டு சிகரட் பொறுக்கிப் புகைத்ததைக் கண்டே மனம் பதைத்த தனது எஜமான் தொண்டர் துரைக்கண்ணுவின் நினைவும் வந்தது. இந்த விஷயம் எல்லாம் அவருக்குத் தெரிந்தால்?… என்று கற்பனை செய்து கூட அவனால் கணிக்க முடியவில்லை. அதே சமயத்தில், தானும் அவருக்குக் கொடுத்த வாக்கை மீறி, கெட்டுப்போன சிறுவர்களுடன் சேர்வதற்கான முதற் காரியம்போல் பீடி புகைக்க ஆரம்பித்ததை எண்ணிப் பார்த்து மனம் பதைத்துக் கையிலிருந்து பீடியை விட்டெறிய முடிவு செய்தபோது, ஏழுமலை தன் பீடி அணைந்து போனதால் சிட்டியிடம் நெருப்பு கேட்டான்.

கையிலிருந்த பீடியை நெருப்புக்காக அவனிடம் கொடுத்துவிட்டு, அவன் பற்ற வைத்துக்கொண்டு திருப்பித் தருவதற்குள்,

“நான் வூட்டுக்குப் போறேம்பா.. எங்கம்மா தேடும்” என்று சொல்லிவிட்டு அவர்களின் பதிலுக்குக்கூடக் காத்திராமல் அங்கிருந்து நகர்ந்து வேகமாய் நடந்தான் சிட்டி.

சிட்டி வீடு நோக்கி நடக்கும் வழியெல்லாம் தன் தாயைப் பற்றி மாத்திரமல்லாது தன்னைப் பற்றி எண்ணியும் மனக்குழப்ப முற்றான்.

‘இரண்டு வருஷங்களாக, நான் தொடாமலுமிருந்த இந்தக் கெட்ட பழக்கத்தை, பீடீ குடிப்பதை இன்று ஏன் ஆரம்பித்தேன்!... ஆரம்பித்தே விட்டேனா...?’-இரண்டு வருஷமாய் எவ்வளவோ சிரமத்திற்கிடையில் விவரிக்க முடியாத பெருமித உணர்வுடன் சிரமப்பட்டு ஏறிய ஒழுக்கம் எனும் உயர்ந்த மலையுச்சியினின்று ஒரு வினாடியில் கால் சறுக்கிச் சரிந்து கேவலமான நாற்றச் சேற்றில் விழுந்து விட்டது போலிருந்தது அவனுக்கு.

‘இல்லை நான் பழைய சேற்றில் விழமாட்டேன்... என் எஜமானுக்குக் கொடுத்த வாக்கை மீறி அநியாயமாகக் கெட்டுப் போக மாட்டேன்’... என்று தலையை உலுப்பிக்கொண்டான் சிட்டி.

‘கன்னியப்பனைப் போலவும் மற்ற சிறுவர்களைப் போலவும் வாழ்வது சேற்றில் கிடப்பதற்கு கொப்பானது’ என்று இரண்டு வருஷங்களுக்கு முன் சிட்டிக்குத் தெரியாது. அப்படிப்பட்ட அறிவை உணர்வை அவனுக்கு ஊட்டி உணர்வித்தவர் அவனது எஜமான் தொண்டர் துரைக்கண்ணு தான்.

நெறிமிக்க ஒரு வாழ்க்கை முறையை நெறி கெட்டவழியும் ஒருவன் கற்பித்துப் பார்த்துக்கொள்வதுகூட கடினமான காரியம். எனினும் அவ்வித ஒரு நெறியைப் புரிந்துகொண்டு அதற்கு உட்பட்டு ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் உயரிய பண்பை அநுபவித்துச் சுவை கண்டுவிட்டால் அதை மீறி விடுவது என்பது உண்மையிலேயே வேறெதையும் விடக் கஷ்டமான காரியம் என்பதை அவ்விதம் நெறியோடு இருந்து வந்தவர்கள்தான். இவ்வித சோதனை நிகழ்ந்தால் மட்டுமே தான் புரிந்து கொள்ள முடியும்.

சற்று நேரத்திற்கு முன் கன்னியப்பன் தந்த பீடியைப் பற்ற வைத்து இரண்டு ‘தம்’ இழுத்துவிட்டதால் சிட்டி இது நாள்

வரை கைக் கொண்டிருந்த நெறிகளைக் கைவிட்டதாகி விடுமா, என்ன? அந்தப் பீடியைக் கன்னியப்பன் தந்த போது, தான் ஒரு வினாடி யோசித்தது என்னவென்று சிட்டிக்கு அப்போது தெரியாது. இவ்வளவு நாட்கள் வெறுத்து ஒதுக்கியிருந்த ஒரு காரியத்தைச் செய்ய ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். காரணத்தை அவனறியவில்லை என்பதனால் காரணமின்றியே ஒரு காரியம் நடந்துவிட்டதாகக் கொள்ள முடியுமா? எவ்வளவோ பெரியவர்களுக்குக் கூட ஒரு காரியத்தைச் செய்யும்போது புரியாத காரணம், இந்தக் காரியத்தை ஏன் செய்தோம் என்று பின்னால் யோசிக்கையில் தான் புரிகிறது...

அதுபோல், சிட்டிக்கு, தான் இந்தக் காரியத்தைச் செய்ததற்கான காரணம் இப்போது புரிந்தது.

எந்தத் தாயின் நல்வாழ்வுக்காக, பொறுக்கிச் சிறுவனாய்த் திரிந்து கொண்டிருந்த சிட்டி பொறுப்புணர்ந்த மகனாக மாறினானோ, அந்தப் புனிதமான அன்புக்குரிய அந்தத்தாய் இப்படியான பிறகு தனது பொறுப்புகளையெல்லாம் முறித்துக்கொண்டு, தாய்மீது கொண்ட புனிதமான அன்பையும் ரத்துச் செய்துகொண்டுவிட்டதாகப் பிரகடனப் படுத்துவதற்குத்தான் அவன் அந்தப் பீடியை வாங்கிக்கொண்டான் என்ற போதிலும் ‘அது சரி’ என்று இப்போது அவனுக்குத் தோன்றவில்லை. ஏனெனில் முரட்டுத்தனத்திற்காகவும் தான்தோன்றித் தனத்துக்காகவும் பொறுக்கியாய்த் திரிவதற்காகவும் பீடி குடிப்பதற்காகவும் அவன் தன் கையிலகப்பட்டால் அடித்து நொறுக்குவதும், கைக்குச் சிக்காமல் ஏச்சங்கட்டி அவன் தப்பித்து விட்டால் அடி வயிற்றிலிருந்து பீறிவரும் ஆத்திரத்தோடு ‘உன்னெ வாரிக்கிட்டுப்பூட... உன்னெப்பாடையிலே வெக்க... ஒழிஞ்சி போ!’ என்று பல்லைக் கடித்துக் கொண்டு கை நெரித்ததுமல்லாமல்- அவன் தாய் தங்கம் சிட்டியைத் திருத்துவதற்காக ஒன்றும் செய்ததில்லை. அவளைப் போன்று பழி வாங்கப்பட்ட பாமரத் தாய்க்கு, தன்னையே திருத்தி வாழ இயலாமற்

போனவளுக்கு இன்னொரு ஜீவனைத் திருத்த முடிவது சாத்தியமுமில்லை. மேலும் மேலும் தானும் கெட்டு, தன் பிள்ளையையும் கெடுக்காமல் இருந்தாளே... அவன் கெடுவதைக் கண்டு அதே வழியில் அவனை உற்சாகப் படுத்தி வளர்க்காமலிருந்தாளே மற்ற பாமரத் தாய்மார்களைப் போல்... அந்த அளவு தங்கம் பாராட்டுக்குரியவள் தான். தன்னை எவ்வளவுதான் சபித்தபோதிலும், அடித்து நொறுக்கிய போதிலும் அந்தத் தாயின்மீது அளவிடற்கரிய பாசம் கொண்டிருந்தான் சிட்டி. அவனை அவன் தாய் திருத்தவில்லை யென்பது உண்மையாயினும் அவன் தாய்மீது கொண்டிருந்த பாசம்தான் அவனைத் திருத்தியது என்பதை விட வேறு உண்மையுமில்லை.

புனிதமிக்க அந்தப் பாசம் இன்று முறிந்து போயிற்று!.. சிட்டி. தான் பீடி புகைத்தற்கு இப்போது வருந்துவதற்குக் காரணம் தாய்க்குச் சிறந்த மகனாக விளங்கி இன்று தவறிவிட்டோமே என்பதற்கல்ல; அந்த நல்ல மனிதருக்கு, தன்னை நெறியாளனாக்கிய அன்பிற்குரிய எஜமானுக்குத் தந்த வார்த்தையை மீறிவிட்டோமே என்று மனங் கலங்கிய போது அவன் சிந்தனை முழுவதையும் தொண்டர் துரைக்கண்ணுவைப் பற்றிய தூய நினைவுகள் கவிந்தன.

ஒரு நாள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் துரைக்கண்ணு சொன்னார்:

“ஒழுங்கீனம் தப்புங்கறது என்னா தெரியுமா! எந்தக் காரியம் இன்னொருத்தருக்குத் தெரியக்கூடாதுன்னு மறைஞ்சி ஒளிஞ்சி திருட்டுத்தனமா செய்யறமோ அந்தக் காரியம்தான்-அது என்னவா இருந்தாலும்-அதுதான் ஒழுக்கக் கேடான காரியம்; தப்பான காரியம்; அயோக்கியத்தனம். ஆமா, தப்பான காரியம்தான்; நாலு சுவருக்குள்ளே உலகத்துக்குத் தெரியக்கூடாதுன்னு நடக்கும்”என்று அவர் சொன்னபோது அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிட்டியைப் போன்று அந்த ஐஸ்கிரீம் பாக்டரியில் வேலை செய்யும் மற்ற பையன்கள் மரியாதையாகத் தலையாட்டிக் கொண்டிருந்தனர்.

அவர் சொன்ன விஷயம் சிட்டிக்கு மட்டும் பிடிபடவில்லை. ‘இது எப்படி சரியாகும்? துணியில்லாமல் தெருவில் வர வெட்கப்பட்டு நாலு சுவர்களுக்கு மத்தியில் தானே குளிப்பது போன்ற காரியங்கள் செய்கிறோம். அப்படிச் செய்வது ஒழுங்கீனம் தப்புன்னு ஒளிவு மறைவில்லாம நடந்துக்க முடியுமா ஆடு மாடு மாதிரி...’ என்று எண்ணிய சிட்டி ‘அப்படி நடந்து கொண்டால்’ என்று கற்பனை செய்து இவர் போய் இப்படிச் சொல்கிறாரே’ என்று கண்டு, அச்சமற்குச் சிரித்துவிட்டான்.

சொல்லுகின்ற விஷயத்தில் கவன முனைப்போடு பேசிக் கொண்டிருந்த துரைக்கண்ணு சிட்டியின் சிரிப்பைக் கண்டு, பேச்சை நிறுத்தி அவன் தரிப்பின் வழியே அவன் நினைப்பைக் கண்டு தானும் ஒரு புன்னகையுடன் மேலே விளக்கினார்:

“தம்பி எதுக்குச் சிரிக்கிறான் தெரியுமா? நாலு சுவருக்கும் மத்தியிலே இன்னொருத்தர் பாக்கக் கூடாதுன்னே செய்யவேண்டிய காரியங்கள் இருக்கே, அதெல்லாம் ஒழுங்கீனமா குற்றமான்னு தானே நெனச்சி சிரிக்கிறே?’ என்று சிட்டியிடம் கேட்டபோதுதான் மற்றவர்களுக்கும் அந்த நினைப்பு வந்தது அதற்கு அவர் விளக்கம் தந்தபோது சிட்டிக்கு அறிவில் ஒரு புதுத் தெளிவு பிறந்தது.

அவர் சொன்னார்:

‘இன்னொருத்தர் பார்க்கக் கூடாதுன்னு செய்யறது பண்பு. அதில் அழகிருக்கு; உண்மையுமிருக்கு. இன்னொருத்தருக்குத் தெரியக்கூடாதுன்னு செய்யறது களவு. இதிலே பொய்யும் கோழைத்தனமும் வஞ்சகமும் ஏமாத்தற குணமும்தான் இருக்கு... புரியுதா? நீ மறைஞ்சிருந்து குளிக்கறே... குளிச்சேங்கற விஷயத்தையே மறைக்கிறதில்லேயே... உடம்பை மறைக்கிறது அழகுன்னு மறைக்கிறோம். உடம்பே இல்லேன்னு சொல்றத்துக்கா மறைக்கிறோம்?... இப்ப நீ ஐஸ்கிரீம் வித்துப் பணம் கொண்டு வர்ரே... ஒரு ரூபா நீ எடுத்து ஏதோ செலவு பண்ணிட்டேன்னு வெச்சிக்க.. அது

சரியா தப்பாங்கிறது வேற விஷயம். நீ என்கிட்டே வந்து 'இந்த மாதிரிச் செலவு பண்ணிட்டேன்னு சொல்றேன்னு வச்சுக்க. அந்த ஒரு ரூபாயெ நீ திருடினதா ஆகுமா? ஆகாது. ஆனா அதே ரூபாயெ நீ செலவு பண்ணிட்டுத் 'தொலைஞ்சி போயிடுத்து'ன்னு வந்து சொல்றேன்னு வெச்சிக்க-நீ செலவு பண்ணின ரூபா திருடின ரூபாயா ஆயிடுது இல்லியா? செஞ்ச காரியம் எப்படிப்பட்டதானாலும், செஞ்சதே மறுக்கும்போதுதான், இன்னொருத்தருக்குத் தெரியக் கூடாதுன்னு மறைஞ்சி ஒளிஞ்சி செய்ததை மறைக்கறப் போதுதான் அது மோசமானதா குற்றமானதா ஆகுது, இல்லையா?" என்று அவர் விளக்கிய போது சிட்டியைப் போலவே மற்றவர்களும் ஆழ்ந்து அதை உணர்ந்தார்கள்.

தன் எஜமானின் அந்த வார்த்தைகளும், குறிப்பாக அந்தச் சம்பவமும் இப்போது மனத்தில் தோன்றியபோதே சிட்டிக்குத் தன் தாயின் செயல் நினைவுக்கு வந்தது-அவள் செய்துள்ள இந்தக் காரியத்தை அவர் கூறிய அந்த வெளிச்சத்தில் பார்த்தபோது-அவள் இந்தக் காரியத்தை ரகசியமாகவோ யாருக்கும் தெரியாமலோ செய்துவிடவில்லை; பலரும் பார்த்துச் சிரிக்கத்தக்க முறையில் பகிரங்கமாகத் தான் செய்திருக்கிறாள்; துணிச்சலாகத்தான் அவனை வீட்டுக்கே அழைத்து வந்திருக்கிறாள் என்று தோன்றுகையில் 'இது தவறோ ஒழுங்கீனமோ இல்லையா?" என்றும் அவன் மனத்தில் கேள்வி பிறந்தது.

கேவலமான ஓர் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் காரியம் பகிரங்கமானாலும் ரகசியமானாலும் தவறுதான் என்று அவனுக்குத் தோன்றியது தன் தாயின் இந்தக் காரியத்தைப் பொறுத்தவரை,

இந்தச் சூழ்நிலையில் ஊரைவிட்டு எங்காவது ஓடிவிடலாமா என்றும் ஒரு சமயம் தோன்றியது சிட்டிக்கு. அடுத்த நிமிஷமே அது தனக்கு அவமானம்; எவனோ ஒரு சோமாறி வந்து தன் வீட்டில் புகுந்து தன்னை விரட்டி

விடுவதா? அவனை அல்லவா தான் விரட்டவேண்டும் என்று ஆத்திரத்துடன் ஓர் உறுதியும் பிறந்தது.

எப்படி இருந்தபோதிலும் இனிமேல் தான் சங்கத்துக்குப் போய்ப் படிப்பதோ, தனது எஜமானின் எதிரே இப்படிப்பட்ட கேவலமான ஒருத்தியின் மகனாகப் போய் நிற்பதோ நிச்சயம் நிகழப் போவதில்லை என்று முடிவு கட்டிவிட்டான் சிட்டி. அதை நினைக்கும்போது தான் அவனுக்கு அழுகையும் ஆத்திரமும் நெஞ்சை அடைத்தது.

'கொயந்தெயாமில்லே நானு?...ம் இந்தக் கொயந்தெ இன்னா வேலெ செய்யறான்னு காட்டறேன்' என்று வர்மம் உரைத்தவாறு நெற்றியில் விழுந்து கண்களை மறைக்கும் கிராப்புச் சிகையைத் தள்ளிவிட்டுத் தலையை நிமிர்த்திக் கொண்டு வேகமாய் வீடு நோக்கி நடந்தான் சிட்டி.

அப்போது தூரத்து மணிக்கூண்டில் மணி பத்தடித்தது.

## 3

தாயினும் சாலப் பரிவு காட்டி, தந்தையினும் அதிக வாத்ஸல்யத்தோடு பொறுப்பேற்று, சிட்டியின் நினைவில் நீங்கா இடம்பெற்றுவிட்ட அவனது எஜமான். சொர்ணம் ஐஸ்கிரீம் பாக்டரியின் உரிமையாளர் தொண்டர் துரைக்கண்ணுவைப் பார்த்தாலே போதும்; அவரது தோற்றப்பொலிவிலேயே ஒரு முடிவுக்கு வந்து விடலாம். இந்த மனுஷன் ஒரு 'எக்ஸன்டிரிக்' தான் என்பதில் இரண்டு அபிப்பிராயங்கள் எவரிடமும் இதுவரை எழுந்ததில்லை.

குச்சுக் குச்சாய்ச் சிலுப்பிக்கொண்டு நிற்கும்-வாராத குறையோடு அடிக்கடி இடது கையின் நான்கு விரல்களையும் சிகைக்குள் நுழைத்துக் கோதும் பழக்கத்தால்-பரட்டையாய்ப் பரந்திருக்கும் கிராப்புச் சிகையோடு தூய கதரில் காலரில்லாத ஷர்ட்டும், தடித்த கதரில் தைத்த முழுக்கால் சட்டையும் அணிந்து, கயிற்றால் கட்டியதுபோல் இடுப்பைச் சுற்றி ஒரு பழைய தோல் பெல்டையும் இறுக்கிக்கொண்டு சில சமயங்களில் ஒரு கோட்டையும் தாறுமாறாய் மாட்டிக்கொண்டு, கள்ளமற்ற

குழந்தை விழிகளில் நல்லிதயத்தின் ஒளி வீசும் 'அப்பாவி'த் தனத்தோடு, சற்று மேலெடுத்த. பற்கள் அதிகமாய் நீண்டு வெளித்தெரிய அவர் சிரித்துச் சிரித்துப் பேசுகின்ற தோற்றத்தில் அவரைத் தவிர வேறு யாரையாவது அந்த வட்டாரத்தில் கண்டால் 'பைத்தியம்' என்று முடிவு கட்டிவிடுவார்கள் மக்கள்.

ஆனால் இந்தக் கோலத்தில் இருக்கும் துரைக்கண்ணுவின் மீதுதான் அங்கு வாழும் சகல பகுதி மக்களும் அன்பும் மதிப்பும் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் அவரது நெறி மிக்க வாழ்க்கை முறைதான். அந்த வாழ்க்கை இந்த நாட்டின் சுதந்திர வரலாற்றில் சம்பந்தப்பட்டு-தலைவர் என்ற பட்டத்தை அல்ல-தொண்டர் என்ற நிரந்தரப் பட்டத்தை அவருக்கு அளித்திருந்தது.

தொண்டர் துரைக்கண்ணு கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர். இளம் வயதில் தந்தையின் முகத்தைக்கூடப் பார்த்தறியாத தாயின் அன்பு மகனாய் வளர்க்கப்பட்டவர். அவரது தாய் சொர்ணம் மேரி உபாத்திமைத் தொழில் புரிந்து மகனை வளர்த்தபோதிலும் அந்த மகனை ஒரு கல்விமானாக்க முடியவில்லையே என்று குறையுடன் வாழந்தாள். துரைக்கண்ணுவுக்குப் பள்ளிப்படிப்பு ஏறவில்லை. எட்டாம் வகுப்பு வரை பள்ளியிலேயே கடைசித் தர மாணவனாயிருந்த துரைக்கண்ணு மத சம்பந்தப்பட்ட அறிவிலும், மனித வாழ்க்கை முறைகள் பற்றிய சிந்தனையிலும், மிகுந்த ஈடுபாட்டோடு திகழ்வது கண்ட துரைக்கண்ணுவின் தாய் மகனைப் பாதிரியாராக்குவது என்று முடிவு செய்திருந்தாள்.

ஆனால் துரைக்கண்ணு, தான் படித்த விவிலியம் காட்டும் யேசு நாதருக்கிணையவராய், கண்கண்ட ரட்சகராய் மகாத்மா காந்தியைத் தெரிசித்தார். 'ஊசியின் காதில் ஒட்டகம் நுழையினும் சுவர்க்கத்தின் வாயிலில் செல்வந்தன் நுழைய முடியாது' என்று கண்ட துரைக்கண்ணு ஏழை மக்களோடும் சமூக அனாதைகளோடும் அதிகம் உறவாடினார். அடிமை விமோசனமும் ஆத்ம விமோசனமும் முரணல்ல என்பது

மட்டுமன்று, இணைந்தது என்று கண்டு ஸ்வதேசிக் கிறிஸ்துவராய் மாறிய துரைக்கண்ணு அந்நியப் பொருள் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் மகாத்மாகாந்தியின் கட்டளையின் பேரில் பங்கு பெற்றுச் சிறை ஏகினார்.

சிறையிலிருக்கும்போது தான் அவருக்குத் 'தொண்டர்' என்று பட்டம் வழங்கப்பட்டது. சிறையிலிருக்கும்போதுதான் அவர் புகை பிடிக்கப் பழகினார். சிறையிலிருக்கும்போது தான் அவர் யேசுவை மறந்தார் காந்தியை மறந்தார் தேசத்தை மறந்தார் தன்னையே மறந்து, 'அம்மா' என்ற ஒரு வார்த்தை தவிரப் பேச்சையே இழந்து தாயைத் தவிர மற்றெல்லாவற்றையும் மறந்து சித்தஸ்வாதீனம் அற்றும் போனார்...

அவர் சிறையிலிருக்கும் போதுதான் பத்து நாட்களுக்கு முன் தொண்டர் துரைக்கண்ணுவின் தாயார் இறந்துபோனதாக ஒரு நாள் செய்தி வந்தது.

"தன் வாழ்க்கைக்கே ஊன்றுகோலாய் நம்பி என்னை வளர்த்த தாய்க்கு மகன் செய்யவேண்டிய கடமைகளைக் கைவிட்டுவிட்ட நான் தேசத்துக்கு என்ன தொண்டு செய்தேன்... தாயைத் தவிக்கவிட்ட பாவியின் தொண்டுக்காக எந்த தேசம் காத்துக் கிடக்கிறது? அது என்ன தேசபக்தி? அவன் என்ன தேசத் தொண்டன்?... அம்மா, சாகும்போது உங்கள் பக்கத்தில் இல்லாத என்னை நினைத்து, என் முகம் பார்க்கத் தவித்து தவித்து 'வருவான் வருவான்' என்று வெகு நேரம் மரணத்தோடு போராடினீர்களா?...கடைசியில் கண்களை மூடும்போது வராத என்னை சபித்து விட்டுத்தான் உயிர் பிரிந்ததோ? பக்கத்தில் யாருமில்லாமல். தண்ணீர்கொடுக்கவும் ஆளில்லாமல் ஒரு உதவாக்கரை மகனைப் பெற்ற பாபத்திற்காக ஒரு அனாதையைப் போல் செத்துப் போனீர்களா,அம்மா? அந்த நேரத்தில் என்னென்ன நினைத்தீர்களோ?'என்றெல்லாம் யோசிக்கும்போது, வானை நோக்கி வெறித்த விழிகள் நிலைகுத்திப் போக, இடது கையின் நான்கு விரல்களையும் சிகைக்குள்

நுழைத்துக் கோத ஆரம்பித்த பழக்கம் தான் இன்றுவரை அவரிடம் நிலைத்திருக்கிறது.

சிறை வாழ்க்கை முடிந்தது; ஓராண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வெளி வந்தார். வாழ்க்கையில் பிடிப்பின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் அவரது விரக்தியை மாற்ற அவரது வாழ்க்கைக்காக ஒரு தொழிலையும் ஸ்தாபித்துக் கொடுத்தனர் வசதிபடைத்த சில தேசபக்த நண்பர்கள். சொர்ணம் ஐஸ்கிரீம் பாக்டரியின் முதலாளியாக மாறினார் தொண்டர். இவ்வளவு காலத்திற்குப் பின்னரும் துரைக்கண்ணுவிடம் தாயின் நினைவும் தனது கடமை மறந்த குற்ற உணர்வும் நீங்கியபாடில்லை.

குழந்தையைக் கொஞ்சும் தாய்மாரைப் பார்க்கும் போதெல்லாம் ‘நானும் ஒரு குழந்தையாய் இருந்திருக்கிறேன்; என் தாயும் இதுபோல என்னைக் கொஞ்சியிருக்கிறாள்’ என்ற நினைவுதான் வரும் அவருக்கு. வயது முதிர்ந்த கண்கள் தன் தாயையே கண்டு கலங்கிப்போகும்.

இவ்விதம் சதாகாலமும் தாயின் நினைவோடு தெருவில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஜன்னல் வழியே தாயற்ற குழந்தைபோல் வேடிக்கை பார்த்தவாறு பாக்டரியில் தனக்கென உள்ள அறையில் அமர்ந்திருப்பதில்லாமல் அந்த வியாபாரத்தின் எந்தப் பொறுப்பையும் பெரிதாக அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவரிடம் வேலை செய்கிற அத்தனைபேரும் அவரைப் புரிந்து கொண்டவர்கள்.

“எந்த ஒரு தொழிலுக்கும் முதலாளி என்பவன் எவ்வளவு தேவையற்ற அநாவசியப் பேர் வழி என்பதற்கு நானே ஒரு உதாரணம்’ என்று அவரே அடிக்கடி சொல்லுவார்.

அவர் இல்லாவிட்டால், வேலையில்லாது திண்டாடுவோர் பெருகியுள்ள இந்தக் காலத்தில் பத்து தொழிலாளர்களுக்கு மாத சம்பளத்தில் பாக்டரிக்குள்

உத்தியோகமும், இருபதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு ஐஸ்கிரீம் விற்கும் வேலையும் கிடைத்திருக்காது என்று உணர்ந்து அங்கே வேலை செய்பவர்கள் அனைவரும் அவரிடம் அன்போடும் மரியாதையோடு பழகி, உண்மையாகவும் விஸ்வாசத்துடன் பணியாற்றுகின்றனர்.

பதினைந்து வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொழில் மிகவும் லாபகரமாய் நடப்பதாக அவரது கணக்கப்பிள்ளை புள்ளி விவரங்களோடு கணக்குகளைக் காட்டி வருஷத்தோறும் அறிவிக்கும் போது-வெறித்த விழிகளுடன் கிராப்புச் சிகையை இடது கையின் நான்கு விரல்களால் கோதியவாறு எங்கோ பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு சலனமிருக்காது அவர் முகத்தில். சில சமயங்களில் முன்னெடுத்த பற்கள் சற்று அதிகமாக வெளித்தெரிய ஒரு புன்னகையால் தனது திருப்தியை தெரிவித்துக் கொள்வார்.

‘அனாதைப் பள்ளிகளுக்கு மாதாமாதம் ஏதாவது தரலாமா’ என்று ஒருமுறை கணக்குப் பிள்ளை கேட்டபோது,

“ஓ!தரலாமே..” என்று அநுமதியளித்ததல்லாமல் ‘எவ்வளவு தரலாம்’ என்று சொல்லவோ, ‘எவ்வளவு தருகிறீர்கள்?” என்று கேட்கவோ இல்லை தொண்டர்.

எல்லாம் கணக்குப் பிள்ளையின் பொறுப்புத்தான்.

சொர்ணம் ஐஸ்கிரீம் பாக்டரி ஆரம்பித்த இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அந்த பாக்டரியை ஆரம்பிக்க உதவி செய்த மூன்று நண்பர்களும் தொண்டரிடம் வந்து தாங்கள் அந்த பாக்டரிக்காகப் போட்ட பணம் முழுவதும் திருப்பித் தரப்பட்டதற்கு நன்றி தெரிவித்தபின், பொறுப்பு மிக்க கணக்குப் பிள்ளையைப் பாராட்டியது கண்டு தொண்டர் பூரித்துப் போனார். அந்தப் பூரிப்புக்குக் காரணம் தன் செல்வத்தை கணக்குப் பிள்ளை பெருக்கியிருக்கிறார் என்பதல்ல; தன்னைச் சூழ்ந்திருக்கும் மனிதர்கள் எல்லோருமே எவ்வளவு உத்தமமானவர்கள் என்ற பெருமிதத்தின் பூரிப்பே அது. அப்போதே கணக்குப் பிள்ளையை ஒரு பாகஸ்தராகச் சேர்த்துக் கொண்டார்

தொண்டர். அதன் பிறகு, அந்த பாக்டரியில் வேலை செய்வோருக்கு என்ன சம்பளம் தரப்படுகிறது என்று அறிந்து கொள்ளக்கூட, தொண்டர் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. அவர் அன்பு செலுத்தும் அந்த ஐஸ்கிரீம் விற்கும் சிறுவர்கள் நாளொன்றுக்கு என்ன சம்பாதிக்கிறார்கள் என்றுகூட அவருக்குத் தெரியாது. அந்த விஷயங்களில் எல்லாம் அவருக்கு அக்கறை இல்லை என்பதில்லை; அவர்களைத் திருப்தியாக வைத்திருப்பார் கணக்குப் பிள்ளை என்ற நம்பிக்கைதான்.

அவரது பாக்டரியில் ஐஸ்கிரீம் விற்கும் சிறுவர்கள் அனைவரும் அந்தத் தெருவில் தொண்டரின் முயற்சியாலும் பொருளுதவியாலும் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் நல சேவா சங்கத்தில் நடக்கும் இரவுப் பள்ளியில் பயில்கிற மாணவர்களுமாவர். அந்தச் சங்கத்தில் இந்தப் பதினைந்து வருட காலத்தில் படித்து முன்னேறி வளர்ந்தவர்கள் பலர் தாங்கள் தொண்டரிடம் ஐஸ்கிரீம் விற்ற சிறுவர்கள் என்பதை மறவாமல், அதைப் பெருமையுடன் நினைவில் கொண்டு நன்றியுணர்வோடு இருக்கிறார்கள்...

சதாநேரமும் கையில் புகையும் சிகரட்டோடு, பரட்டைத் தலையைக் கோதியவாறு தெருவில் நிகழும் மனித வாழ்வைப் பயில்கிற மாதிரி ஜன்னலருகே உட்கார்ந்திருக்கும் தொண்டர் தன் வாழ்க்கையை எண்ணி மகிழ்வுற்ற போதிலும் தனது வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் இல்லாமலே ஐம்பதையும் கடந்துவிட்டார்.

பத்து வருஷங்களுக்கு முன் அவரது நண்பர்களும், கணக்குப் பிள்ளையும் தொண்டருக்கு வாழ்வில் ஒரு சுய பிடிப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நல்லுணர்வோடு அவரது திருமணம் பற்றிப் பிரஸ்தாபித்தனர்.

தன்னிடம் யாராவது பேச்சுக் கொடுத்துவிட்டால் ஆழ்ந்த மேதா விலாசத்தோடு மணிக்கணக்காய்ப் பேசும் தொண்டர் அன்று பத்து நிமிஷம் தலையைக் கோதிக் கொண்டே, கையில் புகையும் சிகரட்டைப் புகைக்கும் உணர்வுகூட

இல்லாமல் தெருவை வெறித்தவாறு உட்கார்ந்திருந்தார். பிறகு அந்த நண்பர்களை ஒவ்வொருவர் முகத்தையும் தனித் தனியாய் உற்றுற்றுப் பார்த்தார். பின்னர், தான் காலையும் மாலையும் கரம் குவித்துத் தொழுது வணங்கும் ஒரே தெய்வமான தன் அன்னையின் படத்தைப் பார்த்தார்.

என்னென்ன நினைத்தாரோ?...

அவரது உதடுகள் துடித்தன...

உதட்டைக் கடித்து உணர்ச்சிகளை விழுங்கி விட்டு, அவர்களைப் பார்த்து ஒரு புன்னகையோடு அவர் அமைதியாகப் பேசினார்.

“நான் தாய்க்கு ஒரு மகனாகப் பிறந்தேன் தாய்க்கு மகனாக மட்டுமே நான் சாகவேண்டும். வேறெந்தவிதப் பந்தத்துக்கும் அருகதையற்றவன்நான். ஒருத்திக்குக் கணவனாகவோ, சில குழந்தைகளுக்குத் தகப்பனாகவோ இருக்க என் இதயம் அவ்வளவு விசாலமாக இல்லை. அன்பான உங்கள் யோசனைக்கு நன்றி தெரிவிப்பதைத் தவிர...’ அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாதவராய் மௌனமானார் அவர்.

அதன்பிறகு அவரைத் துன்புறுத்த அவர்களுக்கே மனமில்லை.

அவரைக் குறைவில்லாமல் பாதுகாக்க அவர்மீது அன்புகொண்ட எவ்வளவோ நண்பர்கள், பணியாளர்கள் இருக்கின்றனர். அவரது தேவைகளும் மிகவும் குறைவானவை; எளிமையானவை அவரிடம் உள்ள பழக்கங்களிலேயே அவருக்குப் பொருந்தாத ஆடம்பரப் பழக்கம் ஒன்றே ஒன்றுதான். காலையில் அவர் மேசை முன் ஒவ்வொரு நாளும் புதிதாகத் திறந்து வைக்கப்படும் அந்த உயர்ந்தரக சிகரட் டின்... ஆமாம்; அவருக்கு ஒரு நாளைக்கு ஒரு டின் சிகரெட் வேண்டும். காலையில் ஆரம்பித்தால் இரவு படுக்கப் போகும்வரை தொடர்ந்தோ, சிறிது இடைவெளி விட்டே அவர் புகைத்துக் கொண்டே இருப்பார். குளிக்கின்ற நேரத்தில் பாத்ரூமிலுள்ள ஒரு மாடத்தில்

அந்த சிகரட் புகைந்து கொண்டிருக்கும்; குளித்து முடித்தவுடன் அதை எடுத்து உதட்டில் பொருத்திக் கொண்டுதான் உடம்பு துடைத்துக் கொள்ளுவார். அவரது சிகரட் செலவு ஒரு நாளைக்கு ஆறேழு ரூபாய். அந்த விரயத்துக்கு அவர் பொறுப்பல்ல. சிறையிலிருந்தபோது அவர் பீடி குடிக்கத்தான் பழகியிருந்தார். சித்தப் பிரமையுற்று மருத்துவமனையில் இருந்த போது அந்த 'புகை குடிக்கும் வெறி' அதிகமாயிற்று. அப்போது அவரது நண்பர்கள் இந்த உயர்ந்த சிகரட்டுகளை வாங்கித் தந்தனர். இப்போதும் அதே பழக்கம்தான்... இதன் விலைகூட அவருக்குத் தெரியாது.

அவரது மேசையின்மீது ஆஷ்டிரே உண்டு. அவருக்கு அந்த நினைவில்லாமல் பல சமயங்களில் ஜன்னல் வழியாய் வெளியில் எறிந்து விடுவார்; அங்கே ஒரு குப்பைத் தொட்டியும் உண்டு.

அன்று காலை தொண்டர் தனது தனியறையில் வந்தமர்ந்து புதிய டின்னிலிருந்து முதல் சிகரட்டை எடுத்துப் பற்றவைத்து புகைத்தபின், ஜன்னல் வழியாக எறிந்தபோது, அந்தச் சிகரட் துண்டு குப்பைத் தொட்டியில் விழாமல் தவறித் தெருவில் விழுந்தது.

அப்போது பத்து வயதேயுள்ள பாலகன் ஒருவன் எங்கிருந்தோ ஓடிவந்து அந்தத் துண்டு 'சிகரெட்டைக் குனிந்து எடுப்பதைப் பார்த்துப் பதைபதைத்து எழுந்து நின்றார் தொண்டர்.

அரையில் ஒருகிழிந்த அழுக்குப் படிந்த நிக்கரும் பரட்டைத் தலையுமாய் மெலிந்த அக்குழந்தை, சற்றும் அச்சமில்லாமல் அவரையே பார்த்துக்கொண்டு அந்தத் துண்டு சிகரட்டைப் 'பக்பக்'கென்று உறிஞ்சி மூக்காலும் வாயாலும் அமர்க்களமாய்ப் புகை விடுவதைக் கண்ட தொண்டருக்குக் கண்கலங்கிப் போயிற்று. அந்தச் சிறுவனோ அவரைப் பார்த்துக் கேலி செய்வது போன்ற குறும்புத்தனத்துடன் இடுப்பில் ஒரு கையை ஊன்றி நின்று

வலது காலை ஆட்டியவாறு புகையை இழுத்து வானத்தில் ஊதி ரசித்தான்.

ஓ! அந்தக் காட்சி...

-இந்தப் பாரததேசத்தின் எதிர்காலமே எச்சில் துண்டு சிகரட் பொறுக்கித் திரிவதுபோல் அவர் இதயத்தில் உருவகமாயிற்று.

இந்தப் பத்து வயது பாலகனின் நிலையே இதுவானால் இவனைப் பெற்றெடுத்த தாயின் நிலை?...

இவன் இப்படியே வளர்ந்து வாலிபனானால் அப்போது இவன் நிலை?

இந்தத்தரத்து வாலிபர்களின் நிலையே அதுவானால், இந்தத் தரத்துப் பெண்களின் நிலை?...

ஒரு தேசத்தின் லட்சணத்தை அளக்கவேண்டுமானால் அந்த தேசத்தின் பெண்களின் நிலையைப் பார்க்கவேண்டும்.

இந்த தேசத்தின் தாய்மார்களின் நிலை இதுவானால் இந்த தேசத்தின் எதிர்காலத்தின் நிலை எவ்வாறு இருக்கும்? என்று அவர் மனம் குடைந்து குடைந்து எது எதையோ சிந்தித்தது.

"தம்பி... இங்கே வா!" என்று ஜன்னலருகே நின்ற அன்பொழுக அவனை அழைத்தார் தொண்டர்.

'ஏன்...? எதுக்கு?' என்று தயங்கினான் சிறுவன். அந்தத் தயக்கத்தினூடே சிறுவனின் மனத்தில் 'எதுக்குக் கூப்டறான் இந்த ஆளு? கிட்ட கூப்பிட்டு அடிப்பானோ?ம்... அடிப்பானா, கல்லெடுத்து மண்டையெப் பேத்துட மாட்டேனா? நீதான் போட்டுட்டியே... அந்தத் துண்டு சிகரட்டை நான் எடுத்தா ஒனக்கென்னா? நீ இன்னாய்யா என்னெக் கேக்கறது?' என்ற விதத்தில் அவன் மனத்துள் 'சுய சம்வாதம்' நிகழ்ந்து கொண்டிருந்தது.

“நா ஒண்ணும் செய்ய மாட்டேன். பயப்படாம வா, தம்பி” என்று ஜன்னலுக்கு வெளியே கைநீட்டி அவர் அழைக்கும்போது, ஏக்கமும் அன்பும் மிதந்த அவர் கண்களைச் சந்தித்தபோது, ‘இவர் அடிக்க மாட்டாரு’ என்று தோன்றியது அந்தச் சிறுவனுக்கு. அதே சமயத்தில் சுபாவமான முரட்டுத் தனமும் தலைதூக்கி ‘ஹே! நான் என்னா பயந்தாங்கொள்ளியா?’ என்று விறைப்புடன் அவன் ஜன்னலருகே கம்பீரமாய் நடந்து வந்து நின்றான்.

அப்போதும் அந்தச் சிறுவனின் பிஞ்சு விரல்களுக்கிடையில் அந்தத் துண்டு சிகரட் புகைந்து கொண்டிருந்தது.

தொண்டர் அவனைப் பார்த்து அன்போடு புன்னகை செய்தார். அந்தச் சிறுவனுக்கு அந்தப் புன்னகையே ஒரு புதிய அனுபவமாகி, மீண்டும் அந்தப் புன்னகையைச் சந்திக்கத் தன் உள்ளம் ஏங்குவதுபோல் இருந்தது.

அவன் தன் கையிலிருந்த துண்டு சிகரட்டுடன் அவர் எதிரே நிற்க இயலாமல் அதைப் போட்டுவிட எண்ணிய போதே, அவர் முந்திக் கொண்டு,

“அதெப் போட்டுடு தம்பி, இந்தா இதிலேருந்து ஒண்ணு எடுத்துக்கோ” என்று சற்றும் எதிர்பாராத விதமாய் அவன் எதிரே அந்த உயர்தர சிகரட்டின்னை எடுத்து அவர் நீட்டியபோது-

அந்த இளம் உள்ளத்தில் முதலில் ஓர் அதிர்ச்சியும், அடுத்த வினாடி இனம் விளங்காத ஒருவிதத் துயரமும் கனத்து நெஞ்சையடைக்க அவர் முகத்தையே வெறித்தவாறு நின்றிருந்தான் சிறுவன். அவர் வேடிக்கையாகவோ, தன்னைத் துன்புறுத்துவதற்கோ அவ்விதம் செய்யவில்லை என்று அவரது கண்கள் அவனுக்கு உணர்த்தின.

“ம் எடுத்துக்க, தம்பி” என்று அன்புடன் அவர் வேண்டிக்கொள்ளும்போது அவனது விரல்களுக்கிடையே புகைந்து கொண்டிருந்த துண்டு சிகரட் பிடி நழுவிக் கீழே விழுந்தது...

இளைத்து எலும்புகள் தெரியும் அவனது மார்புக்கூட்டுக்குள் ஏதோ ஒரு துயரம் கேவிக் கேவி மேலெழும்புவது அவர் கண்களுக்குத் தெரிந்தது.

காரணத்தோடோ காரணமின்றியோ அவன் உதடுகள் அழுவதற்காகத் துடிக்கும்போது, அதை அடக்கிக் கொண்டு,

"வேணாம்..." என்று சொல்ல முடியாமல் தலையை மட்டும் ஆட்டினான் சிறுவன்.

"சரி, ஐஸ்கிரீம் வேணுமா? ம்.. உள்ளே வா. இந்தப் பக்கமா..." என்று அவர் அழைத்தபோது அந்த அன்பைப் புறக்கணிக்க முடியாதவனாய் அதில் கட்டுண்டவன் போன்று அவன் உள்ளே போனான் போகும்போது தன் கலங்கிய கண்களைப் புறங்கையால் துடைத்துவிட்டுக்கொண்டான்.

அவனை வரவேற்கத் தயாராய் அறைக்கதவைத் திறந்து கொண்டு நின்ற தொண்டர் அவன் அறைக்குள் வந்த பிறகு வெளியே தலைநீட்டிப் பார்த்தார்.

"ரெண்டு 'பிஸ்தா கப்' கொண்டுவா தம்பி" என்று கூவிச் சொல்லிவிட்டுத் தன் மேசைக்கு முன் இருந்த ஸ்டூலில் அவனை உட்காரச் சொல்லி, அவன் எதிரே நாற்காலியில் அமர்ந்தார் தொண்டர்.

அந்தச் சிறுவனின் வற்றி மெலிந்த தோற்றத்தையும் மதலைக் களை மாறாத அழகிய முகத்தையும் உற்றுப் பார்க்கையில், பிடுங்கி நடாத பசிய நாற்றங்கால் தண்ணீரின்றிக் கருகுவது போலிருந்தது அவருக்கு.

மெள்ள எழுந்து அவனருகே வந்து நின்று, மிகுந்த வாத்ஸல்யத்தோடு அவனது மிருதுவான முகவாயைக் கையிலேந்தி கொஞ்சுவதுபோல் "காலையிலே சாப்பிட்டியா தம்பீ?" என்று கேட்டார்.

அழகிய பெரிய விழிகள் பளபளக்க 'ம்' என்று தலையசைத்தான் சிறுவன்.

"என்ன சாப்பிட்டே?"

“பயேது!” என்று அவன் சொல்கையில் ‘பளீ’ரென்று ஒளிவீசிய பல்வரிசையில் முன் பல் விழுந்து பாதி அரும்பி வரும் அழகை மீண்டும் ரசிக்க விரும்பிய தொண்டர்,

“எங்கே, ‘ஈ’ காட்டு” என்றார்.

அவனும் லேசாக அரும்பி வந்த சிரிப்போடு பல்லைக் காட்டினான்.

“ஒனக்கு எத்தனை பல்லு விழுந்திருக்கு..?” என்று தன் உதடுகளைக் குவித்துக்கொண்டு கேட்டார் தொண்டர்.

‘மூணு’ என்று விரல்களால் காட்டினான் சிறுவன்.

“ஆமா... முன் பல்லு இப்பத்தான் மொளைச்சிவ ருது... நாக்காலே நிண்டக் கூடாது நிண்டினா, அப்புறம், தோ பாத்தியோ... என் பல்லு மாதிரி நீட்டிக்கிட்டு வந்துடும்” என்று அவர் சொன்னபோது அந்தச் சிறுவன் குழந்தையாகவே சிரித்தான்.

“நிண்டாதேடா, நிண்டாதேடா’ன்னு எங்கம்மா சொன்னப்போ நான் கேக்கலே... அப்புறம் பள்ளிக்கூடத்திலே பையன்க எல்லாம் ‘தேங்காத் துருவி’ தேங்காத் துருவி’ன்னு கூப்புடும்போதுதான் தோணிச்சி... ஐயய்யோ, அம்மா சொன்னதெக் கேக்காததனாலே தானே வந்திச்சி இந்த அசிங்கம்னு... என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் உள்ளேயிருந்து ஒரு வேலையாள் அழகிய ஈயத்தாள் கப்பில் அடைத்த இரண்டு ஸ்பெஷல் ஐஸ்கிரீமும், சிறிய மரச் செதிள் ஸ்பூன்களையும் கொணர்ந்து மேசைமீது வைத்தான்.

தொண்டரின் குணங்கள் யாவும் அங்கிருக்கும் அனைவருக்கும் தெரியுமாதலால் இந்தத் தெருப்பொறுக்கிச் சிறுவனோடு அவர் கொஞ்சிக் கொண்டிருந்ததைக் கண்டு அந்த வேலையாள் ஆச்சரியப்படவில்லை, அந்த வேலையாள் வெளியேறிய பிறகு தொண்டர் தமது இருக்கையில் வந்து அமர்ந்துகொண்டு சிறுவனிடம் ஐஸ்கிரீமைத் தள்ளிவைத்து,

“ம்...சாப்பிடு” என்று சொல்லிவிட்டு மற்றொரு கப்பைத் தன் கையிலேந்திக் கொஞ்சமாய் ருசித்து, நாக்கைச் சப்புக்கொட்டி ரசித்து ‘ஆ! பிரமாதம்... நீ இந்த மாதிரி சாப்பிட்டே இருக்கமாட்டே” என்று அவனையும் சாப்பிடுவதற்கு உற்சாகப்படுத்தினார்.

அவருக்குத் தெரியும், தான் கூறியது உண்மையென்று, அவன் எங்கே எப்போது எட்டணா கொடுத்து ‘பிஸ்தா கப்’ வாங்கிச் சாப்பிட்டிருக்க முடியும், அவன் ஐஸ் சாப்பிட்டிருக்கிறான். கோடை காலத்தில் சர்பத் கடைகளில் ஐஸ்கட்டியை உடைக்கும்போது சிதறிவிழும் துண்டுகளைப் பல முறை பொறுக்கிச் சாப்பிட்டிருக்கிறான். அதிகமாய் போனால் அவர்கள் தெருவில் ராத்திரி பத்துமணிக்கு மேல், மெட்ரோமாக்ஸ் லைட்டைக் கொளுத்தி வைத்துக்கொண்டு மணியடித்தவாறு வருவானே ஒரு தள்ளு வண்டிக்காரன் ‘அரையணாஓரணா பல்ஐஸ்’ என்று கூவியவாறு-அவன் மந்தார இலையில் வெண்ணெய் மாதிரி வழித்து வைத்துத் தருவானே, அந்த ‘ஐஸ்கிரீம்’ சாப்பிட்டிருக்கிறான்.

அவன் இதை ஆவலுடன் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தொண்டர் அவனைக் கேட்டார்

“உன் பேரு என்ன தம்பி?”

உதட்டின் மீது பால் போல் படித்த ஐஸ்கிரீமைப் புறங்கையால் துடைத்துக்கொண்டே அவன் சொன்னான்:

“சிட்டிபாபு”

“உங்கப்பாவுக்கு என்ன வேலை?” ஐஸ்கிரீம் கப்பில் பார்வை கவிந்திருக்க, அவனது பதிலை எதிர்பார்த்தவாறு அவரும் ஐஸ்கிரீமைச் சுவைத்துக் கொண்டிருந்தார்.

சிட்டி தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தான். இவரிடம் பொய் சொல்லுவது எதற்கு’ என்று ஒருவினாடி யோசித்து-அந்த வினாடி தயக்கத்தால் அவரும் தலை நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்க்க-அவர் விழிகளைப் பார்த்தவாறு அவன் தன் முகத்தில் ஒரு வாட்டத்துடன் சொன்னான்:

“ம்... எனக்கு அப்பா இல்லே!”

“த்சொ... காலமாயிட்டாரா?” என்று பரிவுடன் கேட்டார் தொண்டர்.

அதை, பலமாகத் தலையை உலுப்பி ஆட்சேபித்த சிட்டி.

“ம்ஹ_ம்... எனக்கு அப்பாவே இல்லே.. எங்கம்மா மட்டும்தான்” என்று அவன் கூறியதும் தொண்டர் அவன் முகத்தை வெறித்துப் பார்த்தார். தான் அவரிடம் அப்படீ, தன்னைப்பற்றிச் சொல்லியிருக்கக் கூடாது என்று தோன்றியது சிட்டிக்கு. அவன் மௌனமாய்த் தலைகுனிந்து “எங்க நைனா இல்லே... நானு பொறக்கறதுக்கு மின்னேயே எங்கம்மாவெ உட்டுட்டு ஓடிட்டாராம்...” என்று அரைகுறையாய் அந்தத் துயரத்தை மழுப்பினான்.

-அதற்குமேல் தொண்டரால் கேட்க முடியவில்லை. அந்த விஷயத்திலிருக்கும் கொடுமை குறித்தல்ல; அதை வெகு சாதாரணமாய் அந்தக் குழந்தை கூறும்போது சமூகத்தின் கோரமே ரொம்ப அல்பமான உண்மையாக அவர் முன் தெரிகையில், அதனூடே இன்னும் பல மகத்தான கோரங்கள் அவர் அறிவுக்குப் புலனாயின. அவர் மனதில் திடீரென ஒரு துயர உணர்வு கனத்து அழுத்திற்று.

“இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?” என்று கம்மிய குரலில் கேட்டார்.

“எங்க ஆயா சொல்லும்...”

“உனக்கு ஆயாவும் உண்டா?”

“ஆயான்னா சொந்த ஆயா இல்லே; பக்கத்தூட்டு ஆயா”

“உங்கம்மா எங்கேயாவது வேலைக்குப் போகுதா?”

“ஆமா.. சித்தாள் வேலைக்கிப் போவுதே...”

“உங்க வீடுங்கறது நீயும் உங்கம்மாவும் மாத்திரம் தானா?”

“ஆமா”

“உங்கம்மாவுக்கு உன் மேலே ரொம்பப் பிரியமா? என்று தொண்டர் கேட்டபோது, தாயை எண்ணியதும் அவன் முகத்தில் பரவிய ஒளியை அவர் கவனித்தார் அவன் சிறிதே யோசித்த பின்,

“ம்... எம்மேலே ரொம்பப் பிரியம்தான் ஆனா சில சமயத்திலே சாவற மாதிரி அடிக்கும்... அதுக்கோசரம் நான் கையிலே ஆம்படமாட்டேன்... ஓடியே பூடுவேன்” என்று சாகஸப் பெருமையுடன் கூறினான் சிட்டி.

“எதுக்கு உங்கம்மா உன்னெ அடிக்குது?”; என்று அவர் கேட்டபோது, தன்னைத் தன் தாய் அடிப்பதின் நியாயத்தை உணர்ந்தவன் போல் தலை குனிந்தான் சிட்டி.

“ஊர் சுத்தறதுக்கு, பீடி குடிக்கிறதுக்கு, சண்டை வலிச்சிக்கினு வர்ரதுக்கு...” என்று வாய்க்குள் முணகிக்கொண்டான் சிட்டி.

“உங்கம்மா கஸ்டப்பட்டுக் கூலி வேலெ செஞ்சு உனக்குச் சோறு போடுது இல்லியா?”

“ஆமாம்...”

“எதுக்கு அப்பிடி கஷ்டப்பட்டு உனக்கு சோறு போடுது... பின்னாலே வயசான காலத்திலே நீ அதுக்கு சம்பாதிச்சி சோறு போடுவேன்னு நெனச்சிதானே!”

அதற்கும் அவன் தலையாட்டினான்.

அவர் சொன்னார்:

“இல்லே உன்னெப் பெத்ததுக்கு உன்னைக் காப்பாத்தி வளர்க்க வேண்டியது அது கடமை; எதையும் எதிர்பார்த்துச் செய்யிற காரியமில்லே அது. நீ பாத்திருக்கயா; பூனைக் குட்டியைப் பெரிய பூனை எவ்வளவு ஜாக்ரதையா கவ்வித் தூக்கிக்கிட்டுப் போயி வளக்குது!... காக்கா கூட்டிலே பறக்க முடியாத குஞ்சுகளுக்கு தனக்குப் பசியிருந்தாலும்-பெரிய காக்கா திருடிக்கிட்டு வந்த இரையைக் கூட வாயிலே கொண்டு வந்து குஞ்சுக்கு ஊட்டுது!- எதுக்கு அந்தக் காக்கா வளர்ந்தப்புறம் தன்னைக் காப்பாத்தும்னா?...

இல்லை... அதுதான் இயற்கை-பின்னாலே தாயைக் காப்பாத்த வேண்டியது உன் கடமை... ஏன்னா, மனுசன்பறவையோ மிருகமோ இல்லே-வளர்ந்தப்புறம் வளர்ந்த கதையை மறந்துடறத்துக்கு-ஆனா, நீ எப்படிக் காப்பாத்துவே... உன் தாயை? உன்னெ மாதிரிப் பொறுக்க ஆரம்பிச்சவன் எவனாவது தாயெக் காப்பாத்தினானா? உடம்பிலே வலு உள்ள வரைக்கும் வேலெ செஞ்சு புள்ளைக்கும் சாப்பாடு போட்டுட்டு, வயசான காலத்திலே பிச்சைக்காரியா மாறி எச்சிலை பொறுக்கற கிழவிகளை நீ பார்த்திருக்கியா?"

-சிட்டியின் கண்களில் கண்ணீர் முட்டியது!

"இப்பவே நீ உழைச்சு நாலணா சம்பாதிச்சிக் குடுத்தா உங்கம்மா எவ்வளவு சந்தோஷப்படும்!... இந்த வயசிலே மானத்தோட உழைச்சிப் பொழைக்கப் பழகினா, பின்னாலே வாழ்க்கையிலே எவ்வளவு உயரலாம் தெரியுமா?... வேலை தந்தா செய்யிறியா? உங்கம்மா சொல்ற மாதிரி பீடி சிகரட் குடிக்கறதே தப்புன்னு நான் சொல்லமாட்டேன்... ஆனா, உனக்கு ரொம்பச் சின்ன வயசு?,.. உனக்கு என்ன வயசு?...

"பதனொண்ணு..."

"ம்.. வயசெப் பாத்தா, நீ இப்போ ஸாக்ஸ_ம் ஷூஸும் போட்டுக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போயிட்டில்லே வரணும். பெரியவங்க மாதிரி வேலை செஞ்சா. பெரியவங்க மாதிரி நடந்துக்கவும் வேணாமான்னு நீ கேட்டா எனக்கேது வாய்?... சிகரட் குடிக்கறதிலே உனக்கு ஒரு ருசி வந்துட்டுதுன்னா அது உன் தப்பா?... வேலெ செய், சம்பாதி. சிகரட் வாங்கிக்குடி... இப்ப உனக்கு வேணும்னா இதிலேருந்து எடுத்துக்கோ..." என்று சொன்னவாறு டின்னைத் திறந்து தான் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு அவன் பக்கம் தள்ளி வைத்தார்.

அவன் வேண்டாம் என்று தலையாட்டினான்.

ஏன்?" கொஞ்சநாழிக்கு முன்னே தெருவிலேருந்து எடுத்துக் குடிச்சியே இப்ப ஏன் வேணாம்கிறே?... இப்ப உன்னெத் தடுக்கறது யாரு? இல்லாட்டி எது?"...

-அந்தக் கேள்வியை அவனே ஒருமுறை தனக்குள் கேட்டுக் கொண்டான். அவனுக்குப் பதில் தெரியவில்லை. அவன் சொல்ல வேண்டிய, ஆனால் அவனுக்குத் தெரியாத அந்தப் பதிலைத் தொண்டர் சொன்னார்:

"எல்லாக் காரியத்துக்கும் ஒரு காரணம் உண்டு. நீ செய்ற ஒவ்வொரு காரியத்தையும் செய்யறத்துக்குமுன்னே, ஏனிந்தக் காரியத்தை செய்யறோம்னு யோசிச்சுப் பாரு. காரணமிருந்தா, அது சரியான காரணமா இருந்தா, நீ செய்யற காரியத்தை உலகமே எதிர்த்தாலும் சரி, செஞ்சு முடிச்சுட வேண்டியதுதான். சரியான காரணம் தப்பான காரணம்னு எப்படி முடிவு பண்றதுன்னு யோசிக்கிறியா?... அது ஒண்ணும் கஷ்டமில்லே அந்தக் காரணத்தெப் பகிரங்கமா நீ ஒத்துக்க முடியும்னா அதுசரியான காரணம் தான். அப்பிடிப் பாத்தா? நீ துண்டு சிகரட் பொறுக்கிக் குடிச்ச காரியத்துக்கும் இப்ப நான் குடுக்கறதெ வேண்டாம்னு சொல்ற காரியத்துக்கும் சரியாகவோ தப்பாகவோ, ஒரு காரணம் இருக்கு...ஆமா, இந்த உலகம் உன்னை மதிக்கலே உன்னை மதிக்காத உலகத்தெ நீயும் மதிக்கலே அதுக்கு மரியாதை குடுக்க நீ தயாராயில்லே... அதெ அவ மதிக்கணும்னு நீ ஆசைப்பட்டே... நீ அந்தத் துண்டு சிகரட்டை எடுத்து என்னெப் பாத்துக்கிட்டே புகையை ஊதினியே அப்ப எனக்கு அப்படித்தான் தோணிச்சு... சமூகத்தை எதிர்த்து நீ கலகம் செய்து உன்னையே அழிச்சிக்கிற வழிக்கு இதுதான் ஆரம்பம்... ஏன்னா நாளைக்கு-நீ பெரியவனா வளர்ந்தப்புறமும் சகல வழியிலும் இந்த உலகத்தெ அவமதிக்கற எல்லாக் காரியங்களும் பண்ண ஆரம்பிப்பே. இப்ப நீ சிகரட் குடிக்கறதெப் பாத்துக்கிட்டிருக்க இதே உலகம் அப்ப உன்னெ சும்மாவிடாது. சட்டத்தின் மூலம் அடக்கவரும், அப்புறம் நீ குற்றவாளியாகவும், சமூகத்தாலே தண்டிக்கத் தகுந்த கலகக்காரனாகவும் மாறி இருப்பே. அதன் மூலம்-

உன்னெ மாதிரி பலராலே உலகத்திலே ஒரு பகுதி எதிர்காலத்திலேயும் இப்பவும் தொடர்ந்து கெட்டுப் போகும்...” அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும் தன்னைக் குறித்துப் பேசப்பட்டவை என்பதைத் தவிர சிட்டிக்கு வேறொன்றும் புரியவில்லை. அவனுக்குப் புரியவில்லை என்பதும் அவருக்குப் புரிந்தது.

“நான் சொல்றது உனக்குப் புரியாம நீ குழம்பறேன்னு எனக்குத தெரியுது. இப்பவே உனக்குப் புரிஞ்சிடும்னு நான் சொல்லலே. புரிஞ்சோ புரியாமலோ நான் சொல்றதெக்கேட்டா, உனக்கு ஒரு குழப்பம் வரும் அந்தக் குழப்பத்திலேருந்து ஒரு தெளிவு வரும்-இன்னக்கி இல்லாட்டியும் நாளைக்கு உனக்குப் புரியும் நீ துண்டு பீடி பொறுக்கிக் குடிச்சதுக்குக் காரணம் அதுதான் இப்ப நீ புடிக்க மாட்டேன்னு நான் குடுத்ததையும் வேணாம்கறத்துக்கு காரணம் என்னன்னு சொன்னா உனக்குப் புரியும். ஆமா, நான் உன்னெ மதிச்சேன், அன்புகாட்டினேன்னு நீ நெனக்கிறே நம்பறே... அதனாலேதான் என் எதிரே உனக்குச் சிகரட் புடிக்க வேண்டாம்னு தோணுது. இந்த அன்பையும் மதிப்பையும் உலகம் உனக்குத் தரலே... இப்ப நான் குடுக்கிற சிகரட்டை வேணாம்னு சொல்லிட்டு, நாளைக்கி இதே மாதிரி இன்னொரு இடத்திலே துண்டு சிகரட் பொறுக்கிக் கூட நீ குடிப்பே” என்று சொன்ன போது சிட்டி அழ ஆரம்பித்தான். அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரை இரண்டு கைகளாலும் அழுத்தித் துடைத்துவிட்டுக் கொண்டே, மூக்கை உறிஞ்சிய வாறு “இல்லே... இனிமே நான் எச்சி சிகரட் பொறுக்கவே மாட்டேன்...” என்று விம்மினான்.

“அழாதே சிட்டிபாபு! இன்னக்கிக்காத்தாலே வரை நீ பொறுக்கனத்துக் காரணமோ பொறுப்போ நீ இல்லே இந்த உலகம்! இனிமே பொறுக்கனியானா நீயும் பொறுப்பு. இந்த நிலையிலே பொறுக்கினத்துக்காக அழவேண்டியது நீ இல்லே, இந்த சூழ்நிலையிலும் பொறுக்காம இருந்திருந்தா அதுக்காகப் பெருமைப்பட வேண்டியவன் நீ... போகட்டும்? போனது போகட்டும்... உனக்கு இங்கே வேலை தர்ரச்

சொல்றேன் இங்கே வேலை செய்யற பையன்க எல்லாம் படிக்கணும்...உனக்குத் தெரியுமா, அடுத்த தெருவிலே ஒரு சங்கம் இருக்கு?... அங்கே போயி ராத்திரியிலே ரெண்டு மணி நேரம் படிக்கணும். புஸ்தகம் சிலேட்டு, அதுக்கு வேண்டியதெல்லாம் நான் வாங்கித் தர்றேன்- அந்த சங்கத்துக்குப் போயி நல்லாப் படிப்பியா?”

“ஓ!... படிக்கிறேங்க... அந்த சங்கம் எங்க தெருவிலே தான் இருக்கு” என்று உற்சாகமாய்ச் சொன்னான் சிட்டி.

“உங்கம்மா இன்னம் ஒரு அஞ்சு வருஷத்துக்கு மேலே வேலை செய்யக் கூடாது... பாவம்... நீ பெரியவனா ஆனப்பறமும் அது வேலை செஞ்சா உனக்கு அவமானம்னு நீ நெனைக்கணும் உன்னைப் பார்த்து ‘என் மகன் எவ்வளவு உயர்ந்தவனா மாறிட்டான்’னு நெனச்சி உன் தாய் பூரிக்கணும். நீ சிகரட் குடிச்சா என்னா, குடிக்காட்டி என்னா, சம்பாதிச்சிக் குடி... பொறுக்கிக் குடிக்காதே... என்ன, நான் சொல்றது புரியுதா?”

“இனிமே நான் என் கையாலேகூடத் தொடமாட்டேனுங்க அதெ!...” என்று சத்தியம் செய்வது போன்ற குரலில் சொன்னான் சிட்டி.

தொண்டர் மிக மகிழ்ச்சியுற்று அவன் கையைப் பிடித்துக் குலுக்கியவாறே சொன்னார்: “சபாஷ்... ரொம்ப நல்ல பையன்” என்று அவன் காதில் விழுவதுபோல் பாராட்டி விட்டு ‘உன்னை எல்லாம் இந்த சமூகம் குப்பையில் எறிஞ்சிருக்கே’ என்று மனத்துள் சொல்லிக் கொண்டார்.

“நீயும் நானும் சந்திச்ச ஒரு நல்ல நாளில் ஒரு நல்ல காரியம் பண்ணப் போறேன் நான்... இந்தக் கெட்ட பழக்கத்துக்கு நான் ஒரு அடிமை... நமக்குள்ளே ஒரு ஒப்பந்தம்... உன்னோட சேர்ந்து நானும் விட்டுடறேன் இந்தப் பழக்கத்தை” என்று சொல்லிக் கையிலிருந்த சிகரட்டை ‘ஆசை தீர’ப் பலமாகப் புகையிழுத்து ஊதி, வீசி எறிந்தார் தொண்டர்.

“இந்த டின்லே இருக்கிறதே எல்லாம் என் கையாலேயே கொண்டு போயி அந்த சாக்கடையிலே கொட்டு நானும் நிறுத்தணுமத் நிறுத்தணும்னு ரொம்ப நாளா யோசிச்சுக்கிட்டிருக்கேன்... இதை நிறுத்தலேன்னா அப்புறம் என்ன மனுசன்” என்று டின்னை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

‘இன்று, தான் சந்திக்க நேர்ந்தது ஒரு மனிதனைத் தானா? என்று வியந்தவாறு அந்த டின்னிலிருந்த சிகரட்டுகளைச் சாக்கடையில் கொட்டினான் சிட்டி.

அங்கு வேலைக்குச் சேர்ந்த அடுத்த நாளே-ஐஸ்கிரீம் விற்ற பணத்தைக் கொண்டு வந்து கணக்குப்பிள்ளையிடம் கட்டிவிட்டுத் திரும்பும் போது-சிட்டி உணர்ந்தான்; தொண்டர் துரைக்கண்ணு துறவியுமல்ல தேவனுமல்ல, மனிதர்தான் என்பதை.

அவர் அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று தொங்கிய முகத்துடன் “சிட்டிபாபு, என்னை மன்னிச்சுடு என்னாலே முடியலே.. நேத்து ராத்திரியே ஆரம்பிச்சிட்டேன்...” என்று சொல்லியவாறு கையிலிருந்த டின்னைத் திறந்து ஒரு சிகரட்டை எடுத்துக் கொளுத்தினார்.

சிட்டி சிரித்தான்!

“உனக்குக் கேலியா, இருக்கா? என்ன பண்றது? நீ அஞ்சு-வளைஞ்சுட்டே; நான் அம்பது வளைய முடியலே!” என்று அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டினார் தொண்டர்.

இந்த இரண்டு வருஷங்களில் சிட்டி, தொண்டர் துரைக்கண்ணுவின் உறவால் பொறுப்புணர்ந்த, தன் மதிப்புள்ள, தாய்ப் பாசமுடைய, லட்சிய மனிதனாய் வளர்ந்தான்.

இனிமேல்?...

கெட்டுப்போன, கேவலமான ஒருத்தியின் மகனாய் அவர் எதிரில் போய் நிற்க அவன் உடலும் மனமும் கூசும். அவர் அன்போடு வாங்கித்தந்த சிலேட்டையும் புத்தகத்தையும்

வீசி எறிந்துவிட்டான். வேலைக்குப்போன நாள்முதல் ஒரு நாள் தவறாமல் சென்று உபாத்தியாயரும், எஜமானும் பாராட்டக்கூடிய விதத்தில் படித்துக் கெட்டிக்காரன் என்று பெயரெடுத்து வந்த சிட்டி இன்றுமுதல் தடவையாய் சங்கத்துக்குப் போகவில்லை. இனி போகவும் மாட்டான்.

இந்த வயதிலேயே அந்தச் சிறுவனுக்கு வாழ்க்கையில் எப்படிப்பட்ட ஏற்றமும், வீழ்ச்சியும், எவ்வளவு சிக்கல் மிகுந்த பிரச்னைகளும் முளைத்து விட்டன.

அத்தனை பிரச்னைகளையும் ஏற்று எதிர் நின்ற சமாளிக்கப்போகும் ஒரு ஆவேசத்தோடும் உறுதியோடும் தான் அன்று இரவு சிட்டி தன் வீட்டுக்குத் திரும்பி வந்தான்!

## 4

இரவு வெகு நேரம்வரை-மணி பத்தரையான பிறகும்-சிட்டி வீடு திரும்பாததால் கலவரமடைந்த தங்கம் தெருவுக்கும் வீட்டுக்குமாக வாசலைக் கடந்து ஓடி ஓடிப் பார்த்துக்கொண்டிருப்பதை அங்குள்ள எல்லாக் குடித்தனக்காரர்களும் கவனித்துக் கொண்டுதானிருந்தனர்.

புருஷனுக்குப் பாய் விரிக்க வாசலுக்கு வந்த எதிர் வீட்டு அலமேலு, தங்கம் தெருவை நோக்கி ஓடுவதைப் பார்த்து, அவள் தலை மறைந்த பிறகு வாசற்படியில் சுருட்டு புகைத்தவாறு உட்கார்ந்திருந்த புருஷன் மன்னாருவின் காதில் ரகசியமாகச் சொன்னாள்:

“இந்த லோலாயி மூஞ்சிலேகூட முயிக்கக் கூடாதுன்னு அந்தப் பையன் எங்கனாச்சும் ஓடிப் போயிருக்கும்... மனசுக்குள்ளே இவளுக்கும் அது சந்தோசமாத்தான் இருக்கும்... சும்மா ஊரு மெச்சிக்க அதுக்கும் இதுக்கும் ஓடி காட்டறா!” என்று சொன்னதும், அவள் புருஷன் சத்தம் போட்டுச் சொன்ன வார்த்தைகளிலிருந்து காலை நீட்டி வெற்றிலை போட்டவாறு வாசலில் உட்கார்ந்திருந்த அன்னம்மாளுக்கு அலமேலு அவனிடம் என்ன சொல்லியிருக்கக் கூடும் என்று புரிந்தது.

சுருட்டுக்காரத்தால் வாயில் நிறைந்திருந்த எச்சிலைக் காறித் துப்பிவிட்டு,

“ஒனக்கேண்டி ஊரு நாயம்? அவ புள்ளே மேலே அவளுக்கில்லாத அக்கறை உனக்கு வந்துடுச்சாங் காட்டியும்? நம்ப காரியெத்த நாம்ப பார்த்துக்கிட்டுப் போவாம அவளெப் பத்தியும் இவளெப் பத்தியும் நாயமெல்லாம் வேணான்னு நானும் சொல்லிக்கினே இருக்கேன். ஒம் புத்தியெ நீ வுடமாட்டேன்றே... ஒரு நாளைக்கி இரு, செமபுடி புடிக்கிறேன்!...” என்று அவன் உறுமியவுடன்,

“ஐயெ, இப்பநா” இன்னா சொல்லிட்டேன்னு நீ இம்மாந்தூரம் கத்தறே?” என்று அலமேலு சீறினாள்...

“அ!... இத்தெ சென்னேடி... பகலிக்கெல்லாம் எலும்பெ முறிச்சி ஒயச்சிட்டு வூட்டுக்கு வந்தா, ஆம்படையாங்காரங்கிட்டே நல்லதனமா எதனாச்சும் பேசுவோம்னு இல்லே” என்று அலுத்துக்கொண்ட அலமேலுவின் புருஷன் மன்னாரு, எதிரே உட்கார்ந்திருந்த அன்னம்மாக் கிழவியிடம் சொன்னான்:

“ஆமா ஆயான்னா!... அவ அங்கேபோனா, இவஇங்கே போனா... அவ புள்ளிய வெரட்டிட்டா, இவ புருஷனெ வெரட்டிட்டா... பொயுது விடிஞ்சி பொயுது போனா ஊரு நாயந்தானா? நாம்ப நாலு பேரெப் பத்திப் பேசற மாதிரி தானே, நாலு பேரு நம்பளெப் பத்தியும் பேசுவாங்க.... இன்னா ஆயா சொல்றே?...”

“ஐயெ! இப்ப நா இன்னா சொல்லிட்டேன்னு ஊரு கூட்டி நாயம வெக்கிறேநீ...” என்று அவனை அடக்கியவாறு பாயை விரித்தாள் அலமேலு.

“பின்னே இன்னாம்மே... பெத்தவளுக்கில்லே புள்ளெ அருமை தெரியும்!... நீ இன்னா பெத்தியா? வளத்தியா?... என்று மன்னாரு கூறிய வார்த்தைகள் அலமேலுவுக்குச் சுருக்கெனத் தைத்தன. ஏழையானாலும் கூலிக்காரன் மனைவியானாலும் பிள்ளையில்லாவிட்டால் குறை

இருக்காதா என்ன? இருந்தாலும் அவன் தன்னைச் சொல்லிக் காட்டி விட்டது அவளுக்குப் பொறுக்கவில்லை.

“ஆமா, இப்ப நான் பெக்காம, வளக்காம, நீ சம்பாதிச்சி வெச்சிருக்கிறியே அந்த ஜமீனு-அது பாயாவா பூடுச்சி?... இங்கே வாயற லட்சணத்துக்குப் புள்ளை இல்லாததுதான் பெரிய கொறையாங் காட்டியும்! என்று அவனைத் திருப்பியடித்தாள் அலமேலு.

“இன்னாம்மே கய்தே! வாயி ரொம்பத்தான் நீளுது... எந்திரிச்சி வந்தேன்னா எட்டித் தலை மேலயே ஒதிப்பேன்” என்று மன்னாரு கத்தியதும் அலமேலு வாய்க்குள் முணகிக் கொண்டே வீட்டுக்குள் போனாள்.

“மொணவாதமே, கம்னு போம்மோ!” என்று வெளியில் பாயில் படுத்தவாறே அவளை மிரட்டினான் மன்னாரு.

அப்போது தெருவில் வெகு நேரம் நின்று ஏமாந்த தங்கம் மீண்டும் உள்ளே வந்தாள்.

“இன்னா ஆயா... சிட்டிப் பையனை இம்மா நேரமாயும் காணாமே! எனக்கு என்னமோ பயம்மாருக்கு... எங்கனாச்சும் ஓடிட்டானோ?” என்று அடி வயிற்றைப் பிடித்துக்கொண்டு பதறி வந்த அழுகையை அடக்கிக்கொண்டு அன்னம்மாவிடம் முறையிட்டாள் தங்கம்.

இவ்வளவு நேரம் அதுபோல் நினைக்காத அன்னம்மாளுக்கும் தங்கத்தின் வார்த்தைகளைக் கேட்டதும் எங்கனாச்சும் ஓடிட்டானோ’ என்ற திகில் பிறந்தது. எனினும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல்,

“சும்மா கெட்டி பைத்தியக்காரி... அவன் எங்கே பூடுவான், சீமைக்கி... தோ, நாம் போயிக் கையோட இஸ்துக்கினு வர்ரேன் யாரு...” என்று எழுந்து வெளியே கிளம்பினாள் அன்னம்மா.

தெருவிலிருந்து-இரண்டு வீடுகளின் பெரிய சுவர்களுக்கிடையில் இரண்டு அடி அகலத்தில் பிரிகிற சந்துதான் அந்த வாசலின் குடித்தனக்காரர்கள்

அனைவருக்கும் உரிய-தெருவிலிருந்து வீட்டிற்றுஷகு வரும்-பொது வாயிலாகும். அந்த இருண்ட சந்தின் பாதி வழிவரை தெருவிலிருக்கும் கார்ப்பொரேஷன் விளக்குக் கம்பம் கரும் 'கருணை' படர்ந்திருக்கும்.

சிட்டியைத் தேடக்கிளம்பிய தன்னைப் பின்தொடர்ந்து தங்கமும் வருவதை, வாசலைத் தாண்டி, சந்தையும் கடந்து தெருவிலிறங்கிய பின்னர்தான் தெரு விளக்கின் வெளிச்சத்தில் கவனித்தாள் கிழவி.

"நீ எங்கேடி பொண்ணே வரே... வூட்டுக்குப் போ, நான் பாத்து இஸ்த்துக்கினு வர்ரேன்" என்று தங்கத்தின் முகத்தை வெளிச்சத்தில் பார்த்த கிழவிக்குப் பரிதாபமாய் இருந்தது.

"நானும் வர்ரேன் ஆயா!" என்று அழுகையில் விரிந்து துடிக்கும் நாசியும் கலங்கிய கண்களுமாய்க் கெஞ்சினாள் தங்கம்.

"தே, பாரு தங்கம் அவன் எங்கேயும் பூடமாட்டான், நீ வீணாண கோஷ்டமெல்லாம் காட்டாதே!.. எதினாச்சியும் நெனைச்சிக்கினு அனாவிசயமா பேஜார் பண்ணிக்காதே... ஒம்பாட்டுக்கு நீ எங்கூட வந்திட்டினா, பாவம் இன்னேரம் வரைக்கும் சோறு துண்ணாமக் குந்தியிருக்கே அந்தப் புள்ளாண்டான், அதும் மனசு எப்படி இருக்கும்!... போ, போயி அதுக்கு சோறு போடு, பாவம், அதுவும் இன்னா நெனச்சி வருத்தப்படுதோ, போயி சமாதானம் பண்ணு... இன்னங் கொஞ்சம் நாழியிலே சிட்டிப் பையனைக் கொண்ணாந்து வூடு சேக்கறது எம் பொறுப்பு..." என்று தங்கத்தைச் சந்துவரை வந்து உள்ளே அனுப்பிவிட்டுத் திரும்பிச்சென்றாள் கிழவி.

கிழவி தெருவில் நடந்து அவனைத் தேடிச் செல்வதை நம்பிக்கையற்ற விழிகளுடன் வெறித்துப் பார்த்து 'கோ' வென இதயத்துள் குமுறி, சந்தின் தனிமையில் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள் தங்கம்.

அவன் திரும்பி வரமாட்டான் எங்கோ ஓடித்தான் போனான் என்று எண்ணிய அவளது நம்பிக்கையின்மைக்குக் காரணம், மாணிக்கத்தையும் தன்னையும் இன்று மாலை ஒரு சேரப் பார்த்து 'பொக்' கென்று இடிந்துபோய் மௌமான துயரத்துடன் அவன் வெளியேறியது மட்டுமல்ல சற்று நேரத்துக்கு முன், சிட்டி வீடு திரும்ப நேரம் அதிகமாவதை உணர்ந்தவுடன் அவள் அந்தத் தெருக் கோடியிலிருக்கும் சங்கத்துக்கு ஓடி விசாரித்தபோது, 'ஒருநாள் கூட வரத் தவறாத அவன் இன்று வராமலிருப்பது ஏன்' என்று அந்த வாத்தியாரே ஆச்சரியப்பட்டதும், 'அவனைப் பேசின் பிரிட்ஜ் டேசன் பக்கம் பாத்தேன்' என்று ஒரு பையன் சொன்னதும்...

போதாதா?-

ஏதேதோ சுய சமாதானங்களுடன் 'வந்து விடுவான்' என்ற நம்பிக்கையில், தான் போய் விசாரித்றிந்த விஷயங்களை யாரிடமும் சொல்லாமல் கடந்த இரண்டு மணிநேரமாய் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கும் தங்கம்... இந்த மனப் பதைப்பில் அவனை, மாணிக்கத்தை மறந்தே போனாள்.

"பாவம்... அந்தப் புள்ளாண்டான்! அது மனசு எப்படி இருக்கும்!" என்று கிழவியின் வார்த்தைகளே அவளுக்கு மாணிக்கத்தையும் நினைவூட்டின. அவளுக்கு இப்போது கடமைகள் இரண்டல்லவா? மீண்டும் உள்ளே ஓடினாள்.

வாசலில் உள்ள எல்லாக் குடித்தனக்காரர்களும் அனேகமாகப் படுத்து விட்டனர். கோடை காலமாதலால் எல்லோருமே பெருங்கூட்டமாய் அவரவர் வீட்டு வாசலின் முன் அவர்களால் 'வாசல்' என்றழைக்கப்படும் அந்த பெரிய முற்றத்தின் இரண்டு பக்கங்களிலும் ஆண் பெண் பேதமில்லாமல் - குடும்பத்திற்குக் குடும்பம் இடைவெளி விட்டு அல்லது குழந்தைகளை இட்டு நிரப்பி படுத்திருந்தனர்.

தங்கத்தின் வீட்டின் முன்னே மட்டும்தான் வெறிச் சென்றிருந்தது. அன்னம்மா வீட்டின் முன் ஆளில்லாவிட்டாலும் பாய் விரித்திருந்தது. தங்கத்தின்

வீட்டு வாசலில் உள்ளே எரியும் கடாவிளக்கின் சிவப்பு வெளிச்சம் வெளியே ஆடித்தெரித்தது. அவள் வந்து உள்ளே நுழையும்போது, சுவரருகே குத்துகாலிட்டு முழங்கால் மூட்டுக்களின் மேல் குறுக்காக மடித்துப் போட்ட கைகளின் மீது இடமும் வலமும் நெற்றியைத் தேய்த்தவாறு உட்கார்ந்திருந்தான் மாணிக்கம் கையிலிருந்த பீடி அணைந்திருந்தது. அவள் வந்ததையும் அவன் கவனிக்கவில்லை.

அவள், அவன் அருகே உட்கார்ந்து ஆதரவுடன் அவனது தோளை வருடியவாறு சொன்னாள்: "மணி பதினொன்னாவப் போவுதே... நீ சோறு துண்றியா...?'

அவன் தலை நிமிர்ந்து அன்புடன் அவள் கைகளைப் பற்றினான். பேசுவதற்குமுன் அவன் பிடி அவள் கரங்களின் மேல் இறுகிற்று: "இப்ப என்னா அவசரம்! பையன் வரட்டும்.." என்று சொல்லி அவள் கூந்தலிலிருந்து உதிர்ந்த ஒரு மல்லிகைப் பூவை எடுத்து அதன் காம்பை விரலில் திருகிச் சுழற்றியவாறு முகர்ந்து கொண்டே,

"அவன் கோவிச்சிக்கிட்டுதான் வீட்டுக்கு வரலேன்னு நீ வருத்தப்படறே, இல்ல?" என்று கேட்டான் மாணிக்கம்.

"ஹுஹும்... அதெல்லாமில்லே! எங்கனாச்சும் வெளையாடிக்கினு இருப்பான்... வந்துடுவான்" என்று தன் துயரத்தை மறைத்துக் கொண்டு மாணிக்கத்தைச் சமாதானப் படுத்தினாள் தங்கம். சில வினாடிகள் இருவரும் மௌனமாய் ஒருவரை ஒருவர் பார்த்தவாறிருந்தனர்.

"உனக்குப் பசிக்கலே... சாயந்தரம் வெறும் டீ குடிச்சது தானே...?" என்று கேட்டாள் தங்கம்.

"இருக்கட்டும்... என்னா அவசரம்?" என்று கையில் அணைத்திருந்த பீடியை மாடத்து விளக்கில் கொளுத்தினான் மாணிக்கம்.

அன்று மாலை அவனே கடைக்குப் போய் வாங்கி வந்து அவள் சமைத்து வைத்திருந்த விசேஷமான சமையல்-

விருந்து ஆறிக் கொண்டிருப்பது இருவரும் அறிந்த விஷயம்தான். சிட்டியில்லாமல் விருந்தா?

“இன்னக்கி முதல்நாள் இல்லியா? நான் சிட்டியோட தான் சாப்பிடுவேன்...” என்று மாணிக்கம் கூறியபோது தங்கத்தின் கண்கள் கலங்கின. இவன் நினைப்பது போல் சிட்டி வருவானா என்று எண்ணி அவள் நெஞ்சு பதைத்தது.

தங்கம் தன் கண்களை மறைப்பதற்காக, அவனோடு நெருக்கமாய் அமர்ந்து அவன் முகத்தோடு தன் முகத்தை அணைத்துக் கொண்டு நெஞ்சு விம்மக் கூறினாள் “சிட்டி ரொம்ப நல்லவன் உன் நல்ல குணத்தைப் புரிஞ்சி கிட்டான்னா ஒரு நிமிஷம்கூட உன்னெப் பிரியமாட்டான்...” என்று சொல்லும்போது சிட்டியை மகனாகவும் மாணிக்கத்தைத் துணையாகவும் அடைந்த தன் பாக்கியத்தை எண்ணி உள்ளூரப் பூரித்தாள் அதே போதில் அந்தப் பாக்கியத்தின் மூலம் விளைந்துள்ள ஒரு நெருக்கடியையும், சிக்கலையும் மறக்கவே அவள் முயன்றாள்...

“நான் போயி பாத்துக்கிட்டு வரவா” என்று எழுந்தான் மாணிக்கம். “வேணாம் நீ இரு... ஆயா போயிருக்கு, வந்துடுவான்” என்று அவளைத் தடுத்தாள் தங்கம்.

திரிந்த மனத்தோடு திரிந்தலைந்த சிட்டி சோர்ந்து போய் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் எதிரில் வந்த அன்னம்மாக் கிழவியைக் கண்டு,

“எங்கே ஆயா, இம்மாநேரத்திலே போறே?” என்று அருகில் வந்து விசாரித்தான்.

“உன்னெதாண்டி கண்ணு தேடிக்கினு போறேன். எங்கே போயிருந்தே இம்மாநேரம்?... உங்காத்தா உன்னெக் காணாம தவியாத் தவிக்கிறாளே... அவ படற வேதனையைப் பாக்கமுடியாம, எங்கே இருந்தாலும் பாத்து நான் இட்டுக்கினு வர்ரேன்னு பொறப்பட்டேன்.. வாடிம்மா போலாம்” என்று அவனை அணைத்து முத்தம் சொரிந்தாள்

கிழவி. அவள் சிட்டியை எப்போதுமே அன்பின் மிகுதியால் ‘அடீ’யென்றே அழைப்பாள்.

கிழவியின் கையைப் பிடித்தழைத்தவாறு அவன் நடந்து கொண்டிருந்தான்.

“நீ எங்கனாச்சும் ஓடிப் பூட்டியோன்னு தங்கம் பயந்து போயிட்டா...” என்று சொல்லிக் கொண்டே நடந்தாள் கிழவி.

“நான் ஏன் ஓடிப்பூடறேன்!... அவனை இல்லே அடிச்சி தொரத்தப் போறேன் நானு” என்று உதட்டைக் கடித்துக்கொண்டு சொன்னான் சிட்டி.

“அப்டி சொல்லாதே கண்ணு... அவன் ரொம்ப நல்லவன். என்னமோ அப்டி இப்படி கெட்ட பேரு எடுக்காம, இந்த வரைக்கும் தனக்கு ஒரு ஆம்பளெத் தொணை வேணும்னு ஒயுங்கா ஒரு காரியம் பண்ணியிருக்காளே உங்க ஆத்தா...” என்று கிழவி ஏதோ சொல்ல வருகையில் பிடித்திருந்த அவள் கையை உதறிவிட்டுப் பற்களைக் கடித்துக் கொண்டு கத்தினான் சிட்டி.

“ஓஹோ! எல்லாரும் சேந்துதான் இவ்வளவும் பண்ணி இருக்கீங்களா? என்னையும் அவனையும் ஒண்ணாக்கறத்துக்குத்தான் நீ தேடிக்கிட்டு வந்தியா?... ஆயா நான் சொல்றேன்... மரியாதையா அவனை வெளியே போவச் சொல்லு... இல்லாட்டி? இல்லாட்டி...”- இல்லாவிடில் என்ன செய்வது என்று தெரியாத குழப்பத்தில் அவன் விம்மினான்...

“சரி கண்ணு... நான் சொல்றேன் உங்காத்தா கையிலே, நீ கம்னு இரு...” என்று அவனைச் சமாதானப்படுத்துவதற்காகக் கூறிய கிழவி, “நீ இதுக்கு இம்மாந்தூரம் பேசறது சரியில்லே கண்ணு... அவன் பாட்டுக்கு அவன் இருந்துட்டுப் போறான்.. உன்னெ இன்னா பண்ணப் போறான் அவன்? உங்க ஆத்தா உன்கிட்டே பிரியமா இல்லேன்னா’ மின்னே மாதிரி ஆசையா வெச்சில்லேன்னா நீ கேக்கலாம், அவ சொல்றதெக் கேக்க வேண்டிய அவ பெத்த புள்ளைதானே நீ?...ம்! இருந்தாலும்

இந்தக் காலத்து புள்ளெங்க இப்பிடி நிக்க வேணாம்!” என்று அவனிடம் பேசுவது போலவும் தானே புலம்புவது போலும் விளக்கினாள் கிழவி.

“இந்தா கெய்வி! இந்த நாயமெல்லாம் எனக்கு வேணாம். எனக்கு அவனெப் புடிக்கலே... புடிக்கலேன்னா புடிக்கலே தான்...” என்று முரட்டுத்தனமாய் அடம் பிடித்தான் சிட்டி.

அன்னம்மாள் தங்கத்தின் நிலையை எண்ணி அவனிடம் பதில் பேசாமல் பெருமூச்செறிந்தாள்.

அவன் வீட்டுக்குள் வந்து நுழையும்போது, “தோ, வந்திருக்கான் பாரு, உம் புள்ளே...” என்று பின்னால் இருளில் நின்று குரல் காட்டினாள் அன்னம்மா, தங்கம் விரைந்தெழுந்து வந்து சிட்டியை அணைத்துக்கொண்டு “எங்கே ராஜா போயிட்டே இம்மாநேரம்!” என்று குரல் தழுதழுக்க விசாரித்தாள்: “மத்தியானம் இம்மாஞ்சோறு துண்ணதுதானே, வா சாப்பிடுவே...” என்று விளக்கருகே இழுத்து உட்கார வைத்தாள் சிட்டியை.

அவள் ஸ்பரிசம் அவனுக்கு அருவருப்பாய் மாறி உடல் கூசச் செய்தது. அவள் தலையிலிருந்து உதிரும் மல்லிகையின் மணம், குடலைப் புரட்டும் துர்க்கந்தமாய் வீசிற்று எனினும் அவளது உடலையும் தோற்றத்தையும் மீறிய, அவனுக்குப் பழக்கப்பட்ட தாயன்பைத் தான் அவனால் உதறவும் முடியாமல் தாங்கவும் முடியாமல் தவித்தான் சிட்டி.

அவள் முகத்திற்குப் பின்னால், யாருமற்ற மைதானத்து இருளில் அவளை வெறுத்துத் திட்டிய வார்த்தைகளை இப்போது அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவன் அந்த விளக்கு வெளிச்சத்தில் நிராதரவாய் முகம் நிமிர்த்தி அவளை, அவள் முகத்தையே வெறித்துப் பார்த்தான்.

“என்னா ராஜா அப்படிப் பாக்கறே?’ என்று உள்வாங்கி ஒலிக்கின்ற குரலில் கேட்டாள் தங்கம்.

அவள் கேள்விக்குப் பதில் கூற முடியாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் சிட்டி. வெறித்த விழிகளில்

கண்ணீர் சுரந்தது.

“என் ராஜா, நீ எதுக்கும் வருத்தப்படாதே! நான் உனக்கு நல்லதுதான் செய்வேன்” என்று அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் தங்கம். பெருகிவரும் அழுகையை அடக்கிக்கொண்டு ‘ம்’ என்று நம்பிக்கையற்ற முறையில் பொருமினான் சிட்டி.

அங்கு மௌனமாய் சுவரோரம் உட்கார்ந்திருந்த மாணிக்கம், தன்னைப் பற்றி அவன் ஏதாவது கேட்கக்கூடும் அவளும் ஏதாவது சொல்லவேண்டி இருக்கும் தான் அதற்குத் தடையாய் உட்கார்ந்திருக்க வேண்டாம் என்று நினைத்தவனாய் எழுந்தான். தங்கம் உடனே துணுக்குற்று “நீ எங்கே போறே...உக்காரு! ரெண்டு பேருக்கும் சாப்பாடு போடறேன்” என்று திரும்பினாள்.

அவனோடு உட்கார்ந்து சாப்பிட எண்ணிய மாணிக்கம் தனது ஆவலை மாற்றிக்கொண்டு “நீ கொயந்தைக்கு மொதல்லே சாப்பாடு போடு நான் போயி பீடி வாங்கிக்கினு வர்ரேன்” என்று சொல்லி வெளியேறினான்.

மாணிக்கத்தின் தலை மறைந்ததும்-அவன் எதிரே அழுதால் அவமானம் என்று தனது உணர்ச்சிகளை விழுங்கி அடக்கிக்கொண்டிருந்த-சிட்டி, திடீரெனக் குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தான்...

“ஐயையோ! ஏண்டா கண்ணு ஏண்டா ராஜா... என்னாத்துக்குடா அழறே!... அழாதே மவனே... ஒனக்கு நான் ஒரு குறையும் செய்யமாட்டேன் உன்னெவிட எனக்கு யாரும் ஒசத்தி இல்லே; அந்த ஆளு பாவம்; ரொம்ப நல்லவரு யாருமில்லே அவருக்கு. மோர்மார்க்கட்டு மரத்தடியிலே காச்சாலே கெடந்தாரு... பாவமா இருந்திச்சு, நாந்தா அவருக்கு டீ வாங்கிக் குடுத்து, மருந்து வாங்கிக் குடுத்து, கஞ்சிகாச்சிக் கொண்டு போயிக் குடுத்துக் காப்பாத்தினேன். அந்த உதவியெ மறக்காம நம்பகிட்டே பிரியமா இருக்காரு... நமக்கும் வேற யாரு ஆதரவு? அவுருக்கும் ஆதரவில்லே... நாந்தான் கூட்டியாந்தேன் நம்ப வூட்டுக்கு?... நான் உன்னெ ஏமாத்துவேனா? உன்கிட்டே

பொய்யி சொல்லிட்டு உனக்குத் தெரியாம எந்தக் காரியமும் பண்ணக்கூடாதுன்னு தான் வூட்டுக்கே கூட்டியாந்தேன்... அந்த ஆளுதான் உங்கப்பன்னு உன்னெ ஏமாத்திடலாம்... எனக்கு எம்மவனை ஏமாத்தறதுக்கு மனசு வரலே... இதுக்காக நீ வருத்தப் படக் கூடாது ராஜா... உன்னெ நல்லா வெச்சிருக்கறத்துக்கும், நாம்ப நல்லா இருக்கறதுக்கும் அந்த ஆளு என்னா வேணும்னாலும் செய்வாரு... நீ வேணும்னா கொஞ்சநாளு பாரு.. அப்புறம் நீயே அவுரெ வுடமாட்டே... ஆமா.. நான் சொல்றேன்னு பாரேன்" என்று மனம் திறந்து அவனிடம் பேசி மறைமுகமான மன்னிப்பை எதிர்நோக்கி, அவனைச் சமாதானப்படுத்தினாள் தங்கம்.

அழுது கொண்டிருந்த சிட்டிஈ அவள் கூறுவதையெல்லாம் கேட்டுக் கொள்ளுவதற்காக அழுகையை நிறுத்தினான். அவன் மனம் அவள் நினைத்ததுபோல் சமாதானமடையவில்லை.

அவன் சமாதானமுற்றதாக எண்ணி, அவன் முகத்தைத் துடைத்து, புன்னகை காட்டி, கன்னத்தில் முத்தமிட்டு-

"பசிக்கும் ராஜாவுக்கு!... உனக்குன்னு நாங்க சாப்பிடுடாம காத்துக்கிட்டே இருக்கோம்... ஒனக்குப் புடிக்கும்னு சொன்னேன்...அவரு போயி சொறா வாங்கியாந்தாரு... சாப்பாடு போடறேன்.. நாழியாவுது பாத்தியா" என்று சொல்லித் தட்டில் சோறு படைத்து, உணவு வகைகளைப் பரிமாறி அவன் முன் வைத்து 'ம் சாப்பிடு கண்ணு" என்று வேண்டினாள் தங்கம்.

அவன், தட்டில் பரிமாறப்பட்டிருந்த உணவையே வெறித்துப் பார்த்தான்...

தன்னை இவள் ஏமாற்றிச சமாதானப்படுத்தப் பார்க்கிறாள் என்று தோன்றியது அவனுக்கு. தான் கொண்டு வந்த முக்கால் ரூபாயில் இப்படிப்பட்ட உணவைத் தயாரித்திருக்க முடியாது. அவன் காசில், தான் சாப்பிடுவதா?- என்று பலவிதமாகக் குழம்பினான் சிட்டி. தொடர்ந்து அவர்களோடு அந்த எவனோ ஒருவன் தங்கி இருக்கப் போகிறான் என்று

அவள் உணர்த்தியதை ஏற்றுக் கொள்ள முடியாமல் அவன் மனம் புழுங்கினான். அவன் நெஞ்சில் மூண்டு தகிக்கும் ஆத்திரத்தில் சோற்றுத் தட்டைத் தூக்கி எறிந்து துவம்சம் செய்து ‘ஓ’வென்று அலறிச் சாகவேண்டுமென்ற ஒரு வெறி பிறந்தது. அந்த வெறி யுணர்ச்சியில் பல்லைக் கடித்தவாறு எழுந்து நின்றான்... அவன் பார்வை தங்கத்தைப் பொசுக்குவது போல் இருந்தது இப்போது. கண்களில் கனன்ற அந்த வெம்மையில் சற்றுமுன் சுரந்த தண்ணீரே வற்றியதுபோல் விழிகள் சிவந்து வரண்டிருந்தன...

“சாப்பிடாம எங்கேடா எந்திரிச்சிட்டே?’ என்று அவன் கையை அவள் பிடித்தபோது, முரட்டுத்தனமாய் அசூசையுடன் அவள் பிடியை உதறிவிட்டு ஓடித் தள்ளி நின்று-அவள்மீது பாய்ந்து கொல்லத் தயாரானவன் போல், விரல்களை இறுக மூடிக்கொண்டு பல்லைக் கடித்தான்...

யாருக்கும் அஞ்சாத தங்கம் ஒரு வினாடி உள்ளூர நடுங்கிக் குன்றினாள்! எனினும் அவன்தான் நினைத்தது போல் சோற்றுத் தட்டை தூக்கியெறியவோ, அவள்மீது பாயவோ இல்லை... அவ்விதமெல்லாம் அவன் ஏதும் செய்யாததற்குக் காரணம்- இதுவரை அவன் தாயை வெறுத்து எதிரில் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை என்பதுதான். அந்த வினாடி மௌனத்தில் என்ன செய்வது என்று புரியாமல் அவனும், என்ன செய்வானோ என்று புரியாமல் அவளும் ஸ்தம்பித்திருந்தனர்....

“எனக்கு வேணாம்!... எனக்கு ஒண்ணும் வேணாம்” என்று அவன் கூறிய வார்த்தைகள் சாப்பாடு குறித்து மட்டும் சொல்லப்பட்டவையல்ல என்பது அந்தத் தோரணையிலேயே தெரிந்தது.

தங்கத்துக்கு இந்த நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்று நினைக்கையில் பிரமிப்பாக இருந்தது. இவ்வளவு காலம் கழித்து ஒருவனோடு சேர்த்து வாழத் தனக்கு ஆசை பிறந்து, அவனும் இவ்வளவு நல்லவனாகக் கிடைத்திருக்கும்போது, தன் வயிற்றில் பிறந்த பிள்ளையே இவ்விதம் குறுக்கே நிற்பதைக் கண்டு ஆத்திரமாயும்

வருத்தமாயும் இருந்தது அவளுக்கு. அந்த இருவருமே அவள் வாழ்க்கைக்கு இரண்டு விதமான-ஒருவரை யொருவர் ஆதாரமாய்க் கொண்டு-தனக்கு ஆதரவாகத் திகழ வேண்டியவர்கள்; அவர்களில் யார் பொருட்டும் யாரையும் இழந்துவிடத் தயாரில்லை அவள். இந்தக் குழப்பத்தில் சிக்கிக்கொண்ட அவஸ்தையையும் தன் எதிலே கோபத்தின் ரூபமாய்ச் சினந்தெழுந்து நிற்கும் மகனையும், ஊரையும், ஊர்ச் சனங்களின் வயிற்றெரிச்சலையும், இத்தனைக்கும் மத்தியில் இப்படி வாழத் தன் தலையில் எழுதிவிட்ட தெய்வத்தையும் எண்ணிப் பார்க்கையில்-மகனின் எதிரே ஆற்றுவாரில்லாத அவளது சோகம் பீறிட்டுக் கிளம்ப, தலையில் கைவைத்துக் கொண்டு கண்களில் மாலை மாலையாய்க் கண்ணீர் பெருக அழ ஆரம்பித்தாள் தங்கம்.

அவள் சேலைத் தலைப்பில் மூக்கைச் சிந்தித் துடைத்தவாறு சற்று நேரம் அழுதாள்....

அவள் மனம் குமுறி அழுவதைக் கண்டபோது சிட்டியின் கோபம் உள்ளடங்கி அவனுக்கும் அழுகையே மேலெழுந்து வர அவனும் விம்ம ஆரம்பித்தான். விம்மியெடுந்த அவனது அழுகை விரிந்து வெடிக்க இருந்தபோது தங்கம் அவனை இழுத்துத் தழுவிக் கொண்டாள்.

அந்த ஒரு வினாடியில் சிட்டி தாயின் தவறுகளையும், தனது வெறுப்பையும் மறந்து பெருகி வந்த பாசத்துடன் “ம் அம்மா!” என்று கனத்து அடைத்த குரலில் அழைத்தவாறு அவள் தோளில் முகம் புதைத்துக் கொண்டு அழுதான்... தங்கம் அவன் முதுகைத் தடவிக் கன்னத்தில் முத்தமிட்டு,

“நான் உன்னெ விடமாட்டேன்டா... நாந்தான் கூப்பிட்டு அந்த ஆளு வந்துட்டாரு... உனக்கு இவ்வளவு தூரம் புடிக்காம போவும்னு நான் நெனச்சிருந்தா இந்தக் காரியம் செஞ்சியே இருக்கமாட்டேன்.. இப்ப நான் இன்னாடா பண்ணுவேன்?... கொஞ்ச நாளைக்கி யாரோ ஒரு விருந்தாளி வந்திருக்கிற மாதிரி இருக்கட்டும்.. அப்பாலே ஒரு நாளைக்கி எம் மவனுக்கு உன்னெப் புடிக்கலே.

போயான்னு வெரட்டிப் பிட்லாம் என்ன?ம்-“ என்று அவனை ஏமாற்றத் துணிந்து சமாதானம் செய்தாள். எனினும் உள்ளூர அந்தக் கொஞ்ச நாளில் தன் மகனுக்கு அவனைப் பிடித்துப் போகும் என்ற நம்பிக்கையில் தான் அவள் அவ்விதம் கூறினாள்.

“நெசம்மாவா?” என்று அவள் கழுத்தைச் சுற்றிய தன் கைகளை விலக்கி அவள் முகத்தருகே தன் முகத்தை நெருக்கிக் கேட்டான் சிட்டி.

“ம்.... நெசமாத்தான்...” என்று தலையசைத்தாள் தங்கம்.

“ஆமாம்மா... அவன் வேணாம்மா! அவன் மூஞ்சியே எனக்குப் புடிக்கலேம்மா... எங்கேருந்தோ வந்தான் இந்த சோமாறி?” என்று தன் வெறுப்பைத் தீர்த்துக்கொள்ளும் முறையில் திட்டினான் சிட்டி. அதைக் கேட்க அவளுக்கு வருத்தமாகவும் எரிச்சலாகவும் கூட இருந்தது. எனினும் தனக்கு அது பிடிக்கவில்லை என்பதைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக அவனைப் பார்த்துச் சிரித்தவாறே, “சரி போவட்டும் ராஜா! பாவம் அந்த ஆளு!... என்னா இருந்தாலும் வயசிலே பெரியவரில்லே... ‘அவன் இவ’ னெல்லாம் சொல்லக் கூடாது... தோசம்!” என்று சிட்டியை அடக்கி உட்கார வைத்து அவன் முன்னே தட்டில் குழம்புடன் இருந்த சோற்றைத் தானே பிசைந்தாள். அவள் தனக்கு ஊட்டப் போகிறாள் என்றறிருந்த சிட்டிக்கு வெட்கமாக இருந்தது...

“நீ வெச்சிடு, நானே துண்ணுக்கிறேன்” என்று அவள் கரத்தைத் தடுத்தான்.

“ம்ஹீம்...ஒருவாய், நான் ஊட்டுவேன்.. இத்தெ நி வாங்கிக்கினாத்தான் எம்மேல ஒனக்குக் கோவமில்லியாம்...” என்று சிட்டியின் வாய் நிறைய ஒரு கவளம் வைத்தாள் தங்கம்.

ஆழந்த யோசனையுடன் வாயிலிருந்ததை விழுங்கிய பிறகு சிட்டி சொன்னான்: “ஆமா.. இன்னம் உம்மேலே எனக்கு ரொம்பக் கோவம்தான்... அந்த ஆளை நீ வெரட்ற

வரைக்கும் எனக்கு உன்மேலே கோவம்தான்... ஆமா... அதுக்கப்புறம் தான் நான் பழைய சிட்டி!...” என்று அவன் ரொம்பக் கடுமையாகச் சொல்வது தெரிந்ததும், அந்தக் கடுமையைக் குறைப்பதற்காக அவள் சிரித்தாள்.

‘இவன் சங்கத்துக்குப் போயி இன்னக்கிப் படிக்கலே கையிலே எடுத்துக்கிட்டுப் போன புஸ்தகம் சிலேட்டையும் காணோம்... இந்நேரம் வரைக்கும் எங்கே போயி சுத்தினானோ? ஒருவேளை அந்த பழைய சினேகிதக்காரப் பசங்க கூடப் போயிருப்பானோ!’ என்று தன்னுள் எண்ணிய தங்கம்’ அது பற்றியெல்லாம் இப்போது கேட்க வேண்டாம்’ என்று முடிவு கட்டினாள்.

தான்செய்த ஒரு காரியத்தால், இவன் செய்யும் தவறை விசாரித்து, தைரியத்தோடு கண்டித்துத் திருத்தக் கூடிய தன் உரிமையைத்தானே இழப்பதை உணர்ந்ததினாலோ என்னவோ அவள் முகமெங்கும் துயரத்தின் கருமை படர்ந்து வாட்டமுற்றது...

அன்று இரவு ஒருவாறாக சிட்டி சாப்பிட்டு முடித்தான். ஒரு பாயினுள்ளே ஓர் அழுக்குத் தலையணையும், ஒரு கிழிந்த போர்வையும் வைத்துச் சுருட்டியுள்ள தனது படுக்கையைத் தூக்கிக் கொண்டு வந்து வாசலில் போட்டு, சிட்டி படுத்த பிறகுதான் இவ்வளவு நேரம், தெருவிலிருந்து வாசலுக்கு வரும் இருட்டுச் சந்தில் பீடி புகைத்தவாறு சுவரில் சாய்ந்து ஒரு காலில் நின்றவனாய் வானத்து நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்த மாணிக்கம் உள்ளே வந்து வீட்டினுள் நுழைந்தான்.

“எங்கே போயிட்டே இம்மா நேரம்?... மணியாவுது வா!” என்று புன்னகையோடு அவனை அழைத்து சாப்பாடு பரிமாறினாள் தங்கம். அவன் சிட்டியின் போக்கால் உள்ளூர வருந்துகிறானோ என்று கலவரமுற்ற தங்கம், பதிலுக்கு அவன் காட்டிய புன்னகையில் ஆறுதல் அடைந்தாள்.

வாசலில் பாய் விரித்துக் குப்புறப்படுத்திருந்த சிட்டி தலையை உயர்த்தி, கதவின் இடைவெளியினூடே தெரிகின்ற வெளிச்சத்தில் வீட்டினுள் பார்த்தான்.

அந்த எவனோ ஒருவனின் எதிரில் உட்கார்ந்து இருந்த இரவு நேரத்தில் அவள் சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது அவனுக்கு வந்த ஆத்திரத்தை-என்ன செய்வது? அடக்கிக் கொண்டான். அவனுக்கு வலது புறத்தில் அன்னம்மாக் கிழவி படுத்து உறங்கியிருந்தாள்.அந்த வாசலில் உள்ள எல்லோருமே அவரவர் வீட்டின் முன் படுத்து விட்டனர். எதிர் வீட்டு அலமேலு மட்டும், பாயை விரித்து விட்டு அடுத்த வீட்டுக்காரியுடன் உட்கார்ந்து வெற்றிலை போட்டவாறு தங்கத்தின் வீட்டைக் கவனித்து கொண்டிருந்தாள். சிட்டி அங்கே பார்க்க விரும்பாமல் தலையணையில் முகத்தைப் புதைத்து உறங்க முயன்றான். தூக்கம் வரவில்லை.

அவன் தூங்கி விட்டான் என்று நினைத்த அலமேலு அடுத்து வீட்டுக்காரியிடம் ரகஸியம் பேசுகின்ற குரலில் சொன்னது சிட்டியின் காதுகளில் ஒலித்தது:

“சீ! இவ இன்னா சென்மமோ?... வயசு வந்த புள்ளை இல்லியா, அவன்? உனக்குத் தெரியுமா? நான் பாத்துகினு தான் இருந்தேன் இம்மா நேரம்...” என்றாள் அலமேலு.

“இன்னா பண்ணா மவங்காரனை? சமாளிச்சிக் கையிலே போட்டுக்கினா...?”

“ம்ஹ_ம்.. ஒண்ணு நடக்கலே... மவங்காரன்தான் ரேங்கிக்கினானே...”

-அப்போது மாணிக்கம் கையலம்ப வெளியில் வரவே அவர்கள் பேச்சு நின்றது. சாப்பிட்டு முடிந்ததும் ஒரு பீடியைப் பற்ற வைத்தவாறு சிட்டியின் படுக்கைக்கு வலது புறம் நான்கு அடிதூரம் தள்ளித்தன் பாயை விரித்து தலையணைகூட இல்லாமல் மேல் துண்டைச் சுருட்டி வைத்துக் கொண்டு படுத்தான் மாணிக்கம்.

சற்றுநேரத்துக்குப்பின், அலமேலுவும் தன் படுக்கையில் தூங்குகின்ற கணவனுக்குப் பக்கத்தில் வந்து படுத்தாள்; அரை மணி நேரத்துக்குப் பின் தங்கமும் வெளியே வந்தாள். அவளுக்குத் தனியாகப் படுக்கை கிடையாது.

அவர்கள் வீட்டில் இருப்பதே ஒரு பாய்தான். தங்கம் எப்போதும் போல் மகனின் பாயில் வந்தமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டாள். வெற்றிலையை மென்று கொண்டே சில நிமிஷம் உட்கார்ந்திருந்த பின், எழுந்து சென்று வெற்றிலைச் சாற்றைத் துப்பிவிட்டு, கையில் திருகி வைத்திருந்த துண்டுப் புகையிலையையும் போட்டுக்கொண்டு சிட்டியின் பக்கத்தில் வந்து படுத்து அன்போடு அவன் முதுகைத் தடவினாள்; தலையைக் கோதினாள்..

“சிட்டி...” என்று கூப்பிட்டாள்,

அவன் இப்போது தூங்கவில்லை; எனினும் அவள் அழைப்புக்குச் சலனமில்லாமல் இருந்தான்.

“தூங்கிட்டியா?” என்று கேட்டு ஒருகையால் சிட்டியை அணைத்தவாறு தானும் அவன் தலையணையில் தலை சாய்த்து நன்றாகப் படுத்தாள்.

நள்ளிரவில்...

எல்லாருமே தூங்கியபின், தூக்கம் வராமல், தூங்க முடியாமல் தூங்குவதுபோல் படுத்திருந்த சிட்டியின் முதுகுப் புறத்தில் யாரோ மெள்ள நடக்கும் காலடியோசை கேட்டது அவனுக்கு பிறகு, பாயைச் சுருட்டுகின்ற கரைசல் சப்தம் அவன் தலைமாட்டில் உள்ள வீட்டுக் கதவு லேசாகத் திறக்கப்படும் நாதாங்கியின் ஓசை.

கண்கள் வேண்டுமா?... அவனுக்குப் புரிந்தது. எதிர் வீட்டு மன்னாரு சிலசமயங்களில் முன்னேரத்திலே ஒரு தூக்கம் போட்டுவிட்டுப் பாயைச் சுருட்டிக்கொண்டு உள்ளே ஓடும்போது அன்னம்மாக் கிழவி சிரித்துக் கேலி பேசுவதைச் சிட்டி மட்டுமா பார்த்திருக்கிறான்?... எல்லோருக்கும் தான் அங்கு எல்லாமே தெரிகிறதே!

‘அது போல இந்த எவனோ ஒரு சோமாறியோடு...

சற்று நேரத்துக்குப்பின் தங்கம் சிட்டியை அணைத்திருந்த கரத்தை மெல்ல மெல்லத் தளர்த்தி விலகிப்பின் தானே

விலகிப், பாயில் எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தாள்; தன்னையே அவள் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று கண் மூடித் தூங்காமல் கிடந்த சிட்டியினால் உணரமுடிந்தது.

அவள் மெல்ல நடந்து செல்லும் காலடியோசை மங்கி ஒலித்தது...

சிட்டிக்கு உடம்பெல்லாம் தீயாகிப் பதைத்தது!

பற்களை நறநறவெனக் கடித்துக்கொண்டான்.

மூடி இருந்த கண்களுக்குள் பெருகிய கண்ணீர் சூடாகக் கன்னத்தில் வழிந்து தலையணையில் பரந்தது.

அன்றுமாலை வாய்விட்டு மைதானத்தில் திட்டிய வார்த்தைகளால் இப்போது மௌனமாக மனத்தில் திட்டிக் கொண்டான்...

“இந்த சிறுக்கி மவ என்னெ ஏமாத்தப் பாக்கறா கொஞ்ச நாளு விருந்தாளியா வெச்சிருந்து அவனை விரட்டி விடரவளா இவ!... ம்ஹு_ம்! இவ இவனை விரட்டமாட்டா! இருடி... நான் வெரட்டேன் அவனை!” என்று கறுவிக் கறுவி வக்கரித்த மனத்தோடு, அவன் தூங்கிவிடவே இப்போது விரும்பினான்...

## 5

இப்போது, மாணிக்கம் தங்கத்தின் வீட்டோடு வந்து சேர்ந்து ஒரு மாதத்துக்கு மேலாகி விட்டது.

இந்த ஒரு மாத காலமாய்த் தங்கம் வேலைக்குப் போகவில்லை. வயிற்றுப் பிள்ளையோடு அவள் போய் வேலைசெய்ய வேண்டாமென்று மாணிக்கம் சொல்லிவிட்டான். இன்னும் ஓரிரு மாதங்களுக்கு வேலை செய்யலாம் என்று அவள் எவ்வளவு சொல்லியும் அவன் கேட்கவில்லை. அவள் உடம்பில் வெளிப்படையாகவே ஏற்பட்டிருந்த அந்த மாற்றத்தையும் அந்த விஷயத்தையும் கண்டு கேட்டறிந்த சிட்டிக்குத் தங்கத்தின் மீது மாற்ற

முடியாது வெறுப்பும் கசப்பும் உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து வேர்விட்டு வளர ஆரம்பித்தது...

தங்கம் ‘உண்டாயி;ருக்கிறாள்’ என்று அறிந்த அலமேலுவுக்கு ஏற்பட்ட வயிற்றெரிச்சலும் பொறாமையும் தன்னையே கருகத் தீய்த்துப் பொசுக்கி விடும்போல் புழுங்கினாள் அவள். ஆனால் அவள் வெளிப்படையாகச் சாட்டிய குற்றம் ‘வயசுப் புள்ளையை வெச்சிக்கிட்டு ஆவுமா இந்தக் காரியம்?” என்பதுதான்.

அலமேலுவையும் சிட்டியையும் தவிர அந்த வாசலில் குடியிருக்கும் எல்லோருக்குமே கொஞ்சம், கொஞ்சமாய் மாணிக்கத்தைப் பிடிக்க ஆரம்பித்திருந்தது. இவ்வளவு நாட்களுக்குப் பிறகு ஒரு நல்ல துணையைத் தேடிக்கொண்டது பற்றி அவர்கள் அனைவரும்-தங்கத்தை பாராட்டாவிட்டாலும்-ஓர் அநுதாபத்தோடு அவளைப் புரிந்து கொண்டனர்.

எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டதைப் பார்த்த சிட்டிக்கு-அந்த வாசலில் உள்ள எல்லாருமே ஒவ்வொரு கணவன் மனைவியும், தங்கத்தைப் போலவும், மாணிக்கத்தைப் போலவும் கடைகெட்ட ஜென்மங்கள் என்றே தோன்றியது.

தன்னைப் போலவே தங்கத்தை வெறுத்த ஒரேகாரணத்தினால்-பத்து வருஷத்துக்கு முன் எவனுக்கோ வாழ்க்கைப்பட்டு அதன் பின்னர் மன்னாருவுடன் ஓடிவந்தவிட்ட அலமேலுவும் அவள் ‘கணவ’னும் மட்டும் மிக ‘உத்தம’த் தம்பதிகளாகவே தோன்றினர் சிட்டிக்கு.

இந்த ஒரு மாத காலமாய், சிட்டியும் வேலைக்குப் போகவில்லை. சரியாக வீட்டுக்கு வருவதோ, வேளா வேளைக்கு வீட்டில் சாப்பிடுவதோ கூட இல்லை அவன்.

முன்பெல்லாம் காலையில் எழுந்து குளித்துவிட்டு, முதல்நாள், தானே துவைத்து உலர்த்திய சட்டையும் நிசாரும் அணிந்து, அழகாகத தலைவாரிக் கொண்டு

‘பழையது’ சாப்பிட்டுவிட்டு அவன் வேலைக்குப் போகும்போது கவனிக்கும் மற்றக் குடித்தனக்காரர்கள் சிட்டியைக் காட்டித் தங்கள் பிள்ளைகளுக்குப் புத்தி சொல்லுவார்கள். அதைத் தங்கமும் கேட்டுப் பூரிப்படைந்திருக்கிறாள்.

இப்போது அதே சிட்டி அழுக்கு நிஜாரும் சட்டையுமாய்ப் பரட்டைத் தலையோடு ஒரு பொறுக்கியைப் போல்- காலையில் வீட்டில் சாப்பிடாமல் கூட வெளியே போய், இரவில் வெகுநேரம் கழித்து வருகிறானே… அவன் வேலைக்குப் போய்ச் சம்பாதித்துக் கொண்டு வரவில்லை என்று குறைமட்டும் பெரிதாகத் தோன்றவில்லை; அநியாயமாய் அவன் மீண்டும் கெட்டுப் போகிறானே என்று தோன்றியது தங்கத்துக்கு.

அன்று காலை…

மாணிக்கம், வீட்டு வாசற்படியில் அமர்ந்து, கூண்டிலிருந்த குருவிகளுக்குச் சிறிய கிண்ணத்தில் தானியங்களும் தண்ணீரும் நிரப்பித் தீனி வைத்துக் கொண்டிருந்தான்.

தங்கம், மாணிக்கத்துக்கும் சிட்டிக்கும் பழையது வைப்பதற்காகத் தட்டுகளைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சிட்டி அவர்கள் இருவரையுமே பொருட்படுத்தாதவனாய், சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு மாடத்திலிருந்த கண்ணாடியில் முகம் பார்த்து, உடைந்த சீப்பால் தலையை ஒதுக்கியவாறு வெளியில் புறப்பட ஆயத்தமாவதைக் கண்டாள் தங்கம்.

அவனையும் அவன் கோலத்தையும் பார்த்துத் தங்கம் பெருமூச்செறிந்தாள்…

‘இந்த ஒரு மாசமா இவன் குளிச்ச மாதிரியே தெரியலியே’ என்று யோசித்த தங்கம் இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது’ என்று முடிவு செய்தவளாக, வாசற்படி தாண்ட இருந்த சிட்டியை “டேய் சிட்டி.. நில்லுடா” என்று அதட்டுவதுபோல் கூப்பிட்டாள்.

அவள் குரலில் அதிர்ந்த கடுமையில் இரை பொறுக்கிக் கொண்டிருந்த குருவிகள் சிறகுகளை அடித்துக் கொண்டு கூண்டுக்குள் ஓடிப் பதுங்கின.

‘உனக்கேன் இவ்வளவு கோபம்?’ என்பதுபோல் மனம் பதைத்து மாணிக்கமும் தங்கத்தைத் திரும்பிப் பார்த்தான்.

சிட்டி மட்டும் இப்படி ஒரு நிலையை எதிர்பார்த்தே உருவாக்கியவன்போல் திரும்பிக் கூடப் பார்க்காமல் வாசற்படியைத் தாண்டிவைத்த ஒரு காலுடன் நின்று “இன்னா?” என்று எங்கோ பார்த்தவாறு கேட்டான் அலட்சியமாக.

அவனது அலட்சியத்தைக் கண்ட தங்கத்துக்கு ஆத்திரம் பெருகியது.

“இம்மாம் பொயுதோட தொரை எங்கே கெளம்பிட்டாரு...” என்று பாதிக் கேலியாகவும் பாதிக் கோபமாகவும் கேட்டாள் தங்கம்.

“எங்கனாச்சும் போறேன்.... இன்னாவாம் அதுக்கு?” என்று கேட்டவாறே அவனும் திரும்பினான்.

“போறது போறே, துண்ணுட்டுப் போயேன்...”

“எனக்கு வாணாம்...”

“நீ இன்னா தாண்டா நெனச்சிக்கினுக்கிறே, உம் மனசிலே? ஒயுங்கா வந்து சோறு கூடத் துண்ணாம, ராத்திரி பத்து மணி வரைக்கும் எங்கே போயிப் பொறுக்கித் துண்றே?” என்று அங்கலாய்த்தாள் தங்கம்.

அதற்கு அவன் பதில் கூறாமல் ஆழ்ந்த யோசனையோடு தலை குனிந்து நின்றான்.

“நீயும், உந்தலையும், துணியும்.. ஏண்டா இப்பிடிக் கோலங் காட்டறே?... குளிச்சி ஒரு மாசமாவுதா? ஒரு நாளு கூட நீ குளிக்கலியே? சுடத் தண்ணி வெச்சித் தர்ரேன்... எண்ணெ தேச்சிக் குளி... இன்னக்கிக் கறியாக்கிப் போடறேன்” என்று அவனருகே வந்து நயமான குரலில் வேண்டினாள் தங்கம்.

“எனக்கு வாணாம்!” என்று மறுபடியும் முரண்டினான் சிட்டி.

“இன்னா வாணாம்?”

“ஒண்ணும் வாணாம் நானே போயிக் குளிச்சிப்பேன்?”

“எங்கே போயிக் குளிக்கிறே நீ?”

“கோயிலு கொளத்திலே...”

“ஆ!...” என்று நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தாள் தங்கம். அந்த அதிர்ச்சி அவன் குளத்தில் போய் குளிப்பது குறித்து விளைந்ததல்ல; அந்தக் குளத்தில் பல சிறுவர்கள் மூழ்கி இறந்து போனதால் முன்பொரு முறை சிட்டி அந்தக் குளத்தில் போய்க் குறித்துவிட்டு வந்ததற்காக அவன் காலில் சூடு வைத்து “இனிமே கொளத்துக்குப் போவியா, போவியா?” என்று அவள் அடித்து நொறுக்கும்போது “மாட்டேன் இனிமே கொளத்துக்குப் போவமாட்டேன்” என்று அடி வாங்கிக்கொண்டு கதறிய அதே சிட்டி என்ன நெஞ்சாழத்துடன் ‘கோயிலு கொளத்திலே’ என்று சொல்கிறான் என்று கண்டு அவனது திமிரையும் அவன் கை மீறிப் போகிறான் என்பதையும் உணர்ந்தே அவள் அதிர்ச்சியுற்றாள்.

“எங்கெ எம் மூஞ்சியெப் பாத்து சொல்லு” என்று உறுமினாள் தங்கம். அவள் முகத்தைப் பார்த்தே அவன் சொன்னான்:

“ஐய... இன்னாவாம் கொளத்திலேதான் நெதம் குளிக்கிறேன்... செத்துப் பூடுவனா? போனாப் போறேன். ஒனக்கு இன்னா, சனியன் ஒயிஞ்சிதுன்னு சந்தோசமா இரு!”

ஐயோ! அவன் என்ன பேச்சுப் பேசுகிறான்?

“அடப்பாவி! உன்னெ கொளத்துலே தள்ளி காவு குடுக்கறத்துக்கா இம்மாம் பெரிசா புள்ளையா வளத்தேன்!” என்று நெஞ்சில் அடித்துக்கொண்டு பதைத்தாள் தங்கம்.

“போனா இன்னா, இன்னும் எத்தினியோ...” என்று அவன் சொல்லி முடிப்பதற்குள்-“இன்னா கேள்வி கேக்கறான் பாத்தியா அவன்” என்று அலறியவாறு மூர்க்கமாய்க் கை வீசி அவனைப் பிடிக்க பாய்ந்தாள் தங்கம்.

“ஸ்...இன்னாம்மே தங்கம்.. அவன்தான் அறியாப் பையன், என்னமோ சொல்லிட்டான்னா, நீயும் இப்பிடி குதிக்கிறியே, நல்லா இருக்கா?...” என்று அவளைப் பிடித்துத தடுத்தான் மாணிக்கம். எதற்கும் அசைந்து கொடுக்காமல் ‘ஒருகை பார்த்து விடுவது’ என்று உறுதியாக நின்றான் சிட்டி.

“சின்னப் பையன் தானே? எங்கனாச்சியும் போயி வெள்ளாடிட்டு வரான்...இதுக்குப் போயி ஒரேயடியா கூச்ச போடுறியே.. நீ போடா கண்ணு” என்று சிட்டியைப் பார்த்துச் சொன்னான் மாணிக்கம்.

“நான் போவேன், போவமாட்டேன்... நீ யாரு கேக்கறது? உனக்கென்னா? உங்க வூடா?...” என்று சிட்டி எடுத்தெறிந்து பேசும்போது அவனது உணர்ச்சிகளைப் புரிந்துகொண்ட மாணிக்கம் அதற்காக வருத்தப்படவில்லை.

“எப்பிடியாவது கெட்டழிஞ்சு போயேன்... நல்லது சொன்னதுக்கா இம்மாந்தூரம் பெரியவங்க சின்னவங்கன்னு இல்லாமப் பேசற?.. என் தலை எயுத்து! உன்கிட்டே நான் கேக்காத வார்த்தையெல்லாம் கேக்கறேன்...” என்று தங்கம் செய்வதறியாது அழுதாள்.

அவளது ஆத்திரத்தையோ கண்ணீரையோ பொருட்படுத்தாமல் விறைத்துக்கொண்டு வெளியேறும் சிட்டியைப் பார்த்த அன்னம்மாள்-இவ்வளவு நேரம் நடந்ததையெல்லாம் தன் வீட்டின் முன் ஆப்பம் சுட்டவாறே கவனித்துக் கொண்டிருந்தாள்: “சீ! இது ஒரு புள்ளையா? மொளைச்சி மூணு எலை கௌம்பலே... அதுக்குள்ளே இன்னா பெரிய பேச்செல்லாம் பேசுது பாரு” என்று ஆப்பச்சட்டியின் மாவை வார்த்துக் கொண்டிருந்த அகப்பையை சிட்டியின் எதிரில் நீட்டியவாறு வெறுப்புடன் திட்டினாள்.

“உன்னெ ஒண்ணும் கேக்கலே, போ! வவ்வவ்வே!” என்று கிழவியைப் பழித்துக் காட்டிவிட்டு அவன் போகும் போது அதைப் பார்த்து ‘களுக்’ கெனச் சிரித்த அலமேலு,

‘சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளையில்லையா?’ என்று முனகிக்கொண்டாள் தனக்குள்.

சிட்டி சென்று மறைந்த சில நிமிஷங்களுக்குப் பிறகு மாணிக்கம் தங்கத்திடம் சொன்னான்: “நீ இன்னா பொம்பளை? அவன் கிட்டே நயமாப் பேசாம-நீ மொறைக்கிற மொறைப்பைப் பார்த்தா எனக்கே பயமா இருக்கு... நல்ல, தனமாப் பேசித்தான் அவனைத் திருத்தணும்”

“நீ சொம்மா இரு. ஒனக்கு ஒண்ணும் தெரியாது. நானும்தான் ஒரு மாசமா நல்லதனமாப் பேசிக்கிட்டிக்கேன்... வர வர அவன் மோசமாயிக்கிட்டில்லே இருக்கான்.இனிமே மரியாதை இல்லே! ஆடிக் கறக்கற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கணும்னு சொம்மாவா சொல்றாங்க!...’ என்று கறுவினாள் தங்கம்.

அன்று மத்தியானம்...

தன் தோள்மீது கை போட்ட கன்னியப்பனுடன், பின்னால் கபாலியும் ஏழுமலையும் பீடி புகைத்தவாறே பின் தொடர, சிட்டி மூர்மார்க்கட் பக்கம் நடந்து கொண்டிருந்தான்.

இந்த ஒரு மாத காலமாய் அவன் அவர்களோடு தான் பழகி உறவாட வேண்டியிருந்தது. இருந்தபோதிலும் அவர்களோடு அவனால் இரண்டறக் கலந்துவிட முடியவில்லை; அதை அவன் விரும்பவும் இல்லை. அவர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் சிட்டி பீடி குடிக்க மறுத்துவிட்டான். அதில் தனக்கு எவ்வித ருசியுமில்லை என்று கண்டவன் தானே அவன்?... அவர்கள், மைதானத்து மர நிழலில் சீட்டாட்டம்போட்டு சூது விளையாடும்போது, அதில் ஒன்றும் புரியாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பானேயல்லாமல், தானும் உட்கார்ந்து

விளையாட வேண்டும் என்று சிட்டிக்குத் தோன்றியதில்லை. அதற்குக் காரணம் சிட்டிக்கு அந்த விளையாட்டு தெரியாது என்பது மட்டுமன்று, கன்னியப்பன் கற்றுத் தர முன் வந்தபோதும் ‘எனக்கு வேண்டாம்பா’ என்று மறுத்துக் கையாட்டி விலகி ஓடும் அளவுக்குச் சிட்டி தன்னுள் ஒரு கட்டுப்பாட்டை இந்த இரண்டு வருஷங்களாக வளர்த்துக்கொண்டு விட்டான் என்பதுதான். வேறு வழியில்லை நட்புக் கொண்டாடி நாள் முழுவதும் பழக அவனுக்கு வேறு துணையுமில்லை; அதுவுமல்லாமல் ஆயிரம்தான் கெட்டவனாக இருந்தாலும் கன்னியப்பனிடம் சிட்டிக்கு ஒரு விசேஷப் பற்று எப்போதும் இருந்து வந்தது. அவனுக்கும் சிட்டியிடம் ஒரு தனிப் பாசம். ஆரம்பத்தில் அவனைப் பீடி குடிக்க வைக்கவும், சீட்டு விளையாடக் கற்றுத் தரவும் கன்னியப்பன் முன் வந்தபோதிலும்-சிட்டி அவற்றை நிராகரித்து விட்டதில் கன்னியப்பனுக்கு உள்ளூர ஒரு பெருமையாகக் கூட இருந்தது சிட்டியைப் பற்றி நினைக்கையில்.

சிட்டிக்கும் கன்னியப்பனுக்கும் ஒரே ஒரு காரியத்தில் தான் முழு மனமும், கூட்டுறவும் இருந்தது. அதுதான் தியேட்டரில் டிக்கட் வாங்கி விற்பது. நிறையக் கூட்டம் மிகுந்து பல ரசிகர்கள் டிக்கட் இல்லாமல் மனம் தளர்ந்து திரும்பும்போது தியேட்டர் காவலாளியின் கண்களிலும், ‘போலீஸ் பீட்’டின் கையிலும் சிக்காமல் ‘பத்தணா டிக்கட் இருக்கு வேணுமா சார்... ஒரு ரூபா குடு’ என்று விற்றுத் தரும் பொறுப்பைக் கன்னியப்பன் ஏற்றுக்கொள்வதனால்- அந்தத் தொழிலில் ஏதும் தப்பு இருப்பதாகவும் தோன்றவில்லை சிட்டியின் அறிவுக்கு. மாட்டினி, முதல் ஆட்டம், இரண்டாவது ஆட்டம் மூன்றிலும் சேர்த்து நிச்சயம் தலைக்கு ஒரு ரூபாய்க்கு மேல் வருமானம் கிட்டி விடுகிறது. சொர்ணம் ஐஸ் பாக்டரியில் ஐஸ்கிரீம் விற்று ஒரு நாளைக்கு ஒரு ரூபாயோ, அதற்குக் குறைவாகவோ சம்பாதித்த போதிலும் அந்த அளவுக்கு, இந்த டிக்கட் வாங்கி விற்கும் தொழில் கௌரவமானதாகப் படவில்லை சிட்டிக்கு.
இருந்தபோதிலும் என்ன செய்வது?... அவன் தாயின் நடத்தை இப்போது ஊர் பூராவும் பரவிவிட்டது! இவ்வளவு

நாளில் எஜமானுக்கு இந்தச் செய்தி எட்டியிருக்கும்... வேறெங்காவது ஐஸ்கிரீம் விற்கும் வேலையே தேடிக்கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது. கன்னியப்பனோடு சேர்ந்து அவனுக்கும் அந்தத் தொழிலின் 'அருமை பெருமை'களை விளக்கி அவனையும் அழைத்துக்கொண்டு நகரத்திலிருக்கும் எல்லா ஐஸ்கிரீம் பாக்டரிகளுக்கும் போய் வேலை கேட்டு அலைந்தான் சிட்டி. அவர்களில் யாரும் அவனையும் கன்னியப்பனையும் நம்பி, 'பிளாஸ்கு'ம் சரக்கும் தர மறுத்து, முப்பது ரூபாயாவது 'டெபாஸிட்' கட் வேண்டுமென்றார்கள்...

சிட்டி எங்கு போவான் முப்பது ரூபாய்க்கு..?

அப்போது தான் அவனுக்குத் தோன்றியது. 'தொண்டரின் பெருந்தன்மையும் அன்புள்ளமும் எல்லாருக்கும் வந்து விடுமா, என்ன' என்று. அவன் சதா நேரமும் கன்னியப்பனிடம் தனது எஜமானின் குணங்களையும் பெருமைகளையும் உற்சாகமாக வர்ணித்துப் பேசுவதிலேயே கொழுதைக் கழித்தான். அதில் ஒரு ஆனந்தம் இருப்பதை அநுபவித்தறிந்தான் சிட்டி. அதனால் தனது தாயின் துர்நடத்தையை மறக்கவும் முடிந்தது.

எப்படி இருப்பினும், 'அந்த எவனோ ஒரு சோமாறி'யின் துட்டில் சாப்பிட விரும்பாத சிட்டி கன்னியப்பனுடன் சேர்ந்து டிக்கட் வாங்கி விற்கும் தொழிலில் கிடைப்பதை வைத்துக்கொண்டு வெளியில்தான் ஒரு மாதமாகச் சாப்பிட்டான். அவன் இரவில் ஒருநேரம் வீட்டுக்கு வருவதன் காரணமே 'இது என் வீடு' என்று மாணிக்கத்துக்கு உணர்த்துவதற்குத்தான். அவன் சிந்தனையெல்லாம் 'இவளை எப்படி இங்கிருந்து வெளியேற்றுவது' என்பதுதான். இதற்காக, அவன் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அவனை சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவாள் தங்கம். தவிர்க்க முடியாமல் அவளின் திருப்திக்காக, அவனுக்குப் போட்டியாகக் கொறித்து விட்டுக் கைகழுவிக் கொள்வான் சிட்டி.

ஆனால், அந்த மாணிக்கத்தின் ஒரு குழந்தையையும் இவள் பெற்றுக்கொள்ளப் போகிறாள் என்றறிந்தபோது சிட்டிக்குத் தனது முயற்சியில் தான் வெற்றி பெற முடியாது என்று தோன்றி விட்டது. அவர்கள் உறவை இனிமேல், அறுத்துவிட முடியாது என்று கண்டவுடன்தான், தனது தாயிடம் உள்ள உறவுகளை முற்றாக முறித்துக்கொள்வது என்று முடிவு கட்டிவிட்டான் சிட்டி.

அதற்கு ஆரம்பம்தான் இன்று காலை நிகழ்ந்த மோதல், அது எப்படியோ ஒரு முடிவுக்கு வராமல் பொங்கியெழுத்தும் வெடிக்காமல் விம்மி அடங்கிவிட்டது.

'சரி, சாயங்காலம் பாத்துக்குவோம்...அப்போ அந்த 'சோமாறி'யும் இருக்க மாட்டான்' என்று நினைத்தே காலையில் வெளியேறினான் சிட்டி.

ஒவ்வொரு நாளும் முதலாட்டம் டிக்கட் வாங்கி விற்றானதும் ஒரு முறை வீட்டுப்பக்கம் வருவான் சிட்டி. அதுதான் நிச்சயமாக மாணிக்கம் வீட்டில் இல்லாத நேரம் என்று இந்த ஒரு மாதத்தில் கண்டறிந்திருந்தான் அவன். அப்போதுதான் மாணிக்கத்தைப் பற்றி தங்கத்திடம் வசை பாடவும், அவள் திருப்பித் திட்டினாலும் 'அவமான உணர்ச்சி' அதிகம் ஏற்படாமல் வாங்கிக் கட்டிக் கொள்ளவும் முடிந்தது அவனால்.

சிட்டியின் தாயைப் பற்றிய விஷயம் யாவும் அவனது நண்பர் வட்டாரத்திற்குத் தெரிந்துதான் இருந்தது. அந்த நண்பர்களில் யாருக்குத்தான் அப்படி ஒரு 'விஷயம்' இல்லையென்று சொல்லிவிட முடியும்? சம்பந்தப்பட்ட ஒருவன் இல்லாதபோது அவனைப் பற்றியும் அவன் தாய் தமக்கை யாரைப் பற்றியுமுள்ள உண்மையான விஷயங்களை மற்றவர்கள் கூடிக் கேலியாகவும் கிண்டலாகவும் தங்கள் கொச்சை மொழிகளில் பேசி அபிப்பிராயம் பரிமாறிக் கொள்வார்கள். இதில் வினோதம் என்னவெனில், அந்த நண்பர்கள் கூட்டத்திற்குத் தன் 'விஷயம்' தெரியாது, தெரிந்திருந்தாலும் தன் மீதுள்ள அன்பால் தன்னைக் குறித்து எதுவும் கேவலமாகப் பேசிக்

கொள்ள மாட்டார்கள் என்று அந்தக் குழுவில் இருக்கும் ஒவ்வொருவனும் நினைத்துக் கொள்வதுதான்.

ஆனால் சிட்டியோ அவ்விதம் நினைக்காதது மட்டுமல்ல, தன் தாயின் விஷயம் பலருக்கும் தெரிந்த மாற்ற முடியாத களங்கமாக மாறிவிட்டது என்று எப்போது உணர்ந்தானொ அன்றே கன்னியப்பனிடமும் மற்ற நண்பர்களிடமும் ஆத்திரமும் அழுகையும் பொங்கிவர அடக்க முடியாமல் சொல்லி, இதற்கு என்ன செய்வது என்று யோசனையும் கேட்க ஆரம்பித்தான். அப்போதுதான் ஒவ்வொருவரும் தத்தமது கதைகளை, அல்லது தங்களுக்குத் தெரிந்த நெருங்கியவர்களின் கதைகளைப் பற்றி விளக்கவாரம்பித்து ‘இது குறித்து நமக்கெதற்குக் கவலை?” என்ற ரீதியில் சமாதானமும் கூறினர்.

அதன் பிறகுதான், இதற்குத்தான் ஏதும் செய்ய முடியாது என்றாலும் மற்றவர்களைப் போல் இதைச் சகித்துக்கொண்டு இருக்கவும் தன்னால் முடியாது என்று உணர்ந்து தனக்கும் தாய்க்குமுள்ள உறவை முறித்துக் கொள்வது என்று தீர்மானித்தான் சிட்டி. அந்தத் தீர்மானத்தின்படி அவன் அமைதியாக வீட்டுக்குப் போவதை நிறுத்தி விலகிக் கொண்டிருக்கலாம். சிட்டிக்கு அப்படிச் செய்வதில் திருப்தி இல்லை. அவமானமும்,-தன் பிறவியே இழிந்து போன ஆத்திரமும் கனன்று எரிந்து தன்னையே தின்று கருகிக் கொண்டிருக்கும் அவன் இதய நெருப்புக்கு இன்னும் ஏதாவது ஆகுதி வேண்டுமென்ற ஆவேசத்தினால் ஒரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி அவன் காத்துக் கொண்டிருக்கிறான்.

ஆனால் எந்தமாதிரி ஒரு சந்தர்ப்பம்? அப்போது நடக்கப்போகும், அல்லது நடத்தவேண்டிய காரியங்கள் தான் என்ன?...

‘அந்த எவனோ ஒரு சோமாறி’யை இழுத்துப் போட்டு அடிப்பதா? ஊர்ச்சனங்களையெல்லாம் கூட்டி அவனையும் அவளையும் ஒன்றாக நிறத்தி இருவர் முகத்திலும் காறி உமிழ வைப்பதா? அதைப் பற்றியெல்லாம் அவனது

ஆத்திரக்கார மனசுக்குத் தெளிவாய் ஒன்றும் புலப்படவில்லை இப்போது.

நாள் பூராவும் இதைப் பற்றியே எண்ணியெண்ணி மனசுக்குள் பலவிதமான பழிவாங்கும் நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து கொண்டிருந்ததால் சிட்டியின் முகமே வக்கரித்துப் போயிற்று. கன்னியப்பனோ அவனது கூட்டாளிகளில் வேறு யாராவதோ சிட்டியிடம் பல சமயங்களில் பேச்சுக் கொடுக்கும்போது அதைக் காதில் வாங்கிக் கொண்டவன் போலல்லாமல் எங்கோ வெறித்த சிந்தனையோடு உட்கார்ந்திருப்பான் சிட்டி.

அன்று மூர்மார்க்கட் வழியாக சென்று கொண்டிருந்த போதும் அதே சிந்தனையோடு மௌனமாய் நடந்து கொண்டிருந்த சிட்டியின் கண்களில் தூரத்து மரத்தடியில் யாரோ சில கிராமத்து சனங்களுக்குக் குருவி சோசியம் சொல்லிக் கொண்டிருந்த மாணிக்கம் பட்டு விட்டான்.

தன் தோளின்மீது வலுவுடன் இரும்பாய் கிடந்த கன்னியப்பனின் கரத்தை அழுத்திப் பிடித்தவாறு திடுமென்று உதித்த அருமையான யோசனையை உற்சாகமாக வெளியிட்டான் சிட்டி.

“கன்னியப்பா! எனக்கொரு ஒதவி செய்யணுமே?” என்று அவன் திடீரென்று சொன்னதும், உதட்டிலிருந்த பீடியைப் பல்லில் கடித்து, “இன்னா ஒதவி?” என்றான் கன்னியப்பன்.

“நீ மாத்திரமில்லே… கபாலி, ஏயுமலை-நீங்களுந்தான்… மூணு பேரும் கொஞ்சம் தள்ளி அந்த மரத்தாண்ட நின்னுக்கினு இருங்க… கன்னியப்பா, அந்தப் பீடியெக் குடு!” என்று அவன் பல்லில் கடித்துப் புகைந்து கொண்டிருந்த பீடியை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு அவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டு நிற்கும்போது சிட்டி சொன்னான்.

“அந்த சோமாறி இங்கதான் இருக்கான்… நான் போயி வம்பு வலிக்கிறேன்… அப்புறம் நாலுபேருமா சேந்து நிமித்திடணும் நீங்க ரெண்டு பேரும் தூரத்திலிருந்து கல்லு

வுடுங்க! கன்னியப்பா, நீ மட்டும் கைகலக்கும்போது பக்கத்திலே வந்துடு...” என்று திட்டம் போட்டான் சிட்டி.

“எதுக்குடா வீண் வம்பு? வேணாம்” என்று மறுத்தான் ஏழுமலை.

“பாரேன்.. இவனுக்கு ஒதறலே?... சுத்த பயந்தாங்கொள்ளியா இருக்கியே!” என்று அவனைக் கிண்டல் பண்ணினான் சிட்டி.

கபாலி மட்டும் ‘காரியம் மீறிப் போனால் கைவிட்டு விடலாம்’ என்று நயவஞ்சகத்துடன் “நீ சும்மாப் போயிமோது கண்ணு... நாங்க இருக்கோம்” என்று ‘கொம்பு சீவி’ விட்டான் சிட்டியை.

கன்னியப்பன் சற்று யோசித்து “சரிடா சிட்டி. ஜாக்கிரதையா நடந்துக்க.. மாட்டிக்கிட்டு நாலுபேரு மின்னாலே நிக்கறப்போ, நம்ப பக்கம் மிஷ்டேக் சொல்றமாதிரி இருக்கக்கூடாது அவனெ மொதல்லே வம்புக்கு வலி! அவன் ஏதாவது பண்ணணும்; அப்புறம் நடத்துவோம் நம்ப கச்சேரியெ...” என்று எச்சரித்து அனுப்பினான்.

பீடி குடிக்க மாட்டேன் என்று எஜமானுக்குக் கொடுத்த வாக்கை உறுதியாகக் காப்பாற்றிவரும் சிட்டி, மாணிக்கத்தை அவமதிக்க வேண்டும் என்றநோக்கத்துடன், கன்னியப்பனின் எச்சில் பீடியை அமர்க்களமாய்ப் புகைத்துக்கொண்டு தொழில் முனைந்திருக்கும் மாணிக்கத்தின் எதிரில் போய் நின்றான்.

தன் எதிரே, நிஜார் பாக்கெட்டுக்குள் இரண்டு கையையும் நுழைத்துக்கொண்டு சற்றும் அச்சமற்று, திமிருடன் நின்று பீடி குடிக்கும் சிட்டியைத் திடீரெனப் பார்த்த மாணிக்கத்துக்கு ஏனோ வயிற்றில் ‘பக்’கென்றது. எனினும் அவன் வேண்டுமென்றே இந்தக் காரியம் செய்கிறான் என்று ஒரு வினாடியில் ஊகித்துவிட்ட மாணிக்கம் தன் பார்வையே அவன் பக்கம் திரும்பாமலிருக்க ஆனவரை பிரயாசைப்பட்டான். எனினும் ‘இன்னும் என்ன செய்கிறான்...? இருக்கிறானா போய்விட்டானா’ என்று

அறியத் துடிக்கும் மனத்தையோ கண்களையோ அவனால் கட்டுப்படுத்த முடியாமல் அவன் பக்கம் பாதி திரும்பும் விழிகளை சிட்டி கவனிக்கிறான் என்றறிருந்ததும் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்ளுவான். இப்படியே சில நிமிஷங்கள் கழிந்தபின், 'சோசியம், பார்த்த, கிராமவாசிகளும் அங்கிருந்து போக, மாணிக்கம் தனியானான்.

சிட்டிக்கு வம்பை எப்படி 'வலி'ப்பது என்று தெரியவில்லை. அப்போதுதான் அவனை அன்பால் வெல்ல எண்ணிய மாணிக்கம், சிட்டி பீடி புகைப்பதைக் கவனிக்காதவன் போல் புன்னகை காட்டி, "வா சிட்டி, நாஸ்டா பண்றியா?" என்று அழைத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்துக்கே காத்திருந்த சிட்டி ஒரு கொச்சையான மதராஸ் பாஷையுடன் "நீ யார்ரா எனக்கு நாஸ்தா வாங்கிக் குடுக்கறத்துக்கு.. எச்சப் பொறுக்கி' என்று பல்லைக் கடித்து ஆக்ரோஷமாகக் கத்திக்கொண்டே அவனை நோக்கி ஓடி வந்தான்.

இயற்கையாகவே பயந்த சுபாவமுடைய சாதுப் பிறவியான மாணிக்கத்துக்கு இந்தச் சிறுவனின் ஆத்திரத்தைக் கண்டே கையும் காலும் உதற ஆரம்பித்தது.

மாணிக்கம் எழுந்து நின்று தவிப்பதையும், அவ்வளவு நேரமாய் சிட்டியின் நடவடிக்கைகளையும் கவனித்தவாறு அருகில் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த பாம்பாட்டி சாய்பு எழுந்தோடி வந்து சிட்டியின் சட்டையைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினான்...

அவன் திரும்பியபோது பெரிய மீசையும் அடர்ந்த தாடியும் கவிந்த பயங்கரமான முகம் ஒன்று ராசஷஸன் போல் தன்னை மிரட்டுவதைக் கண்டு வெலவெலத்துப் போனான் சிட்டி.

"கியாரே பச்சா... இன்னா நெஞ்சிக்கினே உம் மன்ஸ்லே?... நானும் இம்மாநேரம் பாத்துக்கினுதாங்கிறேன்... பெரிய மன்ச மாதிரி பீடி புடிச்சிக்கினு, உனக்கு அப்பன் மாதிரி கீற

மன்சனெ அடாபடான்னு பேசறியே, திமிறா? ஜாக்கிரதை!" என்று உறுமிய பாம்பாட்டி சாய்புவைக் கண்டதும் மரத்தடியில் கல்லுடன் நின்றிருந்த கபாலியும் ஏழுமலையும் ஓட்டம் பிடித்துவிட்டனர். கன்னியப்பன் மட்டும் சிட்டியைக் காப்பாற்ற ஓடி வந்தான்...

"உடுய்யா அவனெ... கையெ எடுய்யா?" என்று அதட்டியவாறு பாம்பாட்டி சாய்புவின் பிடியிலிருந்த சிட்டியை விடுவிக்கும் முயற்சியில் வலுமிக்க சாய்புவின்கரத்தைப் பிடித்திழுத்தான் கன்னியப்பன்.

"அரே.. நீ யார்ரா வஸ்தாத்?.. ரெண்டு பேரையும் ஒண்ணா சேத்து ஒரு இடி! அவ்வளதான் 'கைமா' பண்ணிடுவேன்.. ஹஹோ!..." என்று சொல்லிக்கொண்டே கன்னியப்பனையும் மறுகையில் பிடித்துக்கொண்டான் சாய்பு!

அப்போது மாணிக்கம் சாய்புவின் மோவாயைப் பிடித்து, சலாம் வைத்துக் கெஞ்சினான்! "உட்டுடுங்க பாய்... நம்பளுக்கு வேண்டிய பசங்கதான்... வீட்லே கொஞ்சம் கோவம்.. அதுக்கோசரம் இங்கே வந்து..." என்று பல்லைக் காட்டும் மாணிக்கத்தைப் பார்த்து சாய்பு 'ஓ'வென்று பயங்கரமாய்ச் சிரித்தான்!

அரே... நிம்பள் வூட்டுப் பசங்கதானா?... அதெமின்னே ஏன் சொல்லலே?... அப்ப நீயே ரெண்டு ஒதெ மூணு குத்து வெச்சி வெரட்டு... இன்னா ஆளுய்யா நீ?... பயந்துகினு நிக்கிறெ?" என்று கேலி பேசி சிட்டியையும், கன்னியப்பனையும் விட்டு விட்டுத் தன் இடத்திற்குப் போனான் சாய்பு!

'ம்... ராத்திரி வூட்டுக்கு வரட்டும், இதுக்குச் சரியான பதில் சொல்றேன்' என்று மனத்துள் கறுவியவாறு நடந்த சிட்டியைப் பின் தொடர்ந்த கன்னியப்பன் சொன்னான்:

"நான் அப்பவே சொன்னேனில்லே... அந்த ஆளு ரொம்ப நல்லவன் மாதிரி இருக்கான் பாத்தியா? அவனுக்குக் கோவமே வரலியே..." என்று மாணிக்கத்தை அவன்

சிலாகிப்பதைக் கேட்ட சிட்டிக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

“தூ! அவன் கெடக்கிறான் ரோசங்கெட்ட பேமானி” என்று காறித் துப்பினான் சிட்டி.

## 6

எப்படியோ, பாம்பாட்டி சாய்புவிடம்-பயத்தாலோ நல்லெண்ணத்தாலோ என்னவோ சொல்லி-கன்னியப்பனையும் சிட்டியையும் விடுவித்து நிலைமையைச் சமாளித்து விட்டாலும் மாணிக்கத்துக்கு அன்று பூராவும் மனம் ஒரு இருப்பில் இல்லை. சிட்டியை நினைக்கும்போது அவனுக்குப் பயமா இருந்தது. வெறிகொண்ட சிட்டி ஒரு நாளைக்குத் தன்னை, தூங்கும் போது தலையில் கல்லைப் போட்டுக் கொன்றாலும் கொன்றுவிடுவான் என்று தோன்றியது அவனுக்கு. இவ்வளவு சிறிய பையனுக்கு இவ்வளவு கோபமும் வெறியும், இவ்வளவு தைரியமும் இருக்க முடியும் என்பதைக் கற்பனை செய்தும் அறிந்தவனல்ல மாணிக்கம். சிட்டியைப் பற்றி அதிகம் யோசிக்கும்போது மாணிக்கம் சிட்டியின் மீது கொண்டிருந்த அன்பில், இந்தச் செயல்களுக்கு எல்லாம் காரணம் சிட்டியல்ல-கூட வந்தானே ஒரு முரட்டுப் பயல்-கொஞ்சம் பெரிய பையன். அவன்தான் என்றெண்ணினான்.

தங்கம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பாளே... ‘அந்தக் கன்னியப்பன் கூட சேந்து சுத்தறான் போல் இருக்கு’ன்னு கன்னியப்பனின் ‘லக்காடி’த் தனத்தையெல்லாம் அவள் விவரித்திருக்கிறாள் மாணிக்கத்திடம். கூட வந்தவன் கன்னியப்பன்தான் என்று கண்டு கொண்டான் மாணிக்கம்.

இவ்வளவு நாட்கள் ஒழுங்கான பையனாக விளங்கிவந்த சிட்டி இந்த ஒரு மாத காலமாய்த் தங்கம் க்ணடிக்காததினால்தான் இவ்விதம் கெட்டுப் போய்விட்டான் என்று எண்ணினான் மாணிக்கம். அவனை அவள் கண்டிக்கவும், அடக்கவும் எண்ணிய போதெல்லாம்

தான் போய் தடுத்தது பைத்தியக்காரத்தனம் என்று தன்னையே நொந்து கொண்டான். ‘அவள் தன் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டுமோ, அப்படித்தான் இவ்வளவு காலம் வளர்த்திருக்கிறாள். அதை நான் மாற்றியதனால்தான் பையனும் மாறிப் போனான்... ‘சரி; இப்படியே விடக் கூடாது. கொயத்தெ அநியாயமாப் போயிடுவான்’ என்றெண்ணிய மாணிக்கம் அன்று பொழுதொடு தொழிலை ஏறக்கட்டிகொண்டு வீட்டுக்கு ஒடினான்.

வீட்டுக்கு வந்து தங்கத்திடம் சிட்டியைத் திருத்தி நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் தான் மத்தியானம் நடந்த சம்பவத்தை விவரிக்க ஆரம்பித்தான் மாணிக்கம். ஆனால் அவன் தன்னெதிரே பீடி புகைத்து அவமரியாதை செய்ததையும், சொல்லத் தகாத கெட்ட வார்த்தைகளில் எல்லாம் நாலு பேர் மத்தியில் மானக் கேடாய்த் திட்டி அடிக்க ஆள் சேர்த்துக்கொண்டு வந்ததையும் விவரிக்கும்போது மாணிக்கம் சிட்டியைவிடச் சிறுவனாய் மாறித் தாயிடம் வந்து முறையிட்டுக்கொள்ளும் குழந்தைபோல் கண் கலங்கினான். அதைக் கண்ட தங்கத்துக்குத் துயரம் நெஞ்சையடைத்தது.

மாணிக்கத்தின் முகத்தை மார்பில் அணைத்துக் கொண்டு “நீ ஒண்ணும் வருத்தப்படாதே... அது சின்னக் கய்தெதானே?...இன்னக்கி வரட்டும் ரெண்டுலே ஒண்ணு பாத்துடறேன். எனக்குத் தெரியும். எப்ப அந்தக் கன்னியப்பம் பையனோட சுத்தறான்னு கேள்விப்பட்டனோ அப்பவே எனக்குத் தெரியும். இல்லாட்டி நம்பப் பையன் ஒண்ணும் அம்மாந் தொலவு மோசமில்லே..” என்று மாணிக்கத்தைச் சமாதானப் படுத்திக்கொண்டே இருக்கும்போது ‘இவ்வளவு பெரிய ஆளைப் போயி ‘பப்ளிக்’லே மெரட்டி இருக்கானே இந்தப் பொடிப் பய!” என்று மனத்தின் ஆழத்தில் அவளாலும் உணர முடியாத ஒரு பெருமிதமும் லேசாக எழுந்தது... அதே சமயத்தில், ‘சுத்த சோதா மாதிரி ஓடியாந்து அயுவுதே இந்த ஆளு’ என்று

மாணிக்கத்தின் அப்பாவித்தனத்தின் மீது ஒரு பரிதாபமும் லேசான எரிச்சலும்கூட உண்டாகியது.

“இன்னா ஆளுய்யா நீ? தெம்மாம் பையன் வந்து மெரட்னான்னு அய்வுறியே?... இஸ்துப் போட்டு நாலு மிதி மிதிக்காம நாங்ககூட இல்லேன்னா, உன்னெ வெல்லத்திலே வெச்சி முய்ங்கி ஏப்பம் வுட்டுடுவான் சிட்டி?” என்று மாணிக்கத்துக்கு ஆதரவாக அவனைக் கேலி செய்தாள் தங்கம்.

மாணிக்கம் தலை குனிந்து உட்கார்ந்திருந்தான். அவனைத் தானும் ஏதாவது புண்படுத்தி விட்டோமா என்று துணுக்குற்ற தங்கம் அவன் அருகில் நெருங்கி வந்தமர்ந்து-“இன்னா வருத்தமா உனக்கு எம்மேலே? கோவம் இல்லாட்டி இன்னா? ஆம்பளைன்னா ரௌடியில்லே! கோவம் வராட்டி ஆம்பளைக்கு ஒண்ணும் கொறவு இல்லே.. ஆனா, ஒரு விஷயத்திலே பெரியஆளு! என்று கண்கள் மலர உடம்பில் ஒரு புதுச்சூடு நீ திடீரெனப் பிறக்க சூடான தன் கன்னத்தை அவனது நெற்றியில் உரசினாள் தங்கம்.

“எந்த விசயத்திலே? சோசியம் சொல்றதிலேயா? என்று மெதுவாக அவன் கேட்டபோது அவளது காதோரத்தில் அவனது உதடுகள் அசைந்த ஸ்பரிசத்தால் தங்கத்தின் பிடரி குறுகுறுத்தது.

அதே சமயம் இப்போது சிட்டி வருவான் என்ற நினைவும் வந்தது தங்கத்துக்கு. அதைத் தொடர்ந்து அவன் பீடி குடித்த செயலும், தான் பலமுறை ‘சேரக்கூடாது’ என்று கண்டித்த கன்னியப்பனுடன் சேர்ந்துகொண்டு ஊர் சுற்றிச் சீரழிந்து போகும் அவனது காரியமும் அவள் நெஞ்சில் ஆத்திரக் கனலை விசிறிவிட்டது.

“காத்தாலே கொளத்திலே போயிக் குளிச்சேன்னு திமிர்லே பேசனப்பவே, புடிச்சிப் பிரி கட்டி இருக்கணும் வரட்டும்! இன்னக்கி, கன்னியப்பனோட சேந்து இனிமே பீடி குடிக்காதே... ஊர் சுத்தாதேன்னு கால்லே சூடு வெக்கிறேன்” என்று சொல்லிக்கொண்டே மூலையில்

கிடந்த இரும்புக் கரண்டியின் பிடியை எரிகின்ற அடுப்புக்குள் எழுந்துசென்று செருகிவிட்டு, கூந்தலை உதறி இறுக்கி முடிந்து கொண்டாள் தங்கம்.

அவள் உண்மையிலேயே சிட்டிக்குச் சூடுவைக்கத் தயாராவதைக் கண்ட மாணிக்கம்... "இந்தா தங்கம். சும்மா சூடு போடற மாதிரி பயங்காட்டு. மேலே வெச்சிடப் போறே!" என்று எச்சரித்தான்.

"நீ சொம்மாக் கெட... ஒனக்கு ஒண்ணும் தெரியாது. முன்னே ஒரு தபா கொளத்திலே போயிக் குளிச்சத்துக்கு வெச்ச சூட்டுத் தழும்பு-வந்தாபாரு கால்லே... அதனாலே தான் இம்மாங் காலம் ஒயுங்கா இருந்திச்சி கய்தே! இப்ப அவுத்து உட்டுட்டேன்னு நெனப்பா... வாடா என் மவனே... இன்னகி வெக்கிற சூடு. நீ மறக்கவே மாட்டே" என்று வெளியே தலைநீட்டி அவன் வருகிறானா என்று பார்த்தவாறே அவள் கூறிய வார்த்தைகளை எதிர்வீட்டு அலமேலு கேட்டுவிட்டு "அடி பாதகி அந்தப் பையன் இருக்கிறதே தனக்கு ரோதனையா இருக்குன்னு கொன்னுடுவா போல இருக்கே கொலைகாரி..." என்று மனசுக்குள் தங்கத்தைச் சபித்தவாறே வீட்டுக் கதவை இழுத்துச் சாதித்தாள். தான் எங்கோ வெளியே போகிறவள் மாதிரி தங்கத்துக்குப் போக்குக் காட்டிவிட்டு-அந்த 'வாசலை'யும் தெருவையும் இணைக்கும் சந்தில் வந்து நின்றுகொண்டு சிட்டி வருகிறானா என்று காத்துக்கொண்டிருந்தாள் அலமேலு.

இரண்டு வருஷத்துக்கு முன் ஒரு நாள் சிட்டிப்பையன் கதறக் கதற தங்கம் அவனுக்குச் சூடு வைத்த கொடுமையைக் கண்டு 'சீ! நீ ஒரு பொம்பளைதானா?'என்று சீறிவந்து தங்கத்திடம் சண்டைபிடித்திருக்கிறாள் அலமேலு. அப்போதெல்லாம் தங்கத்தைப் போன்ற கொடுமைக்காரிகளுக்குக் குழந்தையைக் கொடுத்து வேடிக்கை பார்க்கும் அந்தக் குருட்டுத் தெய்வத்தின் மீதுதான் அவளுக்கு அதிகக் கோபம் வந்தது.

இப்போது இந்த ராசக்ஷஸி சிட்டியைக் கொன்றே போடுவாள் என்று அஞ்சிய அலமேலு அவனை முன்கூட்டி உஷார்ப் படுத்தித் தப்புவிக்க வைக்கும் நல்லெண்ணத்தில் தான் தெருவில் வந்து அவனுக்காகக் காத்து நின்றாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் தூரத்தில் அவன் வருவதைப் பார்த்துவிட்டு எதிர்கொண்டு ஓடினாள் அலமேலு.

“டே சிட்டி.. வூட்டுக்கு வராதே... அப்பிடியே போ!...” என்று அலமேலு அவனிடம் சொல்லி முடிப்பதற்குள்,

“ஏனாம்? வுங்க வூடா?...” என்று வழக்கம்போல் கேட்டுவிட்ட சிட்டியின் மனப் பொருமலைப் புரிந்துகொண்ட அலமேலு.

“ம்... உன் வூடுதான்! யாரு இல்லேன்னா? ஆனா உன் தலை எயுத்தோ அவ தலை எயுத்தோ?... எங்கியோ கெடந்த எவனையோ கொண்ணாந்து வூட்லே வெச்சிக்கினு பெத்த புள்ளிக்கே யமனா நிக்கறாளே அந்தப் பாவி மவ.... சிட்டிகண்ணு... உங்காத்தா வுனக்கு சூடுவெக்கறேன்னு கரண்டிக்காம்பெ அடுப்பிலே போட்டுக் காயவெச்சிருக்கா... இப்ப நீ போவாதேடா..” என்று அலமேலு விவரித்தபோது சிட்டி குனிந்து தன் வலது காலில் முழங்காலுக்குக் கீழே நீளமாய், கருமை பாய்ந்து வெண்மையான புள்ளிகளுடன் இருந்த பழைய தழும்பைப் பார்த்துக் கொண்டான்.

“சூடு போடப் போறாளா? ம் போடட்டும்; பாக்கறேன் நான் இன்னா பழைய சிட்டின்னு நெனப்பா?...” என்று உறுதியுடன் சொல்லி அவன் மேலே நடந்தான். அலமேலு அவன் கையைப் பிடித்திழுத்துச் சொன்னாள்: “நீ பழைய சிட்டியில்லே, கண்ணு. அதனாலேதான் எனக்குப் பயமா இருக்கு. இப்ப அந்த வெறி புடிச்ச சிறுக்கி உன்னைக் கொன்னாலும் கொன்னுடுவா... அவ பண்ற லக்காடித் தனத்துக்கெல்லாம் நீதானே எடைஞ்சலா இருக்கே... போவாதே கண்ணு... இப்ப திரும்பிப் போயிட்டு அப்பாலே ராவிக்கு வா...” என்று கெஞ்சினாள் அலமேலு.

இதுநாள் வரை, தன் தாயை தன் எதிரே ஒருவர் கேவலமாகப் பேசி கேட்டதில்லை அவன். நண்பர்களுடன்

விளையாடும்போதோ, வார்த்தை தடிக்கும்போதோ, தாயைக் குறித்து இழித்துரைக்கும் கொச்சை வார்த்தையைச் சொல்லிவிட்டதற்காக எத்தனையோ பேருடன் ரத்தம் ஒழுகுவதுபோல் கை கலந்து சண்டையிட்டிருக்கிறான் சிட்டி.

அந்தச் சிட்டியின் எதிரே இந்த அலமேலு அவன் தாயை எவ்வளவு கேவலமாகப் பேசுகிறாள்!...

இந்த நினைப்பு அவனுக்கும் வந்தது. இப்படி ஒரு நிலை ஏற்பட்டதை மனத்துள் நொந்துகொண்டான் இதற்குக் காரணமான தங்கத்தின்மீது அதிக வெறுப்பு ஒரு பக்கம் வளர்ந்தபோதும் விட்டுக் கொடுக்காமல் அலமேலுவைப் பார்த்து-

“பெத்தவளே புள்ளையெக் கொல்லுவாளா?” என்று கொஞ்சம் ரோசமாகவே கேட்டான் சிட்டி, அவன் அவ்விதம் தாய்க்குப் பரிந்து கொண்டு பேசியதும் “அடி என் கண்ணே!” என்று அவன் கன்னங்களை வழித்துத் தன்கையை முத்தமிட்டு உடல் சிலிர்த்தாள் அலமேலு பிறகு அவனது முகவாயைக் கையிலேந்திச் சற்றுக் கண்கலங்க ‘இப்படி ஒரு பிள்ளை தனக்கிருந்தால்’ என்ற ஏக்கத்துடன் நோக்கிய அலமேலு சொன்னாள்:

“சிட்டி... உங்காத்தா ஒரு அறிவு கெட்டவ. இப்பிடி ஒரு கொயந்தெ இருந்தும் அவளுக்கு வெச்சிப் படைக்கத் தெரியலே.. நீ என்ன வேண்ணாலும் நெனச்சிக்க... உம்மேலே அவளுக்குப் பிரியமே இல்லை. நீ வவுத்திலே தரிச்சப்பவே- உன்னெக் கலைக்கறத்துக்கு-அவ என்னென்னமோ மருந்தெல்லாம் துண்ணவதானே! இந்த அன்னம்மா கெய்விதான் எங்கெங்கியோ போயி இன்னா இன்னா எயவெல்லாமோ கொண்ணாந்து குடுத்தா. அப்பிடிப் பொறக்கறத்துக்கு மின்னியே உன்னெக் கொல்லப் பாத்த ராச்சஸியாச்சே அவ... அதுக்குக் காரணம் இப்ப இல்லே எனக்கே புரியுது!... ஒரு புள்ளியெ வெச்சிக்கினு இந்த மாதிரி நிக்க முடியுமா? அப்பிடியும் நீ கொழவிக் கல்லுமாதிரி வந்து பொறந்துக்கினே?.. இப்ப

அவளுக்கு நீ தானே எடைஞ்சலா நிக்கிறே?.. இல்லாட்டி இப்ப நீ இன்னாப் பண்ணிப்பிட்டே? இவ கரண்டிக் காம்பெக் காயப் போட்டுக்கினு நிக்கறா?... இவ பண்ற அக்குரும்புக்கு இவளுக்குச் சூடு வெக்கிறத்துக்கு மனுசாள் இல்லேன்னாலும் தெய்வம் கூடவா இல்லாமப் பூடுச்சி?..." என்று அலமேலு அங்கலாய்த்துக் கூறிக்கொண்டிருக்கையில் அவளறியாமல், எவ்வித உள்நோக்கமும் இல்லாமல் அவள் வாயிலிருந்து தெறித்த அந்தப் பயங்கர ரகசியம், தன்னைக் கருவிலேயே பொசுக்கிவிட எண்ணி மருந்தரைத்துத் தின்ற தங்கத்தின் மாபாதகம்-அவன் உடம்பையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

'அப்படியானால் அவள் என்மீது ஆசையும் பாசமும் கொண்டு எனக்காகவே உயிர் தரித்திருப்பதாகச் சொன்னதெல்லாம் பொய்தானா?... உன்னை நான் வுடவேமாட்டேன்... என்னெ உன்னெவிட ஒசத்தி வேறயாருமில்லே என்ற இப்போதுகூட ஒருநாள் சொன்னாளே அதெல்லாம் மனமறிந்த பொய்தானோ?... நான் குளத்தில் போய் குளித்ததற்குச் சூடு வைத்தது என்மீது கொண்ட வெறுப்பினால்தானா? எனக்கு ஏதாவது நேர்ந்துவிடும் என்ற ஆபத்து கருதியல்லவா? என்னை அவள் பேயாய் அடித்து நொறுக்கியது நான் திருந்த வேண்டும் என்பதற்கல்ல-என்னை கண்டாலே வயிற்றில் பற்றி எரிந்த ஆத்திரத்தில் தானா? அடிபாவி! உன்னைப் போய், தொண்டர் தொழுது வணங்கும் தாய்க்கு இணையாக இவ்வளவு காலம் எண்ணி இருந்தேனே!.. அலமேலு சொல்வதில் தப்பில்லை. நான் பிறந்தால் உன் கேடு கெட்ட செயல்களுக்கு இடைஞ்சலாயிருப்பேன் என்று கருவிலேயே என்னைத் தீய்க்க இருந்த பேயே!... இப்போது நான் உன் கேவலமான நடத்தைக்கு எதிராக இருப்பதனால் உனக்கிருக்கும் வெறியில் என்னை நீ கொன்று போடுவாய்...' என்றெல்லாம் ஒரு சில வினாடிகள் யோசித்தான் சிட்டி: இவ்வளவு கேவலமான, இவ்வளவு கொடிய ஒருத்தியின் முகத்தைப் பார்ப்பதுகூட மகாபாவம்... என்ற முடிவில் அமைதியான-பலமான முறையில் 'எந்தவிதச் சலசலப்பும் இல்லாமல் இவளை விட்டுப்

போயொழிந்து விட்டால் என்ன?... இவள் எவனோடும் எக்கேடும் கெட்டுப் போகட்டும்' என்று உணர்ச்சிகளைத் தகித்த வெறுப்பின் மிகுதியைக் கடந்து கோபத்தின் கொதிநிலை ஆவியாய் மாறி மறைந்தது போன்ற வரண்ட உணர்வில் ஒரு வினாடி சிந்தித்தான் சிட்டி.

'இவளுக்குப் பிள்ளையாய் பிறந்த குற்றத்துக்கு எனக்குச் சூடு போடுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறாளாமே.. என்னைப் பெற்றவள்... அதையும் வாங்கிக்கொண்டு போய் விடுகிறேன்" என்ற விரக்தியில் உடலும் மனமும் செயலற்றுப் போக வரண்டு சிவந்த விழிகளுடன் அலமேலுவின் கரத்தை உதறிவிட்டு- அவன் சந்தில் நுழைந்து வாசலை நோக்கி நடந்தான்.

சிட்டிக்கு இப்போது நிஜமாகவே தன்மீது யாராவது பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கொண்டு வளைய வளைய இழுத்தால் ஒரு நிம்மதி இருக்கும்போல் தோன்றியது... ஒரே பாய்ச்சலாய் ஏதாவதொரு கொடிய மிருகம் தன்மீது பாய்ந்து ஒரே அறையில் தன் கபாலத்தைச் சிதறடித்தால் ஒரு சுகம் கிடைக்கும்போல் இருந்தது.... அல்லது தானே ஒரு கத்தியை எடுத்துத் தன் வயிற்றில் குத்திக் கிழித்துக் கொண்டு குடல் சரியத் தங்கத்தின் எதிலே விழுந்து சாகவேண்டும் போல் இருந்தது.

தன் பிறவியை வெறுத்த ஒருத்தியின் வயிற்றில் வலியக் கிடந்து பிறந்து, அவள் வாழ்க்கை முழுவதும் அவளுக்கு இடைஞ்சலாய்ப் போன தன் ஜனனத்தின் மீதல்லாமல்- வேறு எதன் மீதும் வேறு எவர் மீதும் அவனுக்கு இந்த நிமிஷம் வெறுப்பில்லை.

அவன் வாசலுக்குள் நுழையும்போது பின்னால் ஓடி வந்து அவனைத் தடுக்க எண்ணிய அலமேலு-தங்கம் தன் வீட்டு வாசற்படியில் கோபமும் வெறியும் கொப்புளிக்கும் விழிகளுடன் நின்றிருப்பதைக் கண்டவுடன் ஒதுங்கி நடந்து தன் வீட்டுக்குப் போய்விட்டாள்.

சிட்டியைக் கண்டதும் உள்ளே போய் அடுப்பில் கிடந்து பழுத்த இரும்புக் கரண்டியை எடுத்துப் பின்புறம் மறைத்துக்

கொண்டு வாசலுக்கு வந்து நின்ற தங்கம் ‘வாடா எம்மவனே.. வா!...” என்று நெஞ்சில் கனலும் நெருப்புடன் அழைத்தாள்.

அவள் சற்று நின்றான். அது அச்சத்தினால் அல்ல என்று அடுத்த வினாடி புரிந்து கொண்டாள் தங்கம்.

மாலை மாலையாய்க் கண்களில் கண்ணீர் பெருக, தங்கத்தைப் பார்த்துக் கைகளைக் கூப்பிக்கொண்டு, மனிதனின் சகல சோகங்களுக்கும் வித்தான பிறவியெனும் பெருஞ்சிலுவையைத் தோளில் சுமந்து நிற்பவன் போன்று-தேகாந்தமும் குலுங்கி நடுங்க ஒரு துர்த்தேவதையின் பலிபீடத்தில் நிற்பவனைப் போல் நின்று அவள் முன்னே வேதனைகளை உள்ளடக்கி மரத்துப் போய்க் கரகரக்கும் குரலில் அவன் சொன்னான்: “உன்னெ ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்.. இன்னொரு தடவை உன் வாயாலே என்னெ மவனே.. மவனேன்னு கூப்டாதே!... நான் என்ன பண்ணுவேன்? நீ என்னெ வயித்திலேயே கொல்லப் பாத்தும் மீறி வந்து பொறந்தது என் தப்புன்னா... அதோ உன் கையிலே நீ மறைச்சி வெச்சி இருக்கியே, பழுக்கக் காச்சின இரும்புக் கரண்டி, அதாலேயே சூடுபோட்டு-சாகற வரைக்கும் சுட்டு என்னெக் கொன்னுடு கொன்னுடு... நான் எதுக்கு உசிரோட இருக்கணும்-கொன்னுடு... கொன்னுடு” என்று ஆவேசம் வந்து அலறி அழுதவாறே கைகளை விரித்துக் கொண்டு அவள் எதிரே வந்து விழுந்தான் சிட்டி.

தங்கத்தின் கையிலிருந்த கரண்டி ‘ணங்’ கென சப்தித்துத் தரையில் விழுந்தது...

நிலை குலைந்து பதைபதைத்து மகனை வாரி மார்புடன் அணைத்தாள்.

அவள் ஸ்பரிசம் பட்டதும் பழுக்கக் காய்ச்சிய இரும்பே தன்மீது பட்டுவிட்டது போல் கதறியழுது துள்ளித் துடித்தான் சிட்டி.

அவனைக் கட்டியணைத்துக்கொண்டு கதறியழுத தங்கம், “என் கண்ணே!... இல்லேடா... எந்தக் குடிகேடியோ சொன்னதையெல்லாம் கேட்டு நம்பாதேடா... ராசா...” என்று தன் பாப காரியத்தை மறைத்துப் பொய் கூறிப் புலம்பியவாறே பாசத்தில் தவித்தாள்.

அவளது பொய்யைக் கேட்டதும் கோபாவேசம் கொண்ட மிருகம்போல் அவள் பிடியினின்றும் விலகி, பற்களைக் கடித்துக் கொண்டு அவள் முன் கையை நீட்டிக் கொண்டு கத்தினான் சிட்டி:

“பொய்யி.. பொய்யி.. நான் வயித்திலே இருக்கும் போது... அந்தக் கெய்விகிட்டே மருந்து வாங்கி நீ துன்னலேன்னு சத்தியம் பண்ணு... என் தலையிலே அடி, பாப்போம்.”

அவன் காலடியில் மண்டியிட்டு உட்கார்ந்திருந்த தங்கம்-தெய்வமாய் எதிரில் நிற்கும் தன் மகனிடம் இரண்டு கைகளையும் ஏந்தி, “சத்தியமாடா... மகனே” என்று சொல்ல வந்த பொய்யைச் சொல்ல முடியாமல முகத்திலும் மார்பிலும் அறைந்து கொண்டு அழுதாள்...

சத்தியம் செய்ய முடியாமல் தவிக்கும் தங்கத்தின் செய்கையும் தன்னைத்தானே அவள் அடித்துக்கொண்டு அழுவதையும் கண்ட சிட்டிக்கு அலமேலு தன்னிடம் சொன்னது உண்மையென்று உறுதிப்பட்டது. இவள் தன்னிடம் அழுவதும் புலம்புவதும் வெறும் மாய்மாலம் என்று கண்ட சிட்டி, இவளது கர்ப்பிணி கோலத்தையும், இவளது தசைக்கு ஆசைப்பட்டு அங்கு ஒதுங்கி அற்பமாய் நிற்கும் மாணிக்கத்தையும் கண்டு, இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து புரியும் இழிந்த காரியங்களும் நினைவுக்கு வர அங்கு நிற்கவே உணர்ச்சிகள் கசந்து குமட்ட, “தூ!”வென்று ஆக்ரோஷத்துடன் காறி உமிழ்ந்துவிட்டு விடுவிடெனத் திரும்பி நடந்தான்.

தன் பாப காரியங்கள் வெளிப்பட்டுப்போன குற்ற உணர்விலும் அவமானப்பட்டுப் போன தன் பெண்ஜென்மத்தின் தாழ்வுணர்ச்சியிலும். தாய்மையே மிதித்து நசுக்கப் பட்ட வேதனையுணர்விலும்

புலன்களொடுங்கிப் போன தங்கம்-பக்கத்தில் கிடந்த இரும்புக் கரண்டியை எடுத்து-இப்போது ஓர் உயிர் இருக்கிறது என்பதையும் பொருட்படுத்தாமல் தன் வயிற்றின் மீது ஒரே இழுப்பு இழுத்துக் கொண்டதும்...

மாணிக்கம் பாய்ந்து வந்து அவள் கையிலிருந்த கரண்டியை வலுக்கட்டாயமாய்ப் பிடுங்கி எறிந்தான்.

தங்கம் தரையில் கவிழ்ந்து பூமியில் நெற்றியை மோதி ரத்தக் காயமாக்கிக் கொண்டு அலறினாள்.

தன் பின்னால் நடக்கும் அந்தக் கோலங்களை எல்லாம் பொருட்டாய்க் கொள்ளாமல் வேகமாய் ஓட ஆரம்பித்தான் சிட்டி.

இத்தனைக்கும் காரணம் எதிர் வீட்டு அலமேலுதான் என்றுணர்ந்த தங்கம்,

“அடி சண்டாளி! என்னையும் எம்புள்ளெயையும் பிரிச்சு வுட்டுட்டியே நீ நல்லா இருப்பியா?... தெய்வம் உனக்குக் கூலி குடுக்காதா?... எரியற என் வயிறுமாதிரி எரிஞ்சிபோக மாட்டியா?” என்று முகத்தில் வருகின்ற ரத்தத்தோடு வயிற்றின்மேல் கரிந்து போன சூட்டுப் புண்ணோடு சபித்ததை வாசலில் கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கும்பலில் சற்று முன்னர்தான் வேலையிலிருந்து திரும்பி வரும் போது கலந்த-மன்னாரு கேட்டு விட்டு அலமேலுவை நோக்கிப் பாய்ந்தோடி வந்தான்...

“இன்னாமே இதெல்லாம்? ஒனக்கு எத்தினி வாட்டி ஊருக்கதெ ஒனக்கு வாணாம் வாணாம்னு சொல்லிக்கிறேன்” என்று உறுமிய மன்னாருவிடம் நடுநடுங்கியவாறு,

“நானின்னா செய்தேன்?” என்று மென்று விழுங்கினாள் அலமேலு. அவளது காதோடு சேர்த்து ஒரேப்பிடியாய்க் கூந்தலை இறுகப் பற்றி இழுத்தான் மன்னாரு.

“அவங்கிட்டெ அவளெப்பத்தி சொன்னியா, இல்லியா?” என்று பல்லைக் கடித்துப் போட்டவாறு அலமேலுவின் தலையைச் சிம்பினான்.

அவள் பதில் சொல்லாமல் திமிருவதைக் கண்டதும் மற்றொரு கையால் பேய் போல் அவள் முகத்தில் அறைந்தான்.. அலமேலு தன் வீட்டு வாசலில் போய் உருண்டாள். அதைத் தொடர்ந்து காலால் ஒருபலமான உதை... அலமேலு வீட்டுக்குள் ஒரு பந்துபோல் எகிறி விழுந்தாள்.

வெளியில் கிடந்த விறகுக்கட்டையை எடுத்துக்கொண்டு உள்ளே போய்க் கதவை ‘படீ’ரென அறைந்து மூடிக் கொண்டான் மன்னாரு...

வீட்டுக்குள் போய் மாணிக்கத்தின் மடியில் கிடந்த தங்கம்-உடம்பில் பட்ட ஒரு சூட்டுக்கல்ல-வாழ்க்கையிலும் உள்ளத்திலும் விழுந்த எத்தனையோ சூடுகளினால் கதறிக் கதறி அழுது துடித்துக் கொண்டிருந்தாள்.

## 7

அன்று இரவு இரண்டாவது ஆட்டத்துக்கு டிக்கட் விற்று விட்டு நான் மைல்தூரம் மவுண்ட்ரோடிலிருந்து நடந்து வர வேண்டியிருந்தது.

ஆமாம் எந்தத் தியேட்டரில் கூட்டம் அதிகம், எங்கே புதுப்படம் அதுவும் வெற்றிப்படம் ஓடிக் கொண்டிருக்கிறது என்று தேடிச் சென்றுதானே கன்னியப்பனும் சிட்டியும் சம்பாதிக்க வேண்டியிருந்தது!

பதினோரு மணிக்கு ஒரு முஸ்லீம் ரெஸ்டாரன்டில் பிரியாணி சாப்பிட்டு விட்டு இருவரும் திரும்பி வரும்போது சிட்டி கவலையற்று சுமைகுறைந்த நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருப்பதற்குக் காரணம் அவன் வீட்டைவிட்டு நிரந்தரமாக வெளியேறி விட்டான் என்பதுதான் என்று அறிந்திருந்த கன்னியப்பன் தனக்குள் சிரித்துக் கொண்டே சொன்னான்:

“சிட்டி... நானு இந்த மாதிரி எத்தினி தடவை வந்திருக்கேன் தெரியுமா ஊட்டெவுட்டு?..ம், இப்ப அப்பிடித்தான் தோணும் இனிமே அந்தப் பக்கமே போவக் கூடாதுன்னு, ஆனா அதுதான் நம்பளைவுடுமா? நாம்பதான் அதெ வுட முடியுமா...?”

“அதுக்கெல்லாம் வேற ஆளெப்பாரு... நானு இதுக்கு மின்னே, எத்தினியோ தடவை என்னை உசிருபோற மாதிரி அடிச்சப்பல்லாம் கூட எங்கம்மாவை வெறுத்துட்டு வந்திருக்கேனா?... இப்ப – சுத்தமா வெறுத்துப் போச்சிப்பா சத்தியமா, எங்கம்மான்னு சொல்றத்துக்கே மனசு கூசுது... ஒயிஞ்சிது சனின்னு நிம்மதியா இருப்பேன்

நீ வேணாம்ணா பாரேன்...” என்று சிட்டி எவ்விதமான படபடப்புமின்றி நிதானமாகப் பேசுகையில் ‘இவன் ஒரு வேளை திரும்பிப் போகவே மாட்டானோ?’ என்ற் சந்தேகம் பிறந்தது கன்னியப்பனுக்கு.

சிறிது தூரம் மௌனமாக நடந்தவாறிருந்த கன்னியப்பன் விரக்தி மிகுந்த குரலில் சொன்னான்: “இன்னாப்பண்றது? எல்லாப் பொம்பளைங்களுமே ஒலகத்திலே மோசம் தான் ஒயுங்கா ஒருத்தி கூட இருக்கமாட்டா... எங்கம்மா மாதிரிதான் ஒங்கம்மா கதையும்... யோசிச்சிப் பாத்தா நமக்குத் தெரிஞ்சவங்க எல்லாமே ஒவ்வொருத்தர். ஒவ்வொரு மாதிரி மோசமாத்தான் இருக்காங்க..” என்று கன்னியப்பன் கூறியதைக் கேட்டதும் சிட்டிக்கு வியப்பாய் இருந்தது.

ஓட்டேரியில் சிறிய வெற்றிலைப் பாக்குக்கடை வைத்து வியாபாரம் செய்யும் கன்னியப்பனின் நைனாவைச் சிட்டியறிவான். அவன் நைனா இல்லாத நேரங்களில் கடையில் உட்கார்ந்திருக்கும் அவன் தாயையும், பக்கத்திலிருக்கும் அவர்கள் வீட்டருகே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை தம்பிகளையும் சிட்டி பார்த்திருக்கிறான். அந்தக் குடும்பத்தில் பிறந்த கன்னியப்பன் தன்னோடு அவனை ஒப்பிட்டு ‘உங்கம்மா

மாதிரிதான் எங்கம்மா’ என்று சொல்லுவதைச் சிட்டியினால் புரிந்து கொள்ள முடியவில்லை.

கன்னியப்பன் தொடர்ந்து சொன்னான்:

“ஓட்டேரியில் கடை வெச்சிருக்கிறது எங்க நைனான்னு நெனச்சிக்கினு இருக்கியா?... அதான் இல்லே, எங்கநைனா...வேறே... நான் பாத்திருக்கேன்... நானு ஒரு வயசு கொயத்தையா இருக்கும்போது எங்கம்மா என்னைத் தூக்கிக்கினு இவுருகூட ஓடியாந்துட்டுதாம்.... அப்புறம் போவலையாம்... எனக்கு எப்பிடி தெரியும்னு கேக்கிறியா? எனக்கு அஞ்சாறு வயசு இருக்கும் அப்போ தெருவிலே வெளையாடிக்கினு இருக்கறப்போ ஒரு ஆளு வந்து பூந்திப் பொட்டலம் வாங்கிக் குடுத்துத் துண்ணச் சொன்னான். எனக்கு இன்னா கசக்குமா? அப்புறம் தெருக்கடோசியிலே நிறுத்தி வெச்சிருந்த ஜட்கா வண்டியிலே கொண்ணாந்து ஏத்திக்கினு ஊரெல்லாம் சுத்தனான்.. எனக்கு தமாஸா இருந்திச்சி! அப்புறம் என்கிட்டே ‘நைனா’ன்னு என்னெக் கூப்டு’ன்னு கேட்டான். நானும் கூப்டேன். எவ்வளவு ஆசெயா என் ரெண்டு கன்னத்திலேயும் முத்தம் குடுத்தான் தெரியுமா, அந்த ஆளு! ம்.. அப்பல்லாம் தெரியாது இந்த ஆளுதான் நம்ப அப்பன்னு எனக்கு. ஆனா அந்த ஆளு அப்பவே ‘இதெல்லாம் போயி உங்கம்மாக்கிட்டே சொல்லாதே’ன்னு சொன்னான். அதனாலே, இன்னா தப்போ.. சொன்னா ஏண்டா போனேன்னு அம்மா ஒதைக்குமோன்னு ஒன்னும் சொல்லிக்கிலே.. இப்டி அடிக்கடி வந்து அந்த ஆளு என்னெ இஸ்துக்கினு போவான். ஆனா சில நாள்லே வரமாட்டான். எனக்கு அந்த ஆளு வரமாட்டானான்னு இருக்கும். இன்னாத்துக்கு? துண்றத்துக்கு பூந்தி வாங்கித் தருவானென்னுதான் ஒரு நாளு நானே அவனைத் தேடிக்கினு பூட்டேன்... எங்கே பூட்டேன்?... தங்கசாலை ஜட்கா இஸ்டாண்டு இல்லே, அங்கேதான் அவன் என்னெ இஸ்துக்கினு வருவான்... எப்பிடியோ தேடிக்கினு வந்துட்டேன்... வந்தா, ஐயா ஸம்முனு வண்டியிலே படுத்துக் தூங்கிக்கினு இருக்காரு... வண்டியிலே ஏறி, “நைனா...நைனா”ன்னு

எய்ப்பினேன்’கண்ணெத் தெறந்து பாத்தான்! ‘யார்ரா அது’ன்னான்... ஒரே சாராய நாத்தம். ரெண்டு கண்ணும் நெருப்பு மாதிரி இருக்கு. எனக்கு அப்போ இந்தக் கருமமெல்லாம் இன்னா தெரியும். ‘நாந்தான் நைனா’ன்னேன்... ‘தெவ்டியாப் பையா, யாரை வந்து நைனான்னு கூப்டறே’ன்னு குதிரையெ அடிக்கற சாட்டையெ எடுத்து வெச்சாம் பாரு ஒரு அடி!... ‘யம்மா’ன்னு கூவனேம்பாரு! பக்கத்து வண்டிக்காரன் ஓடியாந்து என்னெத் தூக்கினான் இல்லேன்னா அந்தச் சாட்டையாலேயே அடிச்சிக் கொன்னு இருப்பானாம் அவன்! அந்த இன்னொருத்தன் தன்னோட வண்டியில் போட்டுக் கொண்ணாந்து எங்கம்மா கையிலே வுட்டான் என்னை.. அப்பத்தான் எனக்குத் தெரியும். அவந்தான் நம்ம அப்பன்னு. குடிச்சிப் பிடடா ராச்சஸனாம் அவன்! அதான் எங்கம்மா அவனெ வுட்டுட்டு ஓடியாந்திடுச்சி-அப்பாலே அந்த ஆளையே காணோம்! எங்கனாச்சும்ம போயிக் குடிச்சிக் குடிச்சே செத்திருப்பான் ஆளு சும்மா சொல்லக் கூடாது இவுரு-ஓட்டேரியிலே கடெ வெச்சிருக்கிறவரு- ரொம்ப நல்லவரு. இவருக்கு நான் வேற மத்த புள்ளிங்க வேற இல்லே... எனக்குத்தான் வரவர என்னா இருந்தாலும் நம்பளைப் பெத்த அப்பன் இவுரு இல்லியேன்னு ஒரு நெனப்பு வரும். அவுருகூட இல்லேன்னா எங்கம்மாவுக்கு வர்ர கோவத்துக்கு அது என்னெ அடிச்ச அடிக்கும் எப்பவோ உன்னெ மாதிரி நானும் ஒரேயடியா ஓடியாந்துட்டு இருப்பேன்.. இப்பக்கூட நாலு நாளு ஆச்சி, வூட்டுப் பக்கம் போயி... பாரேன் நாளைக்கி எங்க நைனா என்னெத் தேடிக்கினு வந்து நிப்பாரு மைதானத்திலே. அதுக்கோசரம் தான் ராவுலே தங்கறத்துக்கு ஒரு புது எடம் பாத்து வெச்சி இருக்கேன் இப்போ” என்று வழியெல்லாம் தன் கதையைச் சொல்லிக்கொண்ட வந்தான் கன்னியப்பன்.

கன்னியப்பனின் கதையைக் கேட்ட சிட்டிக்குத் திடீரென இதுவரை தோன்றாத ஒரு புதிய ஆவல் மனசில் முளைவிட்டது...

‘ஒரு வேளை எனது அப்பனும் ரொம்ப நல்லவனாக இருந்து இவளுடைய மோசமான குணத்தாலே, அவனை விரட்டி அப்பன் இல்லாத புள்ளையா தன்னை ஆக்கிட்டாளோ?’ என்ற சந்தேகத்தைத் தொடர்ந்து ‘எங்கப்பன் யாரு, அவன் நல்லவனோ, கெட்டவனோ-யாராயிருந்தாலும் புள்ளைன்னா ஒரு ஆசை இல்லாமலா போயிடும்... என்று முகமறியாத அந்தத் தகப்பனை எண்ணி ஒரு விசித்திரமான தவிப்பும் பாசமும் சுரந்தன சிட்டியின் மனத்துள்: “நீன்னாலும் உங்க நைனாவைப் பாத்திருக்கே-அவுரு அடிச்சிருந்தாலும்-ஒனக்கு பூந்தி வாங்கி குடுத்து முத்தம் குடுத்துக் கொஞ்சி இருக்காரே...ம்!” என்று பெருமூச்சு விட்டான் சிட்டி.

“ஆ! சாத்தான் வுடு! நம்பளுக்கெல்லாம் அப்பனாவது ஆத்தாளாவது? நம்ப கை காலு நல்லா இருந்திச்சின்னா பொய்ச்சிக்கலாம் அவ்வளவுதான். நாம்பளும் ரெண்டு துட்டு சம்பாதிக்கிறோம்னு தெரிஞ்சிதுன்னா அப்ப வருவாங்க ஆத்தா அப்பன் எல்லோரும்” என்று தனக்காக மட்டுமல்லாமல் பொதுவாகக் கூறினான் கன்னியப்பன்.

“தோ! இதான் நம்பப் புது எடம். நைட்லே நீ எங்கே சுத்தனாலும் இங்கே வந்துட வேண்டியது.. ரொம்ப சவுரியம். அந்த வாட்சுமேனைப் பீடி குடுத்து சினேகம் புடிச்சி வெச்சிக்கினேன்.. நாம்ப எத்தினி மணிக்கு வந்தாலும் கேட்டைத் தெறந்து வெச்சிருப்பாரு” என்று சிட்டி பின்தொடர அந்தப் பார்க்குக்குள் நுழைந்தான் கன்னியப்பன். “இது இன்னாப்பா நம்ப பேட்டையிலேதானே இருக்குது.. உங்க நைனா கண்டு புடிச்சிட மாட்டாரா?” என்று கேட்டான் சிட்டி.

“ம்ஹு_ம்... அவருக்கு மைதானம் ஒரு எடம் தான் தெரியும்...” என்று சொல்லிக்கொண்டு ஒரு பூந்தொட்டிக்குப் பின்னால் சுருட்டி வைத்திருந்த காகித மூட்டையைக் கொண்டு வந்து பெஞ்சியின்மீது போட்டு அதன் மேல் சுற்றியிருந்த சணல் கயிற்றைப் பிரித்தான் கன்னியப்பன்.

“இது இன்னாத்துக்குத் தெரியுமா? குளிரு வர்ர வரைக்கும் தலகாணி. குளிரிச்சின்னா போத்திக்கிறது..” என்று கூறிப் பெரிய பெரிய சினிமாப் போஸ்டர்கள் சிலவற்றைப் பிரித்துக் காட்டினான்.

“நானு தெனம் இவளோடதான் ராத்திரியிலே படுத்துக்கறது” என்று அந்தப் போஸ்டரிலிருந்த ஒரு பிரபல நடிகையின் உருவத்தைக் காட்டிக் கன்னியப்பன் சிரித்தபோது அந்த ஹாஸ்யத்தைச் சிட்டியினால் ரசிக்க முடியவில்லை.

இருவரும் ஆளுக்கொரு பெரிய போஸ்டரை உடம்பில் சுருட்டிக் கொண்டு மீதியைச் சுருட்டித் தலைக்கு வைத்து அருகருகே இருந்த இரண்டு பெஞ்சுகளில் படுத்துக் கொண்டனர்.

இருவருக்கும் தூக்கம் வரவில்லை.

கன்னியப்பன் மல்லாந்து படுத்துப் பீடியைப் புகைத்து வானத்தில் ஊதியவாறே இரண்டு கைகளையும் கழுத்துக்குக் கீழே சேர்த்தவாறு ஏதோ யோசனையில் ஆழந்திருந்தான்.

கன்னியப்பன் சினிமா போஸ்டரில் இருந்த நடிகைகையக் காட்டிக் கேலி வார்த்தைகள் சொன்னபோதே சிட்டிக்குக் கேட்கத் துடித்த ‘நீலாக் குட்டி விஷ’யத்தை- ‘தனக்கு ஏன் இந்த அசிங்க விஷயங்களெல்லாம்’ என்று சிட்டி தவிர்த்துக் கொண்டபோது, அந்த நீலாக் குட்டி விஷயத்தைத் திடீரெனக் கன்னியப்பனே கிளப்பினான்: “ஏய் சிட்டி... உனக்குத் தெரியுமா நம்ப மைதானத்திலே முந்தியெல்லாம் சாணி பொறுக்க வருமே நீலாப் பொண்ணு?...”

“ம்... தெரியும்” என்று புரண்டு படுத்தான் சிட்டி.

“ம்... இப்ப அநியாயமா கெட்டுப்புட்டா அவ ஆத்தாக்காரியாலே.. ரீகல் டாக்கிஸ் கிட்டே சுத்தற பொறுக்கிப் பசங்க கிட்டே எல்லாம் ரெண்டணாவும் நாலணாவும் வாங்கிக்கினு..” என்று என்னவோ சொல்ல வந்த கன்னியப்பனின் பேச்சில் இடை மறித்து “நீ மட்டும்

இன்னா ரொம்ப யோக்கியமோ?” என்று சிடுசிடுத்தான் சிட்டி.

“உங்கையிலே யார்ரா சொன்னது. என்னெப் பத்தி?’ என்று துணுக்குற்று எழுந்து உட்கார்ந்தான் கன்னியப்பன்.

ஒருக்களித்துப் படுத்திருந்த சிட்டி, இன்னும் சற்றும் புரண்டு பெஞ்சின்மீது கவிழ்ந்து படுத்த நிலையில் தலையை நிமிர்த்திக் கன்னியப்பனைப் பார்த்து “எங் கையிலே வந்து சொல்லணுமா? எல்லாரும்தான் பேசிக்கிறாங்க... நீ அடிக்கடி அந்த நீலாப் பொண்ணு வூட்டுக்கு ஒடறேன்னு...” என்றான்.

“சிட்டி பொய் சொல்லாதே! கபாலி பையன்தானே சொன்னான்’ உன்கிட்டே?” என்று சிரித்துக்கொண்டே கேட்டான் கன்னியப்பன்.

“ஆமா!”

“இன்னான்னு சொன்னான்?”

“இன்னா சொன்னான்-அவ அம்மா ஒரு லோலாயி. மவ காரியெ வெச்சித்தான் அவளே பொயப்பு நடத்தறான்னான்...”

“ஆமாண்டா சிட்டி! எனக்கு இம்மாநாளு தெரியாது! முந்தா நாளுதான்-நானே பாத்தேன்... ‘சீ’ன்னு வந்துட்டேன்..” என்றான் கன்னியப்பன். சிட்டி மௌனமாயிருந்தான். பிறகு திடீரென்று ஒரு பெரு மூச்சுடன் சொன்னான்: “ம்... எங்க எங்க எஜமான், சிகரெட்டு பொறுக்கனத்துக்கே என்னெப் பாத்து அப்பிடியே அயுதுட்டாரு.. இதெல்லாம் தெரிஞ்சுதானா?... ஐயோ!” என்று அதைச் சொல்லி, அதை எண்ணி மனம் பதைத்தான்.

“இல்லேடா சிட்டி... நானும் இனிமே ஒயிங்கா ஆயிடறதுன்னு முடிவு பண்ணிப்பிட்டேன்.. இந்தப் பீடியைத தான் வுட முடியலே...” என்று நொந்து கொண்டான் கன்னியப்பன்.

“பீடி குடிக்கறதிலே உனக்கு ஒரு ருசி ஏற்பட்டுட்டா அது உன் தப்பா?” என்று தன் எஜமானர் தனக்குச் சொன்னதை திருப்பிச் சொல்லிக் கொண்டான் சிட்டி.

“டே சிட்டி! நாம்ப இப்பிடியே இருக்கக்கூடாது நீ பேசாம உங்க எஜமான் கிட்டேயே போயி மறுபடியும் வேலைக்குச் சேந்துடு.. முடிஞ்சா எனக்கும் வேலை பாத்துக்குடு.. நாம நால்லாயிடலாம்...” என்றான் கன்னியப்பன்.

“ம்ஹ_ம்! நான் செத்தாலும் செத்துப் போவேனே ஒழிய, அவுரு மூஞ்சியிலே போயி என்னாலே முழிக்க முடியாது... அவுரு, ரொம்பப் பெரிய-தெய்வமாதிரி ஒரு தாய்க்குப் பொறந்த மகன்” என்று சொல்லித் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்ள விருப்பமில்லாமல் தொண்டை அடைக்க மௌனமானான் சிட்டி.

தனக்குக் கிடைக்காத பதவி போல் கிடைத்த தொண்டரின் உறவு பறிபோன துயரத்தில் அவன் கண்களில் திடீரெனப் பெருகி நிறைந்து வழிந்த கண்ணீரைப் போர்த்தியிருந்த சினிமாப் போஸ்டரில் அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

“நாம்ப எல்லாம் ஏண்டா பொறந்தோம்?” என்று பெஞ்சியின்மீது உட்கார்ந்திருந்த கன்னியப்பன் விரக்கியோடு முணகிக்கொண்டே போஸ்டரை இழுத்துப் போர்த்தியவாறு நன்றாகப் படுத்தான்!

## 8

தங்கம், தானே தன் வயிற்றில் போட்டுக்கொண்ட சூட்டுப் புண் ஆறிவிட்டது. ரவிக்கை முடிச்சுக்குக் கீழே, இடுப்புச் சீலைக்கு மேலே கரிய மேனியில் நீல நிறத்தில் நீண்டு விழுந்த அந்த வடு மாணிக்கத்தின் பார்வையில் பட நேரும் போதெல்லாம்- அந்தத் தழும்புக்கும் கீழே மேலெடுத்துத் தெரியும் அவள் வயிற்றுக்குள் இருக்கும் ஒரு சிசுவுக்குத் தான் எந்த அளவு காரணமோ அந்த அளவு இந்தத் தழும்புக்கும் தானே காரணம் என்று தோன்றியற்று.

சிட்டி வீட்டை விட்டுப் போன இந்த ஒரு மாத காலமாய்த் தங்கத்துக்கு வாழ்க்கையில் சுவையில்லை பழைய கலகலப்பு இல்லை. மாணிக்கத்தோடு கூட அவள் அதிகம் பேசுவதில்லை. தன் உடம்பிலும் மனத்திலும் திடீரென மூண்டு தகித்த ஒரு கேவலமான வெறிக்குப் பணிந்து, ஒரு ஆணின் உறவு வேண்டும் என்ற துடிப்பில் மாணிக்கத்தை வலை வீசிப் பிடித்து, தன் மகனை வஞ்சித்து, அந்த வஞ்சகத்துக்குத் தண்டணையாக அன்பிற்குரிய அந்தப் பிள்ளையை இழந்து விட்டதன் மூலம் அவள் மனத்தில் ஒரு குற்ற உணர்வும், தன்னைப் பற்றி ஓர் அற்பமான எண்ணமும் ஒரு பக்கம் அரிக்க மகனையிழந்த சோகத்தின் வெறுமை ஒரு பக்கம் ஹிருதயத்தையே அழுத்த அவள் எப்படியோ வாழ்ந்து வந்தாள்.

திடீரெனச் சில சமயங்களில் அவன் நினைப்பாள்

‘நான் கெட்டுப் போயிட்டேன். இந்த ஆளைப் பாத்து ஆசைப்படறத்துக்கு முந்தி எவ்வளவு சந்தோசமா, எவ்வளவு கௌரவமா, எவ்வளவு நிம்மதியா இருந்தேன். சிட்டி முகத்தைப் பார்த்தே, அவன் பொறுப்போடு சம்பாதிச்சித் தர்ர பணத்தைப் பெருமையோடு கை நீட்டி வாங்குகையில் ‘அம்மா நீ வேலைக்கே போகக் கூடாது” என்று அவன் சொல்லும்போது புத்திரபாசம் மிகுந்து சிட்டியை அணைத்து முத்தம் சொரிந்த நாளில், கிட்டிய அந்தச் சுகத்தையும், இன்பத்தையும், பூரிப்பையும் விட-ரகஸியமாக இருட்டில் யாருக்கும் தெரியாமல் இந்த மாணிக்கத்தை அசிங்கமாகக் கட்டி புரளும்போது என்ன சுகத்தை, எந்த இன்பத்தைக் கண்டு விட்டேன். எனக்கு ஏன் புத்தி இப்படிப் போயிற்று?’ என்றெல்லாம் நினைக்கையில் அந்தக் காரியங்களுக்காகத் தன்னை முற்றாக நிராகரித்து வெறுத்துப் போய்பிட்ட அந்த மகனின் மான உணர்ச்சியை அவளது தாய்மை யுள்ளம் எண்ணியெண்ணிப் பூரித்தது. அதே போழ்தில் அந்த இழப்பைத் தாங்க முடியாமல் அவள் மனம் தவியாய்த் தவித்ததும் உண்மை.

வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வேண்டும் என்று இருந்த பிடிப்பை உதறிக்கொண்டு, ஏற்படுத்திக் கொண்ட புதிய

பிணைப்பில் மனமில்லாமல் வலுகட்டாயமாய்ச் சிக்கிக் கொண்டது போலிருந்தது அவளுக்கு. அதனால் மாணிக்கத்தின் மீது அவளுக்கு அன்பில்லை வெறுப்பு வந்துவிட்டது என்று அர்த்தமல்ல. அவனோடு-அவள் அநுபவித்த சுகம் அது எவ்வளவு கேவலம் என்று தோன்றியபோதிலும் சலித்து விட்டது என்றும் அர்த்தமல்ல. தனக்கு இருக்கும் அன்பை அவனிடம் முன்போல் காட்டிக்கொள்ள முடியாமல், அவன் தரும் அன்பையும் சுகத்தையும் ஆர்வத்தோடும் ஆவேசத்தோடும் முன்போல் ஏற்றுக்கொள்ள முடியாமல் அவளது உள்ளுணர்வில் ஒரு காயம் ஏற்பட்டு அது உறுத்திக் கொண்டிருப்பது போன்ற ஒரு வேதனையோடு- அந்த வேதனையைச் சகித்துக்கொண்டே நிர்ப்பந்தமாய் தானே தன்னை அவன் கட்டில் பிணைத்துக்கொண்டிருப்பதை அவன் உணர்ந்து விடக் கூடாது என்ற ஜாக்ரதை உணர்வோடு-அவள் இந்த ஒரு மாத காலமாய் வாழ்ந்து வந்தாள். அவள் எவ்வளவுதான் தனது உணர்ச்சிகளை மறைத்துக்கொண்ட போதிலும் மாணிக்கத்துக்கு அங்கு நிலவும் சூழ்நிலையில் தங்கள் உறவின் தன்மையை அடிக்கடி உணர முடிந்தது.

அவள் மகனைப் பிரிந்த சோகத்தில் மனமின்றித் தன்னோடு வாழ்கிறாள் என்று தோன்றியது அவனுக்கு. அவளைத் தேற்றவும், முன்போல் தன்னோடு அவள் சிரித்து விளையாடிப் பேசி மகிழ்ந்திருக்கச் செய்யவும் அவன் உள்ளூர விரும்பினான் முன்கோபக் காரியான தங்கம் எப்போது எந்தவிதமான மன உணர்வில் என்னமாதிரி நடந்துகொண்டு ஏதாவது சொல்லி விடுவாளோ, நொந்துவிடுவாளோ என்று அஞ்சி அவனும் மௌனமான அவளது சோகத்தில் பங்கு பெற்றிருப்பவனாய் அவளை அதிகம் நெருங்காமாலும் வார்த்தையாடாமலும் விலகி விலகி நடந்துகொண்டான்.

இரவில் எப்போதாவது அவனது இழுப்புக்குப் பணிந்து மகிழ்வூட்டும் நேரத்தில் அவள், தானும் மகிழ்ந்திருப்பதைக் காட்டிக் கொள்ளும் நடவடிக்கையினால் மட்டும் அவளை அவன் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்பில்லாதிருந்தது.

‘அதையும் தவிர்த்திருந்தால் அவனுக்குத் தன்னிடம் என்ன பந்தம் நிலைக்கும்’ என்று எண்ணிய தங்கம், அது மட்டுமே போதும் என்று நினைக்காவிட்டாலும், அவ்விதம் நினைத்தவள்போல் இருப்பதாகவே அவனுக்குத் தோன்றியது.

மகனைப் பிரிந்ததற்குக் தானே காரணம் என்று தங்கம் கருதியபோதிலும், மாணிக்கம் தன்னை அவள் காரணமாக்கி வருந்துகிறாள் என்று எண்ணினான். அதில் நியாயமிருக்கிறது என்று கருதி-கடந்த ஒரு வார காலமாய் அவளே வந்து முன்போல் தன்னிடம் பழகாதவரை, தானும் கௌரவமாய் விலகி இருப்பது என்ற முடிவில் காலையில் எழுந்து அவள் படைப்பதை உண்டு, பகலெல்லாம் தொழிலில் முனைந்திருந்து மாலையில் வந்து வீட்டுச் செலவுக்குப் பணம் தந்து விட்டு, இரவில் சோறுண்டு உறங்கிச் செல்வதற்கான ஒரு வாடிக்கை இடம்போல் தங்கத்தின் வீட்டைப் பயன்படுத்திக்கொண்டு அவள் மனமாற்றத்துக்குக் காத்திருந்தான் அவன்.

ஆரம்பத்தில் மாணிக்கத்தின் இந்த மாற்றத்தை அதிகம் பொருட்படுத்தாமல் பெரிதாய்ப் பாராட்டாமல் இருந்த தங்கம் ஒரு வாரத்துக்கு மேல் இந்தப் போக்கு நீடிப்பது கண்டு துணுக்குற்றாள்.

கன்னிப் பருவத்தில் ஒருவனைக் கண்டு பழகி, அதன் விளைவால் வாழ்க்கையிலேயே ஆண் உறவை வெறுத்து வாழ்ந்து வந்த தங்கம் சில மாதங்களுக்கு முன் தன்னுள் நீறு பூத்து அவியாமல் மறைந்து கிடந்த உணர்ச்சி நெருப்பை மாணிக்கம் விசிறி விடவே, எதையும் லட்சியம் செய்யாமல் எரிகின்ற தன் உணர்ச்சிகளுக்கு இரையாகிப் போன பிறகு இந்தச் சில மாதங்களில் அணை யுடைத்துப் பாயும் உணர்ச்சிப் பெருக்கின் இன்ப வேகத்தை அனுபவித்துப் பழகிவிட்டதனால் இப்போது தன்னைப் புறக்கணித்திருக்கும் மாணிக்கத்தின் மாறுபாட்டைச் சில நாட்களுக்குமேல் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

வலியச் சென்று பெறுவதைவிட, வலிய வந்து தருவதைப் பெற்று மயங்குவதே சுகங்களிலேயே தலையாயது என்று அனுபவத்தாலும், பண்பிலும் பயின்றிருந்த தங்கம் நேற்று இரவெல்லாம் தூக்கம் வராமல் வாசலில் விரித்த பாயில் புரண்டு கொண்டிருந்தாள்.

அந்த வாசலில் படுத்திருந்த அனைவரும் உறங்கிக் கொண்டிருக்கும் அந்த நடு நிசியில், எதிர்வீட்டு அலமேலுவும் அவள் புருஷனும் பாயைச் சுருட்டிக்கொண்டு வீட்டுக்குள் சென்று மறைந்ததை உணர்ச்சித் தகிப்பால் துடித்துக் கொண்டிருந்த தங்கம் கண்டு மனத்தோடு உடலையும் முறுக்கிக்கொண்டு புரண்டு படுத்தாள். சற்றுமுன் தூங்கிக் கொண்டிருக்கும் அலமேலுவை ரகசியமாயத் தட்டி யெழுப்பிக் கொண்டு போன மன்னாருவைப் போல் மாணிக்கமும் வந்து தன்னை எழுப்பமாட்டானா என்று ஏங்கிப் பொருமியது தங்கத்தின் உள்ளம் அந்த ஏக்கப் பெருமூச்சோடு திரும்பிப் படுத்த தங்கம் தன்னருகே சில அடி தூரம் தள்ளி கையையும் காலையும் அகல விரித்துப் போட்டு ஆனந்தமாய் உறங்கிக்கொண்டிருக்கும் மாணிக்கத்தின் சயனத்தைக் கண்டு, நிஜமான தூக்கமா, தூங்குவதுபோன்ற பாசாங்கா என்ற சந்தேகமும் கொண்டாள். மாணிக்கத்தால் எப்படி இவ்வளவு அமைதியாய் இவ்வளவு கட்டுப்பாடாய் இத்தனை நாட்கள் இருக்க முடிகிறது என்ற வியப்பும் அவளுக்கு ஏற்பட்டது. அகல விரித்துப் போட்டிருந்த அவன் கைகளில் ஒன்று தங்கத்தின் பாய்வரை நீண்டு கிடந்தது. மன்னாரு அலமேலுவைத் தட்டி யெழுப்பியதுபோல் தானே மாணிக்கத்தை எழுப்பலாமா என்று தோன்றிய தனது எண்ணம் அவளுக்கு ரொம்ப அசிங்கமானதாகப் பட்டது எனினும், அவனை யெழுப்பியாக வேண்டும் அவன் எழவேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. எத்தனை இரவுகளில் இந்த நினைப்புகள் இல்லாமல், அல்லது அசதி மேலிட்டால் கண்கள் உறங்கிய நேரத்தில் வானம் சில மழைத் துளிகளைச் சிதறி அவர்களை எழுப்பி உள்ளே ஓடச் செய்திருக்கிறது... அப்போதெல்லாம் அந்த மழைத் துளிகள் அவர்களை மட்டுமா, அவர்களது உள்ளங்களையுமல்லவா

தட்டி எழுப்பி முடுக்கி இயங்க வைத்திருக்கிறது. இப்போது அந்த மாதிரி சில மழைத் துளிகள் விழாதா என்று சாகபட்சிபோல் வானத்தை ஏக்கத்துடன் அண்ணாந்து பார்த்தாள் தங்கம். பஞ்சுத் திட்டுப்போல் எங்கோ மிதக்கும் மேகத்தின் சுவடே இல்லாத வானவெளியில் மூளிநிலாவும் மினு மினுக்கும் நட்சத்திரக் கூட்டமும் கண் நிறைந்து தெரிந்த காட்சி அவளுக்கு ரசிக்கவில்லை அப்போது.

அவனைத் தானெழுப்பவும் முடியாமல், அவன் தன்னை யெழுப்பவும் வராமல் அவனைப் போல் நிம்மதியாய்த் தான் உறங்கவும் முடியாமல் இரவு வீணாய்க் கழிவது அவளது உணர்ச்சிகளுக்குச் சகிக்க முடியாத சூன்யமாய் இருந்தது. அதிலிருந்து விடுதலையடைய ஒரு வழி அவளுக்குத் தோன்றியது. தன் பாயருகே நீண்டு கிடக்கும் மாணிக்கத்தின் வலது கரத்தின் மேல் தூக்கத்தில் புரள்கின்ற மாதிரி நகர்ந்து உருண்டு தன் கரத்தைக் கிடத்தினாள். அப்போதும் அவனிடம் சலனமில்லை. பிறகு இன்னும் சற்று வெட்கத்தை விடுத்த துணிச்சலுடன் அவன் கையைப் பற்றிப் பிடித்துப் பதனமாய் அழுத்தினாள். அப்போதும் அயர்ந்து உறங்கும் மாணிக்கம் விழிக்காதது கண்டு அவளுக்கு ஆத்திரம் வந்தது. நன்றாக நகம்பதியக் கிள்ளிவிடலாமா என்று கூடத்தோன்றியது. ஆனால் தோன்றிய எண்ணத்திற்கு மாறாக அவன் கையை முகத்துக்கு நேரே இழுத்து சப்தமில்லாமல் முத்தமிட்டு மார்போடு சேர்த்து அணைத்துக் கொள்ள தான் அவளால் முடிந்தது. ஆ! அந்த ஸ்பரிசத்தில்தான் என்ன சுகம்! என்ன ஆறுதல்! அவன் இப்போது விழித்துத் தன்னை எழுப்பாதது குறித்து அவளுக்குக் குறையில்லை அந்த ஸ்பரிச சுகத்திலேயே, அதில் விளைந்த மெய் சிலிர்ப்பிலேயே இதம் கண்டு கண் மூடித் துயிலில் ஆழ்ந்து போனாள் தங்கம்.

மறு நாள் காலை.

மாணிக்கம் வழக்கம்போல் எழுந்து பல் விளக்கி முகம் கழுவிக் கொண்டபின் கூட்டிலிருந்த குருவிகளுக்குத் தீனி வைத்துக் கொண்டிருந்தான். அவன் குருவிகளுக்குத் தீனி

வைத்து முடிப்பதற்குள் வட்டிலைத் தேய்த்து அவனுக்குப் பழையது வைத்துச் சாப்பிட அழைக்கின்ற தங்கம் இன்று வழக்கத்திற்கு மாறாக, வாசலிலிருந்து எழுந்து வீட்டுக்குள் வந்து சுவரோரமாய் முடங்கித் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்ட மாணிக்கம், குருவிகளுக்குத் தீனி வைத்து கூண்டை அடைத்தபின் அவளருகே வந்து நின்று தூங்கிக் கொண்டிருக்கும் தங்கத்தை சிறிதே உற்றுப் பார்த்தான்... இன்று காலை, தான் துயில் களையும்போது தன் கரத்தைப் பற்றி மார்போடு அணைத்துக் கொண்டிருந்த தங்கத்தின் அன்பு அவன் நெஞ்சை நிறைத்தது. அப்போது அவளருகில் அமர்ந்து அவளை அன்புடன், 'இவ்வளவு நேரம் இப்படித் தூங்குகிறாளே..உடம்புக்கு என்னவோ ஏதோ, என்ற அக்கறையுணர்வுடன் அவளை மெல்ல எழுப்பினான் மாணிக்கம்

"தங்கம்.. தங்கம்... இன்னா? இன்னக்கி இம்மாந்தூக்கம்?" என்று அவள் தோளை உலுக்கி எழுப்புகையில் இந்த ஒரு வார காலமாய் இல்லாது இப்போது நேர்ந்த ஸ்பரிஸ உணர்வில் அவனுக்கே உடலில் ஒரு சிலிர்ப்பு விளைந்தது.

அவளும் விழிப்புற்றாள்! விழிக்கும்போதே, அவன் தன்னை எழுப்பினான் என்ற நினைப்பில், தன் தோளின்மீது இருக்கும் அவன் கைகளில் மேல் தன் கைகளை வைத்து லேசாக நெறுக்கி, அந்தச் சுகத்தில் ஏற்பட்ட கிளுகிளுப்பில், முகத்தில் விளைந்த புன்னகையோடு, மோகத்தில் கிறங்கிய கண்கள் சிவந்து சிறங்கணிக்க அவனைப் பார்த்தான் தங்கம்.

அவளது பார்வையில், அவளது அங்கங்களில் முகிழ்ந்த பூரிப்பில், அவளது முகத்தில் மலர்ந்த புன்னகையில், அவளது உடலில் ஏற்பட்ட நெளிவுகளில் எல்லாம் அவளது உணர்ச்சிகளைப் புரிந்து கொண்ட மாணிக்கம், அதே உணர்ச்சிக்குத் தானும் ஆட்பட்டு அவள் தோளைப் பதனமாய் அழுத்தியவாறே கேட்டான்: "இன்னா ஒடம்புக்கு? இம்மா நேரம் அடிச்சிப் போட்டாப்பலே தூங்கறே;"

"ஹ்ம்-!" என்றொரு களுக்குச் சிரிப்புடன் கைகள் இரண்டையும் தலைக்குமேல் நீட்டி, மல்லாந்து படுத்தநிலையில் கால்களை விறைத்து, உடலை முறுக்கி சோம்பல் நெறித்தவாறே.

"அடிச்சிப் போட்டாப்பலேயா?... அடிச்சிப் போடாததனாலேதான்... ராத்திரி பூராத் தூக்கம் வரலே..." என்றாள் தங்கம். அவள் தன் கால்களை நீட்டி விறைந்த வேகத்தில் காலிற்பட்ட வாசற் கதவு நன்றாக மூடிக் கொண்டது.

சிட்டி போன நாள்முதல் ஏற்பட்ட மன உளைச்சலில் சோர்ந்து கிடந்த தங்கம் இந்த ஒரு மாதத்தில் இப்போது தான் முதன் முறையாக இவ்வளவு கலகலப்பாய்ச் சிரிக்கிறாள்!...

"ஏன்? உன்னெ அடிச்சிப் போடணுமா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டவாறு, கதவு மூடி இருக்கிறது என்ற தெம்பில் அவள் அருகே குனிந்தான் மாணிக்கம்.

"ஸ்...ஐயோ! அதுக்குச் சொல்லலே... நீ என்னெ வேலைக்கிப் போக வேணாம்னு வூட்லேயே சோத்தெத்துண்ணுட்டுசொம்மா கெடக்க வெச்சிட்டே சோம்பேறித் தனமா இருக்குதுன்னு சொன்னா நீ என்னமோ நெனச்சிக் கிட்டு வம்புக்கு வர்ரியே?" என்ற தன் முகத்தருகே நெருங்கிய மாணிக்கத்தை தடுக்க மனதாரப் பொய்யுரைத்து- ஆனால் செயலில் அவன் கழுத்தைத் தன்கரத்தால் வளைத்து இழுத்து அணைத்தாள் தங்கம்.

அவனும் தன்னை மறந்து அவள் அரவணைப்பில் ஒன்றிய போது திடீரெனத் தங்கம் அவனை விலக்கித் தள்ளினாள். அவன் அஞ்சி விலகியபோது அவள் முகத்தில் பெண்மையின் வரட்டுத் தனமும், அசட்டுத் தனம் மிகுந்த ஒரு போலித் தனத்தையுமே கண்டான்... அவனது பதைப்பையும் உணர்ச்சிகளில் உச்சத்தில் நிலைதடுமாறிய அவனது நிலையையும் கண்டு மகிழ்ந்த தங்கம் ஒரு புன்னகையுடன்.

“கதவை அழுத்தி மூடி நாதாங்கிப்போடு... இந்த ஆயா வந்தாலும் வந்து தொலையும்” என்று கூறியபோது தான் மாணிக்கத்தால் தன் நிலைகுலைவைச் சமாளித்துக் கொள்ள முடிந்தது.

அவன் கதவைத் தாழிட்டுத் திரும்பியபோது- வலை விரித்து மறைந்திருக்கும் வேட்டைக்காரனைப் போல் தனது மனத்துடிப்பை எல்லாம் மறைத்துக் கொண்டு தன் உள்ளமே வேடனாயும் தானே ஒரு வலையாயும் கிடந்த தங்கத்தின் உடம்பில்-ரவிக்கை முடிச்சுக்குக் கீழே, இடுப்பு சீலைக்கு மேலே கரியமேனியில் நீல நிறத்தில் நீண்டு விழுந்த அந்தத் தழும்பு அவன் பார்வையில் பட்டது...

‘அது எவ்வளவு அழகாயிருக்கிறது’ என்று தோன்றியது அவனுக்கு. அவள் அருகே அமர்ந்து அந்தத் தழும்பில் முகம் புதைந்து அவன் முத்தமிட்டபோது தங்கம் அந்த வடுவில் மறைந்திருக்கும் துயரத்தை இழப்பை மறந்து உடல் புல்லரிக்கக் கிளுகிளுத்துச் சிரித்தாள்...

ஆம்! ஒரு மாதமாய் சிரிக்க மறந்திருந்ததை எல்லாம் ஈடுசெய்வதுபோல், அந்த இழப்புகளுக்கு மாற்றம் காண்பது போல் தனக்கிருக்கும் ஒரே புதையலைக் கொள்ளை யடித்து அநுபவிக்கும் வெறியில் அவள் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள்.

தன்னை மறந்த லயத்தில் தனக்கு அவனை இரையாக்கித் தானே அவனுக்கு இரையாகி இருவருமே ஒரு வெறிக்கு பலியாகித் தீர்ந்த பின் அந்த வெறுந்தரையின் சில்லிப்பில் வெற்றுடலோடு கிடந்த நேரத்தில் அவளுக்கு மெள்ள மெள்ள பிரக்ஞை வந்தது. வெளியுலகின் நினைப்பால் கதவுக்கு வெளியே நடமாடும் மற்றக் குடித்தனக்காரர்களின் கலகலப்பும் அவள் செவிப்புலனுக்குப் புலனாயின.

காலை நேரத்தில், இருள் என்ற திரையில்லாத பகலொன்னும் வெட்ட வெளிச்சத்தில் தான் இப்படியானதை உணர்ந்த போது அவளுக்கே தன்னை

நினைத்தோர் அவமானம் பிறந்து மனமும் உடலும் கூசிக் குறுகின.

உடைகளை வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். உட்கார்ந்த நிலையில் அவளருகே அந்த மாடம்தான் முதலில் பார்வையில் பட்டது. அதில் கிடக்கும் சிட்டியின் பொருள்கள் ‘அவன் இல்லை- இனிமேல் நீ எப்படியும் சீரழிந்து போகலாம்’ என்று உணர்த்துவது போல் இருந்தது. மூளியாய்ப் போன அந்தச் சீப்பும் அதனருகே சிட்டி தனக்கென வாங்கி வந்த அந்தக் கையகலக் கண்ணாடியும் அதில் மானத்தைக் காக்க முயன்ற சிட்டி காணக் கூசும் தன் முகமும் அவள் பார்வையில் பட்டபோது...

“தூ!” வென தனது பிம்பத்தை தானே காறி உமிழ்ந்து கொள்ள வேண்டும் என்று தோன்றியது தங்கத்துக்கு.

வெறியடங்கிய அந்தச் சோர்வில் பிறந்த ஒரு விவேகம் தன்னையே நோக்கி ‘நீ ஒரு கடைகெட்ட மிருகம்’ என்பதற்கு இதோ இப்போதிருக்கும் இந்தக் கோலமே சாட்சி என்று இடிந்துரைத்தது...

‘சீ! நான் எப்படி இப்படியானேன்?’ என்று புனிதமான எதையோ இழந்து அசிங்கமான எதற்கோ அடிமைப்பட்டுக் கறைபட்ட தன்னைவிட அசிங்கமும் ஆபாசமுமான ஒரு பிறவி இருக்கமுடியாது என்ற சுயவெறுப்பில் அவள் உடலெங்கும் ஒரு எரிச்சலும் மனமெல்லாம் ஒரு கசப்பும் நிறைந்து நினைவே குமட்டியது!

இந்தக் கேவலமான இச்சைக்கு ஆட்பட்டல்லவா மதிப்பில்லா மாணிக்கம்போல் எனக்குக் கிட்டிய நான் மகனை இழக்க நேர்ந்தது என்று நினைக்கையில் அவள் கண்களில் கண்ணீர் சுரந்தது.

இந்த ஆசைதான், இந்த சுகம்தான் அநுபவித்தபின் எவ்வளவு அற்பமாய் எவ்வளவு இழிந்ததாய் இருக்கிறது என்பதை அவள் பூரணமாய் உணர்ந்து தன்னையே கிழித்து தன் உடலையே சிதைத்துக் கொள்ள வேண்டும்போல் குன்றிக் குமுறினாள்.

இன்பம் என்று அனுபவித்த தனக்கே இப்படி இருக்கும் போது, இதன் இழிவுணர்ச்சியை, அவமானத்தை மட்டும் அநுபவித்த அந்த மானஸ்தனுக்கு எப்படி இருந்திருக்கும் என்று தன் மீது உயிரையே வைத்திருந்த சிட்டியின் நினைவு அவள் நெஞ்சில் நிறைந்து கனத்து தாங்கொணா வேதனையைப் பெருக்கிற்று.

அவள் திடீரென விம்மி விம்மி முகத்தை மூடிக்கொண்டு குமுறியழுதாள்.

பக்கத்தில் வெறுந்தரைதரும் சில்லிப்பில் உடலைப் புரட்டிப் புரட்டிச் சுகங்கண்டு கொண்டிருந்த மாணிக்கம் மனம் பதைத்து எழுந்தான்.

“தங்கம் இன்னா?... இன்னாத்துக்கு வருத்தப்படறே?’என்று பதறி அவளைத் தேற்றுவதற்காக அவன் தன்னை நெருங்கியபோது அவனது கோலத்தைப் பார்க்க அருசை கொண்ட மாணிக்கத்தை அவள் உதறித் தள்ளினாள்.

“நா எவ்வளவு கேவலமான சென்மமா, மானங்கெட்ட மாடாப்பூட்டேன்” என்று அழுகையினூடே அவள் குமுறினாள்...

அவன் திகைத்துப் போய் மௌனமாய் அவளை வெறித்துப் பார்த்தவாறு குற்றம் புரித்து விட்டவன் போல் வெலவெலத்து உட்கார்ந்தான்.

“இப்பிடியெல்லாம் கேப்பாரில்லாமே ஆட்டம் போடறத்துக்குத்தானே- அதுக்கெல்லாம் அவன் எடைஞ்சாலா நிப்பான்னுதானே என் ஆசை மவனை வெரட்டிப் பிட்டேன் பாவி?” என்று தலையைப் பிடித்துக்கொண்டு தன்னையே நொந்து புலம்பினாள் தங்கம்.

“நாம்பளா வெரட்னோம்? அவனாதானே கோவிச்சிக்கிட்டுப் போயிருக்கான். வந்துடுவான்” என்று சமாதானம் கூறிய மாணிக்கத்தை ஏறிட்டு விழித்துப் பார்த்தாள் தங்கம்.

அவளுக்குக் காரணமின்றியே மாணிக்கத்தின் மீது எப்போதும் இல்லாத வெறுப்புப்பிறந்தது...

“நாம்ப வெரட்லே... அவனா பூட்டான்!... சந்தோசந்தானே நமக்கு?... சனியன் ஒயிஞ்சிதின்னு திருப்திதானே நமக்கு?” என்று ஆக்ரோஷமாய்க் கத்தினாள். மாணிக்கம் நடுநடுங்கிப் போனான்! அவன் இப்படி ஒரு கோபாவேசமான தோற்றத்தை அவளிடம் இதற்கு முன் கண்டவனில்லை. இனிமேல் மகன் நினைவு வரும்போதெல்லாம் தன் மீது வெறுப்புற்று, ஆத்திரப்பட்டு தன்மீதே இவளது கோபத்தை யெல்லாம் காட்டுவாள் என்று தோன்றியபோது- அந்தக் கற்பனையிலேயே தன் வாழ்வும் அவள் வாழ்வும் பயங்கர நரகமாய் மாறிப்போகும் என்று உணர்ந்து வருந்தினான் மாணிக்கம். அவள் தன்னிடம் கோபத்தைக் காட்டிக் கொள்வதற்கு நியாயம் இருக்கிறது. அவள் மகன் அவளை வெறுத்துவிட்டு ஓடிப் போனதற்குக் காரணமே தான்தானே என்ற நினைப்பில் அவனுக்குத் தன் எதிர்காலம் மிகவும் மோசமானதாகத்தான் இருக்கும். அதுதான் தலைவிதி என்று தோன்றியது.

“அவன் திரும்பிவருவானா? ஹ்...ம், மாட்டான்! நம்பளை மாதிரி மானங்கெட்ட சென்மமில்லே அவன்?... அவன் வரவே மாட்டான்.. இன்னக்கி வருவான்; நாளைக்கி வருவான்னு பாத்தேன்; நானொரு மானங்கெட்ட சிறுக்கி!.. ஐயோ! ஒரு மாசமாச்சே! எங் கண்ணு சிட்டி எந்தத் தெருவிலே அனாதைப் பையனா நிக்குதோ?.. பசிச்ச நேரத்துக்குக் கூப்பிட்டு சோறுபோட அவனுக்கு யாரு இருப்பா?

எம்மவனே, சிட்டி நீ வரவே மாட்டியா, என் ராசா?” என்று புலம்பிப் புலம்பித் தன் துயரத்தை தானே அதிகப்படுத்திக் கொண்டு பெருகிவரும் துயரத்தைத் தாங்கமாட்டாமல் ‘கோ’ வென்று குரலெடுத்துக் கதறியழ ஆரம்பித்தாள் தங்கம்.

அவளது கூக்குரல் கேட்டு வாசலில் கூட்டம் கூடி நிற்கிறது என்று மூடிய கதவுக்கு உள்ளேயிருந்த மாணிக்கத்தால்

உணர முடிந்தது. தங்கத்தின் இந்த அட்டகாசங்களை, கண்றாவியைக் காணாமல் எழுந்துபோனால் ‘தன்னை அதற்காகவும் அவள் திட்டுவாளே’ என்று, அஞ்சி அங்கே இருக்கவும் முடியாமல் போகவும் முடியாமல் தவியாய்த் தவித்தான் மாணிக்கம்.

அவளே சில நிமிஷங்களுக்குப் பின் பெருகிவந்த துயரம் சமனப்படும்வரை அழுது தீர்த்துவிட்டு, மூக்கைச் சிந்தி சுவரில் துடைத்த பின் முகத்தையும் துடைத்துக்கொண்டு அமைதியாய் உட்கார்ந்திருந்த சமயம் பார்த்து மாணிக்கம் சொன்னான்:

“தங்கம்.. நீ வருத்தப்படறதெப் பாத்தா எனக்கு ரொம்ப சங்கடமா இருக்கு.. என்னாலேதான் உனக்கும் சிட்டிக்கும் இவ்வளவு கஷ்டம்னு நெனக்கறப்போ நான் ரொம்பப் பாவின்னு எனக்கும் தோணுது” என்று கூறும்போது மாணிக்கத்தின் குரல் துயரத்தால் கம்மி அடைத்தது.

தங்கம் அவன் வார்த்தைகளை கேட்டும் அவன் முகத்தைப் பார்க்காமல் எங்கோ வெறித்தவாறு நிஷ்டூரமான குரலில் “நீ ஏன் வருத்தப்படணும்?... என் புத்திக்கும் காரியத்துக்கும் என்னெத்தான் செருப்பாலடிக்கணும்!” என்று கடுமையாய்ச் சொன்னாள்.

மாணிக்கத்துக்கும் ஒன்றும் புரியாவிட்டாலும் அவளது வார்த்தைகள் ‘சுருக்’கெனத் தைத்தன. தன்னிடம் இவள் ஏன் இவ்வளவு கோபத்துடன் பேசுகிறாள் என்று புரியவில்லை அவனுக்கு. என்ன செய்தால் இவளது எரிச்சல் மாறும்? தான் என்ன செய்யவேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று இவள் விரும்புகிறாள் என்றறிய முடியாமல் அவன் மனம் குழம்பினான்.

மகனைப் பிரிந்த தவிப்பில் அவள் மனம் பேதலித்திருக்கிறான் என்று உணர்ந்த மாணிக்கம் அவளிடம் அன்பான குரலில் ஆதரவான தோரணையில் கூறினான்: “ஆமா தங்கம்... சிட்டிபோயி ஒரு மாசம் ஆவுது.. அவனைத் தேடிப் புடிச்சி ஊட்டுக்கு கூட்டியாறாதது என் தப்புதான்... இன்னக்கி சுத்திப்பாத்துத் தேடிப்புடிச்சி

எப்பிடியாவது வூட்டுக்குக் கொண்ணாந்துடறேன் சிட்டியெ... நீ வருத்தப்படாதே!” என்று அவளிடம் கண்கலங்க உருகுகின்ற மனத்தோடு அவள் உணர்ச்சிகளை கௌரவிக்கும் முறையில் சமாதானம் கூறினான் மாணிக்கம். அவனது ஆறுதலான வாக்குறுதியைக் கேட்டதும் அருகிலிருந்த மாணிக்கத்தைக் கட்டித் தழுவிக் கொண்டு தாய்மைத் தவிப்புடன் விம்மினாள் தங்கம்:

“என் ராசா... என் மகனைக் கூட்டியாந்துடுறியா?”

“நிசமா.. சத்தியமா... அவனில்லாம நான் ராவிக்கு வூட்டுக்கு வரமாட்டேன்... நீ வேணும்னா பாரு”

“என் மவன் வருவானா, ராசா...”

“வருவான் நிச்சயம் வருவான் இன்னக்கி. நீ கவலைப் படாதே. நிம்மதியா இரு, சும்மா அயுது ஒடம்பெக் கெடுத்துக்காதே... நீ சந்தோசமா இருக்கணும், அதுக்காக நான் என்ன வேணும்னாலும் செய்வேன்..” என்று தன் கரங்களுக்கிடையே கிடந்த தங்கத்தை மார்புரத்தழுவி அவள் முதுகில் தட்டிக் கொடுத்தான் மாணிக்கம்.

அப்போதுதான் முதன் முறையாக, இவ்வளவு பாச உணர்ச்சி மிகுந்த ஒரு தாயைத் தனக்குமட்டுமே உரிய மனைவியாக்கிக் கொள்ள நினைத்ததன் தவறான உறவாடுதலை எண்ணி உள்ளூர வருந்தினான் மாணிக்கம்.

## 9

பெரம்பூர் பாரக்ஸ் ரோட்டில் எதிர் எதிரே அமைந்த இரண்டு சினிமா தியேட்டர்களில் ஒன்றின் பக்கத்தில் உள்ள டீக்கடையை நோக்கி கன்னியப்பனும் சிட்டியும் வந்து கொண்டிருந்தனர்.

அந்தத் தியேட்டர்களில் ஒன்றில் இன்று புதுப்படம் ரிலீஸாகி இருந்தது. மாட்னி ஷோவின் போது கன்னியப்பனும் சிட்டியும் ஆளுக்கொரு முப்பத்தேழு பைசா டிக்கட் வாங்கி ஒவ்வொரு ரூபாய்க்கு இரண்டையும் விற்ற

உபரிப் பணம் அவர்களின் சட்டைப் பையில் குலுங்குகிறது. மற்ற இரண்டு ஆட்டங்களுக்கு இதைவிடவும் டிக்கட் கிராக்கி ஏற்படும் என்றறிந்து சீக்கிரம் ஆளுக்கொரு டீ குடித்து விட்டுவந்து க்யூவில் முதல் இடம் பிடிக்கவேண்டும் என்ற அவசரத்தில் ஓடிவரும்போது சிட்டியைத் தூரத்திலிருந்தே பார்த்து விட்டான் மாணிக்கம்.

கையில் குருவிக்கூண்டும் கட்கத்தில் இடுக்கிய பாயுமாய் எதிரில் வரும் மாணிக்கத்தைப் பார்த்தும் பாராத அலட்சியத்துடன் வரும் சிட்டியின் பக்கத்தில் வந்த கன்னியப்பன் மாணிக்கத்தைக் கண்டதும் ஒரு வினாடி நின்றான். அன்று மூர்மார்க்கெட்டில் ஒருமுறை சந்தித்த அறிமுகத்தில் மாணிக்கம் கன்னியப்பனைப் பார்த்துப் புன்னகை காட்டினான். கன்னியப்பனும் மரியாதையாகப் புன்னகை காட்டினான். கன்னியப்பனும் மரியாதையாகப் புன்னகை செய்தான். அதைக் கண்ட சிட்டி கன்னியப்பனையும் அலட்சியம் செய்துவிட்டு ஊடல் கொண்டவன் போல் தனியனாய் மேலே நடந்துகொண்டிருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் மாணிக்கம் கன்னியப்பனை நெருங்கி “சிட்டி கையிலே கொஞ்சம் பேசணும் தம்பி” என்று கெஞ்சினான்.

“அதுக்கென்னா, எங்க பின்னாடியே வா... அதோ அந்த ஓட்டலுக்கு” என்று சற்று தூரத்திலுள்ள ஒரு முஸ்லீம் ரெஸ்டாரண்டைக் காட்டி முன்னால் போகும் சிட்டியைப் பிடிக்க ஓடினான் கன்னியப்பன்.

கன்னியப்பனும் சிட்டியும் ஓட்டலுக்குள் நுழையும் வரை அங்கேயே நின்று அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான் மாணிக்கம்.

கன்னியப்பனோடு ஓட்டல் வாசற்படியேறிய சிட்டி திரும்பிப் பார்த்து மாணிக்கம் அங்கே நின்றிருப்பதைக் கண்டு “அந்த சோமாறி அங்கே நின்னுக்கினு நம்பளையே மொறைக்கிறாண்டா?” என்று சொன்னான்.

“அந்த ஆளு நம்பகிட்டே என்னமோ பேசணுமாம்.. வரேன்னாரு” என்றான் கன்னியப்பன்.

“இவன் கிட்டே நமக்கு இன்னா பேச்சு? அதெல்லாம் ஒண்ணும் முடியாது” என்று ஓட்டலுக்குள் நுழைந்த சிட்டி மாணிக்கம் வருவான் என்பதால் வெளியில் போவதற்காகத் திரும்பினான். கன்னியப்பன் சிட்டியின் கையை எட்டிப் பிடித்தான்:

“ஏண்டா, அந்த ஆளுன்னா உனக்குப் பயமா?” என்று ரோசமூட்டுவதுபோல் கேட்டான் கன்னியப்பன்.

“யாருக்கு? எனக்கா?... அந்த சோமாறிக்கிட்டேயா? ப்பூ!...” என்று மார்பில் தட்டிக்கொண்டு அலட்சியமாய்ச் சிரித்தான் சிட்டி.

“அப்ப எதுக்கு ஓடறே? வரட்டுமே அந்த ஆளு... இன்னா தான் சொல்றான்னு கேப்போமே...” என்றான் கன்னியப்பன்.

அரைமனத்துடன் சிட்டி கன்னியப்பனைப் பின் தொடர்ந்து பல வண்ணக் கண்ணாடிக் கதவால் தடுக்கப்பட்டிருந்த சிறிய அறைகளில் ஒன்றுக்குள் நுழைந்தான். இருவரும் உள்ளே வந்து கை கழுவும் ‘பேசினில்’ முகம் கழுவி அந்தக் கண்ணாடியைப் பார்த்து முகம் துடைத்து, சிகை ஒதுக்கிக் கொண்டு மேசைகளின் முன்னே உட்கார்ந்த போது குருவிக் கூண்டையும் பாயையும் சுமந்து கொண்டு மாணிக்கமும் வந்தான்.

“இன்னாப்பா, இப்பிடி உட்காரு!” என்று வரவேற்றுத் தன் பக்கத்திலிருந்த நாற்காலியில் அவனுக்கு இடமளித்து வரவேற்றான் கன்னியப்பன். கன்னியப்பன் காட்டிய நாற்காலியில் அமர்ந்து எதிரே தன் முகத்தைப் பார்க்க முடியாமல் மேஜை மீதிருந்த கண்ணாடிப் பரப்பில் சிந்தியிருந்த தண்ணீரில் நீர்க்கோலம் போட்டவாறு தலை குனிந்திருந்த சிட்டியை அன்போடு பார்த்தான் மாணிக்கம். அப்போது செர்வர் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வரவே,

“என்னா சாப்பிடுறீங்க?” என்று இருவருக்காகவும் கன்னியப்பனைக் கேட்டான் மாணிக்கம்.

“நாங்க வெறும் டீதான் குடிக்கப்போறோம்.. நீ வேணும்னா எதனாச்சும் சாப்பிடுப்பா...” என்றான் கன்னியப்பன் மாணிக்கத்திடம்.

“ஏன் ஏதாவது சம்ஸா, பிஸ்கோத்து?” என்று மாணிக்கம் வற்புறுத்தியபோது சிட்டிக்குப் பயந்த கன்னியப்பன் ஒன்றும் வேண்டாம் என்று மறுக்கவே “மூணு சிங்கள் டீ குடு பாய்!” என்று மாணிக்கம் ஆர்டர் செய்தான்.

டீ வருவதற்கு முன் நிலவிய மௌனத்தின் போது, திடீரென ஒரு தடவை மாணிக்கம் கனைத்தான். அந்தக் கனைப்பைக் கேட்டு தன்னையறியாமல் தலை நிமிர்ந்த சிட்டியின் விழிகள் மாணிக்கத்தின் விழிகளைச் சந்தித்தன.

அந்த மாணிக்கத்தின் விழியும் பார்வையும், முகமும் தோற்றமும் தன்னிடம் எதையோ யாசிப்பதுபோல், தன் காலில் எதற்கோ விழுந்து கெஞ்சுவது போலிருந்தது சிட்டிக்கு. இருப்பினும் அவன் மீது கொண்ட குரோதமும் விரோதமும் குறையவில்லை.

மாணிக்கம் கன்னியப்பனிடம் விசாரித்தான்: “ஏதாவது வேலை செஞ்சி தெனம் சாப்பாட்டுக்கு வேண்டியதே சம்பாதிச்சிக்கிறீங்களா? வயித்துக்கில்லாம ஒருவேளை கூடப் பட்டினி கெடக்கறது இல்லையே...?”

கன்னியப்பன் சிரித்தான். அந்தச் சிரிப்பே மாணிக்கத்துக்குத் திருப்தி தரும் பதிலாய் இருந்தது.

“எனக்குத் தெரியும்-புத்திசாலிப் புள்ளைங்க... பொழைச்சிக்குவீங்கன்னு... ஆனா இவன் ஆத்தாளுக்குத் தான் இவன் வீட்டெவுட்டுப்போன ஒரு மாசமா ஒரே ‘அய’தான் பொலம்பலுதான். சோறு தண்ணி இல்லாம கூட எத்தினியோ நாள்லே கெடக்குது... சும்மாவாப்பா சொல்றாங்க, பெத்த மனம் பித்து, புள்ளை மனம் கல்லுன்னு...”

அப்போது டீ வந்தது.

மூவரும் அமைதியாக ஸாஸரின் மேலிருந்த கப்பிலிருந்த சூடான டீயில் கொஞ்சம் உறிஞ்சிக் கொண்டனர்.

சிட்டி மட்டும் அங்கிருக்கப் பிடிக்காது வெறுப்புற்ற அவசரக் காரனாய் டீயை சாஸரில் ஊற்றினான் ஆறுவதற்காக.

மாணிக்கம் தனது குற்றத்தை எண்ணி மனம் குமைந்து பெருமூச்செறிந்தான். அவன் மனத்தில் என்னென்னவோ குமைச்சல்கள் குமுறிப் புகைந்தன.

சாஸரில் ஆறிய டீயை ஒரே உறிஞ்சாகச் சிட்டி அருந்தும்போது அந்த பிஞ்சு முகத்தை, அந்த அழகுச் சிறுவனை, தங்கத்தின் ஆசை மகனை, தாயின்நல்வாழ்வுக்காகப் பொறுப்புடன் உழைத்துச் சம்பாதித்த அவளது வாழ்வின் பிடிப்பைப் பார்த்து, அவன் தன்னால் தாயை வெறுத்த தறுதலையாய் மாறித் தெருவில் திரிந்தலையும் யாருமற்ற அனாதையாய்ப் போய்விட்டானே என்று எண்ணியபோது தங்கமும் சிட்டியும் தன்னை வெறுப்பதற்கான நியாயங்களை உணர்ந்து வருந்தினான் மாணிக்கம்.

சிட்டி டீயைக் குடித்து முடித்து யாரையும் லட்சியம் செய்யாமல் வெளியில் புறப்படுவதற்காக எழுந்தான்...

“சிட்டிபாபு!...” என்று குரல் தழுதழுக்க அழைத்தான் மாணிக்கம்.

சிட்டி திகைத்து நின்றான். அவனை அது போன்ற ஆதரவுடன் முழுப் பெயரையும் சொல்லி அவர் ஒருவர்தான், அவனது எஜமான் தொண்டர் துரைக்கண்ணு மட்டுமே தான் அழைப்பார்.

“சிட்டிபாபு... நான் பாவி. நான் ஒனக்கும் உங்க அம்மாவுக்கும் பெரிய துரோகம் பண்ணிப்பிட்டேன்- தாயையும் மகனையும் பிரிச்சி பாவியாயிட்டேன்...” என்று உதடுகள் துடிக்கக் கூறிய மாணிக்கத்தின் கண்கள் கலங்கி இமை விளிம்பில் கண்ணீர் தளும்புவதைக் கண்ட சிட்டிக்கு மாணிக்கத்தின் மீது இருந்த கோபம் குறைந்து எரிச்சலும், வெறுப்பும் மாறி துயரமும் மூண்டது. எனினும் அதை

வெளியே காட்டிக் கொள்ளாமல் புறப்பட எழுந்து நின்ற நிலையில்,

“நீ இன்னாத்துக்குய்யா பொட்டச்சி மாதிரி எங் கைலே வந்து அய்வுரே?... அதான், உனக் கோசரம் வூட்டையும்..” என்று தயங்கினான் ‘எங்கம்மாவையும்’ என்று சொல்லத் துடித்த உதடுகள் சொல்ல விரும்பாமல் பதறின. “ம்... வூட்டை என்னா, எல்லாத்தியும் உனக்கே ஒயிச்சிட்டுதான் நாந்தான் வந்துட்டனே நடுத்தெருவுக்கு... போ! எதுக்கு வந்து எம் மூஞ்சியிலே முய்க்கிறே?” என்று உள்ளே குமுறிய துயரத்தை அடக்கிக் கொண்டு கோபத்தை மட்டும் வெளிக் காட்டிக் கூச்சலிட்டான் சிட்டி.

“நான் அறிவில்லாம, யோசனையில்லாம தப்புத்தான் பண்ணிட்டேன்... நீ இல்லாம உங்கம்மா படற வேதனையெப் பாக்க என்னாலே சகிக்கலே... நானும் மனுசந்தான் பெத்தவ மனசு எப்பிடி இருக்கும்னு எனக்கும் தெரியுது.. அதனாலே.. நீ மறுபடியும் வீட்டுக்குப் போறியா? உங்கம்மாவுக்கு முந்தி மாதிரி உத்தமமான-ஊரே பார்த்து சந்தோவப் படற நல்ல மகனா இருந்தியாமே அது மாதிரி இருக்கியா?,... நான் போயிடறேன் இனிமே என்னைக்குமே தாயையும் புள்ளையையும் பிரிச்ச பாவத்தை செய்யமாட்டேன்.. அது உன் வீடு... தங்கம் உன் தாயார் ஆமா உனக்கு மட்டுமே தான் சொந்தம். நீ வூட்டுக்குப் போயி முந்திமாதிரி தாய் மனசுக்கு ஏத்தபிள்ளையா இருப்பியா கண்ணு...” என்று மனம் குழைந்து மன்றாடிக் கண்ணீர் உகுக்கும் மாணிக்கத்தைக் கண்டு கன்னியப்பனின் நினைவில் ஏதேதோ பழைய ஞாபகங்கள் உருவாகித் தன் சொந்த வாழ்க்கையின் அவலங்கள் பல நெஞ்சைச்சுட, மாணிக்கத்தின் நல்லுணர்ச்சிக்குத் தானும் இரையாகிப் பெருகிவந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு, தன் கண்களில் கலங்கிய கண்ணீர் வழிந்துவிடாமல் தலையை அண்ணாந்து கூரை முகட்டைப் பார்த்துப் பெருமூச்சை ஊதிவிட்டுச் சமாளிக்கத் தவித்தான்.

மாணிக்கம் தான் போய்விடுவதாக, தன் தாயைவிட்டு விலகி விடுவதாக, தங்கள் வாழ்க்கையில் குறுக்கிடாமல்

ஒழிந்து விடுவதாகக் கூறிய வார்த்தைகள் சிட்டிக்குப் பெரு மகிழ்ச்சியூட்டின. தன் மனசில் குடைந்து குடைந்து அரித்துக் கொண்டிருந்த ஒரு வெறி பழி வாங்கிவிட்ட குதூகலத்தில் விம்மியது.

“நான் எங்கனாச்சும் போயிடறேன். நீ உன் வீட்டுக்குப் போ” என்று கெஞ்சும் மாணிக்கத்தின் முன் விறைப்பாய் நின்றிருந்தான் சிட்டி.

“நீ போறதானாப் போ! என் வீட்டுக்குப் போக எனக்குத் தெரியும்...” என்று சிடுசிடுப்புடன் சொன்னான்.

தாயிடம் மனம் திருந்திச் சென்ற மகிழ்வூட்டப் போகும் அந்த அன்பு மகனை அப்படியே வாரித் தழுவிக் கொள்ள வேண்டும்போல் மார்பும் கரங்களும் துடித்தன மாணிக்கத்துக்கு.

“எனக்குத் தெரியும்... நீ போவே ஆனா, சிட்டி... நான் ஒரேயடியாய் போயிடறேன்னு உங்கம்மாவுக்குத் தெரியாது நான் சொல்லிக்கலே” என்று சொல்லும்போது நிர்ப்பந்தமாய் விதி வசத்தால் அவளோடு வாழ்க்கையில் தனக்கு விளைந்த இன்பப் பிணைப்பை. அன்புக்கயிற்றை ரத்தமும் சதையும் பிய்ந்தொழுக மனசை இரும்பாக்கித் தானே பிய்த்துக்கொண்டு விலகும் அந்த வேதனையைத தாங்கமாட்டாமல் அவன் விம்ம ஆரம்பித்தான் அவன் தான் ஒரு ஆண்மகன் என்ற அகம்பாவமில்லாத குழந்தை போல் அழுதுகொண்டே சிட்டியிடம் சொன்னான்: “நீ சொல்லு உங்கம்மாகிட்டே... நீயும் உங்கம்மாவும் சந்தோஷமா இருக்கணும்னுதான் நான் போறேன்னு... எனக்கு யாரு மேலேயும் வருத்தமில்லேன்னு சொல்லு... உங்கம்மா என்கிட்டே காட்டின பிரியத்தையும் செய்த உதவியையும் இந்த உடம்பிலே உசிரு உள்ளவரை மறக்க மாட்டேன்னு சொல்றியா, சிட்டி?... நான் போறேன்.. இந்த ஊர்லே இருந்தா உன்கிட்ட சொன்ன வார்த்தையெ மறந்து உன் வீட்டிலே ஒரு நாளு வந்து நின்னாலும் நிப்பேன்... அதுக்காகப் பட்டணத்தெவிட்டே போயிட்டேன்னு சொல்லிடு...”;என்று திணறித் திணறிக் கூறிய பின்

முகத்தில் வழிந்த கண்ணீரை மேல் துண்டால் துடைத்துக்கொண்டு ‘விருட்’ டென்று வெளியேறினான் மாணிக்கம்.

கையில் குருவிக்கூண்டும் கட்கத்தில் சுருட்டி இடுக்கிய பாயுமாக அந்த மாணிக்கம் வந்ததுபோல் சென்று மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்த சிட்டிக்குக்கூட மாணிகத்தின் மேல் ஒரு பரிதாபமும் அனுதாபமும் பிறந்தது. அவன் அழுததை எண்ணியபோது சிட்டிக்கும் அழுமை வந்தது.

“கன்னியப்பா… இந்த ஆளு பாவம், நீ சொன்ன மாதிரி நல்லவன்தான்” என்று சொல்லிக்கொண்டே கன்னியப்பனிடம் திரும்பியபோது-அவன், கன்னியப்பன் புறங்கையால் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதைக் கண்டு பதறினான் சிட்டி:

“கன்னியப்பா, நீ எதுக்கு அயுவறே? என்று அவன் கையைப் பற்றினான்.

“குதிரை வண்டி ஒட்டிக்கிட்டு நான் சின்னப் பையனா இருக்கும்போது வந்து பூந்தி வாங்கிக் குடுத்தாரே, எங்கநைனா… அவுரு ஞாபகம் - திடீர்னு வந்துடுச்சி!” என்றான் கன்னியப்பன்.

சிட்டி அவனுக்கு ஆறுதல் போலவும் அவனது அசட்டுத் தனத்தைக் கேலி செய்வது போலவும் லேசாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் இருந்த கைப்பு.. தான் இன்னும் தன் தாயை மன்னிக்கவில்லை; அவள் கொடுமையை மறக்க வில்லை; அவளது கேவலமான நடத்தையின்மீது கொண்ட அருவறுப்பு எனக்கு மாறவில்லை என்று உணர்த்தியது.

“நீ வூட்டுக்குப் போவியா? என்று கேட்டான் கன்னியப்பன்.

“ம்… போவேன்…” என்று யோசித்துச் சிரத்தையற்றுச் சொன்ன சிட்டி “வா வா-போவோம் கூட்டம் வந்துடும்” என்று சினிமா தியேட்டரை நோக்கி ஓடினான்!

ஆறு மணி ஆட்டத்துக்குத் தியேட்டரில் டிக்கட் வாங்கி விற்று லாபம் சம்பாதித்தபின்-பழைய வழக்கம் போல்- கன்னியப்பனிடம் சொல்லிவிட்டுச் சிட்டி வீடு நோக்கி வந்தான் ஒரு மாதத்திற்குப் பிறகு.

அவன் மனத்தில் ஒரு மாதமாய்ப் பிரிந்திருந்த தாயைப் பார்க்கப் போகும் துடிப்போ, பாசமோ இல்லை. அதற்குப் பதிலாய், எந்தக் கேவலமான உறவுக்காக அந்தப் பிள்ளைப் பாசத்தைக்கூட அவள் மதிக்கவில்லையோ அந்த உறவுக்குக் காரணமான அவள் ஆசை நாயகன் அவளை உதறிவிட்டுப் போய்விட்டான் என்பதைக் கூறி தனது வெற்றிப் பிரகடனத்தை அவளிடம் முழக்கம் செய்து அவள் உணர்ச்சிகளைக் குத்திக் காட்டி துன்புறுத்தி மகிழவேண்டும் என்ற பொல்லாத வெறி பிடரியைப் பிடித்துத் தள்ள சிட்டி ஓடோடி வந்தான் வீட்டுக்கு.

சிட்டி வந்த நேரத்தில் தங்கம், மாணிக்கத்தை எதிர்பார்த்து, காத்திருந்தாள். சிட்டியைத் தேடி எங்கு போய்க் கண்டு பிடித்து அவனை அழைத்து வரப் போகிறான் மாணிக்கம் என்று நம்பிக்கையற்றிருந்தாள் அவள். மாணிக்கம் அழைத்தாலும் சிட்டி வரமாட்டான் என்று முடிவு கட்டியிருந்தாள்; அதற்காக வீணாய் மாணிக்கத்தைத் தான் கோபித்துக் கொள்வது நியாயமல்ல என்று தனக்குள் ஒரு தீர்மானத்துக்கும் வந்திருந்தாள் காலையில் அவனது மனம் புண்படும்படி தான் நடந்து கொண்டதற்கு வருந்தி-அதற்குப் பரிகாரம் செய்வதுபோல் இன்று இரவில் அவனிடம் மன்னிப்புகேட்டு அன்புகாட்டி மகிழ்வூட்ட வேண்டும் என்ற நினைப்பில் தனியனாய் வரப் போகும் மாணிக்கத்தின் வரகவ்காகக் காத்திருந்தாள் தங்கம்.

பொழுதோடு உணவு தயாரித்து வைத்துவிட்டு, அந்த அடுப்பில் வெந்நீர் போட்டுக் குளித்தபின் தலைவாரி, ஓரணாவுக்குக் கதம்பமும் வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு காத்திருந்த தங்கம் வாசற்கதவைத் தள்ளிக்கொண்டு சிட்டி வீட்டுக்குள் நுழையும்போது-கதவு திறக்கப்படுவதை உள்ளிருந்து கண்ட தங்கம் மாணிக்கம்தான் வருகிறான் என்று ஆவலுடன் எழுந்தாள்.

தன் எதிரே ஒரு மாதத்துக்கு முன் உடம்பைத் தீயாலும் உள்ளத்தை வாயாலும் சுட்டு விட்டு ஓடிப் போன ஆசைக்குரிய மகன் திரும்பி வந்து நிற்கும் திடீர் நிகழ்ச்சியை கண்டு திகைத்துப் போன தங்கம் உணர்ச்சிப் பரபரப்பில் ஒன்றும் தோன்றாமல்,

“சிட்டி நீயா?-“ என்று வாய் குழறினாள். அவள் கண்கள் சிட்டிக்குப் பின்னால்-காலையில் தன்னிடம் உறுதியளித்ததின் பிரகாரம் தன் மகனைத் தேடிக்கண்டு பிடித்துக்கொண்டு வந்துவிட்ட மாணிக்கத்தைத் தேடி துழாவின.

அந்தச் சில வினாடிகளில் சிட்டி தங்கத்தை அளந்தான். அவளையும், அவள் தலையலங்காரத்தையும், மாணிக்கம் வருகிறான் என்ற நினைப்பில் துள்ளி எழுந்து வந்த துடிப்பையும், தன்னைக் கண்டதும் ‘நீயா’ என்று மலைத்த திகைப்பையும், இப்பொழுதும் தனக்குப் பின்னால் அந்த மாணிக்கம் வருகிறானா என்று பார்த்து எங்கும் தவிப்பையும் கண்டசிட்டிக்கு அவளைப் பார்க்கும்போது சினிமா கொட்டகை அருகே இரவில் திரிந்து தொழில் புரியும் சில கேடுகெட்ட அவிசாரிகளின் நினைவே வந்தது.

“சிட்டி நீயா” என்ற அவளது திகைப்பைத் தவறாகப் புரிந்து கொண்டு அலட்சியமாக உதட்டைப் பிதுக்கினான்.

“நான்தான்!” என்று அமுத்தலாகப் பதில் சொன்னான் சிட்டி.

திடீரென மகனைக் கண்ட திகைப்பு நீங்கி, பாசம் பெருகி மார்பில் கனத்து நெஞ்சையடைக்க “என் ராசா! வந்தியா கண்ணே... எப்பிடிடா மவனெ என்னெ விட்டு நீ இத்தினி நாளு இருந்தே துரும்பா? எளைச்சி இருக்கியே...” என்று சிட்டியைத் தாவி மார்போடு அணைத்து முத்தமிட்டவாறு அழுதாள் தங்கம்.

‘ம்... எல்லாம் வேஷம் சும்மா வித்தெ காட்றா!’ என்று வக்கரித்த முகத்தோடு மனத்துள் முணகிக் கொண்டான் சிட்டி.

அவள் என்னதான் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த போதிலும் முன்பிருந்த தளதளப்பை இழந்து, நோய் பிடித்தவள் போல வெளிறி மெலிந்த கரங்களால் அவனைத தழுவியபோது-அவளது உடலில் மேலெடுத்துத் தெரிந்த வயிற்றுப் பாகம் அவன் மேல் ஸ்பரிசித்தபோது அருவருப்பால் உடல் நெளித்த சிட்டி அவள் கைகளை விலக்கித் தள்ளிப் பிரிந்து நின்றான்.

“ஏண்டா கண்ணு... இன்னும் என் மேலே உனக்குக் கோவமா?” என்று பரிதாபமாய்க் கெஞ்சினாள் தங்கம்.

“ஆமா... இப்ப நா” ஒண்ணும் உங்கிட்டே கொஞ்சறத்துக்கு வரல்லே... அவன், அந்த சோமாறி இனிமே வரமாட்டான்... அவனெ நானு ஊரெவுட்டே வெரட்டிட்டேன்... அதெச் சொல்லிட்டிப் போவத்தான் ஓடியாந்தேன்..” என்று அவன் கொடியமனத்தோடு-தன்னுள்ளே தான் மன்னித்து விட்ட போதிலும் மாணிக்கத்தைத் தூஷித்துப் பேசி-கூறிய செய்தி கேட்டு அவள் தன் நெஞ்சை அழுத்திக் கொண்டு வாழ்க்கையே நொறுங்கித் தலைமீது வீழ்ந்த அதிர்ச்சியோடு செயலற்ற ஒருபுறம் உட்கார்ந்தாள்..

அவள் தன் வாழ்க்கையில் ஒருமுறை தவறிப் போன பிறகு, சரியான துணையைத் தேடிக்கொண்டு வாழ நினைத்த ஒரே நம்பிக்கையும் இவ்விதம் சிதறிப்போன இழப்பை அவளால் தாங்க முடியவில்லை. வயிற்றில் பிறந்த மகனோ பரமவைரியாய் மாறிப் பழிவாங்கிவிட்ட எக்களிப்பால் எதிரில் நின்று வதைத்து மகிழ்கிறான்...

பாவம், அந்தப் பேதை தகப்பன் இன்னான் என்று காட்ட முடியாமல் முன்பு ஒரு குழந்தைபெற்றது போதும்; இப்போது பிறக்கும் குழந்தைக்காகினும் இதோ, இருக்கிறான் தகப்பன் என்று காட்டுவதற்கு இருந்த மாணிக்கத்தையும் இழந்து, இந்தப் பிள்ளையையும் தகப்பனற்ற குழந்தையாகப் பெற்றெடுக்கப் போகும் தன் தலைவிதியை எண்ணி அவள் மனம் குமுறித் திக்கற்ற குழந்தைபோல் மாலை மாலையாய்க் கண்ணீர் வடித்து விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

கல்லாய்ப் போன சிட்டியின் இதயத்தை இந்தக் கண்ணீர் கரைத்து விடுமா என்ன?

தான் வீட்டை விட்டுப் போன நாள்முதல் மகனின் நினைவால் அழுது புலம்பித் தவியாய்த் தவிக்கிறாள் என்று மாணிக்கம் கூறியதெல்லாம் பொய்யென்று அவள் அலங்காரத்தில் தெரிந்து கொண்டானாம் சிட்டி; அதனால்தான் மாணிக்கம் போய்விட்டான் என்று சொன்னதும் அவள் அழுகிறாளாம்! அவள் மாணிக்கத்துக்காக அழுவதைப் பார்க்கையில் ஆத்திரமும் பொறாமையும் பலமடங்கு பெருகிப் பற்றி எரிந்தது சிட்டிக்கு.

அவளும் அவள் வயிறும், அவள் அவனுக்காக அழுகின்ற கோலமும்...

‘சீ’ என்றொரு குமட்டல் பிறந்தது அவன் நெஞ்சில்.

அவள் கேவலமான ஒரு மிருகம்போல், வெறும் அசிங்கமான உணர்ச்சிக்கு மட்டுமே ஆசைப்பட்டுத் தவிக்கும் அற்பமான ஜந்துபோல் தோன்ற-

“ஏன்? அவன் போயிட்டான்னுதானே அழறே? அவன் போனா என்ன? ஒனக்கு ஆளாகெடைக்காது?” என்று பேசிய தகாத வார்த்தைகளைக் கேட்க முடியாமல் அந்தத் தாயுள்ளம் அந்தப் பெண்ணுள்ளம் அவமானத்தால் புரண்டு புரண்டு நொந்து நொந்து செத்தது. தன் காதால் தான் பெற்ற குழந்தையிடம் இப்படியெல்லாம் கேட்க நேர்ந்ததால் மேலே கேட்க முடியாமல் ஆவேசம் வந்தவள் போல செவிகளிலும் முகத்திலும் தலையிலும் பேய்போல் தன்னைத் தானே அறைந்து கொண்டு ‘ஓ’வென அலறியழுதாள் தங்கம்.

“அடிச்சிக்கோ! நல்லா அடிச்சிக்கோ... நல்லா அழுவு...! சாவு” என்று அவளைக் கூவி திட்டிவிட்டு சிட்டி வீட்டிலிருந்து வாசலுக்கு வந்தான்.

வாசலில் அடுத்த வீட்டு அன்னம்மாக் கிழவியும்எதிர் வீட்டில் அலமேலுவும் மோவாயில் கைவைத்தவாறு சிட்டியைப் பார்த்தனர்.

அவன் யாரையும் ஏறெடுத்துப் பாராமல் விடுவிடென வாசலைக் கடந்து விறைப்பாய் நடந்து வெளியேறினான்.

அன்று இரவு மவுண்ட்ரோடிலுள்ள ஒரு ஆங்கிலப் படத்துக்கு ஏகக்கூட்டம் நெருக்கி வழிகிறது என்று கேள்விப்பட்டவுடன் கன்னியப்பனும் சிட்டியும் அங்கு ஓடினர்.

அரை நிர்வாணமாய் உடைதரித்த மேனாட்டு அழகிகளின் போஸ்களையும் ஆணும் பெண்ணும் சேர்ந்து தழுவி இதழோடு இதழ் பதித்து முத்தமிடும் படங்களையும் விளம்பரப் போஸ்டராய் ஒட்டப் பட்டிருப்பதைப் பார்த்த கன்னியப்பன் சிட்டியைத் தோளால் இடித்தான்...

“டேய் சிட்டி, நாம்ப வாங்கற டிக்கட் விக்கலேன்னாலும் பரவாயில்லை; படம் பார்க்கலாம்.. ஸம்னு இருக்கும்போல இருக்கு. அதான்ன இம்மாஞ்ஜெனம்!” என்றான் கன்னியப்பன்.

சிட்டி பதிலொன்றும் சொல்லவில்லை. இம் மாதிரிப் பேச்சுக்களை அவன் விரும்பமாட்டான் என்று அறிந்திருந்த கன்னியப்பன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

வெகு சிரமப்பட்டு ‘கியூ’வில், இடம் பிடித்து-‘கியூ’ நகர ஆரம்பிக்கும் பொழுது அந்தத் தியேட்டர் காவலாளி ‘கியூ’வில் யாரையோ தேடுவது மாதிரிக் கையிலுள்ள குறுந்தடியைச் சுழற்றியவாறு ஒவ்வொருவராய் எண்ணிக் கொண்டே வந்தான்.

கன்னியப்பனும் சிட்டியும் நிற்கும் இடத்திற்கு வந்தவுடன் சற்று நின்று இருவர் முகத்தையும் உற்றுப் பார்த்து விட்டு “ஏய்... ரெண்டு பேரும் வெளியே வாங்க.. உம்...” என்று கைத்தடியால் தட்டி இருவரையும் கையைப் பிடித்து ‘கியூ’க்கு வெளியே இழுத்து விட்டான்.

“யோவ். நாங்க ஒன்னும் டிக்கட்டு வாங்கி விக்கிறவனுவ இல்லே.. படம் பாக்க வந்தவங்கதான்! எம்மா நாழியா, அப்போ புடிச்சி நிக்கிறோம்” என்று முறைத்தான் கன்னியப்பன்.

“அதெல்லாம் சர்த்தான். படிக்கத் தெரியுமா? அதோ பாரு” என்று அருகில் ஒட்டியிருந்த போஸ்டரைக் காட்டினான் காவலாளி. கன்னியப்பனும் சிட்டியும் விழித்தனர்.

“ஒனக்கு என்னா வயிசு?” என்றான் காவலாளி.

“பதினாறு என்று அலட்சியமாய்ச் சொன்னான் கன்னியப்பன்.

“ஒனக்கு?” என்று சிட்டியைக் கேட்டான் காவலாளி.

“பதிமூனு...”

“போங்க, போங்க, ரெண்டு பேரும் வெளியே போங்க! நீ ரெண்டு வருசங்கழிச்சி வா. நீ அஞ்சு வருஷம் கழிச்சி...வா.. இது ‘அடலட்ஸ் ஒன்லி!’ பெரியவங்க பாக்கற படம். சீக்கிரம் போங்க. மானேஜர் பாத்தா என்னைத் திட்டுவார்” என்று விரட்டினான் காவலாளி;.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு சிட்டியுடன் வெளியில் வந்த கன்னியப்பன் தியேட்டருக்கு வெளியே இருந்த படங்களைப் பார்த்துவிட்டு போங்கடா உங்க... பொறுக்கிப் பசங்களா! எங்களுக்குத் தெரியாத இன்னாத்தைக் காட்டிடப் போறீங்க?” என்று முனகிக் கொண்டே ‘ஓஓ’வென்று பெருங்குரலில் சிரித்தான். கன்னியப்பனின் சிரிப்புக்குக் காரணம் புரியாத சிட்டி எரிச்சலுடன் விழித்தான்.

## 11

தங்கம் என்ற ஒரு தரங்கெட்டவளுக்குத்தானொரு மகனாகப் பிறக்வில்லை; எப்படி தனக்கு அப்பன் யாரென்று தெரியாதோ அதேபோல ஆத்தாளையும் தெரியாது.. தங்கம்!-அப்படியொருத்தி தனக்குக் தாயாக இருந்ததில்லை. இருப்பினும் அவள் செத்தொழிந்து போய் விட்டாள் என்று உறுதியாக தீர்மானித்துக் கவலையற்று-மாணிக்கம் தங்கத்தோடு இருக்கும் வரை மனத்தை, மான உணர்ச்சியை அழுத்திக் கொண்டிருந்த-கனமற்று, கன்னியப்பன் ஒருவனே தனக்குத் துணை என்று தனி

வாழ்வின் புதுத் தொடக்கத்தை ஆரம்பித்துவிட்ட சிட்டி இப்போது மிகவும் குதூகலத்துடன் இருந்தான்.

சிட்டியின் துணை கிடைத்துவிட்டதால் ஓட்டேரியில் இருக்கும் தன் வீட்டுக்குப் போகும் எண்ணத்தை அறவே துறந்துவிட்ட கன்னியப்பனும் சிட்டிக்கு ஆதரவாய் அவனோடு பார்க்கில் வாழ்ந்தான்.

இரண்டு நாட்களாகக் கன்னியப்பனுக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. அவனால் சிட்டியுடன் சென்று தியேட்டரில் டிக்கட் வாங்கி விற்கமுடியவில்லை ஆனால் சிட்டி மட்டும் உற்சாகத்தோடு தனியாகப் போய் டிக்கட் வாங்கி விற்று தனக்குக் கிடைக்கும் காசில் பார்க் பெஞ்சுக்கடியில் சினிமாப் போஸ்டரைப் போர்த்தியவாறு படுத்துக் கிடக்கும் கன்னியப்பனுக்கு மூன்று வேளை ரொட்டியும் பன்னும் டீயும் வாங்கிக் கொடுத்தான்.

இப்போது டிக்கட் விற்கும் தொழிலில் ஒரு அபிவிருத்தியும் ஏற்பட்டிருந்தது. ஓரிரு தியேட்டர்களின் புக்கிங் கிளார்க்குகளே இவர்களிடம் தொடர்பு கொண்டு ஐந்தாறு டிக்கட்டுகளை இவர்கள் வசம் கொடுத்து உபரிப்பணத்தில் பாதியைக் கமிஷனாகப் பெற்றுக் கொள்ள முன் வந்தனர். ஆகவே வருமானம் சிட்டிக்கு மாத்திரமே சில நாட்களில் இரண்டு மூன்று ரூபாய் கிடைத்தன.

கன்னியப்பன் கையிலோ பீடிக்குக்கூட காசில்லை. சிட்டியோ, தனக்குச் சாப்பாடு இல்லாமல் போவதானாலும் கன்னியப்பன் சாப்பிடுவதற்கு என்ன கேட்டாலும் வாங்கித் தரத் தயாராக இருந்தான் ஆனால் பீடிக்காகத் தான் ஒரு நயாபைசா கூடத் தரமுடியாது என்ற சொல்லிவிட்டான். கன்னியப்பனுக்கோ, ஜூரவேகத்தில் பீடி குடிக்க வேண்டும் என்ற வெறி கட்டுக்கடங்குவதாயில்லை.

“உடம்புக்குக் காய்ச்சலிருக்கும்போது பீடீ வேற குடிக்கணுமா?” என்று சிட்டி இறுதியாகவும் உறுதியாகவும் மறுத்துவிட்டான்.

மூன்றாம் நாள் காலை, பார்க்கு பெஞ்சியில் படுத்துறங்கி எழுந்த சிட்டி கன்னியப்பனின் உடம்பைத் தொட்டுப் பார்த்தான். அவன் உடல் நெருப்பாய்க் கொதித்தது. டீயும் பன்னும் வாங்கி வந்து அவனை எழுப்பிச் சாப்பிட வைத்து ஆசுபத்திரிக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணிய சிட்டி டீக்கடையை நோக்கி விரைந்தான்.

சிட்டி டீக்கடையிலிருந்து கிளாசில் டீயும் ஒரு காகிதத்தில் சுற்றிய பன்னுமாய்த் திரும்பிவரும்போது அந்தப் பார்க்கின் சுவரோரம் எவனோ எரிந்து விட்டுப்போன எச்சில் துண்டு பீடியொன்றை எடுத்து புகைத்துக் கொண்டிருந்த கன்னியப்பனைக் கண்டான் சிட்டி.

“சை! கன்னியப்பா... வேணாம், வேணாம்... அதெப் போட்டுடு நான் உனக்குப் பீடி வாங்கியாறேன்” என்று தூரத்திலிருந்து கத்தினான் சிட்டி.

பிறகு பக்கத்துக் கடையில் அரையணாவுக்குப் பீடியும் தீப்பெட்டியும் வாங்கி வந்து கன்னியப்பனிடம் தரும்போது “பீடீ புடிக்கறதிலே உனக்கு ஒரு ருசி வந்துட்டுதுனா அதுக்கா நீயா, காரணம்?” என்று தொண்டர் கூறிய வார்த்தைகளை நினைவு கூர்ந்து சொல்லி அந்தச் சம்பவத்தை விளக்கித் தொண்டரின் அருமை பெருமைகளை வழக்கம்போல் விரித்துரைக்க ஆரம்பித்தான் சிட்டி.

பன்னைத் தின்று டீயைக் குடித்தபின் பீடிபுகைத்தவாறு சிட்டியின் பேச்சை கேட்டுக் கொண்டிருந்த கன்னியப்பன் திடீரென்று ஏதோ நினைத்தவனாய் ‘சிட்டி உங்கிட்டே ஒண்ணு சொல்லணும்னு நெனைச்சேன்..” என்று மோவாயைச் சொறிந்தான்.

“என்னா அது?”

“ஒண்ணுமில்லே... மூணு நாளா சாயங்கால நேரத்திலே நீ போனப்புறம் தனியா இங்கே படுத்துக் கெடக்கறனா... மூணு நாளும் சாயங்காலம் ஆறுமணிக்கு உங்கம்மா இந்தப் பக்கமா வீட்டுக்குப் போவுது பாவம், அந்த ஆளு

போனப்புறம் இன்னா பண்ணம் சோத்துக்கு? பழைய மாதிரி சித்தாளு வேலைக்கிப் போவ ஆரம்பிச்சிடுச்சி – வயித்தை சாச்சிகிட்டு வயித்து சோத்துக்காக அது வேலை செஞ்சிட்டுப் போறதெப் பாத்தாப் பாவமா இருக்குடா சிட்டி" என்றான் கன்னியப்பன். அதைக் கேட்டு சில வினாடிகள் மௌனமாய் நின்றிருந்த சிட்டியின் முகத்திலேற்பட்ட உணர்ச்சிகளையே கவனித்தான் கன்னியப்பன். ஒரு நொடியில் அந்த உணர்ச்சிகள் யாவும் மறைந்து பழைய அலட்சிய பாவத்துடன், "சரி, சரி, எவ எங்கே போயி இன்னா பண்ணினா நமக்கென்ன?... நீ உன் உடம்பெப் பாத்துக்காம மூணு நாளா காச்சலோட படுத்திருக்கியே.. வா, காப்ரேசன் ஆசுபித்திரிக்கினாச்சும் போயி வரலாம்.." என்று கன்னியப்பனைப் புறப்படத் துரிதப்படுத்தினான் சிட்டி.

"இன்னா? ஆஸ்பத்திரிக்கா... ஹுஹும் வேணாம்!" என்று பதைபதைத்து மறுத்தான் கன்னியப்பன்.

"ஏன்? ஆஸ்பத்திரிக்குப் போவ ஒனக்கு இன்னா பயம்?" காய்ச்சல் தானாப் பூடும்னு மூணு நாளு பாத்தாச்சு போறதாக்காணோம்.. இப்பிடியே வுட்டு எதனாச்சும் பெரிசானப்பறம் கஷ்டப்படுவே, வா போகலாம்!" என்று சிட்டி வற்புறுத்தி அழைக்கவே கன்னியப்பன் எப்போதுமில்லாத துயரமும் பயமும் கொண்டு முகமே களையிழந்து வெறிச் சோடிப் போக... இப்படியே விட்டு எதனாச்சும் பெரிசானப்பறம்' என்று சிட்டியின் வார்த்தைகள் ஆழமாய்த்தைத்த சிந்தனையோடு தலைகுனிந்து உட்கார்ந்திருந்தான்.

"இன்னாத்துக்கு யோசிக்கிற? எந்திரி போகலாம்" என்று அவன் கையைப் பிடித்து இழுத்து அவனைத் தூக்கினான் சிட்டி.

ஒரு இழுப்பில் காற்றில் பறப்பதுபோல் நிலை குலைந்து எழுந்து நின்ற கன்னியப்பன் நிற்க முடியாமல் சிட்டியின் தோள்களைப் பற்றிக் கொண்டு வேதனையோடு உதட்டைக் கடித்துச் சமாளித்து, "என்னாலே நடக்க முடியலேடா சிட்டி

காலெல்லாம்... தொடையெல்லாம் நோவுது..” என்று ஈனசுரத்தில் முனகினான்.

“அதுக்கென்னா பரவாயில்லே, நீ என் தோள் மேலே கைபோட்டு என்னெ கெட்டியாப் புடிச்சிக்க நா’மெதுவா உன்னெக் கூட்டிக்கினு போறேன்” என்று கன்னியப்பனின் வலது கரத்தை இழுத்துத் தோள்மீது போட்டுக் கொண்டு அவன் பாரத்தையெல்லாம் தான் தாங்கி மெள்ள நகர்ந்தான் சிட்டி.

சிட்டியின் தோள்மீது கைத்தாங்கலாய், காலைப் பூமியில் ஊன்ற முடியாமல் நொண்டி நொண்டி, ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போது உடலில் ஏற்பட்ட வலியைப் பொறுக்க முடியாமல் முகம் எண்ணற்ற கோணல்களாய்ச் சுளிக்கப் பல்லைக் கடித்துக் கொண்டு நடந்தான் கன்னியப்பன்.

பார்க்கிலிருந்து ஒரு பர்லாங் தூரத்திலிருக்கும் ஆஸ்பத்திரி அருகே வந்து சேர அவர்களுக்குப் பதினைந்து நிமிஷங்களுக்கும் மேலாயிற்று!

ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்ததும் அங்கிருந்த கும்பலைப் பார்த்துவிட்டு “சிட்டி ஒரே கூட்டமாயிருக்குடா.. இன்னக்கி வேணாம் நாளைக்கிப் பாத்துக்குவம்” என்று பின்வாங்கினான் கன்னியப்பன்.

“அடே! கூட்டமா இருந்தா நமக்கென்னா? சினிமாக் கொட்டாக் கும்பல்லே நாம்ப டிக்கட் வாங்கறதில்லை” என்றான் சிட்டி.

“ஒனக்கு ஒண்ணும் தெரியாதுடா சிட்டி... கும்பல் எல்லாம் போகட்டும் அப்பாலே நாம்ப உள்ளே போகலாம்” என்று சொல்லிவிட்டு வராந்தாவில் தனித்துக் கிடந்த ஒரு பெஞ்சின் மூலையில் தலையில் கைவைத்து முகத்தைக் குனிந்து கொண்டு உட்கார்ந்தான் கன்னியப்பன். அவன் பக்கத்தில் சிட்டியும் மௌனமாய் ஒன்றும்புரியாமல் அவன் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உட்கார்ந்து கொண்டான்.

இரண்டு மணி நேரத்துக்கு மேல் அங்கேயே உட்கார்ந்திருந்தனர் இருவரும்.

மணி பத்தரை யாகும்போது அநேகமாய் எல்லா நோயாளிகளும் போய் விட்டதை உணர்ந்த சிட்டி "ம்... இப்ப கும்பலே இல்லே? வா போகலாம்! அப்பாலே டாக்டரும் போயிடுவாரு" என்று அவனைத் துரிதப்படுத்தி எழுப்பினான் சிட்டியின் தோளைப் பற்றிக் கொண்டு எழுந்த கன்னியப்பன் மெதுவான குரலில் சொன்னான்: "என்னெ உள்ளே டாக்டருகிட்டே விட்டுட்டு நீ வெளியே வந்து இங்கேயே உக்காந்துக்கணும்"

"சரி என்று கன்னியப்பனை அழைத்துக்கொண்டு சிட்டி பதனமாய் நடந்து டாக்டரின் அறைக்குள் வந்தான்.

அந்த டாக்டர் இளம் வயதும் சுத்தமாய்த் துடைத்த கண்ணாடிபோல் ஒளிவீசும் பெரிய நெற்றியில் விழுந்து புரளும் சுருண்ட சிகையும் தூய உடையும், இனிய தோற்றமும் கொண்டவராய், நோயாளிகளைக் கண்களால் குணப்படுத்தும் குளிர்ந்த பார்வையோடு கன்னியப்பனை அழைத்தார்.

அவனை அவரருகே கொண்டு நிறுத்திவிட்டுச் சிட்டி வராந்தாவுக்குச் சென்று ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான்.

டாக்டர் கன்னியப்பனை ஸ்கிரீனுக்குப் பின்னால் அழைத்துச் சென்று சில நிமிஷங்களுக்குப் பின் வெளியில் வந்தார்: தாங்கொணாத் துயரங்கொண்டவர் போல் ஆழ்ந்த சிந்தனையோடு அகன்ற தனது நெற்றியை வருடிக் கொண்டே தமது இருக்கையில் வந்தமர்ந்தார். அவர் பின்னாலேயே சுவரைப் பிடித்து தாங்கி நடந்து அவமானத்தால் சாம்பிக்கூசி வந்த கன்னியப்பன் டாக்டரின் மேஜையைப் பிடித்துக் கொண்டு நின்றான். அப்போதுதான் அவன் வந்து நிற்க முடியாமல் நிற்பதைக் கண்ட டாக்டர், "பரவாயில்லே அந்த நாற்காலியிலே உக்காரு..." என்று அன்புடன் சொன்னார்.

நாற்காலியில் உட்கார்ந்த கன்னியப்பனிடம் அவர் கேட்ட சில விளக்கங்களும், அவன் சொன்ன பதிலும்-அந்தச் சம்பாஷணை-வெளியிலிருந்த சிட்டிக்குத் தெளிவாகக் கேட்டது.

“ஓம் பேரு?”

“கன்னியப்பன்”

“வயது?”

“ம்…பதி…னாறு…”

“ஓ…த்சொ.. த்சொ..”

“ஸார்…”

“ஸ்… ஒண்ணும் பயப்படாதே! ஒண்ணுமில்லே ஒனக்கு. ஒரு ஆம்பளை நீ.. அழலாமா?.. நல்ல வேளை, ஆரம்பத்திலேயே வந்தியே பயந்துகிட்டு முத்தினப்புறம் வராம.. இப்ப உனக்கு ஊசி போடறேன். மூணு மாத்திரை தர்றேன்..அதெச் சாப்பிட்டா ஜுரம் நின்னு போகும் கம்பவுண்டர் கிட்டே போயி மருந்து வெச்சிக் கட்டுப் போட்டுக்க.. தெனம் வந்து ஒழுங்கா ஊசி போட்டுக்கணும், கட்டு கட்டிக்கணும் என்ன? சீக்கிரத்திலே உடம்பு சரியாயிடும் பயப்படாதே!” என்று கூறி அவன் முதுகில் அவர் தட்டிக் கொடுத்த சப்தமும் சிட்டிக்குக் கேட்டது.

‘கன்னியப்பனுக்கு என்ன? என்று மனசில் கிளம்பிய சந்தேகம்தான் அவனுக்கு இன்னும் நிவர்த்தியாகவில்லை.

தொடர்ந்து டாக்டரின் குரல் கேட்டது. “இனிமே ஜாக்ரதையா, நல்ல பையனா நடந்துக்கணும்.. ம், என்ன?”

“சரி… ஸார்…”

“பாத்தியா அழறியே?… தைரியமா இரு, என்ன பண்றது? இப்படியெல்லாம் வரும்னு தெரிஞ்சிருந்தா அப்படியெல்லாம் நடந்துக்கிட்டிருப்பியா? அதுக்குத்தான் சொல்றேன் இனிமே ஜாக்ரதையா இருன்னு. இன்னும்

உனக்கு எவ்வளவோ வயசு இருக்கு; அதுக்குள்ளே என்ன அவசரம் உனக்கு? கொஞ்ச நாளைக்கு வேலி கட்டிப் பாதுகாத்தாதானே மரம் பழம் குடுக்கும்... வேலியில்லாம விட்டுட்டா மரத்துக்கே மோசம் வந்துடும் இல்லையா? அது மாதிரி தான் இந்தா? இந்தப் பையனைக் கொண்டு போய் டிரஸிங் ரூம்லே விடு!" என்று டாக்டர் சற்றுக் குரலெடுத்து அழைத்ததும் வெள்ளையுடை தரித்த ஒரு ஆஸ்பத்திரி பணியாள் ஓடி வந்து கன்னியப்பனைக் கைத்தாங்கலாய் அழைத்துக்கொண்டு கட்டுக்கட்டுமிடத்தல் கொண்டு போய் விடுவதையும் சிட்டி பார்த்துக் கொண்டிரருந்தான்.

கட்டு கட்டுமிடத்திலிருந்த அந்தப் பணியாள் வெளியேறிய சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்த அறையிலிருந்து யாரையோ யாரோ 'பளார்' என்று அறைவது போன்ற சப்தமும் அதைத் தொடர்ந்து "இல்லே ஸார்...இனிமே இல்லே ஸார்" என்று அடிவாங்கிக் கொண்டு அலறும் கன்னியப்பனின் அழுகுரலும் கேட்டு ஆத்திரத்தால் உடல் பதைத்த சிட்டியும் டாக்டரும் ஏக காலத்தில் அந்த அறையை நோக்கி ஓடிவந்தனர்.

"யூ, புருட்!... எதுக்குமேன் அந்தப் பையனை அடிச்சே?.. இதெல்லாம் நம்ம இன்சார்ஜ்லே வேணாம்.. நோயாளிகளுக்கு டிரீட் பண்ண இருக்கியா. ஊருக்கு சட்டாம்பிள்ளைத்தனம் பண்ண இதுவா இடம்? நீ யாரு அவனை அடிக்க?... ஒழுங்கா மரியாதையா டிரஸ் பண்ணி அனுப்பனும், தெரிஞ்சிதா?" அந்தப் புதிய டாக்டர் கோபத்துடன் கம்பவுண்டரிடம் இரையவே, கம்பவுண்டர் நடுநடுங்கியவராய் வெளியில் வந்தார்.

அரை மீசையும் கரிய உடலும், கட்டை குட்டையான தோற்றமும் கொண்ட அந்தக் காம்பவுண்டர் வெளியில் வந்து டாக்டரிடம் மன்னிப்புக்கேட்டுக் கண்கள் கலங்கியவாறு கூறினார்:

"ஐ ஆம் ஸாரி டாக்டர்... எக்ஸ் க்யூஸ் மீ ஸார்.. இந்தப் பையன் வயசுக்கு எனக்கு ஒரு ஸன் இருக்கான் ஸார்... எம் பையனே இப்படி ஒரு கேஸா வந்துட்ட மாதிரி ஒரு வேகம்

வந்துட்டு ஸார்” என்று சொல்லும்போது உணர்ச்சி வயப்பட்ட அவரது தடித்த உதடுகள் படபடத்துத் துடித்தன.

“ஓ!...’ என்று நெற்றியைத் தேய்த்துக் கொண்ட டாக்டர் “உம்ம பையனா இருந்தாலும் அவனை அடிச்சு என்ன பிரயோசனம்? விபரீதமா வளர்ந்து விஷயத்தைக் கக்கி பளபளப்பா நெளியற இந்த சமூகத்தை அடிக்கணும்... யாரு அடிப்பா?” என்று முணுமுணுத்துக் கொண்டே அப்பால் நகர்ந்தார் டாக்டர். கம்பவுண்டரும் உள்ளே போனார்.

சில நாட்களுக்கு முன் அந்த ஆங்கிலப்படத்துக்கு டிக்கட் வாங்க முடியாமல் வெளிவந்த கன்னியப்பன் சிரித்தானே, அந்தச் சிரிப்புக்குப் புரியாத காரணமும், இப்போது அவன் அடிபட்டு அலறினானே, இந்த அழுகைக்கு உரிய காரணமும் சிட்டிக்குப் புரிந்தது.

சிட்டியின் மனத்தில் பல மாதங்களுக்கு முன் கபாலியால் வர்ணிக்கப்பட்ட, அதன் பிறகு எப்போதோ ஒருநாள் தானே எங்கோ பார்க்க நேர்ந்த அந்த நீலாக்குட்டியின் ‘அழகுத் தோற்றம்’ அசிங்கமாய் நினைவுக்கு வந்தது.

எனினும், அன்று ஆசுபத்திரியிலிருந்து கன்னியப்பனைக் கைத்தாங்கலாய் அழைத்துச்சென்ற போதும் சரி;, மறுநாளும் சரி அது பற்றி அவனிடம் எதுவுமே இதுவரை கேட்கவில்லை சிட்டி.

## 12

பத்து பதினைந்து நாட்களுக்குள்ளாகவே கன்னியப்பன் பூரண குணமடைந்து விட்டான். தான் நோய்ப்பட்டு வேதனைக்குள்ளானபோது தன்னிடம் மிகவும் பாசத்தோடு நடந்து கொண்டு தன்னைக் காப்பாற்றிய சிட்டியைத் தன் உடன் பிறந்த சகோதரனைப் போல் புதிதாய் பிறந்த ஒரு பந்தத்துடன் சிட்டிக்காக உயிரையும் தரும் அளவுக்கு அவன் மீது அன்புகொண்டு விட்டான் கன்னியப்பன்.

இப்போதெல்லாம் மீண்டும் இருவருமே முன்போல் தியேட்டருக்குச் சென்று டிக்கட் வாங்கி விற்கவாரம்பித்தனர். இப்போது சிட்டிக்குத் தெரியாத ரகசியங்கள், கெட்ட நடத்தைகள், உறவுகள் ஒன்றும் கிடையாது கன்னியப்பனுக்கு. அவனது உடலும் மனமும் பரிசுத்தமாகி விட்டன. சிட்டியைப் போன்றே எல்லாவிதங்களிலும் ஒழுக்க சீலனாக மாறிவிட்ட கன்னியப்பன் கடந்த ஒருவார காலமாய்ப் பீடி புகைப்பதைக்கூட விட்டுவிட்டான்.

இந்த மாற்றங்களையெல்லாம் கண்ட சிட்டி உள்ளூரப் பெருமிதம் அடைந்தான். எஜமான் தொண்டரின் லட்சியத்துக்கேற்ற முறையில் தானும் அவரைப்போல் வளர்ந்து பிறரையும் வளர்க்கிறோம் என்ற நினைவில் தன் தாயைப் பற்றியும் தனக்கு வாழ்வில் நேர்ந்த துயரங்களையும் மறந்தே விட்டான்.

மறந்த சம்பவங்களை, மறந்த துயரங்களை, மறந்த கேவலமான அவனது பிறவியை ஞாபக மூட்டுவதற்காகவே அன்றொரு நாள் காலை அன்னம்மாக் கிழவி சிட்டியைத் தேடிக் கொண்டு பார்க்குக்கு வந்து சேர்ந்தாள். தூரத்தில் அவள் பரந்து பரந்து தனது ஸ்தூல சரீரத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிவருவதைப் பார்த்த சிட்டி,

‘இந்தக் கெய்வி இங்கே எங்கே ஓடியாறா’ என்ற முனகியவாறு அவளைச் சந்திக்க விரும்பாதவனாய் தலையைக் குனிந்து கொண்டான்.

அன்னம்மா வேக வேகமாய் வந்து மூன்றடி உயரமுள்ள பார்க்கின் சுவரருகே நின்று... “இங்கத்தானே எங்கியோ கீறான்னு சொன்னாங்க” என்று முகம் சுளித்து முணகியவாறே தேடிய அவள் பார்வையில் கன்னியப்பன் பட்டான்.

“ஏ புள்ளாண்டான்.. அங்கே எங்க சிட்டிப்பையன் இல்லே? இங்கத்தான் இருப்பான்னு சொன்னாங்களே?” என்று கத்தினாள் கிழவி.

கன்னியப்பனின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் தன்னைக் காண முடியாமல் தவிக்கும் கிழவியின் குருட்டுத் தனத்தைக் கண்டு சிரித்துக் கொண்ட சிட்டி கன்னியப்பனிடம் ‘இன்னா சமாசாரம்னு கேளு’ என்று நிண்டிவிட்டான்.

“இங்கத்தான் இருப்பான்.. இப்ப எங்கியோ உத்தியோகத்துமேலே பூட்டான். இன்னா சமாசாரம்னு சொல்லு; வந்தா சொல்றேன்” என்று பதிலுக்குக் கன்னியப்பனும் பார்க்குக் குள்ளிருந்து கத்தினான்.

“வந்தா சொல்றியா? இரு வர்றேன்” என்று சொல்லி விட்டு பார்க்கின் வாசல் வழியே அவள் உள்ளே நுழைந்து தாங்கள் இருக்கின்ற பெஞ்சை நோக்கி வருவதைக் கண்ட சிட்டி, கன்னியப்பனின் முதுகுக்குப் பின்னால் குனிந்து நடந்து சென்று பின்வாங்கிச் செடி மறைவில் ஒளிந்து கொண்டான்.

கிழவி கன்னியப்பனை நெருங்கி வந்து அவன் முகத்தைக் குனிந்து அருகே பார்த்தாள்: “வரவரக் கண்ணே தெரியலை; தொலவுலேருந்து பாத்தா எல்லாம் நெகுலாட்டமும் பொகயாட்டமுந்தாந் தெரியுது. கிட்டே பாத்தாத் தான் கொஞ்சந் தெரியுது. இருட்டிப் பூடுத்தோ… அவ்வளவுதான் பூனையை! சுட்டு பணியாரம்னு கையிலே கொடுத்தாளாமே அப்படித்தான் எங்கதெயும்… ம் ஆச்சு! சாவறதுக்கு மின்னே இன்னும் இன்னா இன்னா படணுமோ?” என்று ஒரு பாட்டம் தன்னைப் பற்றிப் புலம்பிக் கொண்டே கன்னியப்பனின் பக்கத்தில் பெஞ்சின் மீது அமர்ந்தாள் கிழவி.

“நல்லா நவுந்து சாஞ்சு உக்காராயா, ஒட்டுலே உக்காந்து உய்ந்துடப்போறே?” என்று அவள் கையைப் பற்றி பெஞ்சின் நடுவே இழுத்து உட்காரவைத்தான் கன்னியப்பன்.

“ஆமா சிட்டிப்பையன் இங்கதான் சுத்திக்கினுகீறான்னு சொல்றியே நீ யாரு? உம் பேருதான் கன்னியப்பனா?” என்று கிழவி கேட்கவும் கன்னியப்பன் வியந்து

“ஆமா உனக்கு எப்பிடி ஆயா தெரியும்?” என்று கேட்டான் கன்னியப்பன்.

“அதான் அந்தச் சிட்டிபய ஆத்தாக்காரி நெதம் உன்னாலதான் அவபுள்ளே கெட்டுப் போச்சுன்னு பொலம் பிக்கிட்டுக் கெடப்பாளே... நாங்கேக்கறதுதான், இது இன்னாடி கதையாக்குது ஒம்புள்ளேயே நல்லா வெச்சிருக்க ஒனக்கு பொவுஷு இல்லேன்னா ஊருபுள்ளங்ளெப் பத்தி அநியாயமா பயி போடாதேன்னு... சொன்னா கேப்பாளா? விசயம் என்னான்னா அவபுள்ளே வூட்டெவுட்டு ஓடிப்போறதுக்கு அவளேதான் காரணம். புள்ளைன்னாலும் புள்ளை தங்க மிலலியா அவன்? பொறுப்போட லட்சணத்தோட அவன் சம்பாதிக்கப் போறதும் ராத்திரி ஸ்கோலலே பிரிவேட்டுக்குப் போறதும் எம்மா நல்ல புள்ளையா இருந்தான்?... இந்தச் சிறுக்கி எங்கியோ போயி எவனையே இஸ்தாந்து வூட்லே வெச்சிக்கினா-ஒலகந் தெரிஞ்ச புள்ளெ பாத்துக்கினு கம்னு இருப்பானா? நீ இருப்பியா? ஐயெ இன்னா கேக்கறேன் சும்மா இருக்கியே...” என்று சொல்ல வந்த விஷயத்தை சொல்லி முடிப்பதற்கு முன் ஒரு இடைவெளி விட்டு அந்த நேரத்தில் இடுப்பிலிருந்த சுருக்குப் வையை எடுத்து ஒரு வெட்டுப் பாகைகை வாயில் போட்டுக்கொண்டு, கன்னியப்பனிடம் “வெத்திலை போடறியா?” என்றாள்.

“வேணாம் ஆயா” என்று அவன் சொன்னதும், கிழவி சிரித்துக் கொண்ட “அதெல்லாம் அந்தக் காலத்திலே-வயசுப் புள்ளிங்கல்லாம் வெத்தல பாக்கு போயிலே போடறது-இப்பத்தான் தெம்மாந் தெம்மா பசங்கல்லாங்கூட ஆளுக்கொரு கொள்ளிக் கட்டையை வாயிலே வெச்சிக்கினு பீடியாம், சிகரெட்டாம்-நாத்தாம் கொடலைப் புடுங்குது... ஆமா, இந்தச் சிட்டிப் பையன்கூட பீடி புடிக்கறானாமே.. நெசந்தானா?” என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கேட்டாள் கிழவி.

“இல்லே ஆயா.. கூட இருந்தவன் யாராவது புடிச்சிருப்பான்...” என்று கன்னியப்பன் சொன்னதும் சமாதானமுற்ற கிழவி வெற்றிலைக்குச் சுண்ணாம்பு

தடவிப் போட்டு மென்று இரண்டு முறை சாறு விழுங்கி கத்தெக்காம்பைக் கிள்ளி வாயில் போட்டு அந்தக் காரத்தின் முதல் சுகத்தை அனுபவித்துச் சாற்றைத் துப்பும் வரைக் கன்னியப்பனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமான யோசனையுடன் வாயைக் குதப்பியவாறு உட்கார்ந்திருந்தாள்.

அப்போது செடி மறைவிலிருந்த சிட்டி ‘எங்கே வந்தே? இன்னா விசயம்னு கேட்டு வெரட்டு’ என்று சைகையில் கன்னியப்பனிடம் பேசினான்.

கிழவியிடம் பேசுவது சுவாரஸ்யமாக இருந்தாலும் அவளையும் தனக்குப் பிடித்திருந்ததாலும் கன்னியப்பன் ‘பொறு பொறு என்னென்ன சொல்லிதுன்னு பாப்போம்’ என்று சைகையாலேயே பதிலளித்தான்.

“ஆமா, நீ எங்கேருந்து வர்றே?” என்றாள் கிழவி.

“ஓட்டேரிலே வூடு ஆயா எனக்கு.”

“ஆத்தா, அப்பன் எல்லா இருக்காங்களா?”

“ம்... இருக்காங்க”

“பின்னே, நீ யின்னாத்துக்கு இங்கே வந்து சுத்திக்கினு திரியறே?”

“வூட்லே கொஞ்சம் கோவம்.. அப்பாலே பூடுவேன்”

“அதான் சரி கோவம் வர்ரதுதான் ரெண்டு நாளு அங்கேயிங்கே சுத்தறதுதான்-இதெல்லாம் சகஸம்... அப்பிடித்தான் ரெண்டு நாள்லே வந்துடுவான்னு நெனச்சிக்கினு இருந்தா தங்கம். எனக்குத் தெரியும் அவன் வரமாட்டான்னு... சிட்டி இருக்கானே-அவன் ரொம்ப ரோஸக்காரம்பா! இவுளுக்கு இன்னாத் தெரியும்? எங்கியோ போயி பெத்துப் போட்டுட்டா நாந்தானே இந்த ரெண்டு கையாலேயும் ராவுன்னு இல்லாம பகலுன்னு இல்லாமத் தூக்கி வளத்தேன் அவனை... எனக்கு இன்னான்னு கேக்கறியா?... எனக்குப் புள்ளையுமில்லே குட்டியிமில்லே என்னமோ வாய்ந்து எப்படி யெப்படியோ

தீத்தாச்சு!...ம் பய்யகதெ, இப்ப இன்னா அந்தமவ, இந்தப் பேத்தி எவளாவது வந்து இந்தா உன் பேரன்னு எங்கையிலே குடுக்கப் போறாளா? இவமட்டும் யாரு? நம்ப மவ மாதிரியில்லியான்னு தங்கத்துகிட்டே எனக்கு ஒரு பிரியம்...”

இன்னும்தான் வந்த காரியத்தைச் சொல்லாமல் கதை பேசும் கிழவியின் மேலும் அவளிடம் கதை கேட்டு உட்கார்ந்திருக்கும் கன்னியப்பன் மீதும் செடி மறைவில் உட்கார்ந்திருக்கும் சிட்டிக்கு எரிச்சல் எரிச்சலாய் வந்தது.

கிழவி கன்னியப்பனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“எம் மேலே கூட சிட்டிப் பையனுக்கு கோவந்தான் நான் இன்னா பண்ணுவேன்? அறியாத வயசிலே அவன் ஆத்தா எங்கியோ போயி வவுத்திலே புள்ளையை வாங்கிக் கினு வந்து நின்னா உசிரெ மாச்சிக்கிறேனு வந்து அயுதா... மவ மாதிரி பயகின தோசம். எனக்கு மனசு கேக்கலே... மானத்துக்குப் பயந்து உசிரை உடறேன்னு நிக்கறாளேமவ-காப்பாத்துவோம்னு எங்கையாலேதான் புள்ளையைக் கலைக்கறதுக்கு மருந்து குடுத்தேன். நம்ப மருந்து இன்னா பண்ணும்-தெய்வம் மனசு வெக்க வேணாம்?... அத்தினி மருந்தெத் துண்ணும் மணைக்கட்டெ மாதிரி பொறந்த புள்ளையைப் பாத்தப்பறந்தான் இன்னா காரியம் பண்ணோம்னு எனக்கே வயிறெரிஞ்சுது அந்தப் பாவத்தெத் தீத்துக்கற மாதிரிதான் நாம பெத்த புள்ளெ மாதிரி வளத்தேன் சிட்டிப் பையனெ... இதெல்லாம் தெரியுமா அவனுக்கு?க்கு அந்த எதிர்பூட்டுத் தேவிடியா முண்டே அலமேலு எல்லாத்தியும் அவன் கையிலே சொல்லியிருக்கா. அவன் அதுக்கோசரம் எம்மேலே கோவம் வெச்சிக்கினா வெச்சிக்கிட்டுப் போவட்டும், அவனோட ஆத்தாக்காரிமேலே பச்சாதாபப் பட்டுந்தான் அவன் பொறக்கறதுக்கு மிந்தி அந்தக் காரியத்தெ நான் செஞ்சேன்.. பொறந்தப்பறம் நான் எம்மாம் பிரியமா அவனெ வளத்தேன்னு அந்தக் கடவுளுக்குத் தெரியும்.. அதோ எரியறானே சூரிய பகவான் அவனுக்குத் தெரியும்...!” என்று தன் மங்கிய விழிகளில் சுரந்த

கண்ணீரை முந்தானையில் துடைத்துக் கொண்டாள் கிழவி.

கிழவியின் வேதனைகளைக் கண்ட கன்னியப்பனுக்கு மனம் சங்கடப்பட்டு முகமே வாடியிருந்தது.

“அரசனை நம்பி புருசனைக் கைவுட்ட கதையா இப்ப அவனும் பூட்டான். பாவம் வயித்துப் புள்ளெயோட தெனம் போயி வேலை செஞ்சு... நானும் எம்மாந்தூரம் சொன்னேன்... வேணாண்டி ஒரு பக்கம் உய்ந்துகெட, கஞ்சியோ, தண்ணியோ நான் குடிக்கறதிலே கொஞ்சம் ஊத்தறேன்.. ம் ஊம் கேப்பாளா? அவ புத்தியே அதானே? தான் நெனச்சதெ செய்யணும்... வேலைக்குப் போனா, யாரு கிட்டயோ வீம்பு புடிச்சிக்கின மாதிரி ஓடி ஓடி உடம்பை முறிச்சிப் பாடுபட்டா கறியும் மீனுமா ஆக்கித்துண்ணா நெதம் வேலையிலேருந்து வர்ரவயிலே ரெண்டு மீனெ வாங்கிக் கையிலே புடிச்சிக்கினுதான் வருவா? யாருகிட்டே வீம்போ?.. எவன் இருந்தா என்னா போனா என்னான்னு எல்லாருகிட்டயும் தெனாவுட்டாதான் பேசினா. நேத்து வேலை செய்யற எடத்துலே ஏணியிலேருந்து கால் தடுக்கி உய்ந்திட்டா... அப்பவே வலி கண்டிருச்சு ஆசுபத்திரிக்குத் தூக்கிக்கினு போயிருக்காங்க... அங்கே போயி இசிவு வந்துட்டுது. வயித்திலேருந்து புள்ளெ உசிரோட வர்ரது பெரிய கஸ்டமாப் பூடிச்சாம் ராத்திரி பூரா நானு தவிச்சிக்கினு இருந்தேன். ஆஸ்பத்திரியிலே விடியக்காத்தாலே தாயும் புள்ளையையும் கொண்ணாந்து போட்டாங்க. அவளுக்குப் பொராக்கனையே இல்லே பொணம் மாதிரி கெடக்கறாப்பா புள்ளெ நல்லாத்தான் இருக்குது.. பொட்டெப்புள்ளெ- அது இன்னா படப் பூவுதோ?- டாக்டருங்க நரசம்மாவுங்க வந்து வந்து பாத்துட்டுப் போறாங்க. காத்தாலே கண்ணெத் தொறந்தவுடனே மவ அயுதா அதெப்பாத்தா என் வயிரெல்லாம் பொரிஞ்சு போச்சு, சிட்டியை நான் கூட்டி யார்ரன்னு வந்தேன். மவ பொயிப்பாளோ பூடுவாளோ? புள்ளெ மூஞ்சியைப் பாத்துடட்டும்னு ஓடியாந்தா இவனெ நானு எங்கே போயித்

தேடுவேன். அப்பாலே ஒரு யோசனை வந்திச்சி-நேரே போனேம்பா. அவன் வேலை செய்யற ஐஸ் பாட்டரிக்கு...”

அதுவரை தனது மன உணர்ச்சிகளையும் தன்னையும் மறைத்துக் கொண்டிருந்த சிட்டி, “அடி கெயப்பொணமே! உன்னெ யாரு அங்கே போவச் சொன்னது?” என்று ஆத்திரத்துடன் உறுமியவாறு வெளி வந்தான்.

திடுக்கிட எழுந்து நின்ற கிழவி ‘நானு இன்னாடா தப்பு செஞ்சேன்னு எங்கிட்ட சண்டைக்கு வர்றே?... அங்கே போனா அந்த மொதலாளியாட்டம் இருக்காரே... ஐயோ! தங்கமான மனுசன்.. என்னெப் பாத்துட்டு எங்கம்மா வாட்டம் இருக்கீங்களேன்னு எம்மாம் பிரியமாப் பேசினாரு! நீ இன்னாடானானா அங்கே ஏம் போனேன்னு கேக்கிறியே? அவன் இந்தப் பக்கம் வரலியேன்னு என்னா வருத்தப் படறாரு அவரு உன்னெப்பத்தி! நீ ஏண்டா அங்கே போவலே, அத்தெச் சொல்லு” என்று கிழவி பதிலுக்குக் கத்தியபோது சிட்டி மனமுடைந்து தலைகுனிந்து பெஞ்சியின் மீது உட்கார்ந்தான். சற்று பொறுத்துக் கலங்கிச் சிவந்த கண்களுடன் கிழவியைப் பார்த்து அழுகின்ற குரலில் கேட்டான் சிட்டி. ‘நீ எல்லாவிசயத்தையும் அவுரு கிட்ட சொல்லிட்டியா? இப்ப கன்னியப்பன் கிட்ட சொன்ன மாதிரி?”

“ஆமா சொன்னேன்...கேட்டாரு, சொன்னேன்” என்று அழுத்தந் திருத்தமாய்க் கிழவி சொல்லும்போது சிட்டி கைகளைப் பிசைந்து பற்களைக் கடித்தான்.

“அங்கேதான்-வேலை செய்யிற ஒருபையன் சொன்னான் நீ இங்கேதான் இந்த பார்க்கலே இருக்கேன்னு... அதான் ஓடியாந்தேன். உங்க எஜமான் உன்னெ வரச் சொன்னேன்னு சொல்லப் போனாரு, அப்பிடியும் நீ வராகாட்டி அவுரே வருவாராம் இங்கே, உன்னெத் தேடிக்கினு.. சொல்லச் சொன்னாருப்பா சொல்லிட்டேன்... நான் போறேன் ஆசுபத்திரிக்கி அங்கே மவ எப்படி இருக்காளோ?” என்று சிட்டியின் கோபத்துக்கு அஞ்சி இவ்வளவு நாட்களுக்குப் பிறகு அவனைச் சந்தித்த

மகிழ்ச்சியை மனத்துள் அடக்கிக் கொண்டு தளர்ந்து நடந்தாள் கிழவி.

சிட்டி கண்ணீர் மல்கும் விழிகளால் அன்னம்மா நடந்து செல்லும் தோற்றத்தைப் பின்னாலிருந்து பார்த்தான்.

தனக்காக, தன் தாய்க்காக தங்கள் இருவர் மீதும் கொண்டுவிட்ட பலன் கருதாப் பாசத்துக்காக இந்தக் கிழவிதான் என்னபாடுபடுகிறாள். இருவரிடமிருந்தும் எவ்வளவு சுடு சொற்களை வாங்கிக் கொள்கிறாள்-என்று ஒரு நிமிஷம் எண்ணிப் பார்த்த சிட்டி இந்தத் தள்ளாத வயதில் இவ்வளவு தூரம் தன்னைத் தேடிவந்து பார்த்துச் செல்லும் கிழவியிடம் ஒரு நல்ல வார்த்தை பேசாமல் அனுப்புகிறேனே என்று வருந்தி-

“ஆயா!...” என்று அழைத்தான்.

அந்த அன்பான அழைப்புக்கு ஏங்கிக்கிடந்து ஏமாந்து திரும்பிய துயரத்தோடு சென்ற அன்னம்மா திரும்பிப் பார்த்தாள்... இடுங்கிய விழிகளால் தூரத்திலிருந்து ஒரு நிழலைப் போல் ஓடிவரும் சிட்டியைப் பார்த்து ஒரு கையை மட்டும் நீட்டினாள்; ஓடிவந்து அவளது நீட்டிய கரத்தைப் பற்றிய சிட்டி “எங்கே ஆயா.. என்னத் தேடிக்கிட்டு நம்ப எடத்துக்கு வந்துட்டு ஒரு டீ கூடக் குடிக்காமப் போறியே?” என்று அன்புடன் கேட்டான்.

அவனது அன்பையும் விசாரிப்பையும் கிழவியால் தாங்க முடியவில்லை. அவளுக்கு கையும் காலும் பாசத்தின் மிகுதியால் படபடத்தன. அவளது முகத்தின் சுருக்கங்களெல்லாம் அழுகையுணர்ச்சியில் துடிக்க ஒரு குழந்தை போல் செருமி, துயரம் அடைக்கும் குரலில் சிட்டியின் கையை இறுகப்பற்றிக் கொண்டு சொன்னாள்:

“ம்-உனக்குத்தான் எம்மேலே கோவம்... நீ வயித்திலே இருக்கும்போது நான்தான் உங்க ஆத்தாளுக்கு மருந்து குடுத்த பாவியாச்சே”

“எனக்கொண்ணும் உம்மேலே கோவமில்லே ஆயா, நீ அப்ப மருந்துகுடுத்தேன்னு சொன்னான அதுஉன் தப்பு

இல்லே”... என்று கூறிய சிட்டி வேறு யார் தப்பு என்று முழுமையாக உணர முடியாமலும் உணர்ந்ததைச் சொல்ல முடியாமலும் திணறித் தனது அன்பால் கிழவி மீது தனக்கு வருத்தமில்லை என்பதை உணர்த்தினான். கிழவியிடம் சிட்டி அன்பு காட்டி உபசரித்ததைக் கண்ட கன்னியப்பன் மனம் மகிழ்ந்து நான் போயி ஆயாவுக்கு டீ வாங்கியாரேன் என்று ஓடினான் அவன் போனதும் கிழவி ஆர்வத்தோடு சிட்டியை உடம்பெல்லாம் தடவி மகிழ்ந்து முத்தமிட்டு விசாரித்தாள்: “நல்லாயிருக்கியாடி கண்ணே... எப்பப் பாத்தாலும் எனக்கு உன் ஞாபகந்தாண்டி... தேடிக்கினு வந்தா நீ திட்டுவியோன்னுதாண்டி நானு வரலே... கண்ணும் வர வர மங்கிப் போச்சு...” என்று தன் வயோதிகக் கதையை ஆரம்பித்தாள் கிழவி.

உலகத்தின் முன் உடல் கூனி நிற்பதில் வெட்கப்படாமல் அந்த உலகத்தைத் திருப்பியடிக்கவும் தயாராயிருந்த சிட்டி, யாருக்குத் தன் இழிவுமிக்க கறைபடிந்த தனது தாயின் வாழ்க்கையும், அவளுக்குப் பிள்ளையாயிருக்கும் தன் நிலையும் தெரியக்கூடாது என்று எண்ணி இத்தனை மாதங்கள் அஞ்ஞாத வாசங்கள் அனுபவித்து வருகிறானோ அந்த எஜமானுக்கு எல்லாம் தெரிந்து போயிற்றே, இனி என்ன செய்வது அவர் முகத்தில் விழிப்பதா? எங்காவது ஓடிவிடுவதா? யாவும் அவருக்குத் தெரிந்தபின் ஓடினால் என்ன, ஓடாவிட்டால் என்ன?-என்றெல்லாம் குழம்பிக் கொண்டிருந்தான் சிட்டி.

அவர்-அந்த உத்தமர், அந்தப் பெரியவர், தன் வணக்கத்திற்கும் மதிப்பிற்குமுரிய எஜமான் தன்னைத் தேடிக்கொண்டு இங்கு வரக்கூடாது என்று எண்ணிய சிட்டி அவர் முன் தானே போய் நின்று விடுவது என்று முடிவு செய்துவிட்டான்.

கன்னியப்பன் டீ வாங்கி வந்தாள். கிழவி தனது சருமம் சுருங்கிய இரண்டு கையாலும் கண்ணாடித் தம்ளரை ஏந்தி சூடான டீயை ஊதி ஊதிக் குடிக்கும்போது சிட்டிக்கு மீண்டும் ஏனோ கண்கள் கலங்கின.

“ஆஸ்பத்திரிக்கு நடந்தா போறே?” என்று கேட்டான் சிட்டி.

“ஆமா, வேறே எப்படிப் போறாதாம்?” என்று சிரித்தாள் கிழவி.

“இந்தா... நாலணா இருக்கு-தோ அங்கே வந்து உன்னெப் பஸ்ஸிலே ஏத்திவுடச் சொல்றேன்-பதிமூணோ, பதினாறே பைசா டிக்கட்டு வாங்கிக்கிட்டு-எய்ம்பூர் ஆஸ்பத்திரிதானே? -ஏத்திச் சொல்லி அனுப்பு கன்னியப்பா... நான் போயி எங்க எஜமானெப் பாக்கணும்” என்று காசைக் கொடுத்துவிட்டு “நான் போயிட்டு வர்ரேன் ஆயா”என்று விடை பெற்றுக் கொண்டு ஓடினான் சிட்டி.

“வா ஆயா போவோம்” என்று அழைத்த கன்னியப்பனைப் பார்த்து அன்போடு புன்னகை காட்டிய கிழவி “உன்னெப் பாத்தா ரொம்ப நல்ல புள்ளையாட்டம் இருக்குதே! இவன் ஆத்தா உன்னெப்பத்தித் தறுதலைப் பையன்னு சொல்றாளே” என்றாள்.

கன்னியப்பன் அது கேட்டுச் சிரித்தான்: “ஆமா ஆயா, தறுதலையாத்தான் இருந்தேன்...இப்பக் கொஞ்சம் கொஞ்சமா சிட்டியோட சேர்ந்து திருந்திட்டேன்...” என்று அவன் சொன்னது கேட்டு கிழவியும் மனம் நிறைந்து மகிழ்ந்து வாய் நிறைந்து சிரித்துப் பூரித்தாள்.

## 13

“சிட்டிபாபுவா? வா...வா... உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்... நீ வருவேன்னு எனக்குத் தெரியும்... இன்னக்கி மட்டுமில்லே, இந்த மூணு மாசமாகவே நான் அப்படித்தான் காத்துக்கிட்டு இருக்கேன். என்னைக்கா இருந்தாலும் ஒரு நாளு நீ என்னைத் தேடி வருவேன்னு எனக்குத் தெரியும். என்ன செய்யலாம் பழகின தீய சூழ்நிலையெ திடீர்னு கண்டா மறுபடியும் அந்த மயக்கம் இருக்கும்; அப்படித்தான் நீ மறுபடியும் ஊரைச் சுத்தப் போயிட்டேன்னு நெனச்சி இருந்தேன். அப்பவும்கூட ஏதோ ஒரு சமயம் நான் சொன்ன நல்ல வார்த்தைகளை நெனைச்சிப் பாத்து நீ திரும்பி வருவேன்னு இருந்தேன்.

இன்னக்கிக் காத்தாலே அந்த ஆயா வந்து சொன்னப்பறம் தான் எனக்கு விசயமே தெரிஞ்சிது. உன்னைக் கூட்டிக்கினு வரச்சொன்னேன். நான் கூப்பிட்டா நீ வருவேன்னு எனக்குத் தெரியும் வா... இப்படி உக்காரு.

தன் அறைக் கதவைத் திறந்துகொண்டு, தலை நிமிர்ந்து எதிர் நோக்க முடியாத அவமான உணர்ச்சியோடு குறுகிக் கூசி உள்ளே நுழைந்த சிட்டியைக் கண்டு அன்போடு உட்கார வைத்து, தான் அவனைத் தவறாக எண்ணியிருந்ததை விளக்கிக் கூறினார் தொண்டர் துரைக்கண்ணு. அவர் அப்படியே நினைத்துத் தன்னை மறந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே என்று நினைத்துக் கொண்ட சிட்டி, தன் தாயைப் பற்றியும் அவளது 'விவகாரங்கள்' பற்றியும் தன்னிடம் அவர் ஏதும் கேட்டு விடக் கூடாதே என்று உடல் குறுகி உட்கார்ந்திருந்தான்.

அதை அவரும் புரிந்து கொண்டாரோ...?

சற்று நேர மௌனத்துக்குப் பின் தொண்டர் டின்னிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்தார்; கையில் இவ்வளவு நேரம் புகைத்துக் கரைந்த சிகரட் துண்டிலேயே அதைப் பற்றவைத்துக் கொண்ட பின் ஒரு புன்னகையுடன் சிட்டியிடம் கேட்டார்:

“சரி, நம்ப ஒப்பந்தம் என்னா ஆச்சி? நான் அடுத்த நாளே மீறி சிகரட் பிடிக்க ஆரம்பிச்சுட்ட மாதிரி நீயும்...?” என்று கேட்டு முடிப்பதற்குள்ளாக அதற்குப் பதிலுரைப்பது போல் சிட்டி 'இல்லை... நான் அந்த ஒப்பந்தத்தை மீறவில்லை' என்பதுபோல் தலையை ஆட்டினான். அப்போது ஒரு தடவை கன்னியப்பன் தந்த வீடியில் ஒரு 'தம்' அடித்ததும் மாணிக்கத்திடம் சண்டை இழுப்பதற்காக ஒரு முறை பாதி பீடியைக் கன்னியப்பன் கையிலிருந்து வாங்கிக் குடித்தும் அவன் நினைவுக்கு வரவே, அதை அவரிடம் மறைக்க விரும்பாமல்.

“ரெண்டு தடவை பீடி குடிச்சேன்... வேணும்னே, எனக்கு இஷ்டம் இல்லாமத்தான் குடிச்சேன்” என்று குனிந்த தலை நிமிராமல் கூறினான் சிட்டி.

“அது சரி, உனக்கும் உங்க அம்மாவுக்கும் சண்டைன்னா அதுக்காக இங்கே நீ ஏன் வேலைக்கு வரல்லே? ஏன் பள்ளிக்கூடத்துக்குப் போகலே... என் கிட்டயுமா, உனக்குச் சண்டை?” என்று கேட்டவுடன்-அவரும் எதிர்பாராமல், அவனுமறியாமல்-அவன் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அவரை ஆழ்ந்து யோசிக்க வைத்தன.

அவன் வரண்ட குரலில் சொன்னான்: “எனக்கு என்கிட்டேயேதான் சண்டை...”

வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான அநுபவங்கள் அவனை எவ்வளவு விரக்தியடைய வைத்திருக்கின்றன என்பதை அவர் உணர்ந்தார். அவனருகே வந்து அவனது முகவாயைக் கையிலேந்தி அவன் முகத்தை நிமிர்த்தினார் தொண்டர். நிமிர்ந்த சிட்டியின் முகத்தில் விரிந்த விழிகளில் கண்ணீர் குளமாய் நிறைந்திருந்தது.

“யாருகிட்டே சண்டை போட்டாலும் தாய்கிட்டே சண்டை போடக் கூடாதப்பா; தாய்கிட்டேயே சண்டை போட்டாலும் ஒருத்தன் தன் கிட்டேயே சண்டை போட்டுக்கக் கூடாது... ஆமா! அது ரொம்பத் தப்ப தன்னைத் தானே வெறுக்க ஆரம்பிச்சுட்டா அந்த மனசு அப்பறம் யாரையுமே நேசிக்க முடியாமலே அழுகிப் போயிடும். சிட்டி பாபு! நீ எதுக்கு உங்கம்மாவோட சண்டை போட்டே ஏன் ஓடிப் போனேன்னு-எல்லாம் எனக்குத் தெரியும் என்னதான் இருந்தாலும் பெத்த தாய்கிட்டே நீ அப்பிடி நடந்திருக்கக் கூடாது. தாய் தப்பு செய்தாலும் அவளைத் தண்டிக்கிற உரிமை அவள் வயித்திலே பிறந்த மகனுக்குக் கிடையாது... தாய் செய்த தப்பின் காரணமாகவே நாம்ப எல்லாரும் பிறந்திருக்கலாம்!... அதில் நமக்குச் சம்பந்தமே கிடையாது. தாய் என்ன தப்பு செய்தபோதிலும் நம்மைப் பத்து மாசம் வயித்திலே வெச்சிருந்தது இல்லேன்னு ஆயிடுமா?... தன் ரத்தத்தைப் பாலாக்கி நாம் கேட்காமலே நம்பப் பசியறிஞ்சி ஊட்டினது பொய்யாயிடுமா?

“நீ உங்கம்மாக்கிட்டே கோவிச்சுக்கிட்டு ஓடிட்டப் பறம், அந்தம்மா எத்தினி ராத்திரி தூங்காம எம்மகன் எந்தப்

பார்க்கிலே, எந்த பிளாட்பாரத்திலே கெடக்கறானோன்னு தவிச்சுத் தூக்கம் வராம இருந்திருக்கும்னு நெனச்சிப்பாத்தியா?... ஒவ்வொரு வேளை சோறு திங்க உக்காரும் போதும் ஊட்டி மகிழ்ந்த அந்தெப் பெத்த மனசு ஒருகவளம் சாப்பிட முடியாம எப்பிடி துடிச்சி இருக்கும்னு நீ நெனச்சிப் பாத்தியா?...” என்று அவர் கூறும்போது அதற்காக வருந்தவோ அவளை மன்னிக்கவோ அவன் இன்னும் தயாராகவில்லை.

“உங்கம்மா உன்கிட்டே காட்டற பிரியமெல்லாம் வேஷம்னு சொன்னியாமே.. பெத்தமனசு தன் பிள்ளையை நேசிக்காம இருக்கவே முடியாது. நீ என்ன தப்பு செஞ்ச போதிலும் உன்னை நேசிக்கிற ஒரே உயிர் உன் தாய்தான். நீ உன் தாய்க்கு எவ்வளவு கொடுமை செஞ்சாலும் அந்த மனசு உன்னை வெறுக்காது.. நீ வேணுமானா இப்ப, நான் சொன்னேன்னு போயிப் பாரு... தாயின் வேஷம், நடிப்பெல்லாம் அது தெரியுமா? உன்னைத் திட்டினதும் அடிச்சதும் சபிச்சதும் வெறுத்ததும் தான் வேஷம், நடிப்பு பொய்...!” என்று அவர் சொல்லும்போது மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த சிட்டி, அவர் கூறியவற்றில் உண்மை இருந்த போதிலும் தன் தாயின் கேவலமான நடத்தையைத் தான் சகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாதவனாக, “நான்தான் இப்ப எங்கம்மாவை வெஷமா வெறுக்கறேன்” என்றான்.

“அது சரியில்லை சிட்டிபாபு!” என்று கனிந்த குரலில் சொன்னார் தொண்டர்.

“அப்படீன்னா எங்க அம்மா செஞ்ச காரியமெல்லாம் ரொம்ப சரின்னு சொல்றீங்களா?” என்று மனம் கொதித்துக் கேட்டான் சிட்டி.

“இல்லை சிட்டிபாபு... அது தப்புன்னா நீ உன் வருத்தத்தை ஒரு மகன்ங்கிற முறையிலேதான் காட்டிக்கணும். நீ வீட்டை விட்டு வந்தது கூடத் தப்பில்லே.. உங்கம்மாவைப் பழிவாங்க நெனச்சது தப்பு. உன்னோடயே நீ சண்டை போட்டுக்கிட்டு உன் வாழ்க்கையைக் கெடுத்துக்கறது தப்பு!

சரி. போனது போகட்டும்.. அது எதுவானாலும், இப்ப உன் தாய் இருக்கற நெலமையிலே நீ பொயிப் பாத்துட்டுதான் வரணும் பெத்த மகனுக்கு இந்த அளவு அன்பிருக்குன்னுகூட நீ காட்டக் கூடாதா?” என்று துரைக்கண்ணு கேட்டபோது சிட்டி யோசித்துச் சொன்னான்:

“காட்டலாம், ஆனா அந்த என் ஆசை நெசமா இருக்காதுங்க. வெறும் வேஷம்தான்... பொய்யிதான்...” என்றதும் ஒரு நீண்ட மௌனத்திற்குப் பின் அவர் சொன்னார்:

ஆசுபத்திரியிலே நெலமை ஆபத்தா இருக்கும்போது அந்தத் தாய் எவ்வளவு பாவியானாலும் அவளைப் போய்ப் பாத்து ‘அம்மா’ன்னு கூப்பிட வேண்டியது ஒரு மகனுடைய கடமை... இல்லாட்டி பின்னாலே அதுக்காக நீ என்னை மாதிரி வருத்தப்பட நேரும் போ உன் முகதரிசனமே உங்கம்மாவுக்கு உயிர்தர்ர மருந்தாகாலாம் என்கிட்டே உனக்கு வருத்தமில்லேன்னா மறுபடியும் இங்கே நீ வேலைக்கு வரணும்.. சங்கத்திலே போயிப் படிக்கணும். என்ன சரி தானா!” என்று அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார் தொண்டர். அவனும் வேறு வழியின்றித் தலையசைத்தான்.

அவன் புறப்படும்போது தன் பர்சிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் தந்து “ஏதாவது செலவுக்கு வேணும்னா வெச்சிக்க” என்று கொடுத்தார்.

மனமில்லாமல் அவர் தருகிறார் என்று பணத்தை வாங்கிக் கொண்ட சிட்டி, அதேபோல் மனமில்லாமலேயே அவர் சொல்கிறார் என்பதற்காக ஆஸ்பத்திரிக்கும் போவதற்காக அங்கிருந்து வெளியேறினான்.

## 14

கடினமான உழைப்பாலும், மாணிக்கத்தால் புறக்கணிக்கப்பட்டு விட்ட உள்ளத்தில் வீழ்ந்த வாழ்க்கையின் கடைசி அடியாலும் நொறுங்கிப் போய்விட்ட தங்கம் சிரமப் பிரசவத்துக்குப் பின்னால் பல

மணி நேரங்கள் பிரக்ஞையற்றுக் கிடந்து, அந்த வார்டு கட்டிலில்- ஆஸ்பத்திரிச் சூழ்நிலையில்-கண்விழித்துப் பார்த்தபோது தன் எதிரே அன்னம்மாள் கிழவி வீற்றிருப்பதைக் கண்டாள்.

“சிட்டி” என்று அவளது வறண்ட உதடுகள் இடைவெளி காட்டி அசைந்தன. கண்களில் சுரந்த நீர் காதோரம் வழிந்தது.

“பாத்தேன்.. இப்ப வருவான்...” என்று அவள் கூந்தலை ஒதுக்கிச் சமாதானப் படுத்தினாள் கிழவி.

வலிப்புக்கண்டு முறுக்கி முறுக்கி உணர்விழந்தால் உடம்பே கரைந்துபோன பின் ‘தான்’ எனும் உயிர்மட்டும் எஞ்சியிருப்பது போலிருந்தது அவளுக்கு. அதுவும் போய்விடும் என்று மிக நம்பிக்கையுடன் தோன்றிற்று அவள் மனத்துக்கு. அதற்கு முன் சிட்டியை ஒரு முறை, ஒரே ஒரு முறை பார்த்து ‘அம்மா’ என்று அவன் தன்னை அழைத்துக் கேட்டால் தன் நெஞ்சு வேகும் போலிருந்தது. அவளுக்கு எஞ்சியிருக்கும் ஒரே ஆசை. இறுதி ஆசை அதுதான்.

பிரக்ஞை வந்த சற்று நேரத்துக்குப்பின் தன் உடலிலிருந்து கழன்ற அந்தப் புதிய உயிரைக்கூட அவள் பசையற்ற இதயத்தோடுதான் பார்த்தாள்.

வளர்ந்தால் கறுப்பாகவே மாறவிருக்கும் கறுஞ்சிவப்பு நிறத்தில் தலையில் அடர்ந்த சிகையோடு இருதயத் துடிப்பு மார்பின்மேல் குதிக்கச் சுகநித்திரை புரிந்து கொண்டிருந்தது அந்தப் பெண் மகவு.

‘மாணிக்கம் இருந்தால்..?’ என்ற ஏக்கம் வந்து தங்கத்தின் நெஞ்சில் அடைத்தது. அதைத் தொடர்ந்து – தனக்கும் அவனுக்கும் விளைந்த – உன்னதமான, இரண்டு இதயங்களும், இரண்டு உடல்களும் எவ்வித பந்தத்தாலும் அல்லாமல் அன்பினாள் மட்டுமே இணைந்த-உறவுக்கு, வாழ்க்கையில் இனிமேல் தான் உயிரோடு இருந்தாலும் நிகழ முடியாத ஒரு கனவுக்கு, உலகில் சில

பாக்கியசாலிகளின் வாழ்க்கையில் மட்டுமே நேர்கின்ற அந்தரங்கத் தாம்பத்ய நிறைவுக்கெல்லாம் பரிசாய், சாட்சியாய்ப் பயனாய்க் கனிந்த அந்தச் சிசுவைத் தீண்டுவதற்கு அவள் கை எடுத்தாள்..

அந்த மிருதுவான மலர்ச்சியை, அப்பொழுதுதான் முகை யவிழ்ந்த மலரை, தன்னில் மறைந்திருந்து இன்று தானும் ஒரு தனியான தளிரை, முன்னாகி இருக்கின்ற தனக்குப் பின்னாலும் தொடரவிருக்கும் முடிவற்ற சங்கிலியின் ஒரு முனையை அவனில் சுரந்து எதுவோ ஒருநாள் அவளில் கலந்து ‘அது’ வாகி இன்று அவளிலிருந்து அகன்று வந்து அதுவும் ஒரு அவளான அதிசயத்தை அவள் தன் விரலால் ஸ்பரிசிக்கையில் விரல் வழியே புகுந்த சிலிர்ப்பு உடல் முழுதும் பாலாகிப் பரந்து நெஞ்செல்லாம் வழிவது போல் சுகம் தந்தது.

அந்த சுகத்தில் கிறங்கிக் கண் மூடியபோது அவளது நினைவு மயக்கத்தில் அந்த சுகத்துக்குக் காரணமான மாணிக்கம் தோன்றினான்...

ஒரு வருஷத்துக்கு முன்

பார்க்பேர் கண்காட்சி காண்ட்ராக்டில் சித்தாளாக வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள் தங்கம்.

அப்பொழுதெல்லாம் தங்கத்தைக் காண்பவர்கள் அவள் ஒரு தனிப் பிறவி என்றும், தானும் தன் வேலையும் வீடு திரும்பினால் மகனும் தவிர வேறொன்றிலும் ஈடுபாடு இல்லாத வேடிக்கைப் பிறவி என்றும்தான் கருதுவர். அப்போது அதுதான் உண்மை.

மேஸ்திரிகளுடனும் எஜமானர்களிடமும் உடன் வேலை செய்யும் ஆண்களிடமும் எல்லாச் சித்தாள் பெண்களைப் போல தங்கம் இளித்துக் கொண்டு நின்று எவரும் பார்த்ததில்லை. சின்னவயசில் அப்படிச் சிலரைப் பார்த்துத் தானும் அதுபோல் நின்று சூடும், சூட்டின் விளைவாய் வாழ்க்கையில் வடுவும் பட்டுப் போனவளல்லவா? அவளது அனுபவம் அவளுக்கு வாழ்க்கையில் மறக்கவொண்ணாப்

பாடமாயிற்று. அவரவர் அனுபவம் அவரவருக்கு மட்டும்தானே பாடமாகிறது...?

மற்றப் பெண்கள் இப்போதும் அப்படித்தான்? ஜல்லி உடைக்கும்போதும், சுண்ணாம்பு அரைக்கும்போதும், பாடுகின்ற சுவைமிகுந்த பாட்டோடு தங்களையும் அங்குள்ள ஆண்களுக்கும் பறிகொடுத்து அவர்களையும் தங்கள் வசம் ஈர்க்க வலை விரித்துக் கொண்டிருந்தனர். தங்கம் இவற்றிலெல்லாம் வெறுப்புற்றவள் போல் முகம் திருப்பிக்கொண்டு போய் விடுவாள்.

மத்தியான நேரங்களில் எல்லாச் சித்தாள் பெண்களும் தத்தமது பித்தளைத்தூக்குச் சட்டிகளுடன் மூர்மார்க்கட்டு மரத்தடியில் உட்கார்ந்து கும்பல் கும்பலாய்ச் சாப்பிடும் போதும், அந்த ஒவ்வொரு கும்பலிலிருந்தும் அடிக்கடி வெடித்துக் கிளம்பும் ஒரு பச்சைச் சிரிப்பின் வெக்கலிப்புகளிலும், அங்கு போகின்ற வருகின்ற ஆண்களைப் பார்த்து ‘நெட்’டெடுத்துத் தத்தமது மனத்தில் விளைந்த அந்தரங்க இச்சைகளுக்குப் போக்கேற்படுத்திக் கொள்ளும் அவர்களின் பொழுது போக்கு வேடிக்கைகளிலும் தங்கம் பங்கு பெற மாட்டாள். கிடைக்கின்ற ஒரு மணி நேர ஓய்வை, சாலை யோரத்தில் செமெண்ட் தரையின் பக்கத்தில் நிழல் வீசிக் குட்டையாய் நிற்கும் வேப்பமரத்தடியைச் சுற்றி புல் வளர்ந்த ஒரு திடலில் சேலைத் தலைப்பை விரித்துப் படுத்து விடுவாள் தங்கம்.

அன்று, அவள் வழக்கம்போல் அங்கு படுக்க வந்தபோது, குருவி சோசியக்காரனொருவன் கடை பரப்பி உட்கார்ந்த வண்ணம், சோசியம் பார்ப்பதாகப் பேர் பண்ணிக் கொண்டு அவனைச் சூழ்ந்துவிட்ட நான்கைந்து சித்தாள் பெண்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகி இருக்கும் பரிதாபத்தையும் பார்த்துச் சலிப்புடன் வேறு பக்கம் சற்றுத் தள்ளி இருக்கும் மரத்தடியில் போய் படுத்த தங்கம் தனது நல்ல இடத்தை ஆக்ரமித்துக் கொண்ட குருவி சோசியக்காரனை ஆத்திரத்தோடு வெறித்தும் பார்த்தாள்...

பாவம்! அவனைச் சூழ்ந்த உட்கார்ந்து கொண்டு இருக்கும் அத்தனைச் சிறுக்கிகளும் அவனை என்னவோ கேலிபண்ணிவிட்டு ஒருத்திமேல் ஒருத்தி விழுந்து 'ஓ'வென்று சிரிக்க-அந்த அசட்டு ஆள் ஒன்றும் புரியாமல் பல்லைக் காட்டிக்கொண்டு அவர்கள் நடுவே இருப்பது சற்று தூரத்திலிருந்த தங்கத்தின் கவனத்தை ஈர்த்தது. 'இவன் ஏன் இங்கே வந்து குந்திக்கிறான்?' என்று குருவி சோசியக்காரன் மீது மேலும் அவளுக்கு ஆத்திரம் வந்ததற்குக் காரணம் இடம் பறிபோனதுதானோ?...

'சீ! இன்னாப் பொம்பளைங்க இவளுங்க... அழகா, செவப்பா, கின்னவயசா இருக்கான்னு அந்த நாட்டுப் புறத்து புள்ளையெப் புடிச்சி இன்னா இன்னா மாதிரியெல்லாம் பேசி 'சத்தாக்கி'றாளுவ....' என்று அவனுக்காக அவள் அடுத்த சில நாட்களில் மனம் பொருமினாள்.

பின்னொருநாள் மத்தியானம் வேலை செய்து கொண்டிருக்கையில் கலவை அள்ளிச் செல்லும் 'பாணலை'க்கையில் வைத்துக் கொண்டு அடுத்த நடைக்காகத் தான் கலையில சும்மாட்டுடன் காத்து நிற்பதைக் கூடக் கவனியாமல் அந்தக் கலவை சேர்க்கும் சின்னப் பொண்ணும் ருக்குமணியும் தோள்மீது கைபோட்டுக் கொண்டு தூரத்தில் தெரியும் மாணிக்கத்தைக் காட்டித் தங்களுக்குள் ஏதோ பச்சையாகப் பேசி மகிழ்வதைக் கேட்ட தங்கம், கையிலிருந்த இரும்புச் சட்டியை மடாரெனத் தரையில் அடித்து வீசி, தலைச்சும்மாட்டையும் உதறிவிட்டு,

"ஏண்டி நீங்க எல்லாம் வேலெக்கி வர்ரீங்களா? இல்லே, எந்தப் பையன் கெடைப்பான்-இஸ்த்துக்கினு போலாம்னு வர்ரீங்களாடி...?" என்று ஆவேசம் வந்தது போல் கத்தியதின் விளைவாக மேஸ்திரி ஓடிவந்து சின்னப் பொண்ணையும் ருக்குமினியையும் திட்டிவிட்டுப் பொறாமை கொண்ட விழிகளுடன் மாணிக்கத்தையும் பார்த்தான்...

அங்கு வேலை செய்யும் ஆண் பெண் அனைவர் மத்தியிலும் மாணிக்கத்தைப் பற்றிய ஒரு விதமான நினைவு- ‘சாதக-பாதக’ என்ற இரண்டு ரீதியிலும் புகுந்து விட்டது.

அதனால் இடைவேளையில் அவனிடம் சோசியம் பார்க்கக் கூடுகின்ற சித்தாள் கூட்டமும் சற்றுக் குறைந்தது.

சில் நாட்களுக்குப் பின் வேலை முடிவுறுந்தறுவாயில் சிலபேர் மட்டிலுமே வேலைக்கு வந்தனர் கான்ட்ராக்டரிடம். அதில் வந்த இரண்டு சித்தாள்களில் தங்கமும் ஒருத்தி.

அப்போது ஒருநாள் காலை, தங்கம் வேலைக்கு வரும் போது, குளித்து முழுகி, துவைத்து உலர்த்திய தூயசட்டையும் வேட்டியும் அணிந்து ஒளிவீசும் பரந்த நெற்றியில் சந்தனப் பொட்டுத்துலங்க, மழுங்கச் சீவிப் பளபளக்கும் கிராப்புச் சிகையோடு மெல்லிய அதரங்களில் புன்னகை தவழ ‘கடைபரப்பி’க் கொண்டு குருவிகளுக்கு நெல்மணிகளைக் கொறிக்கத் தந்தவாறு உட்கார்ந்திருக்கும் மாணிக்கம் வழக்கத்திற்கு மாறாக அந்த மரத்தடியில் தலைமுதல் கால் வரை போர்த்தி உறங்குவதைக் கண்ட தங்கம் ‘நமக்கென்ன’ என்று வேலைக்குப் போய்விட்டாள்...

ஆனால் அன்று மத்தியானம் சாப்பிடுவதற்காக, கையில் தூக்குச் சட்டியுடன் மர நிழலைத் தேடி அவள் வந்த போதும் அவன் அதே நிலையில் உறங்கிக் கொண்டிருப்பதையும், அவன் தலைமாட்டிலிருந்த கூண்டுக்குள் ‘அவன் எப்போது எழுந்து தீனி தருவானோ, என்று கவலையோடு காத்திருந்த குருவிகளையும் கண்டபோதுதான் தங்கத்தின் நெஞ்சு துணுக்குற்றது.

ஐயோ! பாவம்... உடம்புக்கு என்னவோ ஏதோ?, என்ற அனுதாப உணர்ச்சியோடு அவன் அருகே வந்து, “ஐயோவ்... இன்னாப்பா... குருவி சோசியக்காரரே!...” என்று குரல் கொடுத்து எழுப்பினாள்.

அவன் முகத்திலிருந்த துணியை விலக்கி, விழித்துப் பார்த்தபோது அவன் கண்ணும் முகமும் சிவந்து கிடந்தன. தன்னைச் சுற்றிப் பலரும் வேடிக்கை பேசிக் கொண்டிருக்கும் போதெல்லாம் விலகி நின்றிருக்கும் தங்கத்தை அவன் இதற்கு முன் பல தடவை பார்த்திருக்கிறான் பிரக்ஞை இல்லாது கிடக்கும் இந்த நேரத்தில் ஆதரவோடு தன்னை எழுப்பி உதவி புரிய வந்திருப்பவள் மாதிரித் தோன்றும் அவன் முகத்தைப் பார்த்ததும் அவன் உதடுகளில் ஒரு புன்னகை துடித்தது.

“இன்னா சோசியக்காரே… ஒடம்புக்கென்னா?” என்று தங்கம் விசாரித்தாள்.

“நேத்து ராத்திரியிலேருந்து ஒரே குளிர்காய்ச்சல்… ஒடம்பெல்லாம் கொடையுது” என்று உடம்பை முறித்து அவன் சிணுங்கினான்.

“வூட்டுக்குப் போறதுதானே? காச்சல்னு சொல்லிக்கினு இங்கே படுத்துக் கெடந்தா ஒரு வாய்த் தண்ணி குடுக்கறது யாரு?” என்று அநுதாபத்தோடு கண்டிக்கும் குரலில் சொன்னாள் தங்கம்.

அவன் ஏக்கமும் துயரமும் நிறைந்த விழிகளால் அவள் முகத்தையே ஒரு வினாடி உற்றுப்பார்த்தான்.

“இன்னாய்யா அப்படிப் பாக்கிறியே…?’ என்று புன்னகையுடன் கேட்டாள் தங்கம்.

அவனும், “ஒண்ணுமில்லே” என்று வெட்கமுற்றவன் போல் தலை குனிந்ததைக் கண்டதும் அவளுக்கு இன்னும் சிரிப்பு உண்டாயிற்று.

“எனக்கு வூடுவாசல் ஒண்ணுமில்லே அதான் இங்கேயே படுத்துக் கெடக்கறேன்…” என்று அவன் கூறும்போது அவள் நெஞ்சில் சுரந்த இரக்கம் அவளது கண்களில் மினுமினுத்தது.

அன்று அவள் தான் கொண்டு வந்திருந்த உணவில் அவனுக்குப் பகிர்ந்து, அவன் கையில் பிசைந்து வைத்து

உணவூட்டினாள்.

-ஆமாம்: அவர்கள் உறவு ரகஸியமாய், தனிக் காட்டில், இருளில் முளைக்கவில்லை பட்டப்பகலில், நட்ட நடுத் தெருவில் பலரும் பார்க்கும்போது விளைந்த அந்த நட்பு, பின்னால் எப்படி யெப்படியோ வளர்ந்து உருப்பெற்றுப் பிணைந்ததற்கெல்லாம் பூரணப் பொறுப்பு தங்கம்தான். இல்லாவிட்டால் மாணிக்கத்துக்கு அவ்வளவு தைரியம் வராது...

தான் 'உண்டாயி'ருப்பதாக ஒருவன் அவள் மாணிகத்திடம் வந்து மகிழ்ச்சியுடன் கூறியபோது அவன் அஞ்சினான்; அவள் சிரித்தாள்.

தாங்கள் இருவரும் 'புருசன் பெஞ்சாதியா' வாழ்வது என்ற முடிவை அவள் தெரிவித்தபோது-சகல இதிகாசங்களிலும் காவியங்களிலும் கூறப்படுவதுபோலலே தான், உடலிலிருந்து உயிர் பிரியினும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிவது இல்லை என்று உறுதி கொண்டு அவர்கள் வாக்களித்துக் கொண்டனர்.

'செத்தாலும் உன் மடியில்தான் சாவேன்' என்று அவள் மார்பில் முகம் புதைத்துக் கொண்டு அவள் இன்ப பிணைப்பில் கட்டுண்டு கிடந்தபோது குழந்தைபோல் தேம்பிய குரலில் சொன்ன அந்த மாணிக்கம், வயிற்றில் விதைத்தது பிறக்கு முன் தன் உறவைக் கத்தரித்துக் கொண்டே ஓடிவிட்டான்!...

'அதற்குப் பொறுப்போ, காரணமோ அவன் அல்ல என்று மனசார அறிந்திருந்த தங்கத்துக்கு இந்த நிமிஷம் கூட மாணிக்கத்தின் மீது வருத்தமில்லை.

மூடிய அவளது விழிகளிலிருந்து வடிந்த கண்ணீர் தலையணையில் வழிகிறதே...

'மாணிக்கம் இல்லையே' என்ற துயரந்தான் அதற்குக் காரணமோ?...

“தங்கம்... கண்ணெத் தொறந்துபாரு. தோ, உன் பையன்!-சிட்டி வந்திருக்கான்...” என்ற அன்னம்மாளின் குரல் மந்திரம்போல் ஒலிக்கக் கேட்டுக் கண் திறந்து பார்த்தாள் தங்கம். தங்கம் கண்திறந்து தன் மகனையும் தன்னைச் சுற்றி நிற்கும் டாக்டர்களின் கூட்டத்தையும் கண்டபோது தான்-தான் இவ்வளவு நேரம் மூர்ச்சையுற்றுச் சிகிச்சைக் குள்ளாகி இருந்தோம் என்று உணர்ந்தாள். அவள் கையைப் பிடித்து நாடி பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் பக்கத்திலிருந்த பேசினில் கை கழுவிவிட்டு துண்டில் கையைத் துடைத்தவாறு சற்று நகர்ந்தார்; தங்கத்தின் அருகில் இருந்த நர்ஸ் அவர் பின்னாலேயே போனாள். டாக்டர் தன்னைப் பற்றி அவளிடம் என்னவோ கூறுகிறார் என்று உணர்ந்தாள் தங்கம்.

-அவர் தனது கேஸைக் ‘கை கழுவி’ விட்டார் என்று அவளுக்குப் புரிந்தது!

‘சிட்டி எங்கே?’... என்று திடீரென மனம் சிலுப்பிக் கொண்டு நின்றது.

அதோ அவன், நீல நிறக்கால் சட்டையின் இரண்டு பைகளிலும் கைநுழைத்துக் கொண்டு-மூணுமாசமாகுதே முடி வெட்டி... காதோரமெல்லாம் முடிவழியுது-‘சிங்கம் மாதிரி’ வருவதாகத் தோன்றியது தங்கத்துக்கு.

அவன் வந்தான்...!

அவள் அருகில் வந்தான்.

அவள் மேல் போர்த்தியிருந்த போர்வைக்கு வெளியே தெரிந்த அவளது வலது பாதத்தை வெறித்துப் பார்த்தவாறு அவளது முகத்தைப் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டே நின்றான்.

“சிட்டி... நீ எங்கேடா வந்தே...” என்று கண்கள் பளபளக்க யாரையோ கேட்பதுபோல் மெதுவான குரலில் அவள் கேட்டபோது, சிட்டி ஒருவினாடி அவள் முகத்தைப் பார்த்தான். அந்த முகம் வேறு யாரோ போல் இருந்ததால் இன்னும் ஒரு வினாடி பார்த்தான்.

“எங்க எஜமான் சொன்னாரு அதனாலேதான் வந்தேன்!” என்று தலையைக் குனிந்து கொண்டு அவன்மீது கிடந்த போர்வையில் கண்ணை உறுத்திய ஒருதடித்த இழையின் முடிச்சை நகத்தால் சுரண்டியவாறு சொன்னான்.

-ஒரு தாயின் கனிந்த இதயம் அவனது எஜமானை வாழ்த்தியதைக் கேட்டால் அவர் எப்படிச் சந்தோஷப்படுவார்: “அந்தப் புண்ணியவான் சுகமாயிருக்கட்டும்” என்று அவள் உதடுகள் முனகின.

அவனையே அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்! அவன் அந்தப் போர்வையினின்றும் அந்த உறுத்துகின்ற தடித்த இழையின் முடிச்சை நெருடியவாறே நின்றிருந்தான்...

‘அடடா... மூணுமாசத்திலே நீ யாரோவா ஆயிட்டதா நெனப்போ உனக்கு?... அம்மான்னு கூப்பிடேன்! மாட்டியா? பத்துமாசம் வயித்திலே கெடந்த உறவும் பதிமூணு வருஷம் மடியிலே வளர்ந்த சொந்தமும்... எல்லாம் போயிடுச்சி இல்லே?ஓ! நீ ரொம்ப ரோசக்காரன் தாண்டா சிட்டி. நீ ரொம்ப ரோசக்காரன்தான்...’ என்று ஏதோ ஒரு உள்ளுணர்வு தன்னுள் நிமிண்டுவதை உணர்ந்தான் சிட்டி.

‘ரோசமும் இல்லே, வேசமுமில்லே!... அம்மான்னு கூப்பிட முடியலியே! ‘நீ எனக்கு அம்மாயில்லே’ன்னுதான் நான் சொல்லிட்டேனே, இப்ப எந்த வாயிலே கூப்பிடறது?... ம்ஹூம், என்னாலே முடியாது! அம்மான்னுதான் வந்திருக்கேனே போதாதா...?” என்றுதவித்துப் புழுங்கியது மற்றொரு உணர்வு.

“சிட்டி...” என்றழைத்தவாறே குச்சாய் மெலிந்து வரண்ட விரல்கள் துடிக்க, போர்வைக்குள்ளிருந்த தன் கையை வெகுசிரமத்திற்குப் பிறகு வெளியே நீட்டி அவன் கையைப் பற்றினாள் தங்கம். அப்போது விலகிய போர்வையில் அவள் இடுப்பிற்குமேல் விழுந்திருந்த அந்த சூட்டுப் புண்ணின் வடு அவன் பார்வையில் பட்டது. உடனே அவன் மறுகையால் அவளது போர்வையை இழுத்துவிட்டான்.

வெளியில் தெரியும் தன் உடலை மறைத்து அவன் தன் மானத்தைக் காப்பாற்றுவதை ஒரு புன்னகையால் சிலாகித்துக் கொண்டாள் தங்கம்.

“சிட்டி..” அவன் கரத்தை அவள் அழுத்திப் பிடிக்க முயன்றாள்...

“ம்...”-என்று முணகினான் பதிலுக்கு. அவனால் ‘அம்மா’ என்று அழைக்க முடியவில்லை.

“என் மேலே ஒனக்குக் கோவந்தானே...?”

‘இல்லை’ என்று வாய் திறவாமல் தலையாட்டினான்.

“இல்லே... உனக்கு எம்மேலே கோவந்தான். எனக்குத் தெரியும்...” என்று அவள் முணகியது கேட்டும் அவன் சலனமில்லாமல் இருந்தான். அவள் மிகவும் சிரமப்பட்டு அவனிடம் பேச வேண்டும் என்ற தீர்மானத்துடன் தொடர்ந்து பேசினாள்:

“எம்மேலே கோவமில்லேன்னு சொல்லாதே! நீ எம்மேலே கோவப்படறதுக்கும்... என்னைப் பாத்து அவமானப் படறத்துக்கும்... நெசம்மா நானு ரொம்பப் பெருமைப்படறேன். ஆமாண்டா கண்ணே, நானு தட்டிக் கேக்கறதுக்கு இல்லாம என்னெப் பாத்துக் கோவப்பட ஒரு அண்ணனோ, அப்பனோ இல்லாம வளந்தவ... எங்கப்பன் ஒரு பயந்த ஆளு... தலையிலே தட்டி கையிலே குடுத்தா வாங்கி வாயிலே போட்டுக்கும்.. அதனாலேதான் என் நடத்தையெப் பாத்து அவமானப்பட யாருமில்லேன்னு இஷ்டப்படி நடந்து கெட்ட பேரெடுத்தேன் அந்த வயசிலேயே..ம்... இன்னா பண்றது? அப்பிடி அவமானப்பட்டுத் தான் உன்னெப் போல ஒருத்தனை-ரோசக்காரனைப் பெத்தேன்..” அவளுக்கு மூச்சு இளைத்தது..

‘இப்பிடி உக்காரு” என்று கட்டிலின் ஓரமாய்க் கையை வைத்துக் காட்டினாள் தங்கம்.

மனமில்லாமல்-மறுக்கவும் முடியாமல் உட்கார்ந்தான் சிட்டி.

சற்று பெறுத்து அவள் மெதுவான குரலில் அவனிடம் சொன்னாள்:

“நீ பொறக்கறத்துக்கு முன்னாலேயே என் மானம் போயிச்சிடா... என் மானத்தை நீ எங்கே போயி, எப்பிடிக் காப்பாத்த முடியும்? தோ பாரு... இது உன் தங்கச்சி. ஆமா, நீ இருந்த வயித்திலே உன்னை மாதிரியே பத்து மாசம் இருந்து பொறந்த உன் ரத்தம்.. மொதல்லே, என்னைப் போல பொண்ணாகப் பொறந்து இன்னா கஸ்டப்பட்மோன்னு நெனச்சேன்... ஆனா உன்னைப்போல் ஒரு அண்ணங்காரன் எனக்கு இருந்தா நானு இப்பிடி ஆயிருக்க மாட்டேனே... அதனாலே, உன் ரோசம், கோவம் எல்லாத்தியும் உட்டுடாதே! நம்ப மாதிரி மனுசாளுக்கே அதாண்டா சொத்து, காபந்து எல்லாம்! நீ கொயந்தெயெப் பாக்கலே..தோ, உன் தங்கச்சி... மாசில்லா... மண்ணு.. எம்மேலே இருக்கற கோவத்திலே எனக்கு நேர்மாறாக நீ நெனக்கிற மாதிரி, உன் இஷ்டத்துக்கு வளத்து ஆளாக்குடா மவனே... இது என் தங்காச்சினு சொல்லிப் பெருமைப் பட்டுக்கற மாதிரி நீவளத்தாத்தான் எம்மேலே நீ காட்டின கோவத்துக்கெல்லாம் அர்த்தம் இருக்கும்...” என்று சொல்லி வெகுநேர இடைவெளிக்குப் பிறகு, அருகே உட்கார்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் சிட்டியைப் பார்த்து ‘சமாதான’ மான தோரணையில் புன்னகை காட்டினாள் தங்கம்

“இன்னா... யோசிச்சியா? உன் தங்கச்சியை நீ வளப்பியா?” என்று கேட்டான்.

அன்று பிறந்த அந்தக் குழந்தையின் மீது, அது தன் உடன் பிறப்பு என்பதாலேயோ-தாயின்மீதுள்ள அன்பையெல்லாம் கொட்டித் தீர்க்க இயலாத தவிப்புக்கோர் மார்க்கம் கண்டுவிட்டதாலோ-அந்தச் சிசுவின்மீது அவனுக்கு ஒரு பாசம் சுரந்தது. அந்தக் குழந்தையைப் பார்க்கையில் அவனுக்குப் பரிதாபமாய் இருந்தது. கண்கள்கூடக் கலங்கின அவனுக்கு. ஒரு பெருமூச்செறிந்தவாறே அவள் கேள்விக்கு மௌனமாகத் தலையசைத்தான் சிட்டி.

அடுத்த நாள் முழுவதும் தங்கம் கண்திறக்கவே இல்லை. இரவெல்லாம் காத்திருக்க குரலோடு அவனருகே வந்தாள்.

“எனக்கு இன்னாவோ பயமாவே இருக்குது அந்த டாக்டரும் நரசம்மாவும் பேசிக்கறதெப் பாத்தா. ராவிக்கு நானும் பக்கத்திலேயே இருக்கேன்னு நரசம்மாகிட்டே கேட்டுக்கிட்டேன்,.. நீயும் இங்கதான் எங்கனாச்சும் இரு... பொயுது விடிஞ்சி போலாம்” என்ற கிழவி சொல்லும் போது சலனமற்ற விழிகளால் அவளை வெறித்துப் பார்த்தான் சிட்டி. பிறகு அங்கிருந்து எழுந்து நடந்து ஆஸ்பத்திரி காம்பவுண்ட் மரத்தடியில் ஒரு பக்கம் மறைவாய் உட்கார்ந்து தலையைக் கையில் தாங்கி எதையெதையோ யோசித்துக் கண் கலங்கினான். இன்னும்கூட அவன் தன் தாயின் பழைய காரியங்களை மறக்க முடியாததால் அவளை அவனால் மன்னிக்கவும் முடியவில்லை; மன்னிக்க முடியாததால் அன்பு கொள்ளவும் முடியவில்லை. இப்போது அவள் செத்துப் போய் விடுவாளே என்ற ஒரு துடிப்பைத் தவிர, செத்துப் போய் விடுவாளோ என்ற துயரமில்லை அவனுக்கு.

பத்து மணி வரைக்கும் இருந்து பார்த்து விட்டுப் போய் விடலாம் என்று காத்திருந்தான் அவன்.

ஆமாம்; மணி பத்தடித்துக் கேட்பதற்கோ, அல்லது அவன் தாய் செத்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்பதற்கோ அவன் காத்திருந்தான்.

வராந்தாவிலிருந்த கடிகாரத்தில் ஒன்பது அடிக்க ஐந்து நிமிஷங்கள் இருக்கும்போது...

வார்டில் தங்கத்தின் கட்டிலருகே இருந்து, “அடீ நாம் பெத்த மவளே...” என்ற அன்னம்மாக்கிழவியின் வயோதிகத்தால் நடுங்கும் குரலைக் கேட்டு எழுந்து நடந்த சிட்டி, “ஐயோ சிட்டி” என்ற கிழவியின் அலறலைக் கேட்டு வார்டை நோக்கி ஓடினான்...

தங்கத்தின் கதை முடிந்தது!

சிட்டி ஒரு தங்கைக்கு அண்ணனானது, தன்னால் வெறுத்தொதுக்கப்பட்ட தாயின் வேண்டுகோளுக்கு இணங்கியதனால் மட்டும் அல்ல! அதில் உண்மை இருப்பதால், அதில் தன் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தமிருப்பதால் அந்தச் சுமையை அவன் ஏற்றுக் கொண்டான்.

அந்தச் சுமை கையில் ஒரு குழந்தையாகத் தோன்றினாலும், அவன் உள்ளே ஓர் உலகமாய்க் கனத்தது. எனினும் அதில் ஒரு நிறைவும் மகிழ்வும் கண்டான் சிட்டி.

ஆஸ்பத்திரியிலிருந்து-கையில் குழந்தையோடு, அன்னம்மாக் கிழவியுடன்-ரிக்ஷாவில் வந்து அவன் இறங்கியபோது வாசலில் உள்ள அத்தனைக் குடித்தனக்காரப் பெண்களும் குமுறிக் குமுறித்தான் அழுதனர்...

எதிர் வீட்டு அலமேலு, விம்மியழுதவாறு ஓடிவந்து சிட்டியின் கையிலிருந்த குழந்தைக்காகக் கையேந்தினாள். சிட்டி குழந்தையை அலமேலுவிடம், ஒருவினாடி யோசித்து அவள் குறையறிந்து அவள் கையில் தந்துவிட்டு வீட்டுக் கதவைத் திறந்தான்.

வீட்டினுள் கிடந்த ஒவ்வொரு சாமானிலும் தங்கத்தின் நினைவும், 'அவள் இல்லை' யென்ற உணர்வும் தோன்றின. நடு வீட்டில் பாயைவிரித்துக் குழந்தையைக் கிடத்தினாள் அலமேலு.

அப்போது அந்த மாடத்தில் அந்தப் பச்சை பிளாஸ்டிக் சீப்பின் இரண்டு துண்டுகள் சிட்டியின் கண்களில் பட்டன.

அது உடைந்ததற்கான காரணமும், அது உடைந்த அன்று தங்கம் சிங்காரித்து நின்றிருந்த கோலமும், அதன் பிறகு நிகழ்ந்தன யாவும் சிட்டியின் மனத்தில் ஒவ்வொன்றாய்க் கிளர்ந்தன. இப்போது எல்லாம் அடங்கி, தானும் தனக்கொரு தங்கையும் எஞ்சி இருப்பதை எண்ணியபோது

அவன் மனத்தில் ஓர் அமைதி பிறந்தது. அந்த அமைதியின் அர்த்தம் அவனுக்குப் புரியமுடியாது…!

உயிர் என்பது ஜடமன்று.

ஜடம் உடைந்தால் ஒரு முழுமை இரண்டு மூளிகளாக மட்டும்தான் மாறும். உயிரின் முழுமை மாறுதல் கொண்டால் ஒன்றிலிருந்து பல மூளிகள் அல்ல-பல முழுமைகளே செழிக்கும். அந்த வளர்ச்சிக்குச் சான்றுதான் அவனும் அந்தச் சிசுவும்.

சீப்பை வெறித்த கண்களில் நீர் சுரந்தன.

அவனைத் தேற்றவும் அந்தக் குழந்தையின்மீது அன்பு காட்டவும் அதை வளர்க்கவும் அந்த வாசலில் இருக்கும் குடித்தனக்காரர்கள் எல்லாரும் ஒவ்வொரு சமயம் ஒவ்வொருவர் ஓடிவந்தனர்.

எந்தக் காரியம் தவறு என்றும் இழிவு என்று எல்லோராலும் பழிக்கப் பட்டதோ அந்தக் காரியத்தின் விளைவான அந்தக் குழந்தையைப் பழிக்க அங்கே யாரும் துணியவில்லையென்றால் அதில் அதிசயம் ஒன்றுமில்லை! அதுதான் இங்கு மலிந்து கிடக்கும் மனிதத் தன்மை! இதுவே ‘இந்த உலக’த்தின் இயல்பான தன்மை!

இப்போது சிட்டி முன்போல் சொர்ணம் ஐஸ் பாக்டரியில் வேலைக்குச் சேர்ந்து மாலையில் சங்கத்துக்குப் படிக்கப் போகும் வழக்கத்தைக் கைக்கொண்டு ஒரு மாதமாகிறது.

இந்த ஒரு மாதத்தில் கன்னியப்பனுக்கு அங்கு சிட்டியின் ஒரு வார்த்தையால் வேலை கிடைத்தது. தொண்டரும் சிட்டிக்கு வண்டி வாங்கிக் கொடுத்து, மாதம் ஐம்பது ரூபாய் சம்பளமும் தந்து தன் வார்த்தையைக் காப்பாற்றி விட்டார்…

சிட்டி அந்தக் குழந்தைக்கு-ஒரு மகன் தெய்வமாய் வணங்கத்தக்க தாயாய், பாக்கியமும் பண்பும் பெற்றுப் படத்தில் மட்டுமே தான் பார்த்திருக்கும்-தொண்டர் துரைக்கண்ணுவின் தாயின் பெயரைச் சூடினான்..

‘சொர்ணம்!’

பகலெல்லாம் வேலை, மாலையில் படிப்பு. மற்ற நேரமெல்லாம் அந்தச சுவர்ணத்தை எப்படியெப்படி வளர்ப்பது என்ற கற்பனை.

மனிதன் முன்னேற ஆசைப் படுவதற்கும் முயற்சி செய்வதற்கும் ஏதாவது ஒரு பிடிப்பு வேண்டும். எதற்காக முன்னேறுவது, யாருக்காக முன்னேற வேண்டும் என்று தோன்றியபோது, அவற்றுக்கு அச்சாய், ஆதாரமாய் இருந்த தாய் போன பிறகு, இப்போது ஒரு தங்கச்சி கிடைத்து விட்டாள் அவனுக்கு. இனிமேல் எல்லாம் அவளுக்காக...

இப்போது அவனுக்கு ஒரு குறையுமில்லை.

ஒரு மாதத்திற்குப் பின் ஒருநாள் இரவு...

வாசலில் படுத்திருந்தவர்கள் எல்லாம் உறங்கிக் கொண்டிருக்கும் அமைதியில் திடீரென கனவு கண்டோ, நனவு நிலையிலோ, மனத்தில் உறுத்திக் கொண்டிருந்த ஒரு குறையைத் தாங்க மாட்டாமலோ சிட்டி, “அம்மா ஆ!” என்று அலறி அழுதது கேட்டு வாசலே விழித்துக் கொண்டது! எல்லாப் பெண்களுமே தாயற்ற குழந்தைக்குத் தாயானது போல் ஓடிவந்து, “இன்னாடா சிட்டி! இன்னா! எதுக்கு அயுவுறே? பயந்துட்டியா? கனவு கண்டியா?” என்று பலவாறு பதறிப் போய் விசாரித்தனர்.

அவர்கள் நடுவே பாயில் உட்கார்ந்திருந்த சிட்டி, கண்களைக் கசக்கிக் கொண்டு செருமிச் செருமி அழுதவாறு விம்மினான்...

“ஏண்டி கண்ணு இன்னாத்துக்கோசரம் அயுவுறே? பகலிக்கெல்லாம் ஒயச்சிட்டு வந்துட்டுப் பாவம்... தூங்குடி கண்ணு...” என்று அவனைப் படுக்க வைக்க முயன்றாள் அன்னம்மாக் கிழவி.

கிழவியை இறுகத் தழுவிக் கொண்டு அவன் மீண்டும் விம்மி விம்மி அழுதான்.

“ஆயா...ஆயா...”

“ஏண்டி செல்வம்? எதுக்கு அய்வுறே?”

”எங்க அம்மா.. அம்மா.. அம்மா ஞாபகம் வந்திடுச்சி ஆயா...!” என்று அவன் திணறித் திணறிப் புலம்பியழுதபோது,

“ஐயோ மவனே” என்று விம்மிய அலமேலு சிட்டியைத் தாவி அணைத்துக் கொண்டாள்.

“அம்மா...”-

“மவனே”- என்று சிட்டியும் அலமேலுவும் ஒருவரை ஒருவர் தேற்றுவது போலவும் தேற்றுவாரின்றி அழுவது போலவும் தழுவி நிற்பதைக் கண்ட மன்னாரு வாயைப் பொத்திக் கொண்டு குமுறிவந்த அழுகையை அடக்கியவாறு கண் கலங்கினான்.

சிட்டியின் முதுகைத் தடவியவாறு கண்களில் கண்ணீர் பெருக அவனிடம் அலமேலு சொன்னாள்;

“சிட்டி கண்ணு.. உங்கம்மா மாசுமறுவில்லாத தெய்வமாயிட்டா... அவளெ நெனச்சி வேண்டிகிட்டுப் படுத்துத் தூங்கு...!”

சிட்டி தாயை மனத்துள் வணங்கித் தொழுது படுக்கச் செல்லுமுன் உள்ளே எழுந்து சென்று ஏணையில் கிடக்கும் குழந்தையை, துணியை விலக்கிப்பார்த்தான். சுவரில் எரிந்த காடாவிளக்கின் வெளிச்சம் ஏணைக்குள் வீசியது.

உறங்குகின்ற குழந்தையின் முகத்தில்-யாரையோ பார்த்து அர்த்தத்துடன் சிரிப்பது போன்று-பூத்த ஒரு புன்னகை சிட்டியின் உள்ளெல்லாம் நிறைந்து ஒளி வீசிற்று.

முற்றும்